ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

## 1. மணவாள மாமுனிகள் அருளிச்செய்த

# யதிராஜவிம்சதி

உபதேச ரத்தினமாலை, திருவாய்மொழி நூற்றந்தாதி.

## 2. ஸ்ரீ பராசரபட்டர் அருளிச்செய்த

# அஷ்டச்லோகி

மணவாள மாமுனிகள் விஷயமான

ஸ்ரீ வரவர முநிதண்டகம்.

இவை:

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம்

**அண்ணங்கராசாரியர் இயற்றிய விரிவுரையுடன்.**

1947.

இதன் விலை 1—12—0.

ஸ்ரீஸுதர்சன பிரஸ், காஞ்சி, Q. H. Ct. 36 C. 240 Supply 1-8-'47. (ராப்பர் மாத்திரம்)

ஸ்ரீ

ஜீயர் திருவடிகளே சரணம்

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய உரையுடன் கூடிய

# உபதேசரத்தினமாலை

THE TANJORE

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த திவ்வியப் பிரபந்தங்களுள் இது முதலது. மற்றவை திருவாய்மொழி நூற்றந்தாதியும் ஆர்த்திப் பிரபந்தமும். நமது ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்திற்குப்பிரதான ப்ரவர்த்தகர்களான ஆழ்வார்கள் அவதரித்த மாதங்கள் நக்ஷத்திரங்கள் ஸ்தலங்கள், அவ்வாழவார்களருளிய திவ்யப்பிரபந்தங்களுக்கு வியாக்யானம் முதலியவற்றை அருளிச்செய்த ஆசார்யர்களின் பெருமைகள், அப்படிப்பட்ட ஆசாரியர்களுள் தலைவரான பிள்ளைலோகாசாயரின் பெருமை, அவர் பணித்த ரஹஸ்யங்களுள் தலையான ஸ்ரீவசகநபூஷணத்தின்பெருமை, அந்த திவ்விய சாஸ்த்ரத்தின் ஸாரார்த்த விசேஷம் ஆகிய இவ்விஷயங்கள் இப்பிரபந்தத்தில் மிக அழகிய நடையில் அருளிச்செய்யப்படுகின்றன.

ஆழ்வார்களின் திருவவதாரக்கிரமம் "பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசையையனருள்மாறன் சேரலர்கோன் துய்யபட்ட நாத னன்பர்தாள்தூளி நற்பாணன் நன்கலியன் ஈதிவர் தோற்றத் தடைவாமிங்கு" என்ற பாசுரத்தினுல் இதில் அருளிச் செய்யப்பட்டுள்ளது. மேலே அவ்வாழ்வார்களின் அவதார நாள்களை அருளிச்செய்து வருமிடத்து முதலாழ்வார்கள் மூவருடைய அவதார நாள்களைக் கூறிவிட்டு அடுத்தபடியாகத் திருமழிசையாழ்வாரின் அவதார நாளைக் கூறவேண்டியிருக்க அதுகூருமல், திருமங்கையாழ்வார் திருப்பாணுழ்வார் தொண்டாடிப்பொடியாழ்வார் திருமழிசையாழ்வார் குலசேகராழ்வார் நம்மாழ்வார் பெரியாழ்வார் என்று இங்ஙனே ஒரு க்ரமம் வைத்து அவதாரநாட்கள் கூறப்பட்டிருக்கின்றன; இஃது எத்த க்ரமத்தில் சேர்ந்ததென்று பலரும் விமர்சசிப்பர்கள். கேண்மின் முதலாழ்வார்களின் அவதார நாட்களை முதலிலே கூறிவிட்டு உடனே மாதங்களினடைவே அருளிச்செய்து வருகிருர். அதாவது—முதலாழ்வார்கள் அவதரித்தது ஐப்பசிமாதம் அதற்கடுத்தமாதம் கார்த்திகைபாதலால் அத்திங்களில் அவதரித்த இரண்டு ஆழ்வார்களைப்பற்றிப் பேசினுர். அதற்கு அடுத்தமாதம் மார்கழியரதலால் அதில் அவதரித்த தொண்டடிரப்பொடியாழ்வாரைப்பற்றி உடனே பேசினுர். அதற்கு அடுத்தது தைமாதம்; அதிலவதரித்த திருமழிசையாழ்வாரைப் பேசுவது ப்ராப்தமாயிற்று. இங்ஙனே மாதக்ரமமாக வைத்து அருளிச்செய்கிருரென்று கண்டுகொள்வது.

இத்திவ்லியப்பிரபந்தத்தின் அமைப்பினழகு நிகரற்றது. அமுதொழுகுகின்ற தமிழினில் விளம்பிய சீர்மை சொலப்புகில் வாயமுதம் பரக்கும்.

## தனியன்

முன்னந்திருவாய் மொழிப்பிள்ளை தாமுபதேசித்த நேர்
தன்னின்படியைத் தணவரதசோல் மனவாளமுனி
தன்னன்புடன்சேய் உபதேசரத்தினமாலைதன்னைத்
தன்னெஞ்சு தன்னில் தரிப்பவர் தாள்கள் சரண்நமக்கே.

| | |
|---|---|
| முன்னம் | முற்காலத்தில் |
| திருவாய் மொழிப்பிள்ளை தாம் உபதேசித்த நேர் தன்னின் படியை தணவாத சொல் | (ஸவாசார்யரான) திருவாய் மொழிப்பிள்ளை உபதேசித்தருளின க்ரமத்தை அதிக்ரமியாமல் அநுவர்த்தித்தே பேசுமவரான |
| மணவாளமுனி | மணவாளமாமுனிகள் |
| தன் அன்புடன் செய் | தம்முடைய பரமகிருபையினுல் செய்தருளின |
| உபதேச ரத்தின மாலை தன்னை | உபதேச ரத்தின மாலையென்கிற திவ்வியப் பிரபந்தத்தை |
| தம் நெஞ்சு தன்னில் | தங்கள் ஹ்ருதயத்திலே |
| தரிப்பவர் | (கண்டபாடஞ் செய்து) தரிக்கின்றவர்களுடைய |
| தாள்கள் | திருவடிகளே |
| நமக்கு சரண் | நமக்குத் தஞ்சம் |

தனியன் உரை முற்றிற்று

ஸ்ரீ

ஆழ்வாரெம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்.

விசதவாக் சிகாமணியான மணவாளமா முனிகள் அருளிச்செய்த

# உபதேசரத்தினமாலே.

## தமக்கு கிடைத்த உபதேச வழியின்படியே வெண்பாவிலமைத்துப் பேசுவதாகக் கூறுதல்

எந்தை திருவாய் மொழிப்பிள்ளை யின்னருளால்*
வந்த வுபதேச மார்க்கத்தைச்—சிந்தை செய்து*
பின்னவருங் கற்க உபதேசமாய்ப் பேசுகின்றேன்*
மன்னியசீர் வெண்பாவில் வைத்து. (க)

| | | | |
|---|---|---|---|
| எந்தை | எமக்கு ஆசிரியரான | பின்னவரும் கற்க | பின்புள்ளாரும் கற்கு மாறு |
| திருவாய்மொழிப்பிள்ளை | திருவாய்மொழிப்பிள்ளை யென்கிற திருமலே யாழ்வாருடைய | மன்னிய சீர் வெண்பா வில் வைத்து | பொருத்தமான சீர்களேயுடைய வெண்பாவென் கிற யாப்பிலேஅமைத்து |
| இன் அருளால் வந்த | பரமகிருபையினுல் கிடைத்த | | |
| உபதேசம் மார்க்கத்தை சிந்தை செய்து | உபதேச வழியை அநுஸந்தித்து | உபதேசம் ஆய் பேசுகிறேன் | (உள்ளத்திற்கும் உலகத்திற்கும்) உபதேச ரூபமாகப் பேசுகிறேன் |

"மன்னிய சீர்" என்பதை வெண்பாவுக்கு விசேஷணமாக்காமல் "மன்னிய சீர்களேப் பேசுகின்றேன்"—ஆழ்வாராசாரியர்களின் திருக்குணங்களேப் பேசுகின்றேன் என்றுரைப் பாருமுளர். (க)

## இப்பிரபந்தத்தை விவேகிகள் உகப்பதே போதுமென்பது,

கற்ருேர்கள் தாமுகப்பர் கல்விதன்னிலா சையுள்ளோர்*
பெற்ருேமெனவுகந்து பின்புகற்பர்*—மற்ருேர்கள்
மாச்சரியத்தாலிகழில் வந்ததென்னெஞ்சே!*—இகழ்கை
ஆச்சரியமோதானவர்க்கு. (உ)

| | | | |
|---|---|---|---|
| நெஞ்சே | மனமே! | மாச்சரியத்தால் | மாத்ஸர்யத்தினுல் [பகை பாராட்டி] |
| கற்ருேர்கள் தாம் உகப்பர் | கல்விபயின்றவர்கள் (இப்பிரபந்தத்தைப்பெற்று) மகிழ்ந்திடுவர்கள்; | இகழில் | இதனே இகழ்ந்தால் |
| | | வந்தது என் | அதனுல் நமக்கு உண்டாகும் சேதமென்ன? (ஒன்றுமில்லே) |
| கல்வி தனில் ஆசை உள்ளோர் | கல்வியில் விருப்பமுள்ளவர்கள் | அவர்க்கு | அப்படிப்பட்டவர்களுக்கு |
| பெற்ருேம் என உகந்து | இது லபிக்கப் பெற்ருேமே!' என அகங்குழைந்து | இகழ்கை | நல்ல விஷயங்களே இகழ்வதென்பது |
| பின்பு கற்பர் | பிறகு இதை அப்யஸிப்பர்கள்; | ஆச்சரியமோ தான் | வியப்போ? [அவர்கட்கு இது இயல்பேயன்ருே.] |
| மற்ருேர்கள் | (கீழ்ச்சொன்ன இரண்டு வகுப்பிலுஞ் சேராத) மற்றையோர்கள் | | |

"ஆச்சரியமோ தானவர்க்கு" என்று பிரித்து, தானவர்க்கு- ஆஸுரப்ரக்ருதிகளுக்கு என்று பொருளுரைப்பாருமுளர்; ஆயினும் மணவாளமாமுனிகள் இங்ஙனம் விவக்ஷித்து அருளிச் செய்பவரல்லர் என்பர் பெரியோர். (உ)

## ஆழ்வாராசார்ய ஸ்ரீஸூக்திகளுக்கு வாழ்த்துக் கூறுதல்

ஆழ்வார்கள்வாழி அருளிச்செயல்வாழி *
தாழ்வாதுமில்குரவர்தாம்வாழி *—ஏழ்பாரும்
உய்ய அவர்களுரைத்தவைகள்தாம்வாழி
செய்ய மறைதன்னுடனே சேர்ந்து (௩)

| | | | |
|---|---|---|---|
| ஆழ்வார்கள் வாழி | பொய்கையார் முதலான ஆழ்வார்கள்வாழ்ந்திடுக; | ஏழ் பாரும் உய்ய | பூமண்டலம் முழுவதும் உஜ்ஜீவிக்குமாறு |
| அருளிச்செயல் வாழி | அவர்களருளிய திவ்வியப் பிரபந்தங்கள் வாழ்ந்திடுக; | அவர்கள் | அவ்வாசிரியர்கள் |
| தாழ்வு ஆதும் இல் குரவர் தாம் வாழி | தாழ்வொன்றுமில்லாத [மிகச் சிறந்த] எம்பெருமானார் முதலான ஆசாரியர்கள் வாழ்க; | உரைத்தவைகள் தாம் | அருளிச் செய்த ஸ்ரீஸூக்திகளும் |
| | | செய்ய மறை தன்னுடனே சேர்ந்து வாழி | விலக்ஷணமான வேதங்களோடு கூட வாழ்க. |

"செய்யமறை தன்னுடனே சேர்ந்து" என்றது வேதங்களும் வாழவேணுமென்று அவற்றுக்குமாக மங்களாசாஸனம் செய்தபடி. ஆழ்வாராசார்யர்களின் ஸ்ரீஸூக்திகளுக்கெல்லாம் வேதமே மூலமானது பற்றி அவற்றுக்கும் மங்களாசாஸனம் ப்ராப்தம். "செய்யமறை தன்னுடனே சேர்ந்து அவர்களுரைத்தவைகள்" என்று அந்வயித்து 'வேதங்களுக்குச் சேர ஆசாரியர்கள் அருளிச்செய்தவை' என்று பொருளுரைப்பாருமுளர்.

## ஆழ்வார்களின் அவதாரக்கரமம் கூறுதல்

பொய்கையார் பூதத்தார் பேயார் * புகழ்மழிசை
ஐயன் அருள்மாறன் சேரலர்கோன் *—துய்யப்பட்ட
நாதன் அன்பர்தாள்தூளி நற்பாணன் நன்கலியன் *
ஈதிவர்தோற்றத்தடைவாமிங்கு. (௪)

| | | | |
|---|---|---|---|
| பொய்கையார் | பொய்கையாழ்வார் முதல்வர் | அன்பர்தாள்தூளி | தொண்டரடிப்பொடியாழ்வார் எட்டாமவர் |
| பூதத்தார் | பூதத்தாழ்வார் இரண்டாமவர் | நல் பாணன் | பரமஸாத்விகரான திருப்பாணாழ்வார் ஒன்பதாமவர், |
| பேயார் | பேயாழ்வார் மூன்றாமவர் | | |
| புகழ் மழிசை ஐயன் | கீர்த்திவாய்ந்த திருமழிசைப்பிரான் நான்காமவர், | நன் கலியன் | விலக்ஷணரான திருமங்கையாழ்வார் பத்தாமவர்; |
| அருள் மாறன் | அருள் மிகுந்த நம்மாழ்வார் ஐந்தாமவர், | ஈது | இந்த வரிசைக்கிரமமானது |
| சேரலர் கோன் | குலசேகரப்பெருமாள் ஆறாமவர், | இங்கு | இவ்வுலகில் |
| துய்ய பட்டநாதன் | பரிசுத்தரான பெரியாழ்வார் ஏழாமவர், | இவர் தோற்றத்து அடைவு ஆம் | இவ்வாழ்வார்களின் அவதாரக்ரமமாகும் |

இக்காலத்தவர்கள் சிலர் ஆராய்ச்சி செய்வதாகப்புகுந்து தவறுதலான சில நிரூபணங்களைக் காட்டி இந்த அடைவினை மாறுபடுத்தி, பின்னேயுள்ளவர்களை முன்னேதள்ளி முன்னே

யுள்ளவர்களைப் பின்னே இழுத்து மனம்போனவாறாக அவதாரக்ரமங்களைக் கல்பிக்கின்றனர்: அதனால் ஆஸ்திகர்களின் நெஞ்சு கலங்காமைக்காப் * பொய்யிலாத மணவாள மாமுனிகள் இங்ஙனே அடைவுதன்னை அமைத்தருளினாராயிற்று (௪)

## ஆழ்வார்களவதரித்த மாத நக்ஷத்திரங்களைக் கூறுவோமெனல்.

அந்தமிழால்நற்கலைகள் ஆய்ந்துரைத்த வாழ்வார்கள் *
இந்தவுலகிலிருள்நீங்க*—வந்துதித்த
மாதங்கள்நாள்கள்தமை மண்ணுலகோர்தாமறிய*
ஈதென்றுசொல்லுவோம்யாம். (௫)

| | | | |
|---|---|---|---|
| அம் தமிழால் | அழகிய தமிழ்ப்பாஷையினால் | வந்து உதித்த | வந்து அவதரிக்கப்பெற்ற |
| நல் கலைகள் | திவ்யப் பிரபந்தங்களை | மாதங்கள் நாட்கள் தமை | மாஸங்களையும் நக்ஷத்திரங்களையும் |
| ஆய்ந்து உரைத்த ஆழ்வார்கள் | ஆராய்ந்தருளிச் செய்த (மேற்கூறிய) ஆழ்வார்கள் | மண் உலகோர் தாம் அறிய | இந்நிலவுலகத்தவர்கள் நிஷ்கர்ஷமாகத் தெரிந்து கொள்ளும் பொருட்டு |
| இந்த உலகில் இருள் நீங்க | இவ்விருள் தருமஞாலத்தில் அகவிருள் தொலைவதற்காக | ஈது என்று | இன்னவையென்று |
| | | யாம் சொல்லுவோம் | இனி நாம் கூறுவோமாக |

இன்ன ஆழ்வார் இன்ன மாதத்தில் இன்ன நக்ஷத்திரத்தில் அவதரித்தாரென்பது அக்காலத்தில் வழங்கிவந்தாலும் பிற்காலத்தில் எக்காரணத்தாலும் பிறழ்வு விளையாமைக்காக அவற்றை ப்ரபந்தீகரித்தருள்கின்றாரென்க. பெரியவாச்சான் பிள்ளை யருளிச்செய்த முதல் திருவந்தாதி வியாக்கியானத் தொடக்கத்தில் "இந்த முதலாழ்வார்கள் இன்னவிடத்தில் அவதரித்தார்களென்பது காலபழமையாலே நிச்சயிக்கப் போகாது" என்று பொருள்பட ஒரு ஸ்ரீஸூக்தி காண்கிறது. அவ்விடத்தில் அரும்பதவுரைகாரர்கள் இங்கு ஏதோ வாக்கியப் பிறழ்வு உள்ளது என்று எழுதியுள்ளார்கள். பெரியவாச்சான் பிள்ளை அங்ஙனம் அருளிச் செய்தது உண்மையாயிருப்பின் பரம ப்ராமாணிகரான மணவாளமாமுனிகள் இவ்வுபதேச ரத்தினமாலையில் "எண்ணருஞ் சீர்ப்பொய்கை முன்னோரிவ்வுலகில் தோன்றிய வூர் வண்மை மிகு கச்சி மல்லை மாமயிலை" என்று அறுதியிடாக அருளிச்செய்ய நேர்ந்திராது. பெரியவாச்சான் பிள்ளை காலத்திற்கு முன்பே அவதரித்து அநுஸந்தானத்திலும் நிகழ்ந்து வரும் திருவந்தாதித் தனியன்களிலும் "கச்சிநகர் வந்துதித்த பொய்கைப்பிரான்" என்றும், 'கடன்மல்லைப் பூதத்தார்" என்றும் உள்ளதற்கு மாறாகப் பெரியவாச்சான் பிள்ளை தாம் அருளிச் செய்யவும் ப்ரசக்தியில்லை. ஆயினும் வாக்யப் பிறழ்வு விளைந்திட்டது. இங்ஙனே பிறழ்வு நேராமைக்காகவே மாமுனிகள் ஆழ்வார்களவதரித்த மாஸ நக்ஷத்ர திவ்ய தேசங்களை இப்பிரபந்தத்தில் இட்டருள்கின்றாரென்றுணர்க. (௫)

## முதலாழ்வார்களின் மாத நக்ஷத்திரங்கள் கூறுதல்

ஐப்பசியிலோணம் அவிட்டம் சதயமிவை*
ஒப்பிலவநாள்களுலகத்தீர்! *—எப்புவியும்
பேசுபுகழ்ப் பொய்கையார் பூதத்தார்பேயாழ்வார்*
தேசுடனே தோன்றுசிறப் பால். (௬)

| | | | |
|---|---|---|---|
| உலகத்தீர் | உலகத்திலுள்ளவர்களே! | ஒப்பு இல ஆம் நாள்கள் | ஒப்பில்லாதவையான நாட்கள் எவை யென்றால், |
| எப்புவியும் பேசு புகழ் | உலகமெங்கும் பேசப்படுகின்ற புகழையுடைய | ஐப்பசியில் ஓணம் அவிட்டம் சதயம் இவை | ஐப்பசிமாதத்தில் திருவோணம் அவிட்டம் சதய மென்னும் இத்திரு நாட்களாம். |
| பொய்கையார் பூதத்தார் பேயாழ்வார் | பொய்கை பூதம் பேயாழ்வார் மூவரும் | | |
| தேசுடனே தோன்று சிறப்பால் | தேஜஸ்ஸுடனே அவதரிதத ஏற்றத்தினால் | | |

* * * இவ்வாழ்வார்கள் மூவரும் விபவத்தில் ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதவராய், கூடித்திரியும் யோகிகளாயிருந்ததாலும், அர்ச்சையிலும் அப்படியே கூடியே வாழ்வதனாலும் இம்மூவர்க்கும் சேர்த்தே பாசுரமிட்டருளினாராயிற்று. ஐப்பசி, ஐப்பிசி என இரண்டு முண்டென்பர். ஓணம்—'ச்ரோண' என்னும் வடசொற்சிதைவு. 'தேசுடனே' என்றவிடத்து அயோநிஜத்வப்ரயுக்தமான தேஜஸ்ஸு விவக்ஷிதம். "சிறப்பால் ஒப்பிலவாம்" என்று அந்வயிக்கும். (சு)

## பொய்கையார்முதலான மூவர்க்கு முதலாழ்வார்களென்கிற திருநாமம் நிகழ்ந்தமைக்குக் காரணங் கூறுதல்.

மற்றுள்ளவாழ்வார்களுக்கு முன்னேவந்துதித்து *
நற்றமிழால் நூல்செய்துநாட்டையுய்த்த *—பெற்றிமையோர்
என்று முதலாழ்வார்களேன்னும்பேரிவர்க்கு *
நின்றதுலகத்தே நிகழ்ந்து. (எ)

| | | | |
|---|---|---|---|
| இவர்க்கு | பொய்கையார் பூதத்தார் பேயார் என்கிற இம்மூவர்க்கும் | மற்றுள்ள ஆழ்வார்களுக்கு முன்னே வந்து உதித்து | (திருமழிசைப்பிரான் முதலான) மற்ற ஆழ்வார்களுக்கு முன்னம் வந்து தோன்றி |
| முதலாழ்வார்கள் என்னும் பேர் | முதலாழ்வார்களென்கிற திருநாமம் | நல் தமிழால் | விலக்ஷணமான தமிழினால் |
| உலகத்தே நிகழ்ந்து நின்றது | உலகத்தில் ப்ரஸித்தமானது (எதனாலே யென்னில்) (இவ்வாழ்வார்கள் மூவரும்) | நூல் செய்து | திருவந்தாதிகளென்கிற திவ்யப்பிரபந்தங்களையருளிச்செய்து |
| | | நாட்டை உய்த்த | இவ்வுலகை உஜ்ஜீவிப்பித்த |
| | | பெற்றிமையோர் என்று | பெரியார் என்கிற காரணத்தினால். |

* * * பொய்கையார் முதலான மூவர்க்கும் முதலாழ்வார்களென்று ப்ரஸித்தமாகத் திருநாமம் வழங்கிவருகின்றது. இத்திருநாமத்திற்கு இன்னது காரணமென்று நிரூபிக்கிறது இப்பாசுரம். மற்றுள்ள வாழ்வார்களுக்கு முன்னே வந்துதித்தபடியினால் முதல்வராயினர்; நற்றமிழால் நூல் செய்ததனால் ஆழ்வார்களாயினர் என்றதாயிற்று. பெற்றிமை—பெருமை. என்று— என்ற காரணத்தினால் என்றபடி. "பெற்றிமையோ ரென்றும்" என்கிற பாடம் மறுக்கவும் மறக்கவும்தக்கது. (எ)

## திருமங்கையாழ்வாருடைய அவதாரநாள் கூறுதல்.

பேதைநெஞ்சே! இன்றைப்பெருமை யறிந்திலையோ! *
ஏதுபெருமை யின்றைக்கென்றேனில்! *—ஓதுகின்றேன்
வாய்த்தபுகழ்மங்கையர்கோன் மாநிலத்தில்வந்துதித்த *
கார்த்திகையில் கார்த்திகைநாள்காண். (அ)

| | | | |
|---|---|---|---|
| பேதை நெஞ்சே | அறிவில்லாத மனமே! | ஓதுகின்றேன் | சொல்லுகிறேன்; |
| இன்றை பெருமை அறிந்திலையோ | இன்றைக்குள்ள பெருமையை நீ அறிந்து கொள்ளவில்லையோ? | வாய்த்த புகழ் | பொருந்திய புகழை யுடையான |
| | | மங்கையர்கோன் | திருமங்கையாழ்வார் |
| இன்றைக்கு என்று | இன்றைக்கு அஸாதாரணமாக | மா நிலத்தில் | விசாலமான இவ்வுலகில் |
| | | வந்து உதித்த | வந்து தோன்றப்பெற்ற |
| ஏது பெருமை என்னில் | என்ன பெருமையுள்ளது என்கிறாயோ? (கேள்) | கார்த்திகையில் கார்த்திகை நாள் காண் | கார்த்திகை மாதத்து க்ருத்திகா நக்ஷத்ர மன்றோ வின்று. |

*** அந்தந்தஆழ்வார்களின் திருநக்ஷத்திர தினங்களில் கோயில்களிலும் கிருகங்களிலும் நாள்பாட்டென்று ஸேவிப்பதற்கு உதவ வேணுமென்று சிஷ்யர்களின் வேண்டுகோளினால் இப்பிரபந்தம் அருளிச்செய்ததனால் அதற்குத் தகுதியாகவே இந்த நாட்பாட்டுக்களில் பெரும்பாலும் ‘இன்று’ என்று அமைக்கப்பட்டது. அந்த அவதார நன்னாளை நோக்கிய நிர்தேசம் இது. இரண்டாமடியில், “இன்றைக்கேன்னேனென்னில்” என்று சில பிரதிகளிற் பாடம் கண்டாலும் அதில் அர்த்தம் பொருந்தாது. ஏது என்பதும் என் என்பதும் பர்யாயமாதலால் புநருக்தமாகும்; ஆகவே ‘இன்றைக்கென்றென்னில்’ என்பதே பாடம். “அதற்கென்று என்ன ஏற்றம்” என்று உலக வழக்குள்ளதாதல் அறிக. (அ)

## (இதுவுமது)

மாறன்பணித்த தமிழ்மறைக்கு மங்கையர்கோன் *
ஆறங்கம்கூற அவதரித்த *—வீறுடைய
கார்த்திகையில்கார்த்திகைநாள் இன்றென்று காதலிப்பார் *
வாய்த்தமலர்த்தாள்கள் நெஞ்சே! வாழ்த்து. (கூ)

| | | | |
|---|---|---|---|
| நெஞ்சே | ஓ மனமே! | | |
| மாறன் பணித்த | நம்மாழ்வாரருளிச்செய்த | வீறு உடைய | பெருமை வாய்ந்த |
| தமிழ் மறைக்கு | த்ராவிடவேதமான ‘திருவிருத்தம்’ முதலிய நான்கு பிரபந்தங்களுக்கும் | கார்த்திகையில் கார்த்திகை நாள் இன்று என்று | கார்த்திகை மாதத்து க்ருத்திகை யன்றோ இன்று என்று கொண்டு |
| ஆறு அங்கம் கூற | ஆறு அங்கங்களாக ஆறு பிரபந்தங்களை யருளிச் செய்யும்பொருட்டு | காதலிப்பார் | குதூஹலிப்பவர்களினுடைய |
| | | வாய்த்த மலர் தாள்கள் | (நமக்கு) ப்ராப்தமான பாதாரவிந்தங்களை |
| மங்கையர் கோன் அவதரித்த | திருமங்கையாழ்வார் அவதரிக்கப்பெற்ற | வாழ்த்து | தோத்திரஞ்செய்வாயாக. |

*** ஆசார்ய ஹ்ருதயத்தில் “வேத சதுஷ்டயாங்கோபாங்கங்கள் பதினாலும் போலே இந் நாலுக்கும் இருந்தமிழ் நூற்புலவர் பனுவலாறும் மற்றை யெண்மர் நன்மாலைகளும்” என்றுள்ளது. வடமொழி வேதத்திற்கு அங்கங்களும் உபாங்கங்களும் இருப்பதுபோலே தமிழ் வேதத்திற்கும் அவை யுண்டு; ருக்யஜுஸ் ஸாமம் அதர்வணம் என்கிற நான்கு வேதங்களுக்கும் சிக்ஷா வியாகரணம் நிருக்தம் சந்தஸ் கல்பம் ஜ்யோதிஷம் என்கிற ஆறு அங்கங்களும் மீமாம்ஸா ந்யாய புராண தர்மசாஸ்த்ரங்கள் முதலிய உபாங்கங்கள் எட்டும் ஆகப் பதினாலும் போலே, திருவிருத்தம் திருவாசிரியம் பெரிய திருவந்தாதி திருவாய்மொழியாகிற இந்தத் தமிழ் மறை நான்கிற்கும் திருமங்கையாழ்வாருடைய திவ்வியப் பிரபந்தங்களாறும் மற்றை யாழ்வார்கள் எண்மருடைய விலக்ஷண ப்ரபந்தங்களும் அங்கோபாங்கங்களாமென்பது தாற்பரியம்

திருமங்கையாழ்வாருடைய பெரிய திருமொழி. திருக்குறுந்தாண்டகம், திருவெழு கூற்றிருக்கை, சிறிய திருமடல், பெரிய திருமடல், திருநெடுந்தாண்டகம் ஆகிய ஆறு பிரபந்தங்களும் ஆறு அங்கமாகக் கொள்ளப்பட்டன. நம்மாழ்வாருடைய திருவுள்ளத்தைப் பின்பற்றியே இவர் அருளிச்செய்திருப்பது கொண்டு இங்ஙனே கூறலாயிற்றென்க. (௯)

## திருப்பாணாழ்வார் திருநாள் கூறுதல்.

கார்த்திகையுரோகிணிநாள் காண்மினின்றுகாசினியீர் ! *
வாய்த்தபுகழ்ப்பாணர்வந்துதிப்பால் * -- ஆத்தியர்கள்
அன்புடனேதான் அமலனாதிபிரான்கற்றதற்பின் *
நன்குடனே கொண்டாடும்நாள். (௰)

| | | | |
|---|---|---|---|
| காசினியீர் | உலகத்தவர்களே ! | ஆத்தியர்கள் | ஆஸ்திகர்கள் |
| இன்று | இந்நாள் | அன்புடனே தான் | பக்தியோடு |
| கார்த்திகைஉரோகிணி நாள் காண்மின் | கார்த்திகைமாதத்து ரோகிணி நக்ஷத்ரமாகும்; | அமலனாதிபிரான் கற்றதன் பின் | அமலனாதி பிரானென்கிற பிரபந்தம் (இவராருளால்) கற்கப்பெற்றோமென்று மகிழ்வது பற்றியும் |
| வாய்த்த புகழ் | பொருந்திய புகழையுடையரான | | |
| பாணர் | திருப்பாணாழ்வார் | நன்குடனே | நலமாக |
| வந்து உதிப்பால் | வந்து தோன்றினபடியால் | கொண்டாடும் நாள் | கொண்டாடப் பெறும் நாளாகுமிது. |

* * * தமிழில் ரகரமுதலான சொல் வாத்தகாதாதலால் "கார்த்திகையில் ரோகிணிநாள்" என்பது சுத்த பாடமன்று. "கார்த்திகையில் உரோகிணி நாள்" என்னில் வெண்டளை பிறழுமாதலால் அதுவும் பாடமன்று ; "கார்த்திகையுரோகிணிநாள்" என்பதுவே சுத்த பாடம். "புதியன புகுதலும் வழுவல" என்ற நன்னூற் சூத்திரத்தைக் கொண்டு ரகரமுதலதான சொற்பிரயோகமும் சிறுபான்மை வழுவற்ற தென்பாருமுளர். அறியவேண்டுமர்த்தங்களை யெல்லாம் அழகாக அமைத்துப் பத்தே பாசுரமாகச் சுருங்கவருளிச் செய்தவர் இவ்வாழ்வாரே யாதலால் " அமலனாதிபிரான் கற்றதற்பின் " என்று சிறப்பித்தெடுத்துக் கூறினரென்க. நன்கு—நன்மை. (௰)

## தொண்டரடிப்பொடியாழ்வார் திருநாள் கூறுதல்

மன்னியசீர்மார்கழியில் கேட்டையின்றுமாநிலத்தீர் ! *
என்னிதனுக்கேற்றமெனிலுரைக்கேன் *—துன்னுபுகழ்
மாமறையோன் தொண்டரடிப்பொடியாழ்வார்பிறப்பால் *
நான்மறையோர் கொண்டாடும்நாள். (௧௧)

| | | | |
|---|---|---|---|
| மா நிலத்தீர் | பரந்தவுலகத்திலுள்ளவர்களே ! | துன்னு புகழ் | நிரம்பிய புகழையுடையராய் |
| இன்று | இன்றைத்தினம் | மாமறையோன் | பரமவைதிகரான |
| சீர் மன்னிய | சிறப்புப்பொருந்திய | தொண்டரடிப் பொடி ஆழ்வார் | தொண்டரடிப் பொடியாழ்வாருடைய |
| மார்கழியில் கேட்டை | மார்கழிமாதத்துக் கேட்டையாகும்; | பிறப்பால் | அவதாரம் காரணமாக |
| இதனுக்கு | இந்நாளுக்கு | நால்மறையோர் | வைதிகோத்தமர்கள் |
| ஏற்றம் என் எனில் | என்ன ஏற்றமென்றால் | கொண்டாடும் நாள் | ஆதரிக்கும் திரு நாளாகுமிது. |
| உரைக்கேன் | சொல்லுகின்றேன்; (கேண்மின்) | | |

## திருமழிசைப்பிரான் திருநாள் கூறுதல்,

தையில்மகமின்று தாரணியீர் ! ஏற்றம் * இந்தத்
தையில்மகத்துக்குச் சாற்றுகின்றேன் *—துய்யமதி
பெற்ற மழிசைப்பிரான்பிறந்தநாளென்று *
நற்றவர்கள் கொண்டாடும்நாள். (கஉ)

| | | | |
|---|---|---|---|
| தாரணியீர் | நிலவுலகத்தவர்களே! | துய்ய மதி பெற்ற | பரிசுத்தமான மதியைப் பெற்ற |
| இன்று | இந்நாள் | | |
| தையில் மகம் | தைமாதத்து மகநக்ஷத்திரமாகும், | மழிசை பிரான் | திருமழிசையாழ்வார் |
| இந்த தையில் மகத்துக்கு ஏற்றம் சாற்றுகின்றேன் | இந்தத்தையில் மகத்திற்குண்டான பெருமையைச் சொல்லுகின்றேன்; (கேண்மின்;) | பிறந்த நாள் என்று | திருவவதரித்த திருநாளென்று |
| | | நல் தவர்கள் | மஹாதபஸ்விகள் |
| | | கொண்டாடும் நாள் | கொண்டாடப்பெற்ற நாளாமிது |

* * * இவ்வாழ்வார் பேயாழ்வாரை யடிபணிந்து திருந்தினவராதலால் அது தோன்றத் "துய்யமதி பெற்ற" என்றருளிச் செய்தார். மக நக்ஷத்திரத்தைச் சுற்றி ஸப்தரிஷிகள்வர்த்திப்பதாகச் சோதிடர்கள் கூறுவர்கள்; அதற்கேற்ப "நல்தவர்கள் கொண்டாடும் நாள்" என்றருளிச் செய்தார் போலும். தரணியென்னும் வடசொல் தாரணியென்று நீட்டல் பெற்றது. (கஉ)

## குலசேகராழ்வார் திருநாள் கூறுதல்.

மாசிப்புனர்பூசம் காண்மினின்று மண்ணுலகீர் *
தேசித்திவசத்துக்கேதென்னில்—* பேசுகினறேன்
கொல்லிநகர்க்கோன் குலசேகரன்பிறப்பால் *
நல்லவர்கள்கொண்டாடும்நாள். (கந)

| | | | |
|---|---|---|---|
| மண் உலகீர் | பூமண்டலத்திலுள்ளவர்களே ! | கொல்லி நகர் கோன் | கொல்லி என்னும் நகர்க்குத்தலைவரான |
| இன்று | இன்றைத்தினம் | | |
| மாசிபுனர்பூசம்காண்மின் | மாசிமாதத்துப் புநர்வஸு நக்ஷத்திரமன்றோ ; | குலசேகரன் | குலசேகராழ்வாருடைய |
| | | பிறப்பால் | திருவவதாரம்காரணமாக |
| இத்திவசத்துக்கு | இந்நாளுக்கு | நல்லவர்கள் | ஸத்துக்கள் |
| தேசு ஏது என்னில் | என்ன மதிப்பு என்றால் | கொண்டாடும் நாள் | சிலாகிக்கும் நாளாமிது. |
| பேசுகின்றேன் | சொல்லுகிறேன், (கேண்மின்.) | | |

* * * தேசு—தேஜஸ் என்னும் வடசொல்விகாரம். திவசம்—திவஸமென்னும் வடசொல் விகாரம்.

## நம்மாழ்வார் திருவவதார நாள் கூறுதல்.

ஏரார்வைகாசி விசாகத்தினேற்றத்தை *
பாரோரறியப் பகர்கின்றேன் *—சீராரும்
வேதம் தமிழ்செய்த மெய்யனெழில் குருகை *
நாதனவதரித்தநாள். (கச)

| | | | |
|---|---|---|---|
| ஏர் ஆர் | சீர்மை மிகுந்த | | |
| வைகாசிவிசாகத்தின் | வைகாசிமாதத்துவிசாக நக்ஷத்திரத்தினுடைய | தமிழ் செய்த | த்ராவிடமாகச்செய்தருளின |
| ஏற்றத்தை | சிறப்பை | மெய்யன் | யதார்த்தவாதியாய் |
| பாரோர் | உலகத்தவர்கள் | | |
| அறிய | தெரிந்துகொள்ளுமாறு | எழில் குருகை நாதன் | அழகிய திருநகரிக்குத்தலைவரான நம்மாழ்வார் |
| பகர்கின்றேன் | சொல்லுகிறேன்; | | |
| சீர் ஆரும் வேதம் | சீர்மை மிகுந்த வடமொழி வேதத்தை | அவதரித்த நாள் | தோன்றிய திருநாளன்றோ விது. |

## நம்மாழ்வாரும் அவர் திருநாளும் அவர் திருவாக்கும் ஒப்பற்றவை யெனல்.

உண்டோவைகாசி விசாகத்துக் கொப்பொருநாள்? *
உண்டோ சடகோபர்க் கொப்பொருவர்? *—உண்டோ
திருவாய்மொழிக்கொப்பு? தென்குருகைக்குண்டோ *
ஒருபார்தனிலொக்குமூர்? (௧௫)

| | | | |
|---|---|---|---|
| வைகாசி விசாகத்துக்கு ஒப்பு ஒரு நாள் உண்டோ | வைகாசி விசாகத்தோ டொத்ததொரு திருநாள் உண்டோ? (இல்லை;) | திருவாய்மொழிக்கு ஒப்பு உண்டோ | திருவாய்மொழியோ டொத்ததொரு திவ்யப் பிரபந்த முண்டோ? (இல்லை;) |
| சடகோபர்க்கு ஒப்புஒருவர் உண்டோ | நம்மாழ்வாரை யொத்த ஓராழ்வா ருண்டோ? (இலர்) | பார் தனில் | இப்பூமண்டலத்திற்குள்ளே |
| | | தென் குருகைக்கு ஒக்கும் ஒரு ஊர் உண்டோ | திருநகரியோ டொத்ததொரு திவ்ய தேச முண்டோ? (இல்லை.) |

## பெரியாழ்வார் திருநாள் கூறுதல்.

இன்றைப்பெருமையறிந்திலையோ ஏழைநெஞ்சே! *
இன்றைக்கென்னேற்றமெனிலுரைக்கேன் * —நன்றிபுனை
பல்லாண்டுபாடிய நம்பட்டர்பிரான் வந்துதித்த *
நல்லானியில் சோதிநாள். (௧௬)

| | | | |
|---|---|---|---|
| ஏழை நெஞ்சே | அறிவிலியான மனமே! | பல்லாண்டு பாடிய | திருப்பல்லாண்டை யருளிச்செய்த |
| இன்றை பெருமை அறிந்திலையோ | இன்றைக்குண்டான பெருமையை அறியமாட்டாயோ? | நம் பட்டர்பிரான் வந்து உதித்த | நம் பெரியாழ்வார் வந்து தோன்றிய |
| இன்றைக்கு ஏற்றம் என் எனில் | இந்நாளுக்கு என்ன பெருமை யெனில், | ஆனியில்சோதி நல் நாள் | ஆனிமாதத்து ஸ்வாதி யென்ற நல்ல நாள் காண். |
| உரைக்கேன் | சொல்லுகிறேன் கேள்; | | |
| நன்றி புனை | நன்மைவாய்ந்த | | |

## (இதுவுமது.)

மாநிலத்தின்முன் நம் பெரியாழ்வார்வந்துதித்த *
ஆனிதன்னில்சோதியென்றலாதரிக்கும் *—ஞானியர்க்கு
ஒப்போரிலை யிவ்வுலகுதனி லென்றுநெஞ்சே! *
எப்போதும் சிந்தித்திரு. (௧௭)

| | | | |
|---|---|---|---|
| நெஞ்சே | ஓ மனமே! | ஆதரிக்கும் | கொண்டாடுகின்ற |
| முன் | முற்காலத்தில் | ஞானியர்க்கு | ஞானிகளான பெரியார்களுக்கு |
| நம் பெரியாழ்வார் | நமக்குத்தலைவரான பெரியாழ்வார் | ஒப்போர் இவ் உலகு தனில் இலை என்று | ஸமமானவர்கள்இவ்வுலகில்யாருமிலரென்று |
| மா நிலத்தில் வந்து உதித்த | இவ்வுலகில்வந்துதோன்றப்பெற்ற | எப்போதும் சிந்தித்து இரு | ஸதாகாலமும் அநுஸந்திப்பாயாக. |
| ஆனி தன்னில் சோதி என்றால் | ஆனிமாதத்து ஸ்வாதீ நக்ஷத்ரமென்றபோதே | | |

## பெரியாழ்வாரென்ற திருநாமத்திற்குக் காரணம் கூறுதல்.

மங்களாசாசனத்தில் மற்றுள்ளவாழ்வார்கள் *
தங்களார்வத்தளவுதானன்றி * — பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான்பெற்றுன் *
பேரியாழ்வாரென்னும் பேயர். (கஅ)

| | | | |
|---|---|---|---|
| வில்லிபுத்தூர் பட்டர் பிரான் | ஸ்ரீ வில்லி புத்தூரிலவதரித்த விட்டுசித்தர் | மற்றுள்ள ஆழ்வார்கள் தங்கள் | மற்ற ஆழ்வார்களுடைய |
| பெரியாழ்வார் என்னும் பெயர் | பெரியாழ்வா ரென்கிற திருநாமத்தை | ஆர்வத்து அளவு தான் அன்றி | அபிநிவேசத்திற்காட்டிலும்அதிகமாக |
| பெற்றுன் | (விருதாகப்) பெற்றுர்; (இது எதனுலேயென்னில்,) | பொங்கும் பரிவாலே | விஞ்சி யெழுந்த பரிவு காரணமாக. |
| மங்கள ஆசாசனத்தில் | எம்பெருமானுக்குக் காப்பிடும்விஷயத்தில் | | |

*** பட்டர்பிரானுக்குப் பெரியாழ்வாரென்கிற விருது எதனுல் விளைந்தது? இவர் மற்ற ஆழ்வார்களிற் காட்டில் வயதில் மூத்தவருமல்லர்; பொய்கையார் முதலாகக் குலசேகர ரீருகவுள்ள ஆழ்வார்கள் இவரைவிட மூத்தவர்கள் பெரிய பிரபந்தங்கள் இட்டருளினவ ரென்று சொல்லலாமோ வெனில், நம்மாழ்வாரைவிட இவர் அதிகப்பிரபந்தங்களிட்டவரல்லர்; ஆகவே எதனு லிவரைப் பெரியாழ்வாரென்கிறது? என்னில்; எம்பெருமானுக்கு என் வருகிறதோ வென்று வயிறு பிடித்து மங்களாசாஸநம் செய்வதில் இவருடைய காதல் பெரிதானது பற்றியே இவரைப் பெரியாழ்வாரென்றனர் என்றதாயிற்று. மற்ற ஆழ்வார்களுக்கு மங்களாசாஸநருசியே இல்லையென்று சொல்லவொண்ணுது; எல்லார்க்கும் அது உண்டு; ஆனுலும் அது இவர்க்குக் கனத்திருந்தது என்னுமிடம் முன்னடிகளில் விளங்கக் காண்க. (கஅ)

## திருப்பல்லாண்டின் முதன்மைக்குக் காரணம்கூறுதல்

கோதிலவாமாழ்வார்கள் கூறுகலைக்கெல்லாம் *
ஆதி திருப்பல்லாண்டானதுவும் * — வேதத்துக்
கோமென்னுமதுபோல் உள்ளதுக்கெல்லாம் சுருக்காய் *
தான்மங்கலமாதலால். (கக)

| | | | |
|---|---|---|---|
| கோது இல ஆம் | குற்றமற்றவையான | வேதத்துக்கு ஓம் என்னுமதுபோல் | ஸகல வேதங்களுக்கும் ப்ரணவம்போல |
| ஆழ்வார்கள் கூறுகலைக்கு எல்லாம் | ஆழ்வார்களருளிய திவ்யப்பிரபந் தங்களுக்கெல்லாம் | உள்ளதுக்கு எல்லாம் சுருக்கு ஆய் | உள்ள அர்த்தங்களுக்கெல்லாம் ஸங்க்ரஹமாய்க் கொண்டு |
| திருப்பல்லாண்டு ஆதி ஆனதுவும் | திருப்பல்லாண்டேமுதற்பிரபந்தமாகப் பெற்றதும்(எதனுலே யென்னில்) | மங்கலம் ஆதலால் தான் | மங்கள ரூபமாயுமிருப்பது பற்றியே. |

*** கோதில ஆம் = அஸாரமென்று கழிக்கத் தக்க அம்சங்களொன்றுமின்றிக்கே முழுதும் ஸாரமேயான என்றபடி. வேதங்களுக்கு ப்ரணவம் முதன்மையானது போல, திவ்யப்பிரபந்தங்களுக்கெல்லாம் திருப்பல்லாண்டு முதன்மையாயிற்று ப்ரணவமானது ஸகல வேதார்த்த ஸாரநிதியாகவும் மங்கலச் சொல்லாகவுமிருக்கும்; அதுபோலவே திருப்பல்லாண்டும் ஸகல திவ்யப்ரபந்த ஸாரார்த்த நிதியாகவும் மங்லமயமாகவுமிருக்குமென்க.

ஸர்வாதிகாரமான இப்பிரபந்தத்தில் ஓமென்று பிரயோகித்ததனால் ப்ரணவம் ஸர்வாதிகாரமென்று ஆசிரியரது திருவுள்ளமாக உணரத்தகும். (யகூ)

## திருப்பல்லாண்டுக்கும் பெரியாழ்வார்க்கும் ஒப்பில்லாமை கூறுதல்

உண்டோ திருப்பல்லாண்டுக்கு ஒப்பதோர்கலைதான் *
உண்டோ பெரியாழ்வார்க்கொப்பொருவர்— * தண்டமிழ்நூல்
செய்தருளுமாழ்வார்கள்தம்மில் அவர்செய்கலையில் *
பைதல்நெஞ்சே நீயுணர்ந்துபார். (உய)

| | | | |
|---|---|---|---|
| தண் தமிழ் நூல் செய் தருளும் ஆழ்வார்கள் தம்மில் | திவ்வியப் பிரபந்தங்களருளிச் செய்த ஆழ்வார்களுக்குள்ளே | திருப்பல்லாண்டுக்கு ஒப்பது ஓர் கலை தான் உண்டோ | திருப்பல்லாண்டோடொத்ததொரு பிரபந்தந்தா னுண்டோ? (இல்லை.) |
| பெரியாழ்வார்க்கு ஒப்பு ஒருவர் உண்டோ | பெரியாழ்வாரோடொத்த வொருவர் உளரோ? (இல்லை); | பைதல் நெஞ்சே | பேதை மனமே! |
| அவர் செய் கலையில் | அவ்வாழ்வார்களருளிச் செய்த நூல்களுள் | நீ உணர்ந்து பார் | இதை நீ விமர்சித்து அறிவாயாக |

* * * இப்பாட்டின் மூன்றாமடியில் "அவர் செய் கலையை" என்று பலரும் ஓதிவரும் பாடம் மறுக்கவும் மறக்கவும் தக்கது. அது அநந்விதம். (உய)

## ஆண்டாள் மதுரகவிகள் உடையவர் இம் மூவருடைய அவதார நாட்களை இனிக் கூறுவேனெனல்.

ஆழ்வார் திருமகளாராண்டாள் * மதுரகவி
யாழ்வாரெதிராசராமிவர்கள்— * வாழ்வாக
வந்துதித்தமாதங்கள் நாள்கள் தம்மின் வாசியையும் *
இந்த வுலகோர்க்குரைப்போம் யாம். (உக)

| | | | |
|---|---|---|---|
| ஆழ்வார் திருமகளார் ஆண்டாள் | (கீழ்ச் சொன்ன) ஆழ்வாருடைய பெண்பிள்ளையான ஆண்டாளென்ன | வந்து உதித்த | இங்கு வந்து தோன்றப் பெற்ற |
| மதுரகவியாழ்வார் | மதுரகவியாழ்வாரென்ன | மாதங்கள் நாள்கள் தம்மின் வாசியையும் | மாஸ நக்ஷத்ரங்களின் வைலக்ஷண்யத்தையும் |
| எதிராசா ஆம் இவர்கள் | எம்பெருமானாரென்ன ஆகிய இம்மூவரும் | இந்த உலகோர்க்கு | இவ்வுலகத்தவர்களுக்கு |
| வாழ்வு ஆக | லோகோஜ்ஜீவனார்த்தமாக | யாம் உரைப்போம் | இனி யாம் எடுத்துரைப் போம். |

* * * பொய்கையார் முதலானவர்கள் எம்பெருமானது திருக்குணக்கடலில் ஆழ்ந்ததனால் ஆழ்வார்களென்று பெயர்பெற்றது போல, மதுரகவிகள் நம்மாழ்வாருடைய குணக்கடலில் ஆழ்ந்ததனால் இவரும் ஆழ்வாரெனப் பெற்றாரென்க. ஆண்டாளும் மதுரகவிகளும் திவ்வியப் பிரபந்தங்களருளிச் செய்தமைபற்றி இவர்களுக்கும் திருநாள்பாட்டு இட்டருளவேண்டியதாயிற்று எம்பெருமானார் "தமிழ் மறைகளாயிரமும் மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமாநுசன்" என்றபடி அருளிச்செயல்களை வளர்த்த, தாயாதலாலும் அவர் விஷயமான நூற்றந்தாதிப்பிரபந்தம் அவதரித்திருத்தலாலும் அவர்க்கும் திருநாள்பாட்டு இட்டருள வேண்டியதாயிற்று. திருவரங்கத்தமுதனார் பிரபந்தம் பணித்தவராயிருந்தாலும் அவர்க்கு அர்ச்சைத்திருக்கோலம் அமைந்திலதாதலால் நாள்பாட்டுஸேவிக்கப்ரஸக்தியில்லையென்று விடப்பட்டது. ஆழ்வார் திருமகளார்—ஆழ்வார்களெல்லார்க்கும் திருமகளான, என்னவுமாம் (உக)

## ஆண்டாளுடைய திருநாள் கூறுதல்

இன்றோ திருவாடிப்பூரம் * எமக்காக
வன்றோ இங்காண்டாளவதரித்தாள்— * குன்றாத
வாழ்வான வைகுந்தவான் போகந்தன்னை யிகழ்ந்து *
ஆழ்வார்திருமகளாராய். (உஉ)

| | | | |
|---|---|---|---|
| இன்றோ திரு ஆடி பூரம் | திருவாடிப்பூர மென்னும் திருநாள் இன்றைக் கன்றோ; | இங்கு | இவ்விருள் தருமா ஞாலத்திலே |
| ஆண்டாள் | சூடிக் கொடுத்த நாச்சியார் | ஆழ்வார் திருமகளார் ஆய் | பெரியாழ்வாரது புதல்வியாய் |
| குன்றாத வாழ்வு ஆன | நித்ய ஸ்ரீயான | எமக்காக அன்றோ அவதரித்தாள் | நம் போல்வாருடைய உஜ்ஜீவனத்திற்காக வன்றோ திருவவதாரம் செய்தாள். |
| வைகுந்தம் வான் போகம் தன்னை இகழ்ந்து | ஸ்ரீ வைகுண்டத்திலுள்ள திவ்ய போகத்தையும் விட்டு | | |

*** எம்பெருமான் இந்நிலத்தில் திருவவதரித்து கீதோபநிஷத்தைத் தன் முகத்தாலே வெளியிட்டருளி உபகரித்தான்; அது வடமொழியாயும் கஹநமாயுமிருப்பதனால் அனைவர்க்கும் ஒருங்கே பயன்படவில்லை; இக்குறை தீரப் பெரியபிராட்டியார் தாம் வந்து திருவவதரித்து "வேதமனைத்துக்கும் வித்தாகும் கோதை தமிழ்" என்று புகழத்தக்கதான திவ்வியப் பிரபந்தத்தை எளிய தமிழ் நடையில் உபகரித்து அஸ்மதாதிகளை உய்வித்தாள் என்பது இங்கு உணரத்தக்கது. (உஉ)

## ஆண்டாளுக்கும் அவளுடைய நன்னாளுக்கும் ஒப்பில்லை யெனல்.

பெரியாழ்வார்பெண்பிளையாய் ஆண்டாள்பிறந்த *
திருவாடிப்பூரத்தின் சீர்மை— * ஒருநாளைக்
குண்டோ மனமேயுணர்ந்துபார் * ஆண்டாளுக்
குண்டாகி லொப்பிதற்குமுண்டு. (உங)

| | | | |
|---|---|---|---|
| ஆண்டாள் | சூடிக்கொடுத்த நாச்சியார் | மனமே உணர்ந்து பார் | நெஞ்சே! இதை ஆராய்ந்து காண்; |
| பெரியாழ்வார் பெண்பிளை ஆய் | பெரியாழ்வார் திருமகளாக | ஆண்டாளுக்கு ஒப்பு உண்டாகில் இதற்கும் ஒப்பு உண்டு | ஆண்டாளோ டொத்த வ்யக்தியுண்டாகில் இந்நாளோடொத்த நாளும் வேறொன்று இருக்கும் |
| பிறந்த | அவதரிக்கப்பெற்ற | | |
| திரு ஆடி பூரத்தின் சீர்மை | திருவாடிப்பூர நன்னாளின் பெருமை | | |
| ஒரு நாளைக்கு உண்டோ | மற்றொரு நாளைக்கு உளதோ? | | |

*** முதலடியில் "பெண்பிள்ளை" என்கிற சொல் 'பெண் பிளை' எனத் தொக்கியிருப்பதாகக் கொள்ளவேணும்; இல்லையேல் வெண்டளை பிறழும். (உங)

## ஆண்டாள் பெருமை கூறுதல்

அஞ்சுகுடிக்கொரு சந்ததியாய் * ஆழ்வார்கள்
தஞ்செயலை விஞ்சிநிற்குந்தன்மையளாய்— * பிஞ்சாய்ப்
பழுத்தாளையாண்டாளைப் பத்தியுடன் நாளும் *
வழுத்தாய் மனமே மகிழ்ந்து. (உச)

| | | | |
|---|---|---|---|
| அஞ்சு குடிக்கு | (1) ஐந்து குடும்பங்களுக்கு, (2) எம்பெருமானுக்கு என்ன தீங்கு வருகிறதோ வென்று அஞ்சுகின்ற (ஆழ்வார்கள் பதின்மரின்) குடிக்கு | ஆழ்வார்கள் தம் செயலை விஞ்சி நிற்கும் தன்மையள் ஆய் | ஆழ்வார்களின் படியை அதிசயித்திருக்கு மியல்வினளாய் |
| ஒரு சந்ததி ஆய் | ஒரு புதல்வியாய்த் தோன்றி | பிஞ்சு ஆய் பழுத்தாளை | இளம் பிராயத்திலேயே அன்பு முதிரப்பெற்ற |
| | | ஆண்டாளை | சூடிக்கொடுத்த நாச்சியாரை |
| | | மனமே | நெஞ்சே! |
| | | மகிழ்ந்து | உகந்து |
| | | பத்தி உடன் | பக்தியோடு |
| | | நாளும் வழுத்தாய். | எப்போதும்துதிப்பாயாக |

*** இப்பாட்டில் முதலடி சிலேடையாக அமைந்தது. "அஞ்சுகுடிக்கு" என்றது ஐந்து குடும்பங்களுக்கு என்றும், அஞ்சுகின்ற குடும்பத்திற்கு என்றும் பொருள்படும். ஐந்து குடும்பங்கள் எவையென்னில்; ஆண்டாளுக்கு முன்னே அவதரித்த ஏழு ஆழ்வார்களின் குடி ஐந்தாகும்; எங்ஙனே யென்னில்; முதலாழ்வார்கள் மூவரும் சேர்ந்து ஒரு குடி [அயோநிஜ குடும்பம்] என்க; இரண்டாவது திருமழிசையாழ்வாரது குடி; மூன்றாவது நம்மாழ்வாரது குடி; நான்காவது குலசேகராழ்வாரது குடி; ஐந்தாவது பெரியாழ்வாரது குடி. ஆக அஞ்சு குடிக்குமாக ஆண்டாளொருத்தியே ஸந்தானமாகத் தோன்றின ளென்கை.

ஆண்டாளுக்குப் பிறகு அவதரித்தருளின தொண்டரடிப்பொடியாழ்வார் திருப்பாணாழ்வார் கலியன் ஆகிய மூவர்க்குங்கூட இவளே சந்ததி என்கிற பொருளும் விளங்கக் குறையில்லை; எங்ஙனே யென்னில், அஞ்சு குடி யென்பதற்கு அஞ்சுகின்ற குடி யென்றும் பொருள் படுதலால் ஆழ்வார்கள் பதின்மரையும் இச் சொல்லால் ஸங்க்ரஹிக்கக் குறையில்லை. எம்பெருமானுக்கு என்ன அபாயம் நேருமோ! என்று அஞ்சுகை பதின்மர்க்கும் உளதாதலால் அப்பதின்மரையும் அஞ்சுகுடி யென்னத் தட்டில்லை; ஆகவே ஆழ்வார்கள் பதின்மர்க்கும் ஆண்டாளொருத்தியே புதல்வியாகத் தோன்றியவள் என்கிற பரமார்த்தமும் தெரிவிக்கப் பட்டதாயிற்று. * ப்ரஜயா பித்ருப்ய: * என்று வேதத்தில் ஓதப்பட்டதொரு கடனும் ஆழ்வார்கட்கு ஆண்டாளால் தீர்ந்ததென்கை.

ஆழ்வார்கள் இயற்கையிலே ஆண்களாய்ப் பிறந்து பெண்மையை ஏறிட்டுக்கொண்டு பேசினார்கள்; ஆண்டாள் அப்படியல்லாமல் இயற்கையிலேயே பெண்ணாய்ப் பிறந்து புருஷோத்தமனை யநுபவிக்கும் திறத்தில் சிறந்த வுரிமையுடையளானதுபற்றி "ஆழ்வார்கள் தஞ் செயலை விஞ்சி நிற்குந் தன்மையளாய்" என்றருளிச்செயலாயிற்று. இவள் பருவம் நிரம்புவதற்கு முன்னமே * வானிடை வாழுமவ்வானவர்க்கு * என்பது முதலான பாசுரங்களில் தானே பணித்தபடி பகவத்விஷயத்தில் அன்பு அதிகரிக்கப் பெற்றவளாதலால் "பிஞ்சாய்ப் பழுத்தாள்" எனப்பட்டாள். "அவரப்பிராயந் தொடங்கி" என்றதும் காண்க. வழுத்துதல்—துதித்தல். (உ௪)

## மதுரகவியாழ்வாரின் திருநாள் கூறுதல்.

ஏரார்மதுரகவி யிவ்வுலகில்வந்துதித்த *
சீராரும்சித்திரையில் சித்திரைநாள்—* பாருலகில்
மற்றுள்ளவாழ்வார்கள் வந்துதித்தநாள்களினும் *
உற்றதெமக்சென்றுநெஞ்சேயோர். (உரு)

| | | | |
|---|---|---|---|
| ஏர் ஆர் மதுரகவி | சிறப்புப் பொருந்திய மதுரகவிகள் | மற்றுள்ள ஆழ்வார்கள் | பொய்கையார் முதலான மற்ற ஆழ்வார்கள் |
| இ உலகில் வந்து உதித்த | இந்நிலத்தில் வந்து தோன்றப்பெற்ற | வந்து உதித்த நாள்களிலும் | வந்து தோன்றிய நாள்களிற் காட்டிலும் |
| சீர் ஆரும் சித்திரையில் சித்திரை நாள் | சிறப்புடைய சித்திரை மாதத்துச் சித்திரை நக்ஷத்திரமானது | எமக்கு உற்றது | நமக்கு மிகவும் உபாதேயமானது |
| (எப்படிப்பட்டதென்றால்) | | என்று நெஞ்சே ஓர் | என்று மனமே! பிரதிபத்தி பண்ணுவாயாக |
| பார் உலகில் | பூலோகத்தில் | | |

*** ஸ்ரீவசநபூஷணத்தில் நான்காம் பிரகரணத்தில் "உண்டபோதொருவார்த்தையும் உண்ணாதபோதொருவார்த்தையும் சொல்லுவார் பத்துப்பேருண்டிறே; அவர்கள் பாசுரங் கொண்டன்று இவ்வர்த்த மறுதியிடுவது; அவர்களைச் சிரித்திருப்பாரொருவருண்டிறே; அவர் பாசுரங்கொண்டு இவ்வர்த்த மறுதியிடக் கடவோம்" என்று மதுரகவிகளுக்கு ஏற்றம் சொல்லப் பட்டிருப்பதால் அதை நோக்கி இப்பாசுரம் அவதரித்த தென்க. 'ஆசார்யனே உபாயம்' என்கிற அர்த்தம் இவருடைய திவ்வியப்பிரபந்தமான கண்ணிநுண் சிறுத்தாம்பிலேயே அறுதியிடப்படுமாதலால் இவ்வேற்றம் தகும். (உரு)

## மதுரகவிகளின் பிரபந்தம் நாலாயிரத்தினுள் சேர்ந்தமை கூறுதல்

வாய்த்ததிருமந்திரத்தின் மத்திமமாம்பதம்போல் *
சீர்த்த மதுரகவி செய்கலையை — * ஆர்த்தபுகழ்
ஆரியர்கள் தாங்கள் அருளிச்செயல்நடுவே *
சேர்வித்தார் தாற்பரியம்தேர்ந்து. (உசு)

| | | | |
|---|---|---|---|
| வாய்த்த | நமக்கு ஏற்றதான | ஆரியர்கள் தாங்கள் | பூருவாசாரியர்கள் |
| திருமந்திரத்தில் | அஷ்டாக்ஷரமஹாமந்த்ரத்தில் | அருளிச் செயல் நடுவே | நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்களோடே |
| மத்திமம் ஆம் பதம் போல் | இடையிலுள்ளதான நம: பதம் போன்றதாக | சேர்வித்தார் | சேர்த்தருளினார்கள்; (எதனாலேயென்னில்) |
| மதுரகவி செய் | மதுரகவிகள் செய்தருளின | | |
| சீர்த்தகலையை | திவ்வியப்பிரபந்தத்தை | தாற்பரியம் தேர்ந்து | அந்தக் கண்ணிநுண் சிறுத்தாம்பு பிரபந்தத்தின் கருத்தை நோக்கியாம். |
| ஆர்த்த புகழ் | நிறைந்த புகழையுடையரான | | |

*** ஆழ்வார்களருளிச்செய்த திவ்வியப் பிரபந்தங்களெல்லாம் எம்பெருமானுடைய ஸ்வரூபரூப குணவிபூதி சேஷ்டிதங்களைப் பரக்கப் பேசுவன; அப்படிப்பட்ட திவ்வியப்பிரபந்தங்களினிடையே ஆழ்வார்தோத்திரமான இவரது பிரபந்தம் சேருவதற்கு நியாயமில்லையேயென்று சிலர் சங்கிக்கக் கூடுமாதலால் அன்னவர்கட்குத் தெளிவு பெறுத்துமிப்பாசுரம். ஆழ்வார்களின் திவ்வியப்பிரபந்தங்களெல்லாம் பெரும்பாலும் திருமந்திரம் த்வயம் சரமச்லோகம் ஆகிய ரஹஸ்யத்ரயத்தின் பொருள்களையே விவரிப்பனவாகும்; அதில் திருமந்திரத்தில் நடுவேயுள்ளதான நம:பதத்தில் நம் ஆசாரியர்கள் முக்கியமாக பாகவத சேஷத்வத்தை அநுஸந்தித்துப் போருவர்கள். இவ்விஷயம் முமுக்ஷுப்படியிலும் அதன் வியாக்கியானத்திலும் விசதம். அப்படிப்பட்ட பாகவத சேஷத்வத்தையே கனக்கப் பேசுமதான கண்ணிநுண் சிறுத்தாம்பு ஆழ்வாரருளிச்செயல்களிடையே சேர்ந்து திகழவேண்டுவது அவசியம் என்று நம் ஆசாரியர்கள் திருவுள்ளம் பற்றினார்களென்றதாயிற்று. (உசு)

## எம்பெருமானார் திருநாள் கூறுதல்

இன்றுலகீர் சித்திரையில் ஏய்ந்ததிருவாதிரைநாள் *
என்றையிலுமின்றிதனுக்கேற்றமென்தான் —* என்றவர்க்குச்
சாற்றுகின்றேன்கேண்மின் எதிராசர்தம்பிறப்பால் *
நாற்றிசையும்கொண்டாடும்நாள். (உஎ)

| | | | |
|---|---|---|---|
| உலகீர் | உலகத்தவர்களே! | | |
| இன்று | இந்நாள் | சாற்றுகின்றேன் | விடை கூறுகின்றேன்; |
| சித்திரையில் ஏய்ந்த | சித்திரை மாதத்தில் பொருத்தம் பெற்ற | கேண்மின் | கேளுங்கள்; |
| திரு ஆதிரை நாள் | திருவாதிரை நக்ஷத்திரம்; | எதிராசர் தம் | யதிராஜரான உடையவருடைய |
| என்றையிலும் | மற்றுமுள்ள தினங்களைக் காட்டிலும் | பிறப்பால் | திருவவதாரத்தினால் |
| இன்று இதனுக்கு | இற்றை நாளுக்கு | நால்திசையும் | நாலு திசைகளிலுமுள்ளவர்கள் |
| ஏற்றம் என் தான் என்றவர்க்கு | சிறப்பு என்கொல்? என்று கேட்பவர்களுக்கு | கொண்டாடும் நாள் | கொண்டாடுகின்ற நாளாமிது. |

## (இதுவுமது.)

ஆழ்வார்கள்தாங்கள் அவதரித்தநாட்களினும் *
வாழ்வானநாள்நமக்கு மண்ணுலகீர் —* ஏழ்பாரு
முய்ய வெதிராசருதித்தருளும் * சித்திரையில்
செய்ய திருவாதிரை. (உஅ)

| | | | |
|---|---|---|---|
| மண் உலகீர் | மண்ணுலகத்தவர்களே! | | |
| ஆழ்வார்கள் தாங்கள் | பொய்கையார் முதலான ஆழ்வார்கள் | ஏழ் பாரும் உய்ய | உலகமெல்லாம் உஜ்ஜீவிக்கும்படி |
| அவதரித்த நாட்களினும் | அவதரிக்கப்பெற்ற நாட்களைவிட | எதிராசர் உதித்தருளும் | எம்பெருமானார் திருவவதரிக்கப்பெற்ற |
| நமக்கு வாழ்வு ஆன நாள் | நமக்கு விசேஷித்து உஜ்ஜீவன ஹேதுவான நாள் (எதுவென்றால்) | சித்திரையில் செய்ய திரு ஆதிரை | சித்திரை மாதத்தில் சிறப்புடைத்தான திருவாதிரையேயாம். |

*** ஆழ்வார்கள் திவ்யப்பிரபந்தங்களை யருளிச்செய்த மாத்திரமே; அவற்றைப் பல படிகளாலும் வளர்த்தருளினவர் எம்பெருமானாரே யாதலாலும், இவ்விஷயத்தை அக்காலத்திலேயே "தமிழ்மறைகளாயிரமும் ஈன்ற முதல் தாய் சடகோபன், மொய்ம்பால் வளர்த்த இதத் தாய் இராமானுசன்" "எங்கள் கதியே இராமாநுச முனியே! சங்கை கெடுத்தாண்ட தவராசா பொங்குபுகழ் மங்கையர்கோனீந்த மறையாயிரமனைத்தும் தங்குமனம் நீயெனக்குத் தா" என்பவை முதலான தனியன்களால் பூருவர்கள் வெளியிட்டிருந்ததனாலும், பெற்றவர்களைக் காட்டிலும் வளர்த்தவர்களுக்கே பெருமை பொருந்துமாதல்பற்றி இப்பாசுரம் மிகப் பொருத்தமாக அமைந்தது. (உஅ)

## (இதுவுமது.)

எந்தையெதிராசர் இவ்வுலகிலெந்தமக்கா *
வந்துதித்த நாளென்னும் வாசியினால் —* இந்தத்
திருவாதிரைதன்னின் சீர்மைதனைநெஞ்சே *
ஒருவாமலெப்பொழுதுமோர். (உகூ)

| | | | |
|---|---|---|---|
| நெஞ்சே | மனமே! | இந்த திரு ஆதிரை தன்னின் | இந்தத் திருவாதிரைத் திருநாளினுடைய |
| எந்தை எதிராசர் | அஸ்மதாசாரியரான எம்பெருமானார் | சீர்மை தனை | சிறப்பை |
| இ உலகில் | இந்நிலவுலகத்தில் | ஒருவாமல் | இடைவிடாமல் |
| எம் தமக்கு ஆ | நமக்காகவே | எப்பொழுதும் | ஸதாகாலமும் |
| வந்து உதித்த நாள் என்னும் வாசியினால் | வந்து தோன்றப்பெற்ற திருநாளென்கிற வைலக்ஷண்யத்தைக் கொண்டு | ஓர் | சிந்தித்திரு. |

* * * ஆதிசேஷனே எம்பெருமானாராகத் திருவவதரித்தருளினர் ; இவர் நலமந்தமில்லதோர் நாட்டிலே *சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம் * இத்யாதிப்படியே எம்பெருமானுக்கு ஸகலவித கைங்கரியங்களும் செய்து கொண்டு வாழ வேண்டியிருக்க, அதைவிட்டுப் பலபல கஷ்டங்களுக்கு ஆஸ்பதமான இவ்விருள் தருமா ஞாலத்திலே அவதரித்தருளினது நித்யஸம்ஸாரிகளான நம்போல்வாரைப் பிறவிக் கடலில் நின்றும் கைகொடுத்தெடுப்பதற்காகவே யென்று அநுஸந்தித்து இவரது திருநாளைக் கொண்டாடவேணுமென்றாராயிற்று. (உகூ)

## முதலாழ்வார்கள் கலியன் திருப்பாணாழ்வாராகிய இவர்களின் திருவவதாரஸ்தலங்கள் கூறுதல்.

எண்ணரும்சீர்ப்பொய்கைமுன்னோர் இவ்வுலகில் தோன்றியவூர் *
வண்மைமிகுகச்சிமல்லைமாமயிலை —* மண்ணியினீர்
தேங்கும்குறையலூர் சீர்க்கலியன்தோன்றியவூர் *
ஓங்குமுறையூர்பாணனூர் (௩௦)

| | | | |
|---|---|---|---|
| எண்ண அரு சீர் | எண்ணமுடியாத திருக்குணங்களையுடைய | மண்ணியின் நீர் தேங்கும் குறையலூர் | மண்ணியாற்றின் தீர்த்தம் வந்துதேங்குமிடமான திருக்குறையலூரானது |
| பொய்கை முன்னோர் | பொய்கையார் பூதத்தார் பேயார் மூவரும் | சீர் கலியன் தோன்றிய ஊர் | சீர்மை மிக்க திருமங்கையாழ்வார் அவதரித்த தலம்; |
| இ உலகில் தோன்றிய ஊர் | இந்நிலத்தில் அவதரிக்கப்பெற்ற தலங்கள் எவையென்றால், | ஓங்கும் உறையூர் | உயர்ந்த உறையூரானது |
| வண்மை மிகு கச்சி மல்லை மா மயிலை | (முறையே) அழகிய காஞ்சீ நகரமும் திருக்கடல் மல்லையும் மயிலையுமாம்; | பாணன் ஊர் | திருப்பாணாழ்வார் திருவவதரித்த தலம். |

## தொண்டரடிப்பொடியாழ்வார் குலசேகராழ்வார்களின் திருவவதாரஸ்தலம் கூறுதல்.

தொண்டரடிப்பொடியார் தோன்றியவூர் * தொல்புகழ்சேர்
மண்டங்குடியென்பர் மண்ணுலகில் —* எண்டிசையும்
ஏத்தும் குலசேகரனூரெனவுரைப்பர் *
வாய்த்ததிருவஞ்சிக்களம். (௩க)

| | | | |
|---|---|---|---|
| தொல் புகழ் சேர் | நித்தியமான புகழை யுடைய | திருவஞ்சிக்களம் | திருவஞ்சிக்களமென்கிற பதியை |
| மண்டங்குடி | திருமண்டங்குடி யென்கிற பதியை | எண் திசையும் ஏத்தும் | எட்டுத்திசையிலுமுள்ளாரும் துதிக்கும் படியான |
| தொண்டரடிப் பொடியார் தோன்றிய ஊர் என்பர் | தொண்டரடிப் பொடியாழ்வார் அவதரித்த தலமென்பர்பெரியார்; | குலசேகரன் ஊர் என உரைப்பர் | குலசேகராழ்வார்தோன்றிய தலமென்பர். |
| வாய்த்த | அடியார்கள் ஈடுபடத்தக்க | | |

## திருமழிசைப்பிரான் நம்மாழ்வார்பெரியாழ்வார்களின் திருவவதார ஸ்தலம் கூறுதல்.

மன்னுதிருமழிசை மாடத்திருக்குருகூர் *
மின்னுபுகழ்வில்லிபுத்தூர் மேதினியில்—* நன்னெறியோர்
ஏய்ந்தபத்திசார ரெழில்மாறன் பட்டர்பிரான் *
வாய்ந்துதித்தவூர்கள்வகை. (௩௨)

| | | | |
|---|---|---|---|
| மேதினியில் | இந்நிலவுலகில் | நல் நெறியோர் ஏய்ந்த பத்திசாரர் | ஸன்மார்க்க நிஷ்டர்கள் சேரும் திருமழிசை யாழ்வாரென்ன, |
| மன்னு திருமழிசை | நித்ய ஸ்ரீயான திருமழிசையும் | எழில் மாறன் | அழகிய நம்மாழ்வாரென்ன |
| மாடம் திரு குருகூர் | மாடங்கள் சூழ்ந்த திருநகரியும் | பட்டர்பிரான் | பெரியாழ்வாரென்ன ஆகிய இம் மூவரும் |
| மின்னு புகழ் வில்லி புத்தூர் | விளங்கும் புகழையுடைய ஸ்ரீவில்லிபுத்தூரும் (ஆகிய இம்மூன்று திருப்பதிகள்) (முறையே) | வாய்ந்து | இவ்வுலகத்தைக் காப்பதற்குப் பொருத்தமாக |
| | | உதித்த ஊர்கள் வகை | அவதரிக்கப் பெற்ற திவ்விய தேசங்களாம் |

## ஆண்டாள் மதுரகவிகள்உடையவர்களின் அவதார ஸ்தலங்கள் கூறுதல்

சீராரும்வில்லிபுத்தூர் செல்வத்திருக்கோளூர் *
ஏரார்பெரும்பூதூரென்னுமிவை—* பாரில்
மதியாரு'மாண்டாள் மதுரகவியாழ்வார்
எதிராசர்தோன்றியவூரிங்கு. (௩௩)

| | | | |
|---|---|---|---|
| பாரில் | இவ்வுலகில் | மதி ஆரும் ஆண்டாள் | ஞானம் நிரம்பிய ஆண்டாளும் |
| சீர் ஆரும் வில்லிபுத்தூர் | ஸ்ரீ வில்லிபுத்தூர் | மதுரகவியாழ்வார் | மதுரகவியாழ்வாரும் |
| செல்வம் திரு கோளூர் | ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீமல்கிய திருக்கோளூர் | எதிராசர் | உடையவரும் |
| ஏர் ஆர் பெரும்பூதூர் | ஸ்ரீ பெரும்பூதூர் | இங்கு தோன்றிய ஊர் | இவ்வுலகில் வந்து அவதரித்த திருப்பதிகளாம். |
| என்னும் இவை | என்று சொல்லப்படுகிற இத்தலங்கள் (முறையே) | | |

*** திவ்வியப் பிரபந்தங்களை யருளிச் செய்தவர்கள் விஷயமாகத் தெரிவிக்கவேண்டிய மாஸ—நக்ஷத்ர—அவதார ஸ்தலங்களை இந்தப்பாசுரத்தோடு அருளிச் செய்து தலைக்கட்டினாயிற்று. திருவரங்கத்தமுதனா ரருளிச் செய்த இராமாநுச நூற்றந்தாதியைப்பற்றி இதில் ஒன்றும் அருளிச் செய்யாமையாலே அந்தப் பிரபந்தம் நாலாயிரத்தினுள் சேர்ந்ததாக அக்காலத்தில் கொள்ளப்படவில்லை யென்று தெரிகிறது ஆனதுபற்றியே அப்பிள்ளை யென்னுமாசிரியர் அந்த நூற்றந்தாதியைத் தவிர்த்தே நாலாயிரக் கணக்கு இட்டருளினர்போலும். மணவாளமாமுனிகள் தாமே நூற்றந்தாதியை நாலாயிரதிவ்வியப்பிரபந்தங்களோடொப்ப ஆதரிக்கவேணு மென்றும், திருக்கார்த்திகைமுதலாகக் கொள்ளும் அநத்யயன நியமம் இந்த நூற்றந்தாதிக்கும் சேர்த்துக் கொள்ளப்படவேணுமென்றும் நியமித்தருளினரென்று பெரியார் பணிக்கக் கேட்டிருக்கை. (௩௩)

## அருளிச் செயல்களுக்கு அவதரித்த வியாக்கியானங்களைப்பற்றிக் கூறுவோமெனல்.

ஆழ்வார்களேற்றம் அருளிச்செயலேற்றம் *
தாழ்வாதுமின்றியவைதாம்வளர்த்தோர் —* ஏழ்பாரு
முய்ய அவர்செய்த வியாக்கியைக ளுள்ளதெல்லாம் *
வையமறியப் பகர்வோம் வாய்ந்து, (௩௪)

| | | | |
|---|---|---|---|
| ஆழ்வார்கள் ஏற்றம் | ஆழ்வார்களுடைய வைபவமும் | ஏழ் பாரும் உய்ய | உலகங்களெல்லாம் உஜ்ஜீவிக்குமாறு |
| அருளிச்செயல் ஏற்றம் | அவர்களுடைய திவ்விய ஸூக்திகளின் வைபவமும் | அவர் செய்த | அவ்வாசாரியர்கள் அருளிச்செய்த |
| தாழ்வு ஆதும் இன்றி அவை | ஒருகுறையுமுளதபடி அவற்றை | வியாக்கியைகள் உள்ளது எல்லாம் | வியாக்கியானங்களெல்லாவற்றையும் |
| வளர்த்தோர் தாம் | வளர்த்தவர்களான பூருவாசாரியர்களையும் | வையம் அறிய வாய்ந்து பகர்வோம் | உலகத்திலுள்ளார் அறியுமாறு பொருத்தமாகக் கூறுவோமாக. |

*** இதில் மூன்றுமடியில் "அவர்கள் செய்த" என்றோதுவது பொருந்தாது; வெண்டளை பிறழும். 'அவர் செய்த' என்பதே சுத்தபாடம். (௩௪)

## ஆழ்வார்களையுமருளிச்செயல்களையும் கனக்க மதிக்க வேண்டுமெனல்

ஆழ்வார்களையு மருளிச்செயல்களையும் *
தாழ்வா நினைப்பவர்கள்தாம் * நரகில்—வீழ்வார்க
ளென்றுநினைத்து நெஞ்சே யெப்பொழுதும்நீயவர்பால் *
சென்றணுகக் கூசித் திரி. (௩௫)

| | | | |
|---|---|---|---|
| நெஞ்சே | மனமே!, | நரகில் வீழ்வார்கள் என்று நினைத்து | நரகத்தில் விழுந்து பரிதபிப்பர்களென்று நிச்சயித்து |
| ஆழ்வார்களையும் | பொய்கையார் முதலான ஆழ்வார்களையும் | அவர் பால் | அப்படிப்பட்ட பாவிகளிடத்தே |
| அருளிச்செயல்களையும் | அவர்களது திவ்விய ஸ்ரீ ஸூக்திகளையும் | சென்று அணுக | சென்று கிட்ட |
| தாழ்வு ஆ நினைப்பவர்கள் தாம் | குறைவாகவெண்ணுகின்றவர்கள் | கூசி திரி | கூச்சத்துடனிருப்பாயாக. |

** கீழ்ப்பாட்டில் பிரதிஜ்ஞை செய்தபடியே திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களைப் பற்றியருளிச் செய்யத் தொடங்க வேண்டியது ப்ராப்தமாயிருக்க, அதைவிட்டு இப்பாசுரம் முதலாக நான்கு பாசுரங்கள் வேறு விஷயமாக அருளிச் செய்வதென்? என்னில்; இவை ப்ராஸங்கிகமாக அருளிச் செய்யப்படுகின்றன. கீழ்ப்பாட்டில், ஆழ்வார்களேற்றமு மருளிச்செயலேற்றமும் குறையாதபடி அவற்றை வளர்த்தருளின ஆசாரியர்களைப் பற்றி ப்ரஸ்தாவிக்கையாலே அப்படிப்பட்ட ஆசாரியர்களின் திருவுள்ளம் புண்படுமாறு சில த்ரமிடோபநிஷத்பாஹ்ய குத்ருஷ்டிகள் தோன்றி ஆழ்வார்களையும் அருளிச் செயல்களையும் தூஷித்துக் கொண்டிருந்ததனால் அவர்களுடைய ஸஹவாஸமும் வர்ஜநீயமென்று இப்பாசுரத்தினாலருளிச் செய்ய ப்ராப்தமாயிற்று.

இதில் இரண்டாமடியில் "தாழ்வாக" என்று பாடம் வழங்கிவந்தாலும் வெண்டளை பிறழ நிற்றலால் அது கொள்ளற்பாலதன்று. "தாழ்வா" என்றே ஓதுக. (ருரு)

## ஸ்ரீமந்நாதமுனிகள் முதலான ஆசாரியர்களே நமக்குக் கதியெனல்.

தெருளுற்றவாழ்வார்கள் சீர்மையறிவாரார் *
அருளிச்செயலையறிவாரார்— * அருள்பெற்ற
நாதமுனிமுதலாம் நந்தேசிகரையல்லால் *
பேதைமனமேயுண்டோ பேசு. (ருசு)

| | | | |
|---|---|---|---|
| பேதை மனமே | அறிவில்லாத மனமே! | அருள் பெற்ற நாதமுனி முதலாம் | ஆழ்வாரருளை லபிக்கப் பெற்ற ஸ்ரீமந் நாதமுனிகள் முதலாக வுள்ள |
| தெருள் உற்ற ஆழ்வார்கள் சீர்மை அறிவார் ஆர் | யதார்த்த ஞானிகளான ஆழ்வார்களின் பெருமையை அறியுமவர்கள் யார்? | நம் தேசிகரை அல்லால் | நம் ஆசாரியர்களைத்தவிர |
| அருளிச் செயல் சீர்மையை அறிவார் ஆர் | திவ்விய ஸூக்திகளின் பெருமையை அறியுமவர்கள் யார்? | உண்டோ | வேறுயாரேனு முளரோ? |
| | | பேசு | ஆராய்ந்து சொல்லுவாயாக. |

* * * கீழ்ப்பாட்டில் ஸஹவாஸ போக்ய மல்லாதாராகக் கழிக்கப்பட்ட பாவிகள் வைஷ்ணவர் போலக் காணப்படினும் அவர்கள் ஸ்ரீமந் நாதமுனிகள் முதலான நம் பூருவாசாரியர்களின் பரம்பரையில் படிந்தவர்களல்லர், எங்கிருந்தோ வந்து புகுந்தவர்கள் என்று காட்டுதற்காக இப்பாசுரமருளிச் செய்யப்பட்டதென்க.

இதில் மூன்றாமடியில் "முதலான" என வழங்கும் பாடம் வெண்டளைக்கு ஒவ்வாதாதலால் சுத்தபாடமன்று. 'நாதமுனிமுன்னான" என்று சிலருடைய பாடமாம். (ருசு)

## ஆசாரிய பரம்பரையில் எம்பெருமானார்க்குள்ள ஏற்றம் கூறுதல்.

ஓராண்வழியா யுபதேசித்தார் முன்னோர் *
ஏராரெதிராசரின்னருளால் — * பாருலகில்
ஆசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள் கூறுமென்று
பேசி வரம்பறுத்தார் பின். (ருஎ)

| | | | |
|---|---|---|---|
| முன்னோர் | உடையவர்க்கு முன்னேயிருந்த ஆசாரியர்கள் | ஆரியர்காள் | ஆரியர்களே! என்று தம் அடியார்களை விளித்து (நீங்கள்) |
| ஓர் ஆண் வழி ஆய் | ஒரொருவர் வழியாக | பார் உலகில் | இப்பூமண்டலத்தில் |
| உபதேசித்தார் | அர்த்த விசேஷங்களை உபதேசித்துப் போந்தார்கள் | ஆசையுடையோர்க்கு எல்லாம் | (அர்த்தங்கள் கேட்க) ஆசையுடையாரெல்லார்க்கும் |
| பின் ஏர் ஆர் எதிராசர் | அவர்களுக்குப் பிறகு சிறப்பு வாய்ந்த எம்பெருமானார் | கூறும் என்று பேசி | உபதேசியுங்கள், என்று நியமித்து |
| இன் அருளால் | (தமது) பரமகிருபையினாலே | வரம்பு அறுத்தார் | முன்னோர்கள் வைத்துக் கொண்டிருந்தவொரு வரம்பைப் போக்கிவிட்டார். |

* * * கீழ்ப்பாட்டில் "நாதமுனி முதலாம் நம் தேசிகரை" என்று அருளிச் செய்தவர் எம்பெருமானாரை விசேஷித்து எடுத்துக் கூறவேண்டி இப்பாசுரமும் மேற்பாசுரமும் அருளிச் செய்கிறார். எம்பெருமானாரைப் பற்றி ஆர்த்திப் பிரபந்தத்தில் "மாறனுரை செய்த தமிழ் மறை வளர்த்தோன் வாழியே" என்று இவர் தாமே அருளிச் செய்தவராதலால் அவ்வெம் பெருமானார் தமிழ் மறையை வளர்த்தருளின பிரகாரங்களில் மிக முக்கியமானதொரு பிரகாரத்தை இப்பாசுரத்தில் அருளிச் செய்கிறார். ஸ்ரீமந்நாதமுனிகள் முதலான பூருவாசாரியர்கள் திவ்வியப்பிரபந்த வியாக்கியானங்களை இட்டருளவல்லவர்களாயிருந்தும் ஒருவரும் இட்டருளவில்லை; உபதேசித்து வந்தார்களத்தனை, அப்படி உபதேசித்ததும், ஸ்ரீவைஷ்ணவர்களை ஒரு திரளாகக்கூட்டி உபதேசித்தமையில்லை; ஒரு ஆசிரியர் ஒரு சிஷ்யர்க்கு உபதேசிப்பது என்கிற முறையில் ஓராண்வழியடைவாகவே உபதேசம் நிகழ்ந்து வந்தது. எம்பெருமானார் காலம் வரையில் இங்ஙனே நடந்து வந்ததாயிற்று. இதில் குறைகண்ட எம்பெருமானார் 'இங்ஙனே வரம்பு இருக்கத் தகாது; இதனால் நம் ஸ்ரீ வைஷ்ணவதரிசநம் ஸங்குசிதமாகிறதே யல்லது விரிவு பெறுகின்றதில்லை; இந்த வரம்பை அறுத்தே யாகவேணும்' என்று திருவுள்ளம் பற்றி, பாருலகில் ஆசையுடையோர்க்கெல்லாம் ஆரியர்காள்! கூறுமென்று பேசி வரம்பறுத்தாராம்; அதனாலேயே திருவாய் மொழிக்கு வியாக்கியானங்கள் விசேஷமாக அவதரிக்க இடமுண்டாயிற்றென்று இப்பாசுரத்தினால் தெரிவித்தவாறு.

பிள்ளை லோகாசாரியர் முதலானோர் அநேக ரஹஸ்ய க்ரந்தங்களை அருளிச்செய்து அருளிச் செயல் பொருளை வளர்த்தருளினதற்கும் இத்தகைய எம்பெருமானார் நியமனமே மூலம் என்பதும் தெரிவிக்கப்பட்டதாகக் கொள்க. ஆசாரியர்களை அநுவ்ருத்தி ப்ரஸந்நாசாரியர்களென்றும் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசாரியரென்றும் இரண்டு வகையாகப் பிரித்து, முன்புள்ள ஆசாரியர்களை அநுவ்ருத்தி ப்ரஸந்நாசாரியர்களென்றும் எம்பெருமானாரை க்ருபாமாத்ர ப்ரஸந்நாசாரியரென்றும் நம் முதலிகள் வழங்கிவருவதற்கும் காரணம் இப்பாசுரத்தினால் நிரூபிக்கப்பட்டதாயிற்று. (௩௭)

## எம்பெருமானார் தரிசனமென்ற வழக்குக்கு அடிகூறுதல்

எம்பெருமானார் தரிசனமேன்றேயிதற்கு *
நம்பெருமாள் பேரிட்டு நாட்டிவைத்தார் — * அம்புவியோர்
இந்தத்தரிசனத்தை யெம்பெருமானார்வளர்த்த *
அந்தச்செயலறிகைக்கா (௩௮)

| | | | |
|---|---|---|---|
| இந்த தரிசனத்தை | இந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்தத்தை | நம் பெருமாள் | ஸ்ரீரங்கநாதர் |
| எம்பெருமானார் வளர்த்த அந்த செயல் | எம்பெருமானார் வளர்த்தருளினார்என்னுமந்த விஷயத்தை | இதற்கு | இந்த ஸித்தாந்தத்திற்கு |
| அம்புவியோர் அறிகைக்கு ஆ | இப்பூமண்டலத்திலுள்ளாரெல்லாரும் தெரிந்து கொள்ளும் பொருட்டு | எம்பெருமானார் தரிசனம் என்றே பேர் இட்டு | "ஸ்ரீராமாநுஜதரிசநம்" என்றே திருநாமம் சாற்றி |
| | | நாட்டிவைத்தார் | ஸ்தாபித்தருளினார். |

* * * கீழ்ப்பாட்டில் எம்பெருமானாருடைய திருவுள்ளத்தின் வைசால்யத்தை அருளிச் செய்த ப்ரஸங்கத்திலே அவ்வெம்பெருமானாருடைய திருநாமத்தையிட்டே நமது ஸ்ரீவைஷ்ணவ தரிசனத்தை வ்யபதேசிக்க நேர்ந்த பெருமையையும் வெளியிடவேண்டி இப்பாசுரமருளிச் செய்கிறார். கலியுகாதியில் திருவவதரித்த நம்மாழ்வாரது காலத்திற்கு முன்னமே அநாதியாக

விளங்கிவருமதான இந்தத் தரிசநத்தை 'ஸ்ரீ ராமாநுஜதரிசநம்' என வழங்கி வருவானேன்? இத்தரிசநம் ஸ்ரீ ராமாநுஜரால் நூதனமாக நிருமிக்கப்பட்டதா என்ன? என்று சிலர் சங்கிப் பதுண்டு; அந்த சங்கைக்குப் பரிஹாரமும் இப்பாசுரத்தினால் செய்ததாகிறது. ஸ்ரீ ராமாநுஜ தரிசநமென்று வழங்கிவரும்படி நியமித்தருளினவர் ஸ்ரீ ரங்கநாதர்; அப்படி அவர் நியமித்த தற்குக் காரணம் இத்தரிசநத்தை ஸ்ரீ ராமாநுஜர் பலபடிகளாலும் வளர்த்தருளினரென்பது தான். திவ்வியப்பிரபந்தங்களை வளர்த்தருளினது இங்கு முக்கியமானது.

"அந்தச் செயலை" என்று சிலர் ஓதும் பாடத்தில் வெண்டளை பிறழுமாதலால் அது கொள்ளற்பாலதன்று. "அந்தச் செயலறிகைக்கா" என்பதே சுத்தபாடமென்க. (௩அ)

## திருவாய்மொழிக்கு வியாக்கியானஞ் செய்தருளின ஆசிரியர்கள் ஐவர் எனல்.

பிள்ளான்நஞ்சீயர் பெரியவாச்சான்பிள்ளை *
தெள்ளார்வடக்குத்திருவீதிப்—பிள்ளை *
மணவாளயோகி திருவாய்மொழியைக்காத்த *
குணவாளரென்று நெஞ்சேகூறு. (௩௯)

| | | | |
|---|---|---|---|
| பிள்ளான் | திருக்குருகைப் பிரான் பிள்ளான் | திருவாய்மொழியை | (நம்மாழ்வாரருளிய) திருவாய்மொழியை |
| நஞ்சீயர் | நஞ்சீயர் | காத்த | (வியாக்கியான முகத்தாலே)காத்தருளின |
| பெரியவாச்சான் பிள்ளை | பெரியவாச்சான் பிள்ளை | | |
| தெள் ஆர் வடக்குத் திருவீதிப் பிள்ளை | தெளிந்தஜ்ஞானம் மிக்க வடக்குத் திருவீதிப் பிள்ளை | குணவாளர் என்று | மஹான்களென்று |
| மணவாளயோகி | வாதிகேஸரி அழகிய மணவாளச் சீயர் (ஆகிய இந்த ஐந்து ஆசிரியர்கள்) | நெஞ்சே | மனமே! |
| | | கூறு | இவர்களது பெருமையைப் பேசு. |

* * * திருக்குருகைப்பிரான் பிள்ளான் முதலான ஐந்து ஆசிரியர்கள் திருவாய்மொழிக்குச் செய்தருளின வியாக்கியானங்கள் இன்னின்னவையென்று மேல் ஐந்து பாசுரங்களாலே விசதமாக அருளிச் செய்யப்படுதலால், அவ்வைவரை இங்குத் திருவாய்மொழியைக் காத்த குணவாளராகக் கூறினது பொருந்தும். வியாக்கியானமியற்றுவதும் ஒருவகையான ஸம்ரக்ஷணமாதலால் 'காத்த' என்னக் குறையில்லை. 'நெஞ்சே! கூறு' என்றது நெஞ்சே! சிந்தைசெய் என்றபடி. (௩௯)

## வியாக்கியான கர்த்தாக்களின்மீது நன்றிபாராட்டுதல்.

முந்துறவேபிள்ளான்முதலானோர் செய்தருளும் *
அந்தவியாக்கியைகளன்றாகில் * அந்தோ
திருவாய்மொழிப்பொருளைத் தேர்ந்துரைக்கவல்ல
குருவார் * இக்காலம்நெஞ்சேகூறு. (௪௰)

| | | | |
|---|---|---|---|
| நெஞ்சே | மனமே!, | அந்த வியாக்கியைகள் | அப்படிப்பட்ட வியாக்கியானங்கள் |
| முந்துறவே | முன்னம் | அன்று ஆகில் | அவதரித்திராவிடில் |
| பிள்ளான் முதலானோர் செய்தருளும் | திருக்குருகைப் பிரான் பிள்ளான்முதலான அவ்வாசாரியர்கள் அருளிச்செய்த | இக் காலம் | இக்காலத்தில் |
| | | திருவாய்மொழி பொருளை | திருவாய்மொழியின் அர்த்தங்களை |

| | | | |
|---|---|---|---|
| தேர்ந்து உரைக்க வல்ல குரு ஆர் | ஆராய்ந்து எடுத்துச் சொல்லவல்ல குரவர் யாருளர்? | கூறு | சொல்லு; |
| | | அந்தோ | (ஆனந்தக்குறிப்பு.) |

## ஆறாயிரப்படி அவதரித்தமை கூறுதல்.

தெள்ளாரும்ஞானத் திருக்குருகைப்பிரான்
பிள்ளான் * எதிராசர்பேரருளால்—* உள்ளாரும்
அன்புடனே மாறன்மறைப்பொருளையன்றுரைத்தது
இன்பமிகுமாறாயிரம் (சச)

| | | | |
|---|---|---|---|
| தெள் ஆரும் ஞானம் | தெளிவுமிக்க ஞானத்தை யுடையரான | அன்று | அக்காலத்தில் |
| திருக்குருகைப் பிரான் பிள்ளான் | பிள்ளானென்கிற ஆசிரியர் | மாறன் மறை பொருளை | திருவாய் மொழிப் பொருளை (விவரிக்க) |
| எதிராசர் பேர் அருளால் | எம்பெருமானாருடைய பரமகிருபையினாலே | உரைத்தது | அருளிச்செய்த வியாக்கியானம் |
| உள் ஆரும் அன்புடனே | ஹார்த்தமான ப்ரீதியோடே | இன்பம் மிகும் ஆறாயிரம் | ரஸம் மிகுந்த ஆறாயிரப் படியென்பதாம். |

*** ஆறாயிரம் க்ரந்தம்கொண்ட நூலுக்கு ஆறாயிரப்படியென்று பெயர். முப்பத்திரண்டெழுத்துக்கு க்ரந்தமென்று ஸங்கேதம் சிறிது ஏறக்குறைய ஆறாயிரம் க்ரந்தமிருக்குமென்றுகொண்டு இங்ஙனே திருநாமமிடப்பட்டது. இப்படியே மேலுங்கொள்க. (சச)

## ஒன்பதினாயிரப்படி அவதரித்தமை கூறுதல்.

தஞ்சீரைஞானியர்கள் தாம்புகழும் வேதாந்தி *
நஞ்சீயர்தாம்பட்டர்நல்லருளால் * எஞ்சாத
ஆர்வமுடன்மாறன் மறைப்பொருளையாய்ந்துரைத்தது *
ஏரொன்பதினாயிரம். (சரு)

| | | | |
|---|---|---|---|
| தம் சீரை | தமது திருக்குணங்களை | எஞ்சாத ஆர்வம் உடன் | குறையாத [பரிபூர்ணமான] அன்புடனே |
| ஞானியர்கள் தாம் புகழும் | அறிவுடையார் கொண்டாடநின்ற | மாறன் மறை பொருளை | திருவாய் மொழிப் பொருளை |
| வேதாந்தி | வேதாந்தியென்று ப்ரவித்தரான | ஆய்ந்து | ஆராய்ந்து |
| நஞ்சீயர் தாம் | நஞ்சீயரென்னுமாசிரியர் | உரைத்தது | அருளிச் செய்த வியாக்கியானம் |
| பட்டர் நல் அருளால் | பட்டருடைய பரமகிருபையினால் | ஏர் ஒன்பதினாயிரம் | அழகிய ஒன்பதினாயிரப் படியென்பதாம் |

## இருபத்தினாலாயிரப்படி அவதரித்தமை கூறுதல்.

நம்பிள்ளைதம்முடைய நல்லருளாலேவியிட *
பின்பெரியவாச்சான் பிள்ளையதனால்—*இன்பா
வருபத்தி மாறன் மறைப்பொருளைச்சொன்னது *
இருபத்தினாலாயிரம். (சரு)

| | | | |
|---|---|---|---|
| நம்பிள்ளை | நம்பிள்ளையென்னுமாசிரியர் | ஏவியிட | நியமித்தருள, |
| தம்முடைய நல் அருளால் | தமதுபரமகிருபையினால் | பின் அதனால் | பிறகு அந்த நியமனத்தையடியொற்றி |

| | | | |
|---|---|---|---|
| பெரியவாச்சான் பிள்ளை | பெரியவாச்சான் பிள்ளை யென்னுமாசிரியர் | மறை | தமிழ் வேதமான திருவாய் மொழியினுடைய |
| இன்பு ஆ வரு பத்தி மாறன் | ஆனந்தரூபமாகப் பெருகிவந்தபக்தியையுடையரான நம்மாழ்வாரருளிச் செய்த | பொருளை | அர்த்தங்களை (விவரித்து) |
| | | சொன்னது | அருளிச்செய்த வியாக்கியானம் |
| | | இருபத்தினாலாயிரம் | இருபத்தினாலாயிரப்படி யென்பதாம். |

*** ஆசாரியர்கள் வியாக்கியான நூல்களை எழுதியருள்வதற்குப் பலகாரணங்களுண்டு; பின்புள்ளாருடைய உஜ்ஜீவனார்த்தமாகச் சிலர் எழுதுவர்கள்; ஸ்வாசாரியர் உபந்யசித்தருளும் அர்த்தவிசேஷங்கள் பெருக்காறு போலன்றிக்கே * அதிலே தேங்கின மடுக்கள் போலே விளங்கவேணுமென்று சிலர் எழுதுவர்கள்; ஸ்வாசாரியர் ஏடுபடுத்தும்படி நியமித்தருள அதனாலே சிலர் எழுதுவர்கள்; நம்முடைய புலமையைக் காட்டிவைப்போமென்று கருதிச் சிலர் எழுதுவர்கள்; இங்ஙனேயுள்ள பல வகைகளில், பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானமிட்டருளினது ஸ்வாசாரியரான நம்பிள்ளையின் பரமக்ருபாப்ரயுக்தமான நியமனத்தினால் என்பது இப்பாசுரத்தினால் தெரிவிக்கப்பட்டது.

இன்பா வருபத்தி மாறன் = ஆழ்வாருடைய பக்தியானது ஆனந்த ரூபமென்க. (சங)

## ஈடு முப்பத்தாறாயிரப்படி அவதரித்தமை கூறுதல்.

தெள்ளியதாநம்பிள்ளை செப்புநெறிதன்னை *
வள்ளல் வடக்குத் திருவீதிப்—பிள்ளை * இந்த
நாடறிய மாறன்மறைப்பொருளை நன்குரைத்தது *
ஈடுமுப்பத்தாறாயிரம். (சச)

| | | | |
|---|---|---|---|
| நம்பிள்ளை | நம்பிள்ளையென்னுமாசிரியர் | மாறன் மறை பொருளை | திருவாய்மொழியின் அர்த்தங்களை |
| தெள்ளியது ஆ செப்பு | தெளிவாக அருளிச்செய்த | இந்த நாடு அறிய | இவ்வுலகமெல்லாம் தெரிந்துகொள்ளும்படி |
| நெறி தன்னை | ஸ்ரீஸூக்திக்ரமத்தை (உட்கொண்டு) | | |
| வள்ளல் | உதாரரான | நன்கு உரைத்தது | நன்றாக அருளிச் செய்த வியாக்கியானம் |
| வடக்குத் திருவீதிப் பிள்ளை | வடக்குத் திருவீதிப் பிள்ளையென்னுமாசிரியர் | ஈடுமுப்பத்தாறாயிரம் | ஈடுமுப்பத்தாறாயிரப்படி யென்பதாம். |

* * *நம்பிள்ளையின் உபந்யாஸத்தைப் பகலெல்லாம் கேட்டிருந்து இரவிலே ஏடுபடுத்தி வைத்தவர் வடக்குத் திருவீதிப்பிள்ளை. இவர் பெரியவாச்சான் பிள்ளையைப்போலே நம்பிள்ளையின் நியமனமடியாக எழுதினாரல்லர்; ஆனதுபற்றியே இந்த வியாக்கியானத்தை நம்பிள்ளை வாங்கி உள்ளே வைத்தருளியிருந்து பிறகு பகவந்நியமனத்தாலே பிரசாரத்திற்கு அருளப்படியாயிற்று. இப்போராசிரியர் தொண்டர்க்கு அமுதான ஈடுமுப்பத்தாறாயிரப்படியை அருளிச்செய்தவளவேயன்றிக்கே, உலகுக்கு ஒருயிராய் சந்திர ஸூர்யர்கள் போன்ற 'லோகாசாரியர் அழகியமணவாளப் பெருமாள் நாயனார்' என்னும் இரண்டு புத்ரரத்னங்களையும் பெற்று உதவியதுபற்றி "வள்ளல்வடக்குத் திருவீதிப் பிள்ளை" என்றார். (சச)

## பன்னீராயிரப்படி பிறந்தமை பகர்தல்

அன்போடழகிய மணவாளச்சீயர் *
பின்போரும்கற்றறிந்து பேசுகைக்கா — * தம்பெரிய
போதமுடன் மாறன்மறையின் பொருளுரைத்தது *
ஏதமில்பன்னீராயிரம். (சரு)

| | | | |
|---|---|---|---|
| அழகியமணவாளச் சீயர் | வாதிகேஸரி அழகிய மணவாளமுனிவர் | தம் பெரிய போதம் உடன் | தமது பெரியஜ்ஞானத்தினால் |
| பின்போரும் | பின்னுள்ளவர்களும் | மாறன் மறையின் பொருள் உரைத்தது | திருவாய்மொழிக்குப் பதவுரை கூறியநூல் |
| அன்போடு கற்று அறிந்து பேசுகைக்கா | அன்புடன் அதிகரித்தறிந்து(பிறர்க்கும்) பேசுவதற்குப்பாங்காக | ஏதம் இல் | குற்றமற்றதான |
| | | பன்னீராயிரம் | பன்னீராயிரப்படி யென்பதாம். |

* * * வாதிகேஸரிஜீயர் திருவாய்மொழிக்கு இட்ட வியாக்கியானம் பிரதிபதார்த்த ரூபமாதலால் பதங்களின் மேல் பொருளறிந்து கொள்வதற்கு இது எளிய உரையென்பது பற்றி "பின்போரும் அன்போடு கற்றறிந்து பேசுகைக்கா" எனப்பட்டது. "தம்பெரிய போதமுடன்" என்றவிடத்து ஆழ்ந்த கருத்து ஒன்றுண்டு; அதாவது—வாதிகேஸரி ஜீயர் நம்பிள்ளையினுடைய சிஷ்யபரம்பரையிலே படிந்து கேட்டவராயிருந்தும் சில சில விடங்களில் பூர்வாசாரிய வியாக்கியானநெறிக்கு மாறாக எழுதியிருப்பதுமுண்டு; திருவாய்மொழிக்குப் போலவே திருவிருத்தத்திற்கும் இவர் ஒரு சிறிய வியாக்கியானம் இயற்றியுள்ளார்; இரண்டிலும் இங்ஙனே ஸ்வதந்திரமாகச் சில அர்த்தங்களை இவர் எழுதியிருப்பது கொண்டு 'தம் பெரிய போதமுடன்' என்ன வேண்டியதாயிற்று. ஆசாரியக்ருபாதீநமான போதமன்றிக்கே, தம் போதம்—ஸ்வதந்த்ரமான போதம் என்றபடி. மேலே * முன்னோர் மொழிந்த முறை தப்பாமல் கேட்டு * என்கிற பாசுரமருளிச் செய்துள்ள மணவாளமாமுனிகளின் திருவுள்ளம் சிறிது கன்றும்படியாக இவ்வாசிரியர் உரையிட்டிருந்ததனால் இங்ஙனே அருளிச்செய்ய நேர்ந்தது போலும். இந்த வாதிகேஸரியும் ஒரு மஹாஜ்ஞானியாலே இவர்க்கு ஒரு குறை கூறினதாகவும் இருக்கவொண்ணாதென்கிற திருவுள்ளமும் மாமுனிகளுக்கு இருந்ததனால், மேலே "ஏதமில்' என்கிற விசேஷணம் கொடுத்து ஒருவாறு தழுவிக்கொள்ளுகிறாரென்க. (சரு)

## பெரியவாச்சான்பிள்ளைக்குண்டானதொரு அஸாதாரணமான பெருமையைப் பகர்தல்.

பெரியவாச்சான்பிள்ளை பின்புள்ளவைக்கும்
தெரிய * வியாக்கியைகள் செய்வால்—* அரிய
அருளிச்செயற்பொருளை ஆரியர்கட்கிப்போது *
அருளிச்செயலாய்த் தறிந்து. (சசு)

| | | | |
|---|---|---|---|
| பெரியவாச்சான் பிள்ளை | பெரியவாச்சான் பிள்ளையென்னுமாசிரியர் | அரிய அருளிச் செயல் பொருளை | அருமையான திவ்வியப்ரபந்தப்பொருள்களை |
| பின்பு உள்ளவைக்கும் | திருவாய்மொழி தவிர்ந்த மற்றுமுள்ள திவ்வியப் பிரபந்தங்களுக்கும் | இப்போது | இக்காலத்தில் |
| | | ஆரியர்கட்கு | ஆசாரியர்களுக்கு |
| தெரிய | விளக்கமாக | அறிந்து அருளிச்செயல் ஆய்த்து | தெரிந்து ப்ரவசன பண்ணுவதற்குப் பாங்காயிற்று. |
| வியாக்கியைகள் செய்வால் | வியாக்கியானங்கள் அருளிச் செய்ததனாலே | | |

* * * கீழ் ஐந்து பாசுரங்களினால் திருவாய்மொழிக்கு மாத்திரம் அவதரித்த வியாக்கியானங்களை வெளியிட்டருளினாராயிற்று. நாலாயிரத்திற்கும் வியாக்கியான மிட்டருளினவர் பெரியவாச்சான் பிள்ளை யாதலால் அவருடைய மஹோபகாரத்தை இப்பாட்டில் வியந்து கூறுகின்றார். பெரியவாச்சான் பிள்ளை நாலாயிரத்திற்கும் வியாக்கியானம் அருளிச்செய்திலராகில் திவ்வியப்பிரபந்த திவ்வியார்த்தங்களைப் பின்புள்ளார் அறிந்து ப்ரவசனம் செய்யவே முடியாது; அந்தப்போாசிரியர் பரமக்ருபை செய்தருளினதால்தான் பின்புள்ளார்கள் ஆசாரிய பீடத்திலமர்ந்து திவ்வியப்ரபந்தப்பொருள்களை ப்ரவசனம் செய்ய ஸௌகரியம் விளைந்ததென்று உண்மையுரைத்தவாறு.

பெரியவாச்சான்பிள்ளை யருளிய வியாக்கியானம் பெரியாழ்வார் திருமொழிக்குப் பெரும்பாலும் லுப்தமாய்ப்போனாலும் எஞ்சிய திவ்வியப்ரபந்தங்களுக்கு அவருடைய வியாக்கியானமேசரணமாயிருப்பது கொண்டு இங்ஙனே அருளிச் செய்யலாயிற்று. (சசு)

## சில சில பிரபந்தங்களுக்கு உரையிட்டவர்களைப்பற்றிக் கூறுதல்

நஞ்சீயர்செய்த வியாக்கியைகள் நாலிரண்டுக்கு *
எஞ்சாமை யாவைக்குமில்லையே—* தம்சீரால்
வையகுருவின் தம்பி மன்னுமணவாளமுனி *
செய்யுமவை தாமும் சில. (சஎ)

| | | | |
|---|---|---|---|
| நஞ்சீயர் செய்த வியாக்கியைகள் | நஞ்சீயர் அருளிச் செய்த வியாக்கியானங்கள் | மன்னு மணவாள முனி | அழகியமணவாளச்சீயரும் |
| நால் இரண்டுக்கு | சில பிரபந்தங்களுக்கேயாம்; | தம் சீரால் | தமது திருவருளால் |
| எஞ்சாமை யாவைக்கும் இல்லையே | ஒன்று தப்பாமல் எல்லாப் பிரபந்தங்களுக்குமில்லைகிடீர்; | செய்யுமவை தாமும் சில | செய்தருளின வியாக்கியானங்களும் சிலவேயாம்; (எஞ்சாமை யாவைக்குமில்லையே) |
| வைய குருவின் தம்பி | பிள்ளை லோகாசாரியருடைய திருத்தம்பியாரான அழகிய மணவாளப்பெருமாள் நாயனாரும் | | |

* * * திருவாய்மொழிதவிர்ந்த மற்ற பிரபந்தங்களுக்கெல்லாம் பூர்த்தியாக வியாக்கியானமிட்டருளினவர் பெரியவாச்சான்பிள்ளை யென்று கீழ்ப்பாட்டிலருளிச் செய்த ப்ரஸக்தியினாலே சில சில திவ்வியப் பிரபந்தங்களுக்கு வியாக்கியானமருளிச் செய்திருக்கின்ற ஆசிரியர்களையும் தெரிவிக்கவேண்டி இப்பாட்டு அருளிச்செய்கிறபடி. 'நாலிரண்டுக்கு' என்றது ஒரு ஸங்க்யையிலே நோக்காகவன்று; "ஸ்வல்ப பிரபந்தங்களுக்கு மாத்திரமே" என்ற கருத்தில் அருளிச் செய்ததத்தனை. நஞ்சீயரிட்டருளின வியாக்கியானங்கள் திருப்பாவைக்கும் கண்ணிநுண்சிறுதாம்புக்குமே காணபதாகப் பிள்ளைலோகஞ்சீயர் பணித்துள்ளார். ஸ்ரீலோகாசாரிய ஸஹோதரரும் ஆசாரியஹ்ருதயகாரருமான அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் திருப்பாவைக்கும் அமலனாதிபிரானுக்கும் கண்ணிநுண் சிறுத்தாம்புக்கும் வியாக்கியானமிட்டருளினதாகக் காண்கிறது. மன்னுமணவாளமுனி யென்றது-வாதிகேஸரி அழகிய மணவாளச் சீயரை; இவர் (மூவாயிரத்தில்) திருவிருத்தமொன்றுக்கே உரையிட்டதாகக் காண்கிறது.

ஆக, இப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள மூன்று ஆசிரியர்களே மூவாயிரத்தில் சிற்சில பிரபந்தங்களுக்கு வியாக்கியானமிட்டவர்களென்று விளங்கிற்று. பெரியாழ்வார் திருமொழிக்

குத் திருவாய்மொழிப்பிள்ளை ஒரு ஸ்வாபதேச வியாக்கியானமருளிச் செய்திருப்பதாக இக்காலத்தில் வெளிவந்துலவுமது உண்மையில் அவ்வாசிரியர் இட்டருளினதாயிருக்க ஔசித்யமில்லை. அப்படியிருந்தால் இங்கு மணவாளமாமுனிகள் அவ்வாசிரியரது திருநாமத்தை யெடுத்தருளிச் செய்யாதிருக்க ப்ரஸக்தியில்லையென்று பெரியார் பணிக்கக் கேட்டிருக்கை திருவாய்மொழிப்பிள்ளை ஸந்ததியில் பின்புள்ளவொரு மஹான் பணித்ததாயிருக்கவடுக்கும் அந்த வியாக்கியானம். (சஎ)

## ஈடு முப்பத்தாறாயிரப்படியின் பிரசாரமுறை கூறுவன இப்பாட்டும் மேற்பாட்டும்.

சீரார் வடக்குத்திருவீதிப்பிள்ளை * எழு
தேரார் தமிழ் வேதத்தீடுதனை—* தாருமென
வாங்கிமுன்நம்பிள்ளை யீயுண்ணிமாதவர்க்குத்
தாம்கொடுத்தார் * பின்னதனைத்தான். (சஅ)

| | | | |
|---|---|---|---|
| சீர் ஆர் | சீர்மை பொருந்திய | தாரும் என வாங்கி | 'இதை என்னிடம் கொடும்' என்று கேட்டு வாங்கி |
| வடக்குத் திருவீதிப் பிள்ளை | வடக்குத் திருவீதிப்பிள்ளை யென்னுமாசிரியர் | பின் | ஸ்ரீரங்கநாதனுடைய நியமனமான பின்பு |
| எழுது | எழுதியருளின | அதனை | அந்த ஈட்டு ஸ்ரீ கோசத்தை |
| ஏர் ஆர் தமிழ் வேதத்து ஈடு தனை | சிறந்த திருவாய்மொழி வியாக்கியானமான ஈடு முப்பத்தாறாயிரப்படியை | ஈயுண்ணி மாதவர்க்கு தாம் கொடுத்தார் | ஈயுண்ணிமாதவப்பெருமாளென்னுமாசிரியர்கையிலே தந்தருளினார். |
| முன் | அக்காலத்தில் | | |
| நம்பிள்ளை | நம்பிள்ளையானவர் | | |

* * * திருவாய்மொழிக்கு ஐந்து வியாக்கியானங்கள் அவதரித்தனவாகக் கீழே யருளிச் செய்தார்; அந்த ஐந்து வியாக்கியானங்களுள்ளும் ஈடுமுப்பத்தாறாயிரப்படி யென்கிற வியாக்கியானமே காலக்ஷேபப்ரசாரத்தில் முக்கியமாக இருந்துவருவதனால் இதைப்பற்றின வரலாற்றை யுணர்த்தவேணுமென்று திருவுள்ளம் பற்றின மாமுனிகள் இரண்டு பாட்டாலே அதை யுணர்த்தியருளுகிறார்.

* நம்பிள்ளை தம்முடைய நல்லருளாலேவியிடப் பின் பெரியவாச்சான் பிள்ளையதனால்* என்று கீழே யருளிச்செய்தபடி நம்பிள்ளையின் நியமனத்தினால் பெரியவாச்சான்பிள்ளையிட்டருளின இருபத்தினாலாயிரப்படி வியாக்கியானம் இருக்கவும், நம்பிள்ளை மற்றொருகால் திருவாய்மொழிப் பொருளை உபந்யஸித்தருளும்போது அதைக்கேட்டிருந்து வடக்குத் திருவீதிப் பிள்ளை பட்டோலை கொண்டு ஈடுமுப்பத்தாறாயிரப்படியாக்கி முடித்து நம்பிள்ளை ஸந்நிதியிலே கொண்டுபோய் வைத்தருளினார்; அதை அவர் கடாக்ஷித்து "ஆனை கோலம் செய்தாற் போலே அழகியதாகவே காண்கிறது; ஆகிலும் நமது கட்டளையின்றிக்கே எழுதினீர்; இருக்கட்டும்" என்று சொல்லி அந்த ஸ்ரீகோசத்தை உள்ளே வைத்தருளினார் (நம்பிள்ளை); பெரிய பெருமாளுடைய நியமனமானாலன்றி நம்பிள்ளை இந்த ஸ்ரீ கோசத்தைத் தந்தருளாரென்று தெரிந்துகொண்ட ஈயுண்ணிமாதவப் பெருமாளென்பவர், இந்த ஈடு வியாக்கியானமே உலகில் பிரசாரம் பெறவேணுமென்று ஆவல்கொண்டு அதற்குப் பாங்காக பகவந்நியமனத்தைப்பெறுவிக்க வேணுமென்று கருதிப் பலகாலம் பெரியபெருமாளை வலஞ்செய்துவந்தார்; பெரிய பெருமாளும் திருவுள்ள முவந்து இரங்கி நம்பிள்ளைக்கு நியமித்தருளவே, பின்பு அந்த ஸ்ரீ கோசத்தை அவர் ஈயுண்ணிமாதவப் பெருமாளுக்கு ஈந்தருளினார். இதற்கு மேலுள்ள வரலாறு மேற்பாட்டில் காணத்தக்கது. (சஅ)

ஆங்கவர்பால்பெற்ற சிறியாழ்வானப்பிள்ளை *
தாம்கொடுத்தார் தம்மகனுர் தம்கையில்— * பாங்குடனே
நாலூர்பிள்ளைக்கவர்தாம் நல்லமகனுர்க்கவர்தாம் *
மேலோர்க்கீந்தாரவரே மிக்கு. (சகூ)

| | |
|---|---|
| ஆங்கு | அவ்வண்ணமாக |
| அவர் பால் பெற்ற | அந்த நம்பிள்ளையிடத்தில் பெற்றுக் கொண்டவரான |
| சிறியாழ்வான் அப்பிள்ளை தாம் | சிறியாழ்வானப்பிள்ளையென்கிற அவ்வாசிரியர் [ஈயுண்ணிமாதவர்] |
| தம் மகனுர் தம் கையில் | தம்முடைய திருக்குமாரரான பத்மநாபப்பெருமாளுடைய கையில் |
| கொடுத்தார் | (அந்த ஈட்டைக்) கொடுத்தருளினுர்; |
| அவர் தாம் | அந்த பத்மநாபப் பெருமாள் |
| பாங்குஉடனே | திருவுள்ளத்தி லிரக்கத்துடனே |
| நாலூர் பிள்ளைக்கு கொடுத்தார் | நாலூர் பிள்ளை யென்னுமாசிரியரிடம் அதைக் கொடுத்தருளினுர்; |
| அவர்தாம் | அந்த நாலூர்பிள்ளை தாம் |
| நல்ல மகனுர்க்கு கொடுத்தார் | தமது திருக்குமாரரான நாலூராச்சான்பிள்ளைக்கு அதைக் கொடுத்தருளினுர்; |
| அவரே | அந்த நாலூராச்சான்பிள்ளையே |
| மிக்கு | அதிசயமாக |
| மேலோர்க்கு | மேலுள்ளவர்களுக்கு |
| ஈந்தார் | கொடுத்தருளினுர். |

* * * கீழ்ப்பாட்டில் "ஈயுண்ணிமாதவர்க்குத் தாம் கொடுத்தார்" என்றருளிச் செய்தான பின் "ஆங்கவர்பால் பெற்ற" என்றருளிச் செய்திருப்பதற்குப் பொருத்தமான பொருள் 'அந்த ஈயுண்ணிமாதவப் பெருமாளிடம் பெற்றுக்கொண்டவரான' என்று தோன்றக்கூடியது; நம்பிள்ளை ஈயுண்ணிமாதவரிடம் கொடுத்தருளினு ரென்றும், அந்த ஈயுண்ணிமாதவர் சிறியாழ்வானப்பிள்ளையிடம் கொடுத்தாரென்றும் கூறுவதாக இங்குப் பொருள் தோன்றக்கூடியது. ஆனுல் பிள்ளைலோகஞ்சீயர் பணித்த வியாக்கியானத்தில்—"இப்படி நம்பிள்ளையுடைய ப்ரஸாதத்தாலே, சிறியாழ்வானப்பிள்ளை யென்று திருநாமத்தையுடையரான ஈயுண்ணிமாதவப் பெருமாளுக்கு ப்ராப்தமான ஈடானது" என்று கூறப்பட்டுளது. ஈயுண்ணிமாதவப் பெருமாளுக்கே சிறியாழ்வானப்பிள்ளை யென்று ஒரு சிறுபேர் உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. ஆகவே அதைத்தழுவியுரைத்தல் நமக்குப்பணியாயிற்று. * திருவருள்மால் சேனைமுதலி * இத்யாதியான ஈட்டுத்தனியனில் "இருகண்ணர்க்கன்புடைய நம்பிள்ளை இவரீடளித்தற்கேய்ந்த மாதவர் பற்பநாபர்" என்றுள்ளதும் நோக்கத்தக்கது. "வந்தே மாதவபத்மநாப ஸுமந: கோலேச தேவாதிபாந்" என்ற ச்லோகமும் இங்கு அநுஸந்திக்கவுரியது. (சகூ)

## இனி ஸ்ரீவசந பூஷணப்பெருமை கூறுதற்கு அடிகோலுதல்.

நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை
யென்பர் * அவரவர்தமேற்றத்தால்—* அன்புடையோர்
சாத்துதிருநாமங்கள்தானென்று நன்னெஞ்சே *
ஏத்ததனைச்சொல்லிநீ யின்று (ருய)

| | |
|---|---|
| நம்பெருமாள் நம்மாழ்வார் நஞ்சீயர் நம்பிள்ளை என்பர் | நம்பெருமாளென்றும் நம்மாழ்வாரென்றும் நஞ்சீயரென்றும் நம்பிள்ளை யென்றும் சிறப்பித்துக் கூறுவர்; (எதனுலேயென்னில்;) |
| அவர் அவர் தம் ஏற்றத்தால் | அவரவர்களுக்குண்டான ஏற்றங் காரணமாகவாம்; (மேற்கூறிய திருநாமங்களானவை) |

| | | | |
|---|---|---|---|
| அன்புஉடையோர் சாத்து | அவரவர்களிடத்தில் அன்பு கொண்ட மஹான்கள் சிறப்பாக இட்டருளின | நல் நெஞ்சே | நல்லமனமே! |
| திருநாமங்கள் தாம் என்று | திருநாமங்களா மென்று கொண்டு | இன்று | இப்போது |
| | | நீ அதனை சொல்லி ஏத்து | நீ அந்தச்சிறப்பைச் சொல்லித் துதிப்பாயாக. |

* * * இப்பாசுரம்முதல்மூன்று பாசுரங்களானவை எதற்காக அருளிச் செய்யப்படுகின்றன வென்னில்; கீழே ஆழ்வார்களைப்பற்றியும், ஆழ்வாரருளிச் செயல்களை வியாக்கியான முகத்தாலே காத்தருளின ஆசாரியர்களைப் பற்றியும், அந்த வியாக்கியானங்களில் தலையான ஈடு முப்பத்தாறுயிரப்படியின் வரலாற்றைப்பற்றியும் அருளிச் செய்தாயிற்று. இனி அருளிச் செய்யத் திருவுள்ளம்பற்றின விஷயமென்ன வென்றால், அருளிச்செயல்களுக்குக் காப்பாகப் பிள்ளைலோகாசார்யர் அருளிச்செய்த ஸ்ரீவசநபூஷண திவ்விய சாஸ்த்ரத்தின் சீர்மையைப்பற்றி யருளிச் செய்ய நினைத்தருளினர்; [அது ஐம்பத்து மூன்றாவது பாசுரம் முதல் அருளிச்செய்யப்படுகிறது] அந்த ஆசிரியர்க்கு லோகாசாரியரென்கிற திருநாமம் வந்த வழியை நிரூபிக்க வேண்டியதாயிற்று; ஏற்கனவே அந்தத் திருநாமம் நம்பிள்ளைக்கு இருந்தது; அந்தத் திருநாமமே இவர்க்கு இடப்பட்டது என்று சொல்ல நேர்ந்தது. [அது ருக, ருஉ ஆம் பாசுரங்களாலருளிச் செய்யப்படுகிறது.] அந்த ப்ரஸக்தியின்கண் நம்பிள்ளை யென்கிற திருநாமத்திற்கும் நிதானம் சொல்லவேண்டியது ப்ராப்தமாக, அதற்காக இப்பாட்டு அவதரிக்கின்றதென்க.

நம்பிள்ளையைப்பற்றிச் சொல்ல நினைக்கும் போதே 'நம்' என்கிற உபபதம் பெற்றவர்களான நம்பெருமாள், நம்மாழ்வார், நஞ்சீயர்களும் நினைவுக்கு வரவே எல்லாரையுஞ் சேர்த்து ஒரு கோவையாக எடுக்கிறார். நம் என்று சிறப்பித்துக்கூறுவது ப்ரேமவிசேஷ காரியமாதலால், அந்த ப்ரேமவிசேஷ காரியமாகவே ஒவ்வொரு கால விசேஷத்தில் ஒவ்வொரு மஹான்களால் நம்பெருமாளென்பது முதலான திருநாமங்கள் வழங்கிவரலாயின. ஸ்ரீரங்கநாதனுக்கு நம்பெருமாளென்கிற திருநாமம் ஒருகால் ஒரு அரையரால் நிகழ்ந்தது. சடகோபர்க்கு நம்மாழ்வாரென்கிற திருநாமம் ஸ்ரீரங்கநாதனால் நேர்ந்தது. வேதாந்த முனிவர்க்கு நஞ்சீயரென்கிற திருநாமம் பட்டர் இட்டது. திருக்கலிகன்றி தாஸர்க்கு நம்பிள்ளை யென்கிற திருநாமம் நஞ்சீயர் சாத்தியது. இதன் விவரணங்களை ஸம்பிரதாய வாயிலாக உணர்க. இப்படி முன்னோர்கள் இவர்களது பெருமையைக்கண்டு அதற்குத் தகுதியாக இட்டருளின திருநாமங்களை நெஞ்சே! நீயுமுகந்து அநுஸந்தித்து உஜ்ஜீவியென்று தம் திருவுள்ளத்திற்கருளிச் செய்தாராயிற்று. (ருO)

## நம்பிள்ளைக்கு லோகாசாரியரெனும் திருநாமம் விளைந்தமைவிளம்புதல்

துன்னுபுகழ்க்கந்தாடைத் தோழப்பர் தம்முகப்பால் *
என்னவுலகாரியனோ வென்றுரைக்க —* பின்னை
உலகாரியனெனும்பேர் நம்பிள்ளைக்கோங்கி *
விலகாமல் நின்றதென்றும்மேல். (ருக)

| | | | |
|---|---|---|---|
| துன்னு புகழ் | பரந்தபுகழையுடைய | என்ன உலகாரியனோ என்று உரைக்க | 'நீர் என்ன லோகாசாரியரோ?' என்று வியந்து கூற |
| கந்தாடை | கந்தாடை வம்சத்தில் தோன்றிய | | |
| தோழப்பர் | தோழப்பரானவர் | பின்னை | அந்நாள் தொடங்கி |
| தம் உகப்பால் | தமது மகிழ்ச்சியினாலே | உலகாரியன் எனும் பேர் | லோகாசாரியரென்கிற திருநாமம் |

| | | | |
|---|---|---|---|
| நம்பிள்ளைக்கு ஓங்கி | நம்பிள்ளைக்குப் பிரசித்தமாகி | மேல் என்றும் விலகாமல் நின்றது | மேலுள்ள காலமெல்லாம் போராமல் நிலை நின்று விளங்கிற்று. |

*** முதலியாண்டானுடைய திருவம்சத்திலே தோன்றி ஆசாரிய புருஷராகப் புகழ் பெற்றிருந்த கந்தாடைத் தோழப்பரென்னும் ஸ்வாமி நம்பிள்ளை காலத்தில் கோயிலில் ஒரு திருவீதியில் வாழ்ந்து வந்தார். அவரும் வித்வானாகவே யிருந்தும், அனைவரும் நம்பிள்ளை திருவடிகளிலேயே ஆச்ரயித்து அர்த்தங்கள் கேட்டு வந்தார்களே யன்றி அவரிடம் ஒருவரும் வந்து பணிந்திலர்; அதனால் அவர்க்கு நம்பிள்ளையின்மீது அஸூயை அதிகரித்து அவரைத் தூஷித்துக்கொண்டே யிருந்தார் அந்தத் தோழப்பர். இப்படியிருக்கையில் ஒருநாள் அவர்க்கு அநுதாபம் தோன்றி நம்பிள்ளையிடம் சென்று அபராதக்ஷாமணம் செய்துகொள்ளவேணுமென்று ஆசையுண்டாகி அவர் புறப்படுவதாக இருக்கையில், 'ஐயோ! மஹாகுலப்ரஸூதரான இந்தத் தோழப்பருடைய திருவுள்ளம் கன்றும்படி நாம் பிறந்தோமே! அவரிடம் சென்று பொறுப்பித்துக்கொள்வோம்' என்று நம்பிள்ளை அதே ஸமயத்தில் அந்தத் தோழப்பருடைய திருமாளிகை வாசலில் வந்து பதுங்கி நிற்கிறார். தோழப்பர் வெளியே யெழுந்தருளினதும் அவரை நம்பிள்ளை தெண்டனிட்டு க்ஷமை வேண்ட, இதென்ன ஆச்சரியமான குணம்! என வியந்த கந்தாடைத் தோழப்பர் நம்பிள்ளையை நோக்கி 'நீரென்ன லோகாசாரியரோ!' என்று ஈடுபட்டுக் கூறினராம்; அது முதலாக நம்பிள்ளைக்கு லோகாசாரியரென்கிற ப்ரஸித்தி விளைந்ததாம். (௫௧)

## வடக்குத்திருவீதிப்பிள்ளை தமது திருக்குமாரர்க்கு ஆசாரிய திருநாமத்தையே யிட்டாரென்பது.

பின்னைவடக்குத்திருவீதிப்பிள்ளை * அன்பால்
அன்னதிருநாமத்தையாதரித்து —* மன்னுபுகழ்
மைந்தருக்குச்சாத்துகையால் வந்து பரந்தது * எங்கும்
இந்தத்திருநாமமிங்கு. (௫௨)

| | | | |
|---|---|---|---|
| பின்னை | பிறகொரு காலத்தில் | மன்னுபுகழ் மைந்தருக்கு | யசஸ்வியான தமது திருக்குமாரர்க்கு |
| வடக்குத் திருவீதிப் பிள்ளை | (நம்பிள்ளை திருவடியான) வடக்குத் திருவீதிப் பிள்ளையானவர் | ஆதரித்து சாத்துகையால் | விரும்பி இட்டபடியினால் |
| அன்பால் | ஆசாரியபக்தி விசேஷத்தினால் | இங்கு எங்கும் | இவ்வுலகமெங்கும் |
| அன்ன திருநாமத்தை | அந்த லோகாசாரியதிருநாமத்தை | இந்த திருநாமம் | இந்த லோகாசாரியதிருநாமமானது |
| | | வந்து பரந்தது | (அவரது பெயராகப்) பரவியதாயிற்று. |

*** வடக்குத் திருவீதிப்பிள்ளையானவர் நம்பிள்ளை திருவடிகளிலே காலக்ஷேபம் செய்து போராநிற்கையில் அவர்க்கு ஒரு திருக்குமாரர் ஆசாரியரது அநுக்ரஹாதிசயத்தினால் தோன்ற, அக்குமாரர்க்கு ஸ்வாசாரியருடைய திருநாமத்தையே சாத்த வேணுமென்று திருவுள்ளம்பற்றிய வடக்குத் திருவீதிப்பிள்ளை லோகாசாரியரென்று நாமகரணம் செய்தருளப் பிள்ளை லோகாசாரியரென்று அத்திருக்குமாரர் உலகமெங்கும்ப்ரஸித்தி பெற்றாரென்கை(௫௨)

## இதுமுதல் ஏழுபாசுரங்கள் ஸ்ரீவசந பூஷணத்தின் பெருமை கூறுவன.

அன்னபுகழ்முடும்பை யண்ணலுலகாசிரியன் *
இன்ன ருளால்செய்தகலை யாவையிலும்—*உன்னில்
திகழ்வசன பூடணத்தின் சீர்மையொன்றுக்கில்லை *
புகழலவிவ்வார்த்தை மெய்ப்போது (௫௫)

| | | | |
|---|---|---|---|
| அன்ன புகழ் | அப்படிப்பட்ட புகழை யுடையராய் | திகழ் | மிக விளங்குகின்ற |
| முடும்பை | முடும்பைக் குலதிலகரான | வசன பூடணத்தின் சீர்மை | ஸ்ரீவசநபூஷணத்திற் குண்டான சிறப்பு |
| அண்ணல் உலகாசிரியன் | ஸ்வாமி பிள்ளை லோகாசாரியர் | ஒன்றுக்கு இல்லை | மற்றொரு நூலுக்கும் வாய்க்கவில்லை; |
| இன் அருளால் செய்த | பரமகிருபை யடியாக அருளிச்செய்த | இப்போது இவ்வார்த்தை | இப்போது சொல்லுகிற இந்த வார்த்தையானது |
| கலை யாவையிலும் | ரஹஸ்யக்ரந்தங்களெல்லாவற்றினுள்ளும் | புகழ் அல | அதிசயோக்தியன்று; |
| உன்னில் | ஆராயுமிடத்து | மெய் | ஸத்யமானது. |

* * * ஸ்ரீவசநபூஷண திவ்விய சாஸ்த்ரமானது * ஸாங்காகில த்ரவிட ஸம்ஸ்க்ருதரூப வேத ஸாரார்த்த ஸங்க்ரஹமஹாரஸ வாக்யஜாதம் * என்கிறபடியே அறிய வேண்டுமர்த்தமெல்லாம் அழகாக நிரம்பப் பெற்றதாதலால் இது நிகரற்றதென்பது அர்த்தவாதமன்று; மெய்யுரையே. (௫௫.)

## ஸ்ரீ வசநபூஷணமென்கிற திருநாமத்தின் காரணம் கூறுதல்.

முன்னம்குரவோர் மொழிந்தவசனங்கள்
தன்னை * மிகக்கொண்டுகற்றோர்தம்முயிர்க்கு—* மின்னணியாச்
சேரச் சமைத்தவரே சீர்வசனபூடணமென்
பேர் * இக்கலைக்கிட்டார்பின். (௫௬)

| | | | |
|---|---|---|---|
| முன்னம் குரவோர் மொழிந்த | பூருவாசாரியர்கள் அருளிச் செய்த | சேர சமைத்து | சேர்த்து அணி வகுத்து |
| வசனங்கள் தன்னை | ஸ்ரீஸூக்திகளை | அவரே | அவ்வாசிரியர் தாமே |
| மிக கொண்டு | பெரும்பாலும் சேர்த்து | பின் | பிறகு |
| கற்றோர் தம் உயிர்க்கு | கல்வியிற் சிறந்தாருடைய ஆத்மாவுக்கு | இ கலைக்கு | இந்த க்ரந்தத்திற்கு |
| மின் அணி ஆ | அழகிய அலங்காரமாக | சீர் வசனபூடணம் என் பேர் | ஸ்ரீவசநபூஷண மென்கிற திருநாமத்தை |
| | | இட்டார் | இட்டருளினார். |

* * * ஸ்ரீவசநபூஷணமென்கிற க்ரந்தத்திருநாமத்திற்கு விவரணம் காட்டியருளினாராயிற்று. மணவாளமாமுனிகள்தாமே ஸ்ரீவசநபூஷணவ்யாக்யாந அவதாரிகையில்—"ரத்நப்ரசுரமான பூஷணத்துக்கு ரத்நபூஷணமென்று பேராமாப்போலே பூருவாசாரியர்களுடைய வசநப்ரசுரமாய் அநுஸந்தாதாக்களுக்கு ஔஜ்ஜ்வல்யகரமாயிருக்கையாலே இதுக்கு வசநபூஷணமென்று திருநாமமாயிற்று" என்று அருளிச்செய்துள்ள ஸ்ரீஸூக்தி இங்கே அநுஸந்தேயம். பூருவாசாரியர்களின் வசநங்களையே [ஸ்ரீஸூக்திகளையே] கொண்டு அமைக்கப்பட்டதாய் முமுக்ஷுக்களின் கண்டத்திற்கு பூஷணமாயிருக்கத் தக்கதான இந்த க்ரந்தத்திற்கு ஸ்ரீவசநபூஷணமென்னும் திருநாமம் சாலப் பொருந்துமென்க.

இப்பாசுரத்தில் "சீர்வசனபூடணமென்னும் பேர்" என வழங்கிவரும்பாடம் பொருந்தாது; அது மறக்கத்தக்கது. என்பேர் என்பதற்கே என்னும் பேர் என்று பொருள். (ருச)

## ஸ்ரீ வசநபூஷணுதிகாரிகள் துர்லபர் எனல்.

ஆர்வசனபூடணத்தி ளுழ்பொருளெல்லாமறிவார் *
ஆரதுசொன்னேரிலனுட்டிப்பார்—* ஓரொருவ
ருண்டாகி லத்தனைகாணுள்ளமே * எல்லார்க்கும்
அண்டாத தன்றேவது. (ருரு)

| | | | |
|---|---|---|---|
| வசனபூடணத்தின் | ஸ்ரீவசநபூஷணத்தினுடைய | உள்ளமே | ஓ மனமே! |
| ஆழ் பொருள் எல்லாம் | கம்பீரமான அர்த்தங்களை யெல்லாம் | ஓர் ஒருவர் உண்டு ஆகில் அத்தனை காண் | யாரேனு மொருவர் தேறினுராகில் தேறக் கூடுமென்றறி; |
| அறிவார் ஆர் | அறியவல்லாரில்லை; | அது | அந்ததிவ்வியசாஸ்திரமானது |
| அது சொல் நேரில் | அந்த ஸ்ரீவசநபூஷண சாஸ்த்ரம் இட்ட கட்டளையிலே | எல்லார்க்கும் அண்டாதது அன்றே | ஒருவர்க்கும் அறியவும் அநுட்டிக்கவும் எளியதொன்றன்றுகாண். |
| அனுட்டிப்பார் ஆர் | அநுஷ்டிக்க வல்லவர்களுமிலர்: | | |

* * * ஸ்ரீவசநபூஷண மென்பது பெரியதொரு மீமாம்ஸா சாஸ்த்ரம்; இது ஸூத்ர ரூபமாக அமைந்திருத்தலால் பொருளறிவது அரிது; வியாக்கியானங்களைக்கொண்டு ஒருவாறு அறியப்பெற்றுலும் அதன்படி அநுட்டிப்பது மிகவு மரிது. இப்படி அறியவும் அநுட்டிக்கவும் முடியாதபடி அதிகாரிகளற்றதொரு சாஸ்த்ரத்தை ஆசிரியர் அருளிச் செய்யலாமோவென்ன, ஸர்வாத்மநா அதிகாரிகளே யில்லை யென்னப் போகாது, ஓரொருவர் உண்டாகிலத்தனை காண்; * மநுஷ்யாணும் ஸஹஸ்ரேஷு கச்சித் யததி ஸித்தயே, யததாமபி ஸித்தாநாம் கச்சித் மாம் வேத்தி தத்வத:* என்று கீதையிலருளிச் செய்தபடியே ஒவ்வொரு காலத்தில் ஒவ்வோரதிகாரி தேறக்கூடு மென்றதாயிற்று.

அநுஷ்டிக்க முடியாதபடி இதில் என்ன விஷயம் கூறப்பட்டிராநின்றதென்னில்; "குற்றம் செய்தவர்கள் பக்கல் பொறையும் க்ருபையும் சிரிப்பும் உகப்பும் உபகாரஸ்ம்ருதியும் நடக்கவேணும்" என்றும், "விஹிதபோகம் நிஷித்த போகம் போலே லோகவிருத்தமுமன்று, நரகஹேதுவுமன்று; ஆயிருக்கச் செய்தே ஸ்வரூப விருத்தமுமாய் வேதாந்த விருத்தமுமாய் சிஷ்டகர்ஹிதமுமாய் ப்ராப்யப்ரதிபந்தகமுமாயிருக்கையாலே த்யாஜ்யம்" என்றும் இங்ஙனே அருளிச்செய்யப்பட்டுள்ள பலபல விஷயங்கள் அநுஷ்டிக்க வரியன என்னுமிடம் சொல்லவேணுமோ? (ருரு)

## ஸ்ரீ வசநபூஷணத்தின் பொருளையறிந்து அநுஷ்டிக்க விரும்புவதே உஜ்ஜீவநோபாய மெனல்.

உய்யநினைவுடையீர் உங்களுக்குச் சொல்லுகின்றேன் *
வையகுருமுன்னம்வாய்மொழிந்த — * செய்யகலை
யாம் வசனபூடணத்தினுழ்பொருளை * கற்றதனுக்
காம்நிலையில் நில்லுமறிந்து. (ருசு)

| | |
|---|---|
| உய்ய நினைவு உடையீர் | உஜ்ஜீவிக்கவிருப்பமுடையவர்களே! |
| உங்களுக்கு சொல்லுகின்றேன் | உங்களுக்கொரு ஹிதம் சொல்லுகிறேன் (கேண்மின்;) |
| முன்னம் வையகுரு வாய் மொழிந்த | முன்பு பிள்ளையுலகாசிரியர் அருளிச் செய்த தான |
| செய்யகலை ஆம் | திவ்ய சாஸ்த்ரமாகிய |
| வசனபூடணத்தின் | ஸ்ரீ வசநபூஷணத்தினுடைய |
| ஆழ் பொருளை கற்று அறிந்து | ஆழ்ந்த பொருள்களை ஆசாரியமுகமாக அதிகரித்து உணர்ந்து |
| அதனுக்கு ஆம் நிலையில் நில்லும் | அவ்வறிவுக்கு ஏற்ற அநுஷ்டானத்தில் ஊன்றியிருங்கள். |

*** பாசுரம் தொடங்கும் போதே 'உய்ய நினைவுடையீர்' என்று தொடங்குகையாலே ஸ்ரீ வசநபூஷணார்த்தங்களை அறியாதார்க்கும் அதன்படி அநுஷ்டியாதார்க்கும் உஜ்ஜீவிக்க விரகில்லையென்று காட்டிற்றாயிற்று. (௫௬)

## ஸ்ரீ வசநபூஷணத்தை அதிகரியாதவர்கள்பால் நிர்வேதம் காட்டுதல்.

தேசிகர்பால்கேட்டசெழும்பொருளை * சிந்தைதன்னில்
மாசறவேயூன்றமனனஞ்செய்து — * ஆசரிக்க
வல்லார்கள்தாம் வசனபூடணத்தின் வான்பொருளை *
கல்லாததென்னோ கவர்ந்து. (௫௭)

| | |
|---|---|
| தேசிகர் பால் கேட்ட | ஆசாரியர்களிடத்தில் கேட்ட |
| செழு பொருளை | சிறந்த அர்த்தங்களை |
| சிந்தை தன்னில் | நெஞ்சிலே |
| மாசு அற | அழுக்கற |
| ஊன்ற | ஊற்றமாக |
| மனனம் செய்து | சிந்தனை செய்து |
| ஆசரிக்க வல்லார்கள் தாம் | அப்படியே அநுஷ்டிக்க வல்லவர்களான அதிகாரிகள் |
| வசனபூடணத்தின் | ஸ்ரீ வசநபூஷணத்தினுடைய |
| வான் பொருளை | திவ்யார்த்தங்களை |
| கவர்ந்து | அபிநிவேசத்துடனே |
| கல்லாதது என்னோ | அதிகரியாமலிருப்பது ஏனோ? |

*** உலகில் ஆசாரிய சிஷ்யக்ரமம் ஒன்று நடந்து வருகின்றதே; சிலர் ஆசாரியரிடம் பணிந்திருந்து சில அர்த்த விசேஷங்களைக் கேட்பதும் அவற்றைச் சிந்தனை செய்வதும் யதாசக்தி அநுட்டிப்பதுமாயிருக்கின்றார்களே; அப்படிப்பட்டவர்கள் மற்றக்ரந்தங்களில் பரிச்ரமத்தை விட்டு ஸ்ரீ வசநபூஷணத்தில் பரிச்ரமப்படலாமே; அந்தோ! இதில் அபிநிவேசம்கொள்ளாதது என்னோ! என்கிறார். உலகத்திலுள்ளாரெல்லாரும் இந்த திவ்யசாஸ்த்ரத்தை அதிகரிக்கவேணுமென்று மாமுனிகளுக்குண்டான அபிநிவேசம் இதனால் விளங்கிற்றென்க. (௫௭)

## ஸ்ரீ வசநபூஷண வியாக்கியானங்களை யதிகரிப்பது பாங்கெனல்.

சச்சம்பிரதாயம் தாமுடையோர்கேட்டக்கால் *
மெச்சும்வியாக்கியைகளுண்டாகில் — * நச்சி
அதிகரியும் நீர் வசனபூடணத்துக்கற்ற
மதியுடையீர் * மத்தியத்தராய். (௫௮)

| | |
|---|---|
| வசனபூடணத்துக்கு அற்றமதி உடையீர் | ஸ்ரீ வசநபூஷணத்தில் நிலைநின்ற ஊக்கமுடையீர்காள்! |
| சச்சம்பிரதாயம் உடையோர் தாம் | ஸத்ஸம்ப்ரதாய ஸரணியில் படிந்த மஹான்கள் |
| கேட்டக்கால் | கேட்டவளவிலே |
| மெச்சும் | கொண்டாடும்படியான |
| வியாக்கியைகள் | வியாக்கியானங்கள் |
| உண்டு ஆகில் | எத்தனை அவதரித்தாலும் |
| நச்சி | அவற்றை விரும்பி |
| நீர் மத்தியத்தர் ஆய் | நீங்கள் மத்யஸ்தர்களாய்க் கொண்டு |
| அதிகரியும் | அப்யஸியுங்கள். |

* * * சிறந்த க்ரந்தமொன்று அவதரித்தால் அதற்குப் பலரும் வியாக்கியானங்கள் இயற்ற விரும்புவது இயல்பு; ஆகவே இந்த ஸ்ரீவசநபூஷண திவ்ய சாஸ்த்ரத்திற்கும் பலபல வியாக்கியானங்கள் அமையக் கூடும்; அவற்றையெல்லாம் அதிகரிக்க வேண்டியது; ஆனால் அவை ஸத்ஸம்ப்ரதாய ஸாரவித்துக்களால் மெச்சப்படுமவையாக இருக்கவேண்டும்; அப்படிப்பட்ட வியாக்கியானங்கள் எத்தனை அவதரித்தாலும் அவற்றையெல்லாம் அஸூயையின்றி அதிகரிக்கவேணுமென்று அஸ்மதாதிகளை நோக்கி அருளிச் செய்தபடி. மத்யஸ்த: என்னும் வடசொல் 'மத்தியத்தர்' எனத் திரிந்தது. அஸூயை யற்றவர்களாய் என்று தாற்பரியம். (௫௮)

## ஸ்ரீவசநபூஷணத்தின் பரமபோக்யதையை வியந்து கூறுதல்

சீர்வசனபூடணத்தின் செம்பொருளை * சிந்தைதன்னால்
தேறிலுமாம் வாய்கொண்டுசெப்பிலுமாம் —* ஆரியர்காள்
என்றனக்குநாளும் இனிதாக நின்றதையோ *
உந்தமக் கெவ்வின்பமுளதாம். (௫௯)

| | | | |
|---|---|---|---|
| ஆரியர்காள் | ஓ மஹநீயர்களே ! | நாளும் இனிது ஆக நின்றது | * அப்பொழுதைக்கப் பொழுதென்னாராவமுதமென்னலாம் படியுள்ளது ; |
| சீர் வசனபூடணத்தின் | ஸ்ரீவசநபூஷணத்தினுடைய | ஐயோ | மிக ஆனந்தம்! |
| செம் பொருளை | செவ்விய பொருள்களை | உம் தமக்கு எவ் இன்பம் உளது ஆம் | உங்களுக்குஎப்படிப்பட்ட ஆனந்தமாயிருக்கின்றதோ ! |
| சிந்தை தன்னால் தேறிலும் ஆம் | நெஞ்சினால் ஆராய்ந்து பார்க்கிலுமாம் | | |
| வாய் கொண்டு செப்பிலும் ஆம் | வாயினால் எடுத்துரைக்கிலுமாம் ; | | |
| என் தனக்கு | எனக்கு | | |

* * * மாமுனிகள் தமது நைச்யாநுஸந்தாந ஸ்வபாவத்தினால் இது அருளிச் செய்கிறார்; அல்பஜ்ஞனான எனக்கே ஸ்ரீவசநபூஷணார்த்தங்களின் இனிமை பரிச்சேதிக்கப் போகிறதில்லையே! மஹாப்ராஜ்ஞர்களாயுள்ளவர்கள் இதன் போக்யதையில் எங்ஙனே தான் ஈடுபட்டிருப்பர்களோ! என்றாராயிற்று. முதலடியில் 'செழும் பொருளை' என்றோதுவது அசுத்தபாடம்; வெண்டளைபிறழும்; 'செம்பொருளை' என்றே ஓதுக. (௫௯)

## இது முதல் பதினொரு பாசுரங்கள் ஸ்ரீவசநபூஷணார்த்தங்களில் முக்கியமானவற்றை விளக்குவன

தன்குருவின் தாளிணைகள்தன்னில் அன்போன்றில்லாதார் *
அன்புதன்பால்செய்தாலு மம்புயைகோன் —* இன்பமிகு
விண்ணாடு தானளிக்க வேண்டியிரான் * ஆதலால்
நண்ணாரவர்கள் திருநாடு. (௬0)

| | | | |
|---|---|---|---|
| அம்புயை கோன் | திருமகள் கொழுநன், | தான் | ஆசாரியநிஷ்டர்களையே ஆதரிக்குமியல்வினனான தான் |
| தன் குருவின் தாள் இணைகள் தன்னில் | ஸ்வாசாரிய பாதாரவிந்தங்களில் | விண் நாடு அளிக்க வேண்டி இரான் | (அன்னவர்களுக்குப்) பரமபதம் கொடுக்க விரும்பான்; |
| அன்பு ஒன்றும் இல்லாதார் | சிறிது பக்தியுமில்லாதவர்கள் | ஆதலால் | ஆகவே |
| தன் பால் அன்பு செய்தாலும் | தன்விஷயத்தில் எவ்வளவு பக்தி செலுத்தினாலும் | அவர்கள் திரு நாடு நண்ணார் | ஆசாரியபக்தியற்றவர்கள் வைகுந்தம் புகமாட்டார்கள். |

* * * ஸ்ரீவசநபூஷணார்த்தங்களின் பரமபோக்யதையைக் கீழ்ப்பாட்டில் ப்ரஸ்தாவித்த ப்ரஸங்கத்திலே, ஸ்ரீவசநபூஷணத்தின் உயிரான சில அர்த்தவிசேஷங்களை வெளியிட்டருளத் திருவுள்ளம் பற்றி இப்பாசுரம் முதலாக உபக்ரமிக்கிறார். ஸ்ரீவசநபூஷணத்தில் "ஸ்வதந்த்ரனை உபாயமாகத் தான் பற்றினபோதிறே இப்ரஸங்கந்தானுள்ளது" என்கிற சூர்ணை முதலாக "ஈச்வரனைப்பற்றுகை கையைப்பிடித்துக் கார்யங்கொள்ளுமோபாதி; ஆசாரியனைப் பற்றுகை காலைப்பிடித்துக் கார்யங்கொள்ளுமோபாதி" என்கிற சூர்ணை நடுவாக, "இது ப்ரதமம் ஸ்வரூபத்தைப் பல்லவிதமாக்கும், பின்பு புஷ்பிதமாக்கும், அநந்தரம் பலபர்யந்தமாக்கும்" என்பதீறாக ஆசாரியநிஷ்டையே சரமோபாயமென்று மிக அற்புதமாக அருளிச் செய்யப்பட்டிருத்தலால் அவ்வர்த்தவிசேஷம் இங்கு நிரூபிக்கப்படுகிறது. "தாமரையை அலர்த்தக்கடவ ஆதித்யன்தானே நீரைப்பிரிந்தால் அத்தை உலர்த்துமாபோலே ஸ்வரூபவிகாஸத்தைப்பண்ணுமீச்வரன்தானே ஆசாரியஸம்பந்தம் குலைந்தால் அத்தை வாடப்பண்ணும். இத்தையொழிய பகவத் ஸம்பந்தம் துர்லபம்." என்கிற ஸ்ரீவசநபூஷண திவ்யஸூக்தி இங்கே அநுஸந்தேயம்.

அம்புயை— அம்புஜத்திலே [தாமரையிலே] பிறந்த பிராட்டி என்றபடி. பத்மா, கமலா என்கிற திருநாமங்கள் போலுமிது. (௬0)

ஞானமனுட்டானமிவை நன்றாகவேயுடைய
னான * குருவையடைந்தக்கால்— *மாநிலத்தீர்
தேனார்கமலத் திருமாமகள்கொழுநன் *
தானேவைகுந்தம்தரும். (௬௧)

| | | | |
|---|---|---|---|
| மா நிலத்தீர் | இந்நிலவுலகத்தவர்களே ! | தேன் ஆர் கமலம் திரு மா மகள் கொழுநன் | தேன்நிரம்பிய தாமரை மலரில்தோன்றிய ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்கு வல்லபனான ஸர்வேச்வரன் |
| ஞானம் அனுட்டானம் இவை | ஜ்ஞாநமும் அநுஷ்டாநமுமாகிறவிரண்டும் | தானே | தானாகவே உகந்து |
| நன்று ஆக ஏ உடையன் ஆன | குறையற நிரம்பப்பெற்ற | வைகுந்தம் தரும் | ஸ்ரீவைகுண்டத்தை உபகரித்தருள்வன். |
| குருவை | ஆசாரியரை | | |
| அடைந்தக்கால் | ஆச்ரயித்தால் (அப்படிப்பட்ட ஸதாசாரிய ஸமாச்ரயணமுள்ளவர்களுக்கு) | | |

* * * ஆசாரியபக்தி அவசியமென்றது கீழ்ப்பாட்டில்; ஜ்ஞாநாநுஷ்டாநஸம்பந்நனான ஆசாரியனைப் பணிந்தாலன்றிப் பேறு பெற முடியாதென்கிறது இப்பாட்டில். ஆழ்வார்கள் தமது திவ்யப்பிரபந்தங்களில் * வண்டுகளோ வம்மின் * என்றும், * அஞ்சிறையமடநாராய் * என்றும் பலகாலும் பக்ஷிகளை விளிப்பர்கள்; ஆசாரியர்களையே பக்ஷிகளாகக் கூறுவர்கள்; * உபாப்யாமேவ பக்ஷாப்யாம் ஆகாசே பக்ஷிணாம் கதி:, ததைவ ஜ்ஞாநகர்மப்யாம் ப்ராப்யதே புருஷோத்தம:, * என்று, பக்ஷிகளுக்கு இரண்டு சிறகுகளும் குறையற இருந்தாலன்றி உயர் கதி ஸம்பவிக்கமாட்டாதாப்போல, ஆசாரியர்களுக்கும் ஜ்ஞாநமும் அநுட்டானமுமாகிற இரண்டு பக்ஷங்களுமிருந்தாலன்றி உயர்கதி நேராதென்று சாஸ்த்ரங்கள் கூறும். "சேர்ப்பாரைப் பக்ஷிகளாக்கி ஜ்ஞாநகர்மங்களைச் சிறகென்று" என்ற ஆசாரியஹ்ருதயஸூக்தியும் காண்க.

இங்கு "தேனார் கமலத் திருமாமகள் கொழுநன்" என்றது ஸாபிப்ராயம்; பிராட்டியின் புருஷகாரத்தாலே மோக்ஷபளிக்கவல்லவனேஎம்பெருமான்; ஆயினும் ஸதாசாரியர்களை ஆச்ரயியாதார்க்குப் பிராட்டியின் புருஷகாரமும் பலிக்கமாட்டாது என்று காட்டினபடி. ஆசாரிய

ஆச்ரயணமிருந்தால் பிராட்டியின் புருஷகாரமுமின்றி ஸ்வயமாகவே வீடு தந்தருள்வனென்று காட்டத் "தானே வைகுந்தம் தரும்" என்றார். (சூக)

உய்யநினைவுண்டாகில் உங்குருக்கள் தம்பதத்தே
வையும் * அன்புதன்னையிந்தமாநிலத்தீர்—* மெய்யுரைக்கேன்
பையரவில்மாயன் பரமபதமுங்களுக்காம் *
கையிலங்கு நெல்லிக் கனி. (சூஉ)

| | |
|---|---|
| இந்த மா நிலத்தீர் | இந்நிலவுலகத்தவர்களே! |
| உய்யநினைவு உண்டாகில் | உஜ்ஜீவிக்க வேணுமென்கிறவிருப்பம்உங்களுக்கு உள்ளதாகில் |
| அன்பு தன்னை | பக்தியை |
| உம் குருக்கள் தம்பதத்தே | உமது ஆசாரியர்களின் திருவடிகளிலேயே |
| வையும் | செலுத்துங்கள்; (அதனால் நேரும் பலனை) |
| மெய் உரைக்கேன் | உள்ளபடி கூறுகின்றேன் (கேண்மின்) |
| பை அரவில் மாயன் பரமபதம் | சேஷசயனனானஸர்வேச்வரனுடையதான பரமபதமானது |
| உங்களுக்கு | உங்களுக்கு |
| கை இலங்கு நெல்லி கனி ஆம் | கரதலாமலகமென்னலாம்படி எளிதாகும். |

* * * ஆசாரிய பக்தர்களுக்குப் பரமபதமானது கையிலங்கு நெல்லிக்கனியாமென்றது பரமபதபோகங்களையெல்லாம் இந்நிலத்திலேயே ஸாக்ஷாத்கரிக்கப் பெறலாமென்றபடி. *பொன்னுலகாளீரோ புவனி முழுதாளீரோ* என்னும்படி பிறர்க்கும் வழங்குதற்கு உரித்தாம்படி விதேயமாகும் என்ற கருத்தும் உய்த்துணரத்தக்கது. (சூஉ)

ஆசாரியன் செய்த உபகாரமானவது *
தூய்தாக நெஞ்சுதன்னில் தோன்றுமேல்—* தேசாந்
தரத்திலிருக்க மனந்தான்பொருந்தமாட்டாது *
இருத்தலினியேதறியோம்யாம். (சூ௩)

| | |
|---|---|
| ஆசாரியன் செய்த உபகாரம் ஆன அது | ஆசாரியன் பண்ணின மஹோபகாரமானது |
| தூய்து ஆக | சுத்தமாக |
| நெஞ்சுதன்னில்தோன்றும் ஏல் | நெஞ்சில் படுமானால் (பிறகு) |
| தேசாந்தரத்தில் இருக்க | (ஆசாரியனைப் பிரிந்து) வேறொரு தேசத்தில் வஸிக்க |
| மனம் தான் பொருந்த மாட்டாது | நெஞ்சுஇசையகில்லாது |
| இனி | இங்ஙனே தத்துவமிருந்தும் |
| இருத்தல் | ஆசாரியனைப்பிரிந்திருத்தற்கு |
| ஏது | காரணத்தை |
| யாம் அறியோம் | நாம் அறியமாட்டோம். |

* * * இரும்பைப் பொன்னுக்குமாபோல ஆசாரியன் செய்த மஹோபகாரம் சிஷ்யனுடைய நெஞ்சில் நன்றாகத் தோன்றுமாகில் 'வஸ்தவ்யம் ஆசாரியஸந்நிதியே' என்று அத்யவஸாயங்கொண்டு ஒரு நொடிப்பொழுதும் விட்டுப் பிரியாமலிருக்க வேண்டியதாகுமத்தனை; ஆயினும் பிரிந்திருப்பார் சிலருண்டாகில் அவ்விருப்புக்கு ஹேது இன்னதென்று நாம் அறியோம் என்கிறார். 'ப்ரபலபாபமே ஹேது' என்று வெட்டிதாகச் சொல்லக்கூசி 'ஏது யாம் அறியோம்' என்கிறார். ஹேது என்னும் வடசொல் ஏதுவெனத் திரிந்தது. (சூ௩)

தன்னாரியனுக்குத் தானடிமைசெய்வது * அவன்
இந்நாடுதன்னிலிருக்கும்நாள் —* அந்நே
ரறிந்துமதிலாசையின்றி *ஆசாரியனைப்
பிரிந்திருப்பாரார், மனமேபேசு. (சூச)

| | | | |
|---|---|---|---|
| தன் ஆரியனுக்கு | ஸ்வாசாரியனுக்கு | | |
| தான் அடிமை செய்வது | சிஷ்யனாகிய தான் கைங்கரியம் பண்ணுவதானது | அதில் ஆசை இன்றி | அந்த ஆசாரிய கைங்கரியத்தில் ருசி யில்லாமல் |
| அவன் இ நாடு தன்னில் இருக்கும் நாள் | அவ்வாசிரியன் இவ்விபூதியில் எழுந்தருளியிருக்குமளவுமாம்; | ஆசாரியனை பிரிந்து இருப்பார் ஆர் | ஆசாரியனைப் பிரிந்து பிறிதோரிடத்தில் வஸிப்பாருமுளரோ? |
| அ நேர் அறிந்தும் | அந்த நேர்த்தியை அறிந்து வைத்தும் | மனமே பேசு | நெஞ்சே ! சொல்லு. |

* * * ஆசாரியன் பக்கலில் அர்த்தங்கள் கேட்குமளவே அவர்க்குக் கைங்கரியம் பண்ணவேணும்; அர்த்தம் கேட்டுத் தலைக்கட்டினவாறே வேறிடம் சென்று எங்கேனும் வாழலாம் என்று நினைப்பது தகுதியன்று; ஆசாரியன் இந்தவிபூதியில் எழுந்தருளியிருக்குமளவும் அநுதினமும் கைங்கரியம் செய்தே ஸத்தைபெறவேணுமென்கிற சாஸ்த்ரார்த்தம் இதனால் வெளியிடப்பட்டதாயிற்று. (௩௪)

ஆசாரியன்சிச்ச னாருயிரைப்பேணுமவன் *
தேசாரும் சிச்சனவன் சீர்வடிவை —* ஆசையுடன்
நோக்குமவனென்னும் நுண்ணறிவைக் கேட்டுவைத்தும் *
ஆர்க்குமங்கோர் நிற்கையரிதாம். (௩௫)

| | | | |
|---|---|---|---|
| ஆசாரியன் | ஆசாரியரானவர் | ஆசை உடன் நோக்குமவன் | பக்தியோடு பேணக் கடவன் ; |
| சிச்சன் ஆர் உயிரை பேணுமவன் | சிஷ்யனுடைய ஆத்மஸ்வரூபத்தை நோக்கியிருக்கக்கடவர் ; | என்னும் நுண் அறிவை | என்கிற இந்த நுட்பமான விசேஷார்த்தத்தை |
| தேசு ஆரும் சிச்சன் | ஸ்வரூபஜ்ஞானமாகிற தேஜஸ்ஸால் பொருந்திய சிஷ்யனானவன் | கேட்டு வைத்தும் | (ஸ்ரீவசநபூஷணாதிகளிலே) கேட்டிருந்தாலுங்கூட |
| அவன் சீர் வடிவை | அவ்வாசாரியருடைய திவ்யமங்கள விக்ரஹத்தை | அ நேர் நிற்கை | அவ்வழியில் நிஷ்டையோடிருத்தல் |
| | | ஆர்க்கும் அரிது ஆம் | எப்படிப்பட்டவர்களுக்கும் அருமைப்பட்டேயிருக்கும் [எளிதன்று.] |

* * * ஸ்ரீவசநபூஷணத்தில் மூன்றும் பிரகரணத்தில் —“ ஆசாரியன் சிஷ்யனுடைய ஸ்வரூபத்தைப் பேணக் கடவன் ; சிஷ்யன் ஆசாரியனுடைய தேஹத்தைப் பேணக்கடவன். இரண்டும் இருவர்க்கும் ஸ்வரூபமுமாய் பகவத் கைங்கரியமுமாயிருக்கும். ஆசாரியனுக்கு தேஹரக்ஷணம் ஸ்வரூபஹாநி ; சிஷ்யனுக்கு ஆத்மரக்ஷணம் ஸ்வரூபஹாநி” இத்யாதியாக அருளிச் செய்யப்பட்டுள்ள ஸ்ரீஸூக்திகள் இங்கே அநுஸந்தேயம். இவ்வர்த்த விசேஷங்களைக் கேட்கவும் கேட்பிக்கவும் அதிகாரிகள் உளரேயன்றி அநுட்டிக்கவல்லாரொருவருமிலரே யென்று அருமை கூறினாராயிற்று. (௩௫)

பின்பழகராம்பெருமாள்சீயர் * பெருந்திவத்தில்
அன்பதுவுமற்று மிக்கவாசையினால்—* நம்பிள்ளைக்
கானவடிமைகள்செய் யந்நிலையை நன்னெஞ்சே *
ஊனமறவெப்பொழுதுமோர். (௩௬)

| | | | |
|---|---|---|---|
| பின்பழகராம் பெருமாள் சீயர் | பின்பழகியபெருமாள்சீயரென்பவர் | | |
| பெரும் திவத்திலும் | பரமபத வாழ்க்கையிலும் | அ நிலையை | அந்த நிஷ்டையை |
| அன்பு அது அற்று | விருப்பமின்றிக்கே | நல் நெஞ்சே | நல்லமனமே! |
| மிக்க ஆசையினால் | பரமபக்தியோடு | ஊனம் அற | குறையொன்றுமின்றி [பரிபூர்த்தியாக] |
| நம்பிள்ளைக்கு ஆன அடிமைகள் செய் | (ஸ்வாசார்யரான) நம்பிள்ளைக்கு அனுகூலமான கைங்கரியங்களைச் செய்யப்பெற்ற | எப்பொழுதும் ஓர் | அநவரதமும் சிந்தை செய்வாயாக. |

*** நம்பிள்ளை திருவடிகளில் ஆச்ரயித்து வாழ்ந்தவர்கள் பலர் இருந்தாலும் பின்பழகிய பெருமாள் ஜீயர் என்னும் சிஷ்யர்க்கு இருந்த ஆசார்யப்ரேமம் ஒப்புயர்வற்றது ; நம்பிள்ளை திருவடிகளிலே நித்யகைங்கர்யம் செய்யப்பெறவேணுமென்றே இவர் சில ஔஷதங்களை ஸ்வீகரித்துத் திருமேனியைப் போஷிக்க விருப்பங்கொண்டிருந்தவர் என்பது வைபவ நூலில் விசதம். இவரைப்போல் நம்மால் இருக்கமுடியாமற் போனாலும் இவருடைய நிஷ்டையைச் சிந்தனைசெய்யவாவது பெற்றால் அதுவே நாம் உஜ்ஜீவிக்கப்போதுமானதென்று காட்டினாராயிற்று. (௫௬)

ஆசாரியர்க ளனைவருமுன்னாசரித்த *
ஆசாரந்தன்னை யறியாதார் —* பேசுகின்ற
வார்த்தைகளைக் கேட்டு மருளாதே * பூருவர்கள்
சீர்த்தநிலைதன்னை நெஞ்சே சேர். (௫௭)

| | | | |
|---|---|---|---|
| முன் ஆசாரியர்கள் அனைவரும் | பூருவாசாரியர்களெல்லாரும் | வார்த்தைகளை கேட்டு | பேச்சுக்களைக் கேட்டு |
| ஆசரித்த | அனுட்டித்துப் போந்த | மருளாதே | மனம் திரியாமல் |
| ஆசாரம் தன்னை | அனுட்டானத்தை | பூருவர்கள் | முன்னோருடைய |
| அறியாதார் | அறியப்பெறாதவர்கள் | சீர்த்த நிலை தன்னை | சீரிய நிஷ்டையையே |
| பேசுகின்ற | கண்டபடிசொல்லுகின்ற | நெஞ்சே சேர் | மனமே! அனுவர்த்திக்கப் பார். |

*** புது வைஷ்ணவங்கொண்டாடும் சிலர் புதிது புதிதாகச் சில நடத்தைகளைக் கைப்பற்றி 'இதைச் செய்யவேணும், இதை அனுட்டிக்கவேணும்' என்றிப்படி பேசவும் திருத்தவும் புறப்படுவர்கள்; நம்முடைய பூருவாசாரியர்களின் அனுஷ்டானமுறைமைகளைத் தெரிந்துகொள்ளாதாருடைய அந்தப்பேச்சுக்களினால் மனம் திரியாமல் "செய்யாதன செய்யோம்" என்றும் "மேலையார் செய்வனகள்" என்றும் ஆண்டாளருளிச்செய்தபடியே பூர்வாநுஷ்டாந ஸரணியிலேயே வர்த்தித்தல் வேண்டுமென்று நியமித்தாராயிற்று. (௫௭)

நாத்திகருநற்கலையின் நன்னெறிசேராத்திகரும் *
ஆத்திகநாத்திகருமாமிவரை —* ஓர்த்துநெஞ்சே
முன்னவரும் பின்னவரும் மூர்க்கரெனவிட்டு * நடுச்
சொன்னவரை நாளுந்தொடர். (௫௮)

| | | | |
|---|---|---|---|
| | | ஓர்த்து | ஆராய்ந்து பார்த்து |
| | | நெஞ்சே | மனமே! |
| நாத்திகரும் | நாஸ்திகர்களும் | முன்னவரும் பின்னவரும் | முதலில் சொல்லப்பட்ட நாஸ்திகர்களும், பிந்திச்சொல்லப்பட்ட ஆஸ்திக நாஸ்திகர்களும் |
| நல் கலையின் நல் நெறி சேர் ஆத்திகரும் | உயர்ந்த சாஸ்த்ரங்களின் ஸன்மார்க்கத்திலே படிந்த ஆஸ்திகர்களும் | | |
| ஆத்திக நாத்திகரும் | ஆஸ்திக நாஸ்திகர்களும் | | |
| ஆம் இவரை | ஆகிய இம்மூன்று வகுப்பினரையும் | மூர்க்கர் என விட்டு | திருத்த முடியாத மூர்க்கர்கள் என்று அவர்களிடத்திலே நசையற்று |

| | | | |
|---|---|---|---|
| நடு சொன்னவரை | இடையே சொல்லப்பட்ட ஆஸ்திகர்களை | நாளும் தொடர் | எப்போதும் அநுவர்த்திப்பாயாக. |

*** ஸ்ரீ வசநபூஷணத்தில் இரண்டாம் ப்ரகரணத்தில் "அஜ்ஞனை விஷயப்ரவணன் கேவலநாஸ்திகனைப்போலே; ஜ்ஞாநவானை விஷயப்ரவணன் ஆஸ்திகநாஸ்திகனைப்போலே" இத்தியாதியாக அருளிச்செய்தது இங்கே அநுஸந்தேயம். சாஸ்த்ரத்தில் ப்ராமாண்ய புத்தியில்லாமல் தான்தோன்றியாகச் செய்து திரிகிறவன் வெறும் நாஸ்திகனெனப்படுவன். சாஸ்த்ரங்களை ப்ரமாணமாக இசைந்து ஆஸ்திகனென்று சொல்லத்தக்கவனும், அந்த சாஸ்த்ரவரம்பில் அடங்காமல் தோன்றினபடியே செய்து திரிவதுபற்றி நாஸ்திகஸமனுமிருப்பவன் ஆஸ்திக நாஸ்திகனெனப்படுவன். ஆஸ்திகர்களே நமக்கு அநுவர்த்தநீயர்களென்றதாயிற்று. (சுஅ)

## ஸத்ஸங்க மஹிமை கூறுதல்.

நல்லமணமுள்ளதொன்றை நண்ணியிருப்பதற்கு *
நல்லமணமுண்டாம்நலமதுபோல் — *நல்ல
குணமுடையோர்தங்களுடன் கூடியிருப்பார்க்கு *
குணமதுவேயாம் சேர்த்திகொண்டு. (சுகூ)

| | | | |
|---|---|---|---|
| நல்ல மணம் உள்ளது ஒன்றை | நல்ல வாஸனையுடையதொரு வஸ்துவை | நல்ல குணம் உடையோர் தங்களுடன் | ஸத்குணசாலிகளோடு |
| நண்ணி யிருப்பதற்கு | அணைந்திருக்கிற பொருளுக்கும் | கூடி இருப்பார்க்கு | ஸஹவாஸம்பண்ணி யிருக்குமவர்களுக்கு |
| நல்ல மணம் உண்டாம் நலம் அதுபோல் | (ஸம்ஸர்க்கபலத்தாலே) நல்ல பரிமளமுண்டாகுமென்கிற நியாயப்படி | சேர்த்தி கொண்டு | அந்த ஸம்பந்த வைபவத்தினால் |
| | | அதுவே குணம் ஆம் | அந்த நற்குணமே விளைந்திடும். |

*** ஸ்ரீ வசநபூஷணத்தில் இரண்டாம் பிரகரணத்தின் முடிவில் ப்ரபந்நதிநசர்யையை வெகு அழகாக அருளிச்செய்து வருமிடத்து "அநுகூலஸஹவாஸமும் ப்ரதிகூலஸஹவாஸநிவ்ருத்தியும் ஸதாசார்யப்ரஸாதத்தாலே வர்த்திக்கும்படி பண்ணிக்கொண்டு போரக்கடவன்" என்றருளிச் செய்திருப்பதைத் திருவுள்ளம் பற்றி இப்பாட்டும் மேலிற்பாட்டும் அருளிச்செய்யப்படுகின்றன. ஜ்ஞாநாநுஷ்டானங்களை வளர்க்கவல்ல அநுகூலரான ஸத்துக்களை ஒரு நொடிப்பொழுதும் விட்டுப்பிரியாமலும், ஸ்வரூபத்தைக் கெடுக்கவல்ல பிரதிகூலரான அஸத்துக்களைக் கண்ணெடுத்துப்பாராமலும் வர்த்திக்கவேணுமென்கிற ஸ்ரீ வசநபூஷண திவ்ய சாஸ்த்ர நியமனத்தை வெளியிட்டருளுகிறபடி.

"நயமது போல்" "நலமது போல்" என்பன பாட பேதங்கள். (சுகூ)

## அஸத்ஸஹவாஸத்தின் வர்ஜநீயதையைக் காட்டுதல்.

தீயகந்தமுள்ளதொன்றைச் சேர்ந்திருப்ப தொன்றுக்கு *
தீயகந்தமேறும்திறமதுபோல் — * தீய
குணமுடையோர்தங்களுடன் கூடியிருப்பார்க்கு *
குணமதுவேயாம் செறிவுகொண்டு.

| | | | |
|---|---|---|---|
| தீய கந்தம் உள்ளது ஒன்றை | கெட்ட நாற்றமுடையதானவொரு வஸ்துவை | சேர்ந்து இருப்பது ஒன்றுக்கு | அணைந்திருக்குமதானவொரு பொருளுக்கு |

| | | | |
|---|---|---|---|
| தீய கந்தம் ஏறும் திறம் அது போல் | கெட்ட நாற்றம்பற்றுகிறதென்கிற நியாயப்படிக்கு | செறிவு கொண்டு | அந்தச் சேர்க்கையினால் |
| தீய குணம் உடையோர் தங்களுடன் கூடி இருப்பார்க்கு | துஷ்டஸஹவாஸமுடையவர்களுக்கு | அதுவே குணம் ஆம் | அந்தத் தீய குணமே விளைந்திடும். |

* * * ஆதலால் துஷ்டஸஹவாஸம் வர்ஜநீயம் என்று சேஷபூரணமாகக் கடவது. இப்படியே கீழ்ப்பாட்டிலும் ஸத்ஸஹவாஸமே கர்த்தவ்யமென்பதாகப் பூரித்துக்கொள்வது. (எய)

## ஸ்ரீ வசநபூஷண தூஷகர்களின் புன்மை கூறுதல்

முன்னோர் மொழிந்த முறைதப்பாமல் கேட்டு *
பின்னோர்ந்துதாமதனைப் பேசாதே—* தம்நெஞ்சில்
தோற்றினதேசொல்லி யிதுசுத்தவுபதேசவர
வாற்றதென்பர் * மூர்க்கராவார். (எக)

| | | | |
|---|---|---|---|
| முன்னோர் மொழிந்த | பூருவர்கள் அருளிச்செய்தவற்றை | தோற்றினதே சொல்லி | தோற்றின தாங்தோன்றியர்த்தங்களையே சொல்லி |
| முறை தப்பாமல் கேட்டு | முறை வழுவாமே ஸதாசார்யஸன்னிதானத்தில் கேட்டுணர்ந்து | இது | 'இந்த அர்த்தமே |
| பின் ஓர்ந்து | பின்பு அதை அப்படியே மனனம்பண்ணி | சுத்த உபதேச வரவு ஆற்றது என்பர் | சுத்த ஸம்ப்ரதாய உபதேசபரம்பரையாய் வரலுற்றது' என்று பொய்யும் சொல்லுமவர்களே |
| தாம் அதனை பேசாதே | தாங்கள் அதை அப்படியே பேசவேண்டியது ப்ராப்தமாயிருக்க அங்ஙனம் பேசாமல் | மூர்க்கர் ஆவார் | மூர்க்கரெனத் தகுந்தவர்கள். |
| தம் நெஞ்சில் | தமது உள்ளத்திலே | | |

* * * வாசாமகோசரமான மஹிமை வாய்ந்த ஸ்ரீ வசநபூஷண திவ்யசாஸ்த்ரத்திலே ப்ரதிபத்தி வஹிக்க ப்ராப்தமாயிருக்க, அதுசெய்யாததோடு இந்த சாஸ்த்ரார்த்தங்களை தூஷிப்பாரும் சிலர் உண்டாயிருந்தார்கள். அவர்கள் முன்னோர்மொழிந்த முறைதப்பாமல் கேட்டவர்களல்லர்; முன்னோர் மொழிந்த முறைப்படியே பேசவேணுமென்கிற விரதம்கொண்டவர்களுமல்லர். எதையேனும் தான்தோன்றியாகச் சொல்லுவர்கள். அங்ஙனம் சொல்லுவதோடு நில்லாமல் தாம் ஸதாசார்ய பரம்பரையாகக் கேட்டுப்பேசுவதாகவே பொய்சொல்லி உலகை வஞ்சிக்கவும் வல்லவர்கள்; அவர்கள் ஸதாசர்யர்களை மூர்க்கரென்று கூசாமல் தூஷிக்கவும் வல்லர்; அப்படிப்பட்டவர்களையே மூர்க்கர்களென்று விட்டுத் தொலைக்கவேண்டியதொழிய அவர்களது பேச்சுக்களுக்கு மறுப்புரைத்துக் கொண்டிருக்கவேண்டிய அவசியம் நமக்கில்லை என்று இப்பாட்டினால் தெளியவருளிச் செய்தாராயிற்று.

முன்னோர் மொழிந்த முறைதப்பாமல் கேட்டுச்சொல்லுகிறவர்களை "த்ருட பூர்வச்ருதோ மூர்க்க:" என்று தூஷித்தால் அது ஏற்குமோ? பூர்வேப்ய: ச்ருதம்—பூர்வச்ருதம்; த்ருடம் பூர்வச்ருதம் யஸ்ய ஸ:—த்ருடபூர்வச்ருத:—முன்னோரிடம் கேட்டதை த்ருடமாக வைத்துக்கொள்ளுகிறவன் மூர்க்கன் என்று அஸ்தாநே அயுக்தமாகச்சொல்லி தூஷித்தார்சிலர்; அந்தோ! பூருவர்களிடத்தில் ச்ருதமானதை த்ருடமாக வைத்துக்கொள்பவர் மூர்க்கரல்லர்; பூருவர்களிடத்தில் ஒன்றும்கேளாமல் தாந்தோன்றியாகச் சொல்லிவிட்டு உலகை வஞ்சிப்பவரே மூர்க்கர் என்று மிகவும் யுக்தமாகவும் ஸாரமாகவும் அருளிச் செய்தாராயிற்று. (எக)

## உபதேச நிகமனம்

பூருவாசாரியர்கள் போதமனுட்டானங்கள் *
கூறுவார் வார்த்தைகளைக்கொண்டுநீர்—தேறி *
இருள்தருமா ஞாலத்தே யின்பமுற்றுவாழும் *
தெருள்தருமா தேசிகனைச் சேர்ந்து. (எஉ)

(அஸ்மதீயர்களே!)

| | | | |
|---|---|---|---|
| பூருவாசாரியர்கள் | பூர்வாசார்யர்களினுடைய | தெருள் தரும் | நல்லறிவை உபகரித்தருளவல்ல |
| போதம் அனுட்டானங்கள் | ஜ்ஞாநாநுஷ்டானங்களை | மா தேசிகனை சேர்ந்து | சிறந்த ஆசாரியரை அடிபணிந்து |
| கூறுவார் | எடுத்துச் சொல்லுகின்ற மஹான்களினுடைய | இருள்தருமா ஞாலத்தே | இவ்விருள்தருமா ஞாலத்திலே |
| வார்த்தைகளைக்கொண்டு நீர் தேறி | ஸ்ரீஸூக்திகளினால் நீங்கள் தெளிவுபெற்று | இன்பம் உற்று வாழும் | ஆநந்தநிர்ப்பரர்களாய் வாழுங்கள். |

* * * கீழ்ப்பாட்டிலே சொன்ன மூர்க்கர்களையும் அப்படிப்பட்டவர்களெழுதும் சுவடிகளையும் ஒரு பொருளாக மதியாமல், நம்முடைய பூருவாசாரியர்களருளிச்செய்த அர்த்த விசேஷங்களையும் அவர்களது அனுட்டானங்களையும் எடுத்துரைக்கும் மஹநீயர்களின் திருவாக்குக்களையே நிதியாகக்கொண்டு ஒரு கலக்கமுமின்றிக்கே ஸதாசார்யரை ஆச்ரயித்து வாழப்பெறில் அவர்களுக்கு இந்நிலம் இருள்தருமாஞாலமாகத் தோற்றாது; "நலமந்தமில்லதோர் நாடாகவேதோற்றும்; "இந்திரலோகமாளுமச்சுவை பெறினும் வேண்டேன்" என்று பரமபதத்தையும் வெறுத்து இவ்வுலகத்திலேயே ஆனந்தமயமாக நெடுநாள் வாழப்பெறலாமென்றவாறு. (எஉ)

## பயனுரைத்துத்தலைக்கட்டுதல்.

இந்தவுபதேசரத்தினமாலைதன்னை *
சிந்தைதனில்நாளும் சிந்திப்பார்—* எந்தை
எதிராசரின்னருளுக் கென்றுமிலக்காகி *
சதிராக வாழ்ந்திடுவர் தாம். (எங)

| | | | |
|---|---|---|---|
| இந்த உபதேசரத்தின மாலை தன்னை | உபதேசரத்தின மாலையென்னுமிந்தப் பிரபந்தத்தை | எந்தை எதிராசர் | ஸ்வாமி யெம்பெருமானாருடைய |
| | | இன் அருளுக்கு | பரமகிருபைக்கு |
| நாளும் | அநுதினமும் | என்றும் இலக்கு ஆகி | எந்நாளும் பாத்திரமாகி |
| சிந்தை தனில் | உள்ளத்தினுள்ளே | சதிர் ஆக | ஒரு குறையுமின்றிக்கே செல்வம் பொலிய |
| சிந்திப்பார் தாம் | சிந்தனை செய்யுமவர்கள் | வாழ்ந்திடுவர் | வாழப்பெறுவர்கள். |

* * * எம்பெருமானார் திருவுள்ளத்திற்கு உகப்பான விஷயங்களையே தொடுத்து இயற்றியுள்ள இந்தச்சொல்மாலையைச் சிந்தையிலே அணிந்துகொள்ளுமவர்களுக்கு எம்பெருமானாருடைய பரமகிருபையே பேறுகுமென்று பலனருளிச்செய்து தலைக்கட்டினாராயிற்று.

எம்பெருமானார் எழுபத்தினன்கு ஸிம்ஹாஸநாதிபதிகளை நியமித்தருளினவராதலால் அந்தக்கணக்கிலே எழுபத்தினன்கு பாசுரமாக இத்திவ்வியப் பிரபந்தத்தை இயற்றியருளவேணுமென்று மணவாளமாமுனிகள் திருவுள்ளம்பற்றியிருந்தாராம்; அப்போது மாமுனிகளையே தெய்வமாகக்கொண்ட வொருமஹாசாரியர் "மன்னுயிர்காளிங்கே மணவாள மாமுனிவன்" என்கிற பாசுரத்தைப்பணித்து இந்தப்பாசுரம் உபதேசரத்தினமாலையோடு சேர்ந்தே அநுஸந்திக்கப்படுமாறு அருள்புரியவேணுமென்று பெரியபெருமாள் திருவடிகளிலே வணங்கி

வழிபட்டு ப்ரார்த்திக்க, அப்படியே பகவந்நியமனமாயிற்றென்று பெரியார் பணிக்கக் கேட்டிருக்கை. ஆனது பற்றியே எழுபத்துமூன்று பாட்டளவிலே தலைக்கட்டியுள்ளார் மாமுனிகள். அந்தப்பாசுரம் அடுத்துவருவது. (எங)

மன்னுயிர்காளிங்கே மணவாளமாமுனிவன் *
பொன்னடியாஞ் செங்கமலப் போதுகளை —* உன்னிச்
சிரத்தாலே தீண்டில் அமானவனும் நம்மை *
கரத்தாலே தீண்டல் கடன்.

| | | | |
|---|---|---|---|
| மன் உயிர்காள் | முமுக்ஷுசேதநர்களே! | சிரத்தாலே | தலையினாலே |
| இங்கே | இந்நிலத்திலே | தீண்டில் | ஸ்பர்சிக்கப்பெற்றால் |
| மணவாளமாமுனிவன் | மணவாளமாமுனிகளினுடைய | நம்மை | அப்படிப்பட்ட பாக்கியம் பெற்ற அஸ்மதாதிகளை |
| பொன் அடி ஆம் | திருவடிகளாகிற | அமானவன் | அமானவனென்கிற திவ்ய புருஷன் |
| செம் கமலம் போதுகளை | செந்தாமரைமலர்களை | கரத்தாலே | தனது கைகளால் |
| உன்னி | (இவையே நமக்குத் தஞ்சமென்று) பிரதிபத்தி பண்ணி | தீண்டலும் | ஸ்பர்சிப்பதும் |
| | | கடன் | வியர்த்தமாகும். |

* * * ஆழ்வாராசாரியர்களின் பெருமையைப் பேசுவதற்கென்றே பாங்காக அவதரித்த இந்த ப்ரபந்தரத்னத்திலே ஆசார்ய ஸார்வபௌமரான நம்மணவாளமாமுனிகளின் பெருமையைப்பகரும் பாசுரமும் சேர்ந்திருக்க வேண்டியது அவசியமாதலாலும், அஃது இதில் இல்லாதிருப்பது பெருங்குறையாகுமாதலாலும் சுவடறிந்த மஹநீயர் இப்பாசுரத்தைச் சேர்த்து இப்பிரபந்தத்தைப் பூர்த்தி செய்தது மிகப் பொருத்தம்.

இந்நிலத்தில் பந்தம் நீங்கி முக்திபெறப்போகும் ஜீவாத்மாவுக்கு அங்கே அமாநவகரஸ்பர்சம் நேருவதாகவும் அதுவே நித்திய விபூதிச் செல்வங்களுக்கு மூலகந்தமென்றும் சாஸ்த்ரங்கள் கூறும். இந்நிலத்தில் மணவாளமாமுனிகளின் திருவடி ஸம்பந்தம் பெற்றார்க்கு இதுவே அமாநவகரஸ்பர்சத்தினும் மேம்பட்டதாதலால் அங்கே தனித்து அது வேண்டா என்றதாயிற்று. இதனால் மணவாள மாமுனிகளின் வைபவம் ஒப்புயர்வற்றதென்று விளங்கிற்று. ஆசார்யத்வ பூர்த்தியுள்ளது இவ்வாசிரியர்க்கேயாமத்தனை. (எச)

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர் இயற்றிய

**உபதேச ரத்தினமாலையுரை**

முற்றுப்பெற்றது.

# திருவாய்மொழி நூற்றந்தாதி.

நம்மாழ்வாரருளிச் செய்த திருவாய்மொழியானது நூறுபதிகங்கள் கொண்டது. ஒவ்வொரு பதிகத்தின் தாற்பரியத்தையும் ஸாரமாகவெடுத்துத் தொகுத்து மணவாளமாமுனிகளால் இத்திவ்யப்பிரபந்தம் நூறுபாசுரமாகவும் அந்தாதித்தொடையாகவும் அருளிச் செய்யப்பட்டதாதலால் இதற்குத் திருவாய்மொழி நூற்றந்தாதியென்று திருநாமமாயிற்று.

உலகில் எத்தனையோ பிரபந்தங்கள் அவதரித்திருந்தாலும் இப்பிரபந்தத்திற்கு நிகரானதொன்றில்லையென்பது மாச்சரியமற்ற அநுபவரஸிகர்களின் ஸித்தாந்தமாகும் "அல்லும் பகலுமனுபவிப்பார் தங்களுக்குச் சொல்லும் பொருளும் தொகுத்துரைத்தான் நல்ல மணவாள மாமுனிவன்" என்று இப்பிரபந்தத்திற்குத் தனியன் அமைந்தது சாலவும் பொருந்தும். சொல் நோக்கும் பொருள் நோக்கும் தொடை நோக்கும் மற்று எந்நோக்குங்காண இலக்கியமாகவும் இலக்கணமாகவும் அமைந்தது இத்திவ்யப்பிரபந்தம்.

திருவாய்மொழியிலுள்ள ஒவ்வொரு பதிகத்தினுடையவும் முதற் சொல்லே இப்பிரபந்தத்தில் ஒவ்வொரு பாசுரத்திற்கும் முதற் சொல்லாக அமைக்கப்பட்டுளது; அதுவுமல்லாமல் அந்தாதித் தொடையாகவும் இது பாடப்பட்டிருக்கின்றது. பாசுரந்தோறும் நம்மாழ்வாருடைய திருநாமமும் துதியுடன் அமைய வேணுமென்பதும் இதில் ஒரு நியமமாகக் கொள்ளப்பட்டது.

நம்மாழ்வாருடைய திருவாய்மொழியும் அந்தாதித் தொடையாலமைந்ததேயாயினும் ஒவ்வொரு பாசுரத்தையும் முடிப்பது அவருடைய இஷ்டப்படியே இருந்தது. இன்னசொல்லைத்தான் பாசுரத்தின் முடிவிலே அமைக்கவேணுமென்கிற நிர்ப்பந்தம் எந்த அந்தாதிப் பிரபந்தத்திற்கும் இல்லையன்றே. முடித்தசொல்லையே மேற்பாட்டில் முதலாக அமைக்கவேணுமென்கிற நிர்ப்பந்தம் மாத்திரமேயன்றோ அந்தாதிப்பிரபந்தங்களுக்கு உள்ளது. இந்த நூற்றந்தாதி அவ்வளவே யன்றிக்கே ஒவ்வொரு பாட்டின் முடிக்குஞ் சொல்லிலும் நிர்ப்பந்தமுடையதாயிற்று. ஆகவே இப்படி அதிசயம்மிகுந்த பிரபந்தமொன்று இதுவரை தோன்றியதுமில்லை, இனித் தோன்றவுங்காண முடியாது. திருவாய்மொழியின் பதிகங்களொவ்வொன்றிற்கும் உயிரான கருத்தை யெடுத்து அமைத்திருக்குமழகு பார்த்தாலோ அது நெஞ்சால் நினைப்பரிதால்.

இத்திவ்வியப் பிரபந்தமானது எவ்வளவு விரிவான வியாக்கியானத்தையும் கொள்ளும்; ஏனெனில், திருவாய்மொழியின் ஸாரமாக அமைந்த பிரபந்தமாதலால் அதில் அடங்கியுள்ள பொருள்கள் பெரும்பாலும் இதில் விவரிக்கத் தகுமாதலால். ஆனாலும் நெஞ்சில் எளிதாகத் தேக்கிக்கொள்ளவுரியதாம்படி பதவுரையும் பொழிப்புரையும் எழுதப்படுகின்றன.

ஸ்ரீ:
ஜீயர் திருவடிகளே சரணம்.

மணவாளமாமுனிகள் அருளிச்செய்த

# திருவாய்மொழி நூற்றந்தாதி

(ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய
பதவுரை பொழிப்புரையுடன் கூடியது.)

---

(தனியன்கள்.)

அல்லும்பகலு மனுபவிப்பார்தங்களுக்குச்
சொல்லும் பொருளுந் தொகுத்துரைத்தான்—நல்ல
மணவாளமாமுனிவன் மாறன்மறைக்குத்
தணவா நூற்றந்தாதி தான்.

அல்லும் பகலும் — இரவும் பகலுமாகிய எப்பொழுதும்
அனுபவிப்பார் தங்களுக்கு — (நெஞ்சு குளிரும்படி) அநுபவிக்க விரும்புமவர்கட்காக,
சொல்லும் பொருளும் — (இனிமையான) சொற்களையும் பொருள்களையும்
நல்ல மணவாள மாமுனிவன் தான் — நன்மைபொருந்திய மணவாள மாமுனிகள்
மாறன் மறைக்கு — நம்மாழ்வாருளிச்செய்த தமிழ்வேதமானதிருவாய் மொழிக்கு
தணவா நூற்றந்தாதி — மிகவும்பொருந்தின நூற்றந்தாதியை
தொகுத்து உரைத்தான் — ஸங்கிரகமாக அருளிச்செய்தார்.

*(இதுவே நமக்குத் தஞ்சமென்க.)

மன்னு புகழ்சேர் மணவாள மாமுனிவன்
தன்னருளா லுட்பொருள்கள்தன்னுடனே—சொன்ன
திருவாய் மொழிநூற்றந் தாதியாந் தேனை
ஒருவா தருந்துநெஞ்சே யுற்று.

நெஞ்சே — மனமே!
மன்னு புகழ் சேர் — நிலைபெற்ற கீர்த்தியையுடையரான
மணவாள மாமுனிவன்—;
தன் அருளால் — தமதுகிருபையினாலே
உள் பொருள்கள் தன்னுடனே — ஆழ்ந்த கருத்துக்கள் அமையும்படி
சொன்ன — அருளிச் செய்த
திருவாய்மொழி நூற்றந்தாதி ஆம் தேனை — திருவாய்மொழி நூற்றந்தாதியாகிற தேனை
ஒருவாது — இடைவிடாமல்
உற்று — ஊன்றி
அருந்து — பருகக்கடவை.

---

## பிரபந்தாரம்பம்

உயர்வே பரன்படியை உள்ளதெல்லாந்தான்கண்டு *
உயர்வேத நேர்கொண் டுரைத்து*—மயர்வேதும்
வாராமல் மானிடரைவாழ்விக்கும்மாறன்சொல் *
வேராகவே விளையும் வீடு. (௧)

| | | | |
|---|---|---|---|
| உயர்வு எய் | உயர்த்தி பொருந்திய | உரைத்து | அருளிச்செய்து, |
| பரன் | பரமபுருஷனுடைய | மயர்வு ஏதும் வாராமல் | சிறிது அஜ்ஞானமும் தலைகாட்டாதபடியாக |
| படி உள்ளதை எல்லாம் | ஸ்வரூப ஸ்வபாவங்களாயிருப்பவற்றை யடங்கலும் | மானிடரை | மனிதர்களை |
| தான் கண்டு | தாம் ஸாக்ஷாத்கரித்து | வாழ்விக்கும் | உஜ்ஜீவிப்பித்தருளின |
| உயர் வேதம் நேர் கொண்டு | உயர்ந்த ப்ரமாணமாகிய சுருதியின் சாயையாலே | மாறன் | நம்மாழ்வாருடைய |
| | | சொல் வேர் ஆக | ஸ்ரீஸூக்தியடியாக |
| | | வீடு விளையும் | மோக்ஷமுண்டாகும். |

* * *—முதல் திருவாய்மொழியில் எம்பெருமானுடைய பரத்துவம் பிரதிபாதிக்கப் பட்டது. "ஆமவை யாயவையாய் நின்றவவர்" என்றும் "முழுதுண்ட பரபரன்" என்றும் "அளிபொறையாய்நின்ற பரன்" என்றும் பரத்வமேயாயிற்று இதிற் சொன்னது.

மயர்வு ஏதும் வாராமல்—ஆழ்வாருடைய மயர்வை எம்பெருமான் போக்கினன்; ஸம்ஸாரிகளுடைய மயர்வை ஆழ்வார் போக்கினர் என்க. அடியோடு ஞானமே யில்லாமையும் ஒன்றை வேறொன்றாக அறிகையும், அதுவோ இதுவோவென்று ஸந்தேஹங்கொள்ளுதலும், தெரிந்ததை மறந்தொழிதலுமாகிற இவையெல்லாம் மயர்வு எனப்படும்; அதுமானிடர்க்கு வாராமல் ஸ்ரீஸூக்திகளைத் தந்தருளி ஆழ்வார் வாழ்வித்தாராயிற்று.

மாறன் சொல்வேராகவே விளையும் வீடு—வேர் இன்றி விருக்ஷம் கிளம்பாதவாறுபோல, ஆழ்வாருளிச்செயலின்றி மோக்ஷம் விளையாதென்று காட்டினபடி. (க)

வீடுசெய்து மற்றெவையும் மிக்கபுகழ் நாரணன்தாள் *
நாடு நலத்தாலடைய நன்குரைக்கும் *—நீடுபுகழ்
வண்குருகூர் மாறன் இந்த மாநிலத்தோர் தாம்வாழ *
பண்புடனே பாடியருள் பத்து. (உ)

| | | | |
|---|---|---|---|
| நீடு புகழ் | பெரும் புகழையுடையரும் | மற்று எவையும் | (பகவத்விஷயந்தவிர) மற்றெல்லாவற்றையும் |
| வண் குருகூர் | வளப்பத்தையுடைய திருநகரியில் திருவவதரித்தவருமான | வீடு செய்து | விட்டு |
| மாறன் | நம்மாழ்வார் | மிக்க புகழ் | மிகுந்த புகழுடைய |
| இந்த மா நிலத்தோர் தாம் | இப்பெரிய பூமியிலுள்ளவர்கள் | நாரணன் | நாராயணனது |
| வாழ | உஜ்ஜீவிப்பதற்காக | தாள் | திருவடிகளை |
| பண்புடனே | கிருபையுடனே | நாடு | உலகத்தாரெல்லாரும் |
| பாடி அருள் | பாடியருளின | நலத்தால் அடைய | பக்தியுடன் ஆச்ரயிக்குமாறு |
| பத்து | (வீடுமின் முற்றவுமென்று தொடங்கியுள்ள) பத்துப்பாசுரங்களானவை | நன்கு உரைக்கும் | நன்றாக உபதேசிக்கும். |

* * * எம்பெருமானைப் பஜிப்பதற்கு இடையூறும் அஹங்கார ஹேதுவாயுமுள்ள எல்லாவற்றையும்விட்டு, கல்யாணகுணங்கள் நிறைந்த ஸ்ரீமந்நாராயணனுடைய திருவடிகளை உலகம் முழுவதும் ஆச்ரயித்து உஜ்ஜீவிக்குமாறு நம்மாழ்வார் பரம கிருபையுடன் உபதேசித்த பதிகம் * வீடுமின் முற்றவுமென்பதாம் என்றவாறு. (உ)

பத்துடையோர்க் கென்றும் பரனெளிய னும்பிறப்பால் *
முத்திதரும் மாநிலத்தீர் மூண்டவன்பால் *—பத்திசெயு
மென்றுரைத்த மாறன்தனின சொல்லாற்போம் * நெடுகச்
சென்ற பிறப்பாமஞ்சிறை. (௩)

| | |
|---|---|
| பரன் | ஸர்வேச்வரன் |
| பத்துஉடையோர்க்கு | பக்திமான்களுக்கு |
| என்றும் | எந்நாளும் |
| பிறப்பால் | அவதாரத்தினல் |
| எளியன் ஆம் | ஸுலபனுவன் ; |
| முத்தி தரும் | மோக்ஷத்தையும் தந்தருளுவன் ; (ஆதலால், அவன் அவதரிப்பதற்குஉரிய) |
| மா நிலத்தீர் | (இந்தப்) பெரிய நிலவுலகத்திலுள்ளவர்களே ! |
| மூண்ட அன்பால் | கிளர்ந்தெழுந்த ப்ரேமத்துடனே |
| பத்தி செயும் | (அவன் பக்கலிலே) பக்தியைப் பண்ணுங்கோள்; |
| என்று உரைத்த | என்று உபதேசித்தருளின |
| மாறன் தன் | ஆழ்வாருடைய |
| இன் சொல்லால் | இனிமையான அருளிச்செயலான இத் திருவாய் மொழியினல் |
| நெடுக சென்ற பிறப்பு ஆம் அம் சிறை போம் | நீளமாகத் தொடர்ந்து வந்த பிறவியாகிய கடுஞ் சிறை நீங்கும். |

* * *—எம்பெருமான் பக்திமான்களுக்கு அவதரித்து எளியனும் முத்தியுமளிப்பானுகையாலே அவன்திறத்துப் பத்திபுரியுங்கோளென்று உபதேசித்த*பத்துடையடியவர் திருவாய்மொழியை அநுஸந்திக்கப்பெற்ருல் அநாதியான ஸம்ஸாரபந்தத்தில்நின்றும் வீடுபெறலாகுமென்ருராயிற்று. முத்தி—முக்தி. "மூண்டு அவன் பால்" என்றும் பிரிப்பாருளர். அவன் பால் அவகாஹித்து என்றபடி. (௩)

அஞ்சிறையபுட்கள்தமை ஆழியானுக்கு * நீர்
என்செயலைச் சொல்லு மெனவிரந்து *—விஞ்ச
நலங்கியதும்மாறனிங்கே நாயகனைத்தேடி *
மலங்கியதும் பத்தி வளம்.

| | |
|---|---|
| மாறன் | நம்மாழ்வார், |
| அம் சிறைய புட்கள் தமை | அழகியசிறகுகளை யுடைய (நாரை முதலிய) பறவைகளை நோக்கி |
| நீர் | 'நீங்கள் |
| ஆழியானுக்கு | க்ஷீராப்திநாதன் பக்கலிலே சென்று |
| என் செயலை | என் படியை |
| சொல்லும் | தெரிவியுங்கள்' |
| என | என்று |
| இரந்து | வேண்டிக்கொண்டு |
| விஞ்ச | மிகவும் |
| நலங்கியதும் | நலங்குலைந்ததும், |
| இங்கே | இந்நிலத்திலே |
| நாயகனை | நாயகனுன எம்பெருமானை |
| தேடி | தேடி |
| மலங்கியதும் | நிலைதளும்பியதும் |
| பத்தி வளம் | பக்தியின் பெருமையாகும். |

* * *—இப்பாசுரத்தினல், * அஞ்சிறையமடநாராய் என்னு மித்திருவாய்மொழியின் ப்ரமேயத்தையும், இத் திருவாய்மொழியில் ஆழ்வார் பெண்ணிலைமை யெய்தித் தூதுவிட்டமைக்கு உரிய உபபத்தியையும் சேர்த்து அருளிச் செய்தாராயிற்று. (௪)

வளமிக்க மால்பெருமை மன்னுயிரின் தண்மை *
உளமுற்றங் கூடுருவ வோர்ந்து *—தளர்வுற்று
நீங்கநினைமாறனைமால் நீடிலகுசீலத்தால் *
பாங்குடனே சேர்த்தான் பரிந்து. (௫)

| | | | |
|---|---|---|---|
| வளம் மிக்க | செல்வத்தால் மிகுந்த | நீங்க நினை | (எம்பெருமானை விட்டு) நீங்க வேணுமென நினைத்த |
| மால் | எம்பெருமானுடைய | மாறனை | ஆழ்வாரை |
| பெருமை | (நித்யஸூரிநாதத்வம் முதலிய) பெருமையும் | மால் | ஸர்வேச்வரன் |
| மன் உயிரின் | ஆத்மாவினுடைய | நீடு இலகு சீலத்தால் | நெடுகி விளங்குவதான (தனது) சீலகுணத்தினால் |
| தண்மை | நைச்சியமும் | பரிந்து | ஸ்நேஹித்து |
| உளம் உற்று | திருவுள்ளத்தில்பட, | பாங்குடனே | நன்றாக |
| அங்கு | அப்போது | சேர்த்தான் | அணைத்துக்கொண்டான் |
| ஊடுருவ ஓர்ந்து | உட்புகுந்து ஆராய்ச்சி செய்து | | |
| தளர்வுற்று | தளர்ந்து | | |

*** 'பெருமையில் தலைநின்ற அப்பெருமானைச் சிறுமையில் தலைநின்ற நாமோ அணுகுவது' என்று தளர்ச்சியுண்டாகி எம்பெருமானைவிட்டு நீங்கப்பார்த்தார் ஆழ்வார்; அப்போது அவர்க்கு எம்பெருமான் தனது சிறந்த சீலகுணத்தைக் காட்ட, அந்த குணத்திலீடுபட்டு ஆழ்வார் எம்பெருமானோடு பொருந்தினபடியைப் பேசின * வளவேழுலகு திருவாய்மொழியின் ப்ரமேயத்தை இப்பாட்டினால் வெளியிட்டாயிற்று

உளமுற்று—எச்சத்திரிபு; உளமுற என்றபடி. "சொல் திரியினும் பொருள்திரியா வினைக்குறை." ... ... .... .... (ரு)

பரிவதி லீசன்படியைப் பண்புடனே பேசி *
அரியனல் ராதனைக் கென்று * — உரிமையுடன்
ஓதியருள் மாறன் ஒழிவித்தா னிவ்வுலகில் *
பேதையர்கள் தங்கள் பிறப்பு. * (சா)

| | | | |
|---|---|---|---|
| பரிவது இல் | ஹேயகுணமற்றவனான | உரிமையுடன் | ஔசித்யத்தோடு |
| ஈசன் | எம்பெருமானுடைய | ஓதி அருள் | அருளிச்செய்த |
| படியை | (ஆராதிப்பதற்கு எளியன் என்கிற) ப்ரகாரத்தை | மாறன் | நம்மாழ்வார் |
| பண்புடனே பேசி | அழகாக அருளிச்செய்து | இ உலகில் | இவ்வுலகத்திலுள்ள |
| ஆராதனைக்கு அரியன் அலன் என்று | (அவன்) ஆராதிப்பதற்கு அருமையானவனல்லன் என்று (இவ்விஷயத்தை) | பேதையர்கள் தங்கள் | பாமரர்களினுடைய |
| | | பிறப்பு | பிறவியை |
| | | ஒழிவித்தான் | தொலைத்திட்டார். |

*** ஸர்வேச்வரன் அவாப்த ஸமஸ்தகாமனாகையாலே நாம் இட்டதுகொண்டு நிறைய வேண்டியவனல்லனாதலால் அன்போடு நாம் இடுவது அணுவளவேயாயினும் அதுதன்னையே கொண்டு பரம த்ருப்தியடைகிறானென்பதைத் தெரிவிக்கின்ற முகத்தால் எம்பெருமானுடைய ஆராதநஸௌகர்யத்தைஆழ்வார் * பரிவதிலீசனையென்னும் திருவாய்மொழியிலருளிச்செய்து இத்தகைய திருவாய்மொழியை உபகரித்தவதனால்நம் போன்ற அறிவிலிகளின் பிறவித்துன்பத்தையும் போக்கியருளினாராயிற்று என்பதாம். .... .... .... .... .... .... .... (சா)

பிறவியற்று நீள்விசும்பில் பேரின்ப முய்க்கும் *
திறமளிக்குஞ் சீலத் திருமால் * —அறவினியன்
பற்றுமவர்க் கென்று பகர்மாறன் பாதமே *
உற்றதுணை யென்றுளமே யோடு. (எ)

| | | | |
|---|---|---|---|
| உளமே | நெஞ்சே | பற்றுமவர்க்கு | தன்னைவந்துபணியுமவர்கட்கு |
| பிறவி அற்று | ஜந்மஸம்பந்தமற்று | அற இனியன் என்று | மிகவும் போக்யனாயிருப்பனென்று |
| நீள் விசும்பில் | பரமாகாசமென்கிற பரமபதத்தில் | பகர் | அருளிச்செய்த |
| பேர் இன்பம் உய்க்கும் திறம் | பரமாநந்த மநுபவிக்குந் திறத்தை | மாறன் | நம்மாழ்வாருடைய |
| அளிக்கும் சீலம் | அநுக்ரஹிக்கவல்ல ஸ்வபாவமுடைய | பாதமே | திருவடிகளே |
| திருமால் | எம்பெருமான் | உற்ற துணை என்று | (நமக்கு) ப்ராப்தமான துணையென்றுகொண்டு |
| | | ஓடு | விரைந்து சென்று பணி. |

* * *—ஸம்ஸாரஸம்பந்தத்தையறுத்துத் திருநாட்டில் நித்யாநந்தமநுபவிக்கப் பெறுவதான பேற்றையளிக்கவல்ல எம்பெருமானுடைய ஆச்ரயணமானது வருத்தமாக இராமல் மிகவும் இனிதாகவேயிருக்குமென்று ஆச்ரயணத்தின் போக்யதையை * பிறவித்துயரற திருவாய்மொழியிலே யருளிச்செய்த ஆழ்வாருடைய திருவடிகளே நமக்குத் தஞ்சமென்றதாயிற்று. (எ)

ஓடுமனஞ் செய்கையுரை ஒன்றிநில்லாதாருடனே *
கூடிநெடுமா லடிமைகொள்ளுநிலை *—நாடறிய
ஓர்ந்தவன்றன் செம்மை உரைசெய்த மாறனென *
ஏய்ந்துநிற்கும் வாழ்வா மிவை. (அ)

| | | | |
|---|---|---|---|
| ஓடும் | இதரவிஷயங்களில்விரைந்து ஓடுகின்ற | அடிமைகொள்ளும் நிலை | அடிமைகொள்ளுங் குணத்தை |
| மனம் | நெஞ்சும் | நாடு அறிய | நாட்டார் அறியுமாறு |
| செய்கை | காயமும் | ஓர்ந்து | ஆராய்ந்து |
| உரை | வாக்கும் (ஆகிய இவை) | அவன் தன் செம்மை | அப்பெருமானுடைய ருஜுத்வ குணத்தை |
| ஒன்றி நில்லாதாருடனே | ஒருவழிப்பட்டு நிற்கப் பெறாத கோணல் பொருந்திய ஸம்ஸாரிகளோடு | உரைசெய்த | அருளிச்செய்த |
| | | மாறன் என | ஆழ்வார் என்று அநுஸந்தித்தவளவிலே |
| கூடி | சேர்ந்து | வாழ்வு ஆம் இவை | ஸ்வரூபாநுரூபமான வாழ்ச்சிகள் |
| நெடுமால் | ஸர்வேச்வரன் | ஏய்ந்து நிற்கும் | பொருந்தி நிலைநிற்கும். |

* * * எம்பெருமானை ஆச்ரயிக்குமவர்கள் மனமொழிமெய்களில் வேறுபாடுடையவர்களாகிச் செவ்வைக் கேடரான ஸம்ஸாரிகளாகையாலே அவர்களோடு பரிமாறுவது எம்பெருமானுக்கு இயலுமோ என்கிற சங்கை நீங்குமாறு, நீர் ஏறாத மேடுகளிலே எதையேனுஞ் செய்து நீரேற்றுமாபோலே இவர்களுடைய செவ்வைக்கேடு தானே தனக்குச் செவ்வையாம்படி அவர்களோடேகூடிப்பரிமாறும் ருஜுத்வகுணத்தை * ஓடும்புள் திருவாய்மொழிமுகத்தாலே வெளியிட்டருளின நம்மாழ்வாரை அநுஸந்திக்கவே நமது வாழ்ச்சி நிலைநிற்குமென்கை. (அ)

இவையறிந்தோர் தம்மளவில் ஈசனுவந்தாற்ற *
அவயவங்கள்தோறுமணையுஞ்—சுவையதனைப்
பெற்று * ஆர்வத்தால் மாறன் பேசினசொல்பேச * மால்
பொற்றாள் நஞ்சென்னி பொரும். (௯)

| | | | |
|---|---|---|---|
| இவை | கீழ்த்திருவாய்மொழிகளில் அநுபவிக்கப்பட்ட திருக்குணங்களை | அறிந்தோர் தம் அளவில் | அறிந்தவர்களின்பக்கலில் |
| | | ஈசன் | எம்பெருமான் |
| | | உவந்து | திருவுள்ளமுவந்து |

| | | | |
|---|---|---|---|
| ஆற்ற | பொறுக்கப்பொறுக்க | மாறன் | ஆழ்வார் |
| அவயவங்கள் தோறும் | (ஒவ்வொரு அவயவமாக) எல்லா அவயவங்களிலும் | பேசின | அருளிச்செய்த |
| அணையும் | வந்து சேர்ந்ததனாலுண்டான | சொல் | (இந்தத் திருவாய்மொழியாகிற) ஸ்ரீஸூக்தியை |
| | | பேச | (நாம்) உச்சரிக்க |
| சுவை அதனை | ரஸத்தை | மால் | ஸர்வேச்வரனுடைய |
| பெற்று | அடைந்து | பொன் தாள் | அழகிய திருவடிகள் |
| ஆர்வத்தால் | (அங்ஙனம் அடைந்த) இனிமையினால் | நம் சென்னி | நமது தலைமீது |
| | | பொரும் | வந்துசேரும். |

* * * —இவை என்றது கீழ் ஒவ்வொரு திருவாய்மொழியிலும் அநுபவித்த குணங்களேயாம். பரத்வம், பஜநீயத்வம், ஸௌலப்யம், அபராதஸஹத்வம், ஸௌசீல்யம், ஆராதனைக்கெளிமை, பரமபோக்யதை, ருஜுத்வம் என்கிற திருக்குணங்கள் கீழ்த்திருவாய்மொழிகளில் முறையே ஆழ்வாரால் அநுபவிக்கப்பட்டன வாதலால் அக்குணங்களை இவை என்று நிர்த்தேசிக்கிறபடி. அக்குணங்களை அறியுமவர்கள் திறத்திலே எம்பெருமான் ஸந்துஷ்டனாய்ப் பொறுக்கப் பொறுக்க ஸகல அவயவங்களிலும் ஸம்ச்லேஷிப்பன் என்றுஒன்றுண்டே, அப்பேற்றை ஆழ்வார்பெற்று அதனாலுடண்டான ஆனந்தம் புறவெள்ளமிட்ட சொல்லாகிய *இவையுமவையும் திருவாய்மொழியை ஓதுவாரது சென்னித்திடரில் ஸர்வேச்வரனுடைய திருவடிகள்வந்து சேருமென்றாராயிற்று.

“இவையறிந்து ஓர்தம்மளவில்” எனப்பிரித்து இவற்றையறிந்து ஓர்கின்ற [ஆராய்ச்சி செய்கின்ற] தம்மளவிலே என்று முரைப்பாருளர். (கூ)

பொருமாழி சங்குடையோன் பூதலத்தே வந்து *
தருமாறோ ரேதுவறத் தன்னை *—திரமாகப்
பார்த்துரைசெய் மாறன் பதம்பணிக வென்சென்னி *
வாழ்த்திடுக வென்னுடைய வாய். (ய)

| | | | |
|---|---|---|---|
| பொரும் | (பகைவர்மீது) போர் புரியாநிற்கிற | | |
| ஆழி | திருவாழியையும் | திரம் ஆக | ஸ்திரமாக |
| சங்கு | சங்கையும் | பார்த்து | ஸாக்ஷாத்கரித்து |
| உடையோன் | (திருக்கையில்) உடைய எம்பெருமான் | உரை செய் | அருளிச்செய்த |
| | | மாறன் | ஆழ்வாருடைய |
| பூதலத்தே வந்து | இப்பூமியில் வந்தவதரித்து | பதம் | திருவடிகளை |
| | | என் சென்னி | என்தலை |
| ஓர் ஏது அற | ஒரு ஹேதுவுமில்லாமல் [நிர்ஹேதுகமாக] | பணிக | வணங்குக; |
| | | என்னுடைய வாய் | எனது வாக்கானது |
| தன்னை தரும் ஆறு | (அடியார்க்குத்) தன்னை (அநுபவிக்க)த்தருகிற படியை | வாழ்த்திடுக | (அத்திருவடிகளுக்கே) மங்களாசாஸனஞ்செய்க. |

* * * கீழ்த்திருவாய்மொழியில் எம்பெருமான் வந்து ஸர்வாங்க ஸம்ச்லேஷம் செய்தருளினபடியை அநுஸந்தித்த ஆழ்வார் ‘இப்பேற்றுக்குத்தகுதியாக நம்மால் செய்யக்கூடிய உபாயாம்சம்உண்டோ?’ என்று ஆராய்ந்துபார்த்தவளவில் ஒரு ஸாதநமுமின்றியே நிர்ஹேதுகமாக விசேஷகடாக்ஷஞ் செய்தருள்வதே எம்பெருமானுடைய இயல்வு என்பதைக்கண்டறிந்து அவ்விஷயத்தைப் * பொருமா நீள்படை யென்னுந் திருவாய்மொழியிலருளிச்செய்தா ரென்றதாயிற்று.

(ய)

வாயுந்திருமால் மறையநிற்க * ஆற்றாமை
போய்விஞ்சி மிக்க புலம்புதலாய் * — ஆய
அறியாதவற்றோ டணைந்தழுத மாறன் *
செறிவாரை நோக்குந் திணிந்து.

| | | | |
|---|---|---|---|
| வாயும் | (அடியார் அநுபவிக்கலாம்படி) கிட்டுகையையே ஸ்வபாவமாகவுடைய | ஆய அறியாதவற்றோடு | (அசேதனங்களாகையாலே தம்முடைய துக்கத்தை) ஆராய அறியாதவற்றை |
| திரு மால் | ச்ரிய:பதியான எம்பெருமான் | அணைந்து | கட்டிக்கொண்டு |
| மறைய நிற்க | (கண்ணுக்குப் புலப்படாமல் பிரிந்து) மறைந்திருக்க (அதனாலே) | அழுத | (அவற்றை ஸமதுக்கிகளாகக்கொண்டு) அழுத |
| | | மாறன் | ஆழ்வார் |
| ஆற்றாமை போய் விஞ்சி | சோகம் அதிகரித்து | செறிவாரை | தம்மை வந்து பணியுமவர்களை |
| மிக்க புலம்புதல் ஆய் | மிகவும் அழும்படியான நிலைமை நேர்ந்து | திணிந்து நோக்கும் | திடமாகக் கடாக்ஷித்தருள்வர். |

* * *—மேன்மை நீர்மை வடிவழகு ஆகிய மூன்றும் குறைவின்றியே உண்டாய், அவதாரத்தில் பிற்பட்டவர்களு மிழக்கவேண்டாதபடி முகங்கொடுத்துக்கொண்டு நிற்கிற ஸ்தலமான அர்ச்சாவதார நிலங்களுட் சிறந்ததான திருக்குறுங்குடியிலே அநுபவிக்கஆசைப்பட்டுக் கிடையாமையாலே கண்ணுஞ்சுழலையிட்டு, நாரை அன்றில் கடல் வாடை வானம் மதி இருள் கழி விளக்கு முதலான உலகப் பொருள்களும் தம்மைப்போலே பகவத் விரஹத்தாலே நோவுபடுகிறனவாகக்கொண்டு அவற்றுக்குமாகத் தாம் நோவுபட்டுச் செல்லுகிறபடியைப் பேசினது * வாயுந்திரையுகளு மென்கிற திருவாய்மொழி. இங்ஙனம் விலக்ஷணமான நிலைமையையடைந்த நம்மாழ்வார் அடியார்களை பகவத் விச்லேஷம் நேராதபடி பரிபூர்ண கடாக்ஷஞ் செய்தருள்வ ரென்றதாயிற்று. (சுக)

திண்ணிதா மாறன் திருமால் பரத்துவத்தை *
நண்ணி யவதாரத்தே நன்குரைத்த—* வண்ணமறிந்து
அற்றார்கள் யாவர் அவரடிக்கே யாங்கவர்பால் *
உற்றாரை மேலிடாதூன்.

| | | | |
|---|---|---|---|
| மாறன் | நம்மாழ்வார் | அறிந்து | தெரிந்துகொண்டு |
| திருமால் பரத்துவத்தை | எம்பெருமானுடைய பரத்வத்தை | அவர் அடிக்கே | அவ்வாழ்வார் திருவடியிலேயே |
| அவதாரத்தே நண்ணி | அவதாரத்தில் அநுபவித்து | அற்றார்கள் யாவர் | ஈடுபட்டிருப்பார் யாவரோ, |
| திண்ணிது ஆ | திடமாகவும் | அவர்பால் உற்றாரை | அவர்களிடத்தில் பணிந்திருப்பவர்களை |
| நன்கு | நன்றாகவும் | | |
| உரைத்த | அருளிச்செய்த | ஊன் | தேஹஸம்பந்தம் |
| வண்ணம் | ரீதியை | மேலிடாது | சேராது |

* * *—திண்ணன்வீட்டுப்பதிகத்தில் ஆழ்வாரருளிசெய்த பகவத் பரத்வத்தை அறிந்து ஈடுபட்டிருப்பவர்களுடைய ஸம்பந்த ஸம்பந்திகளும் வாழப்பெறுவர் என்கிறது. "திண்ணிதாம் மாறன்" என்று பிரித்து மாறனுக்கு விசேஷணமாக்கியுரைப்பாருமுளர். பரத்வே பரத்வவிஷயமான * உயர்வற வுயர்நலத்திற் காட்டில் இத்திருவாய்மொழிக்குண்டான வாசி விளங்குதற்கு 'அவதாரத்தேநண்ணி' என்றார். விபவாவதாரங்களிற் பொலிந்த பரத்வத்தைப் பேசினது * திண்ணன்வீட்டுப்பதிகமென்க. ஆங்கு—அசை. "அவரடிக்கே அற்றார்கள் யாவர் என்று, கொண்டுகூட்டுப்பொருள்கோள்.

ஊனமறவேவந்து உலகளந்த மாலினிமை
யானது * அனுபவித்தற்காந்துணையா *— வானில்
அடியார் குழாங்கூட ஆசையுற்ற மாறன் *
அடியாருடன் நெஞ்சே யாடு. (கரு)

| | | | |
|---|---|---|---|
| நெஞ்சே | மனமே!; | வானில் | பரமபதத்திலுள்ள |
| ஊனம் அற வந்து | குறையற வந்து | அடியார் | அடியவர்களான நித்ய முக்தர்களினுடைய |
| உள் கலந்த | அந்தரங்கமாகக்கலந்த | குழாம் | கோஷ்டியிலே |
| மால் | ஸர்வேச்வரனுடைய | கூட | அந்வயிக்க |
| இனிமை ஆனது | கலவியின்பத்தை | ஆசை உற்ற | குதூஹலங்கொண்ட |
| அனுபவித்தற்கு | அனுபவிப்பதற்கு | மாறன் | நம்மாழ்வாருடைய |
| ஆம் துணை ஆ | அநுகூலமான ஸஹவாஸம் அபேக்ஷிதமாக, | அடியாருடன் | பக்தர்களோடே கூடி |
| | | ஆடு | அநுபவிக்கப்பார். |

* * *—இத்திருவாய்மொழியில், ஆழ்வார்தம்மோடே ஏகதத்துவமென்னும்படி எம்பெருமான் ஸம்ச்லேஷிக்க, அதனால் பரமானந்தம் பொலியநின்ற ஆழ்வார் அந்த எம்பெருமானது பரம போக்யதையைத் தனியே அநுபவித்து த்ருப்திபெறமாட்டாமல் உசாத்துணைவேண்டிப் பரமபதத்தில் நித்ய முக்தர்களுடைய திரளோடே அந்வயிக்கப்பெறவேணுமென்று ஆசை கொண்டார் ; அன்னவரது பக்தர்களுடனே நெஞ்சே! நீ கூடிக் களிப்பாயாக—என்றாராயிற்று. .... .... .... .... .... .... ....(கரு)

ஆடிமகிழ் வானில் அடியார்குழாங்களுடன் *
கூடியின்பமெய்தாக் குறையதனால் *—வாடிமிக
அன்புற்றார் தம்நிலைமை ஆய்ந்துரைக்க மோகித்து *
துன்புற்றான் மாறனந்தோ. (கச)

| | | | |
|---|---|---|---|
| மாறன் | ஆழ்வார் | அன்பு உற்றார் | அன்பர்களான ஸ்ரீமதுரகவி போல்வார் |
| ஆடி மகிழ் வானில் | (நிரந்தர பகவதநுபவத்தாலே) கூத்தாடிக் களிக்குமிடமான பரமபதத்தில் | ஆய்ந்து உரைக்க | ஆராய்ந்து சொல்லும் படியாக [அதாவது; தம் வாயாற் சொல்லுகிற பாசுர மன்றியே வேற்று வாயாற்சொல்லுகிற பாசுரமாம்படியாக] |
| அடியார் குழாங்களுடன் | (நித்ய முக்தர்களாகிற) அடியார்களின் திரளோடே | | |
| கூடி | கலந்து | | |
| இன்பம் எய்தா குறை அதனால் | ஆனந்திக்கப்பெறாத குறையினாலே | மோகித்து | மோஹமடைந்து |
| மிக வாடி | மிகவும் வாட்டமடைந்து | துன்புற்றான் | துக்கித்தார்; |
| தம் நிலைமை | (அப்படிப்பட்ட) தமது நிலைமையை | அந்தோ | ஐயோ!. |

* * * கீழ்த்திருவாய்மொழியில் “ அடியார்கள் குழாங்களை உடன் கூடுவதென்றுகொலோ” என்று பாரித்த ஆழ்வார் அவ்வண்ணமாகவே பரமபதத்தில் நித்யமுக்தர் திரளிலே சென்றுசேர்ந்து அநுபவிக்கப்பெறாத குறையினாலே மோஹமடைந்தார் ; அந்த மோஹம்

எப்படிப்பட்டதென்னில் தம் வாயாலே பாசுரம் பேசவொண்ணுமே தாய்ப் பாசுரமாக வேற்றுவாயாலே பேசலாம்படியாயிற்று. அப்படிப்பட்ட வ்யஸநம் * ஆடியாடியென்கிற திருவாய்மொழியிலே நிகழ்ந்தது—என்றதாயிற்று. (கச)

அந்தாமத் தன்பால் அடியார்களோ டிறைவன்*
வந்தாரத் தான்கலந்த வண்மையினால்*—சந்தாபந்
தீர்ந்த சடகோபன் திருவடிக்கே நெஞ்சமே*
வாய்ந்தவன்பை நாடோறும் வை. (கரு)

| | | | |
|---|---|---|---|
| நெஞ்சமே | மனமே! | ஆர கலந்த வண்மையினால் | பரிபூர்ண ஸம்ச்லேஷம் தந்தஔதார்யத்தினால் |
| அம் தாமத்து அன்பால் | ஸ்ரீ வைகுண்டத்திற் பண்ணும் விருப்பத்தோடே | சந்தாபம் தீர்ந்த | தாபம் நீங்கப்பெற்ற |
| | | சடகோபன் | ஆழ்வாருடைய |
| அடியார்களோடு வந்து | (அஸ்த்ர பூஷணாதிகளாயுள்ள) நித்ய ஸூரிகளோடு கூடி (ப்பரமபதத்தினின்றும்)வந்து | திரு அடிக்கே | திருவடிகளிலேயே |
| | | வாய்ந்த அன்பை | பொருத்தமான பக்தியை |
| | | நாள் தோறும் வை | எப்போதும் செலுத்துவாயாக. |
| இறைவன் தான் | எம்பெருமான் | | |

*** திருநாட்டிலுள்ள நித்யஸூரிகளோடே கூடி அநுபவிக்கவேணுமென்று பாரித்த ஆழ்வாருடைய மனோரதத்தை ஒருவாறு தீர்க்கநினைத்த எம்பெருமான் பரமபதத்தில் தனக்குள்ள விருப்பத்தை ஆழ்வார்பக்கலிலேபண்ணி, திவ்யாபரண திவ்யாயுதங்களாகிற நித்யஸூரிகளோடே தானே இந்நிலத்தில் திருநகரியேற எழுந்தருளி ஸம்ச்லேஷரஸம்தந் தருளினபடியை *அந்தாமத்தன்புபதிகத்தாலே பேசி வருத்தம் தீரப்பெற்ற ஆழ்வாருடைய திருவடிகளிலேயே பக்தி பண்ணுமாறு திருவுள்ளத்திற்கு உரைத்தாராயிற்று. (கரு)

வைகுந்தன் வந்து கலந்ததற்பின் வாழ்மாறன்*
செய்கின்ற நைச்சியத்தைச் சிந்தித்து*—நைகின்ற
தன்மைதனைக் கண்டுன்னைத் தான்விடே னென்றுரைக்க*
வன்மை யடைந்தான் கேசவன். (கசு)

| | | | |
|---|---|---|---|
| வைகுந்தன் | பரமபத நாதனான எம்பெருமான் | சிந்தித்து | (எம்பெருமான்) விசாரமடைந்து |
| வந்து கலந்ததற்பின் | வந்து (தம்முடன்) கலந்த பிறகு | நைகின்ற தன்மை தனை கண்டு | சிதிலனாகிறபடியைப் பார்த்து |
| வாழ் | ஸத்தை பெற்ற | | |
| மாறன் | ஆழ்வார் | உன்னை விடேன் என்று உரைக்க | 'உன்னை நான் விடமாட்டேன் (ஆதலால் கவலைப்படவேண்டா)' என்று தெரிவிக்க |
| செய்கின்ற | செய்கிற | | |
| நைச்சியத்தை | நைச்யாநுஸந்தானத்தைக் குறித்து | கேசவன் தான் | எம்பெருமான் |
| | | வன்மை அடைந்தான் | (கவலைநீங்கி) நிலைபெற்று நின்றான் |

*** ஆடியாடி யென்கிற திருவாய்மொழியிலே பட்ட வ்யஸநம் தீர * அந்தாமத்தன்பில் எம்பெருமான் வந்து ஸம்ச்லேஷிக்க அதனால் துயர் தீர்ந்து வாழ்ந்த ஆழ்வார் "அல்லாவி" என்றும் "என் முடிவு காணாதே" என்றும் நைச்யாநுஸந்தாநப்ரஸக்தி பண்ண, அது கண்ட எம்பெருமான் 'இவர் நம்மைவிட்டு அகன்றுபோவர்போலிருக்கிறதே!' என்று அதிசங்கைகொள்ள' அஃதறிந்த ஆழ்வார் 'பிரானே! உன்னை யொருநாளும் விடமாட்டேன்' என்றுஉறுதியாகக் கூற அது கேட்டு எம்பெருமான் கவலை தீர்ந்தானான் *வைகுந்தாமணிவண்ணனில். (கசு)

கேசவனு லென்தமர்கள் கீழ்மே லெழுபிறப்பும்*
தேசடைந்தா ரென்று சிறந்துரைத்த*—வீசுபுகழ்
மாறன் மலரடியே மன்னுயிர்க்கெல்லா முய்கைக்கு*
ஆறென்று நெஞ்சே யணை. (கஎ)

| | | | |
|---|---|---|---|
| நெஞ்சே | மனமே! | வீசு புகழ் | எங்கும் பரவிய புகழை யுடையருமான |
| என் தமர்கள் | என்னைச் சேர்ந்தவர்களான | மாறன் | ஆழ்வாருடைய |
| கீழ் மேல் எழு பிறப்பும் | கீழும் மேலுமுண்டான ஸம்பந்தி ஸம்பந்திகள் வரையிலும் | மலர் அடியே | திருவடித்தாமரைகளே |
| கேசவனால் | 'எம்பெருமானாலே | மன் உயிர்க்கு எல்லாம் | நிலை நின்ற ஆத்மாக்களுக்கெல்லாம் |
| தேசு அடைந்தார் என்று | வீறு பெற்றார்கள்' என்று | உய்கைக்கு ஆறு என்று | உஜ்ஜீவநோபாய மென்று கொண்டு |
| சிறந்து உரைத்த, | நன்றாக அருளிச் செய்தவரும் | அணை | (அத்திருவடிகளை) ஆச்ரயிப்பாயாக. |

***இருபத்தொரு தலைமுறை யளவாகவுள்ள என்னைச் சேர்ந்தவர்கள் யாவரும் எம்பெருமானாலே விஷயீ கரிக்கப் பெற்று வீறு பெற்றார்களாயினர் என்று* கேசவன்தமரில் நன்கு அருளிச்செய்த ஆழ்வாருடைய திருவடிகளே யாவர்க்கும் உய்வுபாயம் என்றதாயிற்று. (கஎ)

அணைந்தவர்கள் தம்முடனே ஆயனருட்காளாம்*
குணந்தனையே கொண்டுலகைக்கூட்ட*—இணங்கிமிக
மாசிலுபதேசம்செய் மாறன் மலரடியே*
வீசுபுகழெம்மா வீடு (கஅ)

| | | | |
|---|---|---|---|
| தம்முடனே அணைந்தவர்கள் | தம்மோடு ஸம்பந்தஸம்பந்தம் பெற்றவர்களுங்கூட | மிக இணங்கி | பாசவும் பொருந்தி |
| | | மாசு இல் உபதேசம் செய் | குற்றமற்ற உபதேசத்தைச் செய்தருளின |
| ஆயன் அருட்கு | எம்பெருமானுடைய திருவருளுக்கு | மாறன் | ஆழ்வாருடைய |
| | | மலர் அடியே | பாதாரவிந்தமே |
| ஆள் ஆம் | இலக்காகும்படியான | வீசு புகழ் | எங்கும் பரவிய புகழையுடையதாய் |
| குணம் தனையே கொண்டு | குணத்தையே பற்றாசாகக்கொண்டு | | |
| உலகை | ஸம்ஸாரி லோகத்தை | எம் மா வீடு | எல்லாப் படியாலும் மேன்மையுடையதான மோக்ஷம். |
| கூட்ட | எம்பெருமானோடுசேர்க்க | | |

***ஆழ்வார், தம்முடைய ஸம்பந்த ஸம்பந்திகளும் எம்பெருமானுடைய விஷயீகாரத்திற்கு இலக்காகி உஜ்ஜீவிக்கப் பெறுகிறபடியைக்கண்டு, எல்லா ஸம்ஸாரிகளையும் நம்மோடே சேர்த்துக்கொள்வோமென்று ஆசைப்பட்டவராய் அந்தஸம்ஸாரிகளுக்கு நல்லஉபதேசங்களைச் செய்தருளினர் * அணைவதரவணைத் திருவாய்மொழியில். அவருடைய திருவடிகளின் கீழ் வாழ்வதே நமக்கு மோக்ஷ புருஷார்த்தம்; அன்றி, வேறு கிடையாது என்றாராயிற்று (கஅ)

எம்மாவீடும் வேண்டா என்றனக்குன் தாளிணையே*
அம்மா அமையுமென வாய்ந்துரைத்த*—நம்முடைய
வாழ்முதலாம் மாறன் மலர்த்தா ளிணைசூடி.*
கீழ்மையற்று நெஞ்சே கிளர். (கசு)

| | |
|---|---|
| அம்மா | 'எம்பெருமானே!' |
| எம் மா வீடும் வேண்டா | எப்படிப்பட்ட சிறந்த மோக்ஷமும் வேண்டா |
| என் தனக்கு | அடியேனுக்கு |
| உன் தாள் இணையே | உன்னுடைய உபய பாதங்களே |
| அமையும் | போதும்' |
| என | என்று |
| ஆய்ந்து உரைத்த | ஆராய்ந்து அருளிச் செய்தவரும் |
| நம்முடைய வாழ் முதல் ஆம் மாறன் | நம்முடைய வாழ்ச்சிக்குக் காரணபூதருமான ஆழ்வாருடைய |
| மலர் தாள் இணை | உபயபாதாரவிந்தங்களை |
| சூடி | சிரஸா வஹித்து |
| கீழ்மை அற்று | அதம புருஷார்த்தங்களில் விருப்பமற்று |
| நெஞ்சே | மனமே! |
| கிளர் | மேன்மேலும் மகிழ்வாயாக |

* * * எம்பெருமானே! உன்னுடைய திருவடித் தாமரைகள் எப்போதும் என்னுடைய சென்னியை விட்டுப் போராதபடி யிருக்கப்பெறுமாகில் அதுவே யெனக்குப் பரம புருஷார்த்தம். வேறு எப்படிப்பட்ட மோக்ஷமும் எனக்கு வேண்டா என்று நிஷ்கர்ஷித்து * எம்மாவீட்டுப்பதிகம் அருளிச் செய்தவரும் நம்முடைய உஜ்ஜீவனத்திற்காகவே திருவவதரித்தவருமான ஆழ்வாருடைய திருவடிகளே நமக்குத் தஞ்சம்; அந்தத் திருவடிகளின் கீழ் நாம் வாழப் பெறுவோமாகில் நமக்கு யாதொரு குறையுமிராது என்றதாயிற்று. (க௯)

கிளரொளிசேர் கீழுரைத்த பேறு கிடைக்க *
வளரொளிமால் சோலை மலைக்கே *— தளர்வறவே
நெஞ்சைவைத்துச் சேருமெனும் நீடுபுகழ் மாறன்தாள் *
முன் செலுத்துவோமெம் முடி. (உ௰)

| | |
|---|---|
| கிளர் ஒளி சேர் | அதிசயமான மேன்மை பொருந்தியதும் |
| கீழ் உரைத்த | கீழ்த்திருவாய்மொழியில் சொல்லப்பட்டதுமான |
| பேறு | புருஷார்த்தம் |
| கிடைக்க | கிடைப்பதற்காக, |
| வளர் ஒளி | மேன்மேலும் வளர்ந்து வருகின்ற ஒளியையுடையதான |
| மால் சோலை மலைக்கே | திருமாலிருஞ் சோலை மலைக்கே |
| தளர்வு அறவே | தளர்ச்சியில்லாமல் திடமாக |
| நெஞ்சை வைத்து | மநஸ்ஸை வைத்து |
| சேரும் எனும் | போய்ச்சேருங்கள் என்று உபதேசித்த |
| நீடு புகழ் மாறன் | மஹா யசஸ்வியான ஆழ்வாருடைய |
| தாள் முன் | திருவடிகளின் முன்பே |
| எம் முடி | எமது தலையை |
| செலுத்துவோம் | ஸமர்ப்பிப்போமாக |

* * * எம்மாவீடென்கிற கீழ்த்திருவாய்மொழியில் நிஷ்கர்ஷிக்கப்பட்ட கைங்கரியமாகிற பரம புருஷார்த்தம் கிடைக்கவேணுமென்கிற நசையுடையீர்! அதற்காக வேறொரு தேச விசேஷம் தேடிப்போகவேண்டா; இந்நிலத்திலேயே பரம விலக்ஷணமான திருமாலிருஞ்சோலை மலையிலே எல்லா அடிமைகளுங் கொள்வானாக அப் பெருமானெழுந்தருளி நித்ய ஸந்நிதி பண்ணியிருக்கிறானாகையாலே அத்திருமலையில்தானே சென்று சேர்ந்து அனுபவிக்கப் பாருங்கோள்— என்று * கிளரொளி யிளமையில் உபதேசித்தருளின ஆழ்வாருடைய திருவடிகளுக்கே நமது தலையை அந்த வுபதேசத்திற்குக் கைம்மாறாக அர்ப்பணம் செய்வோமென்றதாயிற்று (௰உ)

முடியார் திருமலையில் மூண்டுநின்ற மாறன் *
அடிவாரந் தன்னி லழகர்—வடிவழகைப்
பற்றி * முடியு மடியும் படிகலனும் *
முற்று மனுபவித்தான் முன். (உ-க)

| | | | |
|---|---|---|---|
| முடி ஆர் | கொடுமுடிகள் நிறைந்த | முடியும் | கிரீடமும் |
| திரு மலையில் | திருமாலிருஞ்சோலை மலையில் | அடியும் | சிலம்பும் |
| மூண்டு நின்ற | மண்டியனுபவித்த | | |
| மாறன் | ஆழ்வார் | படி கலனும் | திருமேனியிலுள்ள மற்ற ஆபரணங்களுமாகிய |
| அடிவாரந்தன்னில் | திருத்தாழ்வரையிலே | | |
| அழகர் | அழகருடைய | முற்றும் | முழுமையும் |
| வடிவு அழகைப்பற்றி | திவ்ய மங்கள விக்ரஹ ஸௌந்தரியத்தைப் பற்றி | முன் | முற்காலத்தில் |
| | | அனுபவித்தான் | அனுபவித்துப்பேசினார் |

* * * கிளரொளியிளமை யென்கிற கீழ்த்திருவாய்மொழியினால் திருமாலிருஞ்சோலைமலையில் ஈடுபாடு கொண்டிருந்த ஆழ்வார், அத்திருமலையின் அடிவாரத்திலே எழுந்தருளியுள்ள அழகருடைய வடிவழகிலே ஊன்றி திவ்யாவயவ திவ்ய பூஷணங்களை நன்கு அனுபவித்து அருளிச் செய்த திருவாய்மொழி * முடிச்சோதியா யென்பது என்றதாயிற்று. (உக)

முன்ன மழகரேழில் மூழ்குங் குருகையர்கோன் *
இன்னவள வென்ன வெனக்கரிதாய்த்து—என்ன *
கரணக் குறையின் கலக்கத்தை * கண்ணன்
ஒருமைப் படுத்தா னொழித்து. (உஉ)

| | | | |
|---|---|---|---|
| முன்னம் | முந்திய திருவாய் மொழியில் | கண்ணன் | எம்பெருமான் |
| அழகர் | திருமாலிருஞ்சோலை யழகருடைய | கரணம் குறையின் கலக்கத்தை | (ஆழ்வார்க்குக்) கரண ஸங்கோச நிபந்தன மென்று உண்டான கலக்கத்தை |
| எழில் | வடிவழகிலே | | |
| மூழ்கும் | ஆழங்காற்பட்ட | | |
| குருகையர் கோன் | ஆழ்வார் | | |
| இன்ன அளவு என்ன எனக்கு அரிது ஆய்த்து என்ன | 'இது இவ்வளவென்று பரிச்சேதிக்க என்னால் முடியவில்லையே; என்று தளர்ச்சியடைய | ஒழித்து | போக்கி |
| | | ஒருமைப்படுத்தான் | ஆச்வஸிப்பித்தான் |

* * * முடிச்சோதியாய் என்கிற கீழ்த்திருவாய்மொழியில் திருமாலிருஞ்சோலையழகருடைய வடிவழகில் ஆழங்காற்பட்ட ஆழ்வார் 'அந்தோ! இவ்வழகு முதலியவற்றை நாம் பரிபூர்த்தியாக அநுபவிக்க முடியவில்லையே, இதற்கு என்ன காரணமிருக்கும்; நம்முடைய கரண க்ராமங்கள் ஸங்குசிதங்களாயிருக்கையாலே அது காரணமாகவன்றோ பூர்ணநுபவம்செய்ய முடியவில்லை; அந்த கரண ஸங்கோசம் இல்லாதிருக்கின்ற நித்ய முக்தர்களிலே ஒருவனாக நானிருந்தால் பரிபூர்ணனுபவம் பண்ணலாமே' என்று அலமந்திருக்க, அதுகண்ட எம்பெருமான் 'ஆழ்வீர்! நம்மைப் பரிபூர்ணநுபவம் செய்ய முடியாமைக்குக் காரணம் கரணஸங்கோசமன்று காணும்; அஸங்குசிதமான கரணங்களையுடையவர்கள் தாமும் நம்மைப் பரிபூர்ணநுபவம் செய்வது அருமையே; விஷயம் மஹத்தாகையாலே பூர்ணநுபவம் செய்யப்போகிறதில்லையேயொழிய வேறு காரணமன்று என்று தெரிவித்து ஆழ்வாரைத் தேற்றுவித்தபடியை * முந்நீர் ஞாலத் திருவாய்மொழி சொல்லிற்றுகிறது என்று அருளிச்செய்தாராயிற்று. (உஉ)

ஒழிவிலாக் கால முடனாகி மன்னி *
வழுவிலா வாட்செய்ய மாலுக்கு * —எழுசிகர
வேங்கடத்துப் பாரித்த மிக்கநலஞ் சேர்மாறன் *
பூங்கழலை நெஞ்சே புகழ். (உங)

| | |
|---|---|
| ஒழிவு இலா காலம் | ஸதாகாலமும் |
| உடன் ஆகி மன்னி | கூடவேபிரியாதுபொருந்தியிருந்து |
| மாலுக்கு | ஸர்வேச்வரனுக்கு |
| வழு இலா | வழுவின்றிக்கே |
| ஆள் செய்ய | அடிமை செய்யுமாறு |
| எழு சிகரம் வேங்கடத்து பாரித்த | ஓங்கினசிகரங்களை யுடைய திருமலையிலேமனோரதித்த |
| மிக்க நலம் சேர் மாறன் | மஹாகுண சாலியான ஆழ்வாருடைய |
| பூ கழலை | பொலிவுற்ற திருவடிகளை |
| நெஞ்சே | மனமே ! |
| புகழ் | போற்றுவாயாக. |

* * * *ஒழிவில்காலமெல்லா மென்கிற திருவாய்மொழியில் திருமலையிலப்பனுக்கு அநவரதம் அத்தாணிச்சேவகம் செய்யவேணுமென்று மிக்க மனோரதம்கொண்ட சிறந்த நற்குணங்கள் நிரம்பிய ஆழ்வாரது திருவடித்தாமரைகளைத் துதிக்குமாறு நெஞ்சுக்கு உரைத்தாராயிற்று. மூன்றாமடியில் 'பாரித்து' என்ற பாடமும் பொருந்தும். அப்போது, 'மிக்கநலம் சேர்' என்பதற்கு 'மிகுந்த ஆனந்தமடைந்த' என்று பொருள். .... .... (உங)

புகழொன்றுமால் எப்பொருள்களுந் தானாய் *
நிகழ்கின்ற நேர்காட்டி நிற்க *—மகிழ்மாறன்
எங்கு மடிமைசெய இச்சித்து வாசிகமாய் *
அங்கடிமைசெய்தான் மொய்ம் பால். (உச)

| | |
|---|---|
| புகழ் ஒன்று மால் | கீர்த்தி பொருந்திய ஸர்வேச்வரன் |
| எப்பொருள்களும் தான் ஆய் நிகழ்கின்ற நேர் காட்டி நிற்க | ஸகல பதார்த்தங்களும் தானேயாய் இருக்கின்ற படியைக்காட்டி நின்றவளவில் |
| மகிழ் மாறன் | (அதனால்) மகிழ்ச்சி கொண்ட ஆழ்வார் |
| எங்கும் | எவ்விடத்தும் |
| அடிமை செய இச்சித்து | தொண்டு செய்ய விரும்பி |
| மொய்ம்பால் | *மயர்வற மதிநலமருளப் பேற்ற சீர்மையினாலே |
| வாசிகம் ஆய் அடிமை செய்தான் | வாய் மொழியினாலாகிய கைங்கரியத்தைச் செய்தார். |

* * * கீழ் *ஒழிவில்காலமெல்லா மென்கிற திருவாய்மொழியில் கைங்கர்ய மநோரதங் கொண்ட ஆழ்வாருடைய பாரிப்புக்குத் தகுதியாக எம்பெருமான் தானே எங்கும் எல்லாப் பொருள்களுமாய் நிற்கின்றபடியை ஆழ்வார்க்கு ஸேவை ஸாதிப்பிக்க, ஆழ்வாரும் எம்பெருமானுடைய விபூதியுள்ள விடங்களிலெல்லாம் காயிக கைங்கரியம் செய்யவிரும்பி, அது செய்ய இயலாமல் எம்பெருமானுடைய ஸர்வாத்மபாவத்தைப் பேசும் முகத்தால் வாசிக கைங்கரியத்தை * புகழு நல்லொருவன் திருவாய்மொழியில் செயதருளினார் என்றதாயிற்று. (உச)

மொய்ம்பாரும் மாலுக்கு முன்னடிமை செய்துவப்பால் *
அன்பாலாட் செய்பவரை யாதரித்தும் *—அன்பிலா
மூடரை நிந்தித்தும் மொழிந்தருளும் மாறன் பால் *
தேடரியபத்தி நெஞ்சே செய். (உரு)

| | |
|---|---|
| மொய்ம்பு ஆரும் மாலுக்கு | மிகுந்த ஆற்றலையுடைய ஸர்வேச்வரனுக்கு |
| முன் அடிமை செய்த உவப்பால் | முன் திருவாய்மொழியில் வாசிகமான கைங்கரியம் பண்ணப்பெற்ற சந்தோஷத்தினால் |
| அன்பால் ஆள் செய்பவரை ஆதரித்தும் | அன்புடனே அடிமை செய்பவர்களைக் கொண்டாடியும், |

(இதற்கு மொழிந்தருளும் என்பதோடே அந்வயம்)

| | | | |
|---|---|---|---|
| அன்பு இலா மூடரை நிந்தித்தும் | பக்தியற்ற மூர்க்கர்களைத் தூஷித்தும் | தேட அரிய | வேறு எங்கும் காண முடியாத தான [மிகச் சிறந்த தான] |
| | ஸந்தோஷத்தினுல் | பக்தி | பக்தியை |
| மொழிந்து அருளும் | அருளிச் செய்த | செய் | செய்யக்கடவை. |
| மாறன் பால் | ஆழ்வார் விஷயத்தில் | | |
| நெஞ்சே | மனமே! | | |

* * * 'புகழு நல்லொருவனென்கோ' என்கிற திருவாய்மொயில் எம்பெருமானுக்குத் தாம் வாசிகமான கைங்கரியம் செய்யப் பெற்றதனுலுண்டானகளிப்பே இத் திருவாய் மொழியாக வடிவெடுத்தது என்னலாம். அந்தக்களிப்பினுல் ஆழ்வார் செய்ததாவது —தம்மைப்போலவே எல்லாரும் பகவத்குணங்களில் ஈடுபடவேண்டியது ப்ராப்தமாயிருக்க, அப்படிஈடுபடாதவர்களை நிந்தித்தார்; ஈடுபடுமவர்களைக்கொண்டாடினுர். இப்படிபட்ட ஆழ்வார். பக்கலில் பக்திபண்ணவேணு மென்று தமது திருவுள்ளத்தை நோக்கி அருளிச் செய்தாராயிற்று.

செய்த+உவப்பால் செய்தவுவப்பால் என்று சந்தியாக வேண்டுவது செய்துவப்பால் என்ருனது தொகுத்தல்; "தொகுத்தல் வருஞ்செய்யுள் வேண்டுழி" என்பது நன்னூல் ........25

செய்யபரத்துவமாய்ச் சீரார் வியூகமாய் *
துய்யவிபவமாய்த் தோன்றிவற்றுள் *—எய்துமவர்க்கு
இந்நிலத்தில் அர்ச்சாவதார மெளிதென்ருன் *
பன்னுதமிழ் மாறன் பயின்று. (உகூ)

| | | | |
|---|---|---|---|
| செய்ய பரத்துவம் ஆய் | விலக்ஷணமான பரமபதத்தில் இருப்பாய் | | |
| சீர் ஆர் | மேன்மை பொருந்திய | (அவர் யார் என்னில்) | |
| வியூகம் ஆய் | க்ஷீராப் தியிலிருப்பாய் | | |
| துய்ய | பரிசுத்தமான | | |
| விபவம் ஆய் | ராம கிருஷ்ணுதி அவதாரமாய் | பயின்று பன்னு தமிழ் மாறன் | ஆராய்ந்து அருளிச் செய்யப் பட்ட தமிழ் வேதத்தையே நிரூபகமாகவுடைய ஆழ்வார் |
| தோன்று | இங்ஙனே சாஸ்த்ரங்களினுல்) காணப்படுகின்ற | | |
| இவற்றுள் | இந்நிலைமைகளுள், | | |
| எய்துமவர்க்கு | ஆச்ரயிப்பவர்களுக்கு | | |
| இந்நிலத்தில் | இவ்விபூதியிலே | | |
| அர்ச்சாவதாரம் | அர்ச்சாவதாரமே | | |
| எளிது என்ருன் | ஸௌலபம் என்று அருளிச் செய்தார் | | |

பரமபதத்திலே எழுந்தருளியிருந்து நித்யமுக்தர்களுக்குக் காட்சிதரும் நிலைமையென்ன திருப்பாற்கடலிலே வ்யூஹீபவித்திருக்கும் நிலைமை யென்ன, ஸ்ரீ ராமக்ருஷ்ணுதிரூபேண அவதரித்த விபவாவதார நிலைமையென்ன—ஆகிய இவற்றையெல்லாம்விட ,அர்ச்சாவதாரமாகக் காட்சி தந்தருளும் நிலைமையே இவ்வுலகில் பக்தர்களுக்கு மிகவும் எளியதென்னுமிடத்தை ஆழ்வார் இத்திருவாய் மொழியினுல் அருளிச்செய்தாரென்ருராயிற்று.

எம்பெருமானுடைய நிலைமைகளுள் அந்தர்யாமித்வமும்சேர்ந்திருக்க அதனை இங்கு எடுத்துக்கூருதது அதில்ஆச்ரயணப்ப ரஸக்தியில்லாமைபற்றி யென்று கொள்ளலாம். உபலக்ஷண விதத்தினுல் அதுவும் இங்குக் கொள்ளத்தக்கதே யென்பாருமுளர். (உகூ)

பயிலுந் திருமால் பதந்தன்னில் * நெஞ்சம்
தயலுண்டு நிற்கும் ததியர்க்கு *—இயலுடனே
ஆளானுர்க் காளாகும் மாற னடியதனில் *
ஆளாகார் சன்மம்முடியா. (உஎ)

| | | | |
|---|---|---|---|
| பயிலும் | அடியவர்களோடு கலந்து பழகுந் தன்மையரான | ஆள் ஆகும் | அடிமைசெய்யப்பெற்ற |
| திருமால் | எம்பெருமானுடைய | மாறன் | ஆழ்வாருடைய |
| பதம் தன்னில் | திருவடிகளில் | அடி அதனில் | திருவடிகளில் |
| நெஞ்சம் தயலுண்டு நிற்கும் | மனம் பதிந்து நிற்கிற | ஆள் ஆகார் | அடிமை செய்யப் பெறாதவர்களுடைய |
| ததியர்க்கு | பாகவதர்களுக்கு | சன்மம் | பிறவி |
| இயலுடனே ஆள் ஆனார்க்கு | முறையே அடிமையா யிருக்குமவர்களுக்கு | முடியா | (ஒருகாலும்)முடிவடைய மாட்டாது. |

* * * எம்பெருமானது திருவடிகளில் ஹ்ருதயம் அவகாஹித்திருக்கப்பெற்ற பாகவதர்க்கு தாஸாநுதாஸரீாகத் தம்மை அநுஸந்தித்து * பயிலுஞ் சுடரொளிப்பதிக மருளிய நம்மாழ்வாருடைய திருவடிகளில் அடிமை பூண்டிருக்கும் பாக்கிய மற்றவர்களுடைய பிறவித்துயர் ஒருநாளும் முடிவி பெறமாட்டாது; அவர்கள் நித்ய ஸம்ஸாரிகளாகவே நிகழ்வர்கள் என்றபடி. (உஎ)

முடியாத வாசைகமிக முற்று கரணங்கள் *
அடியார்தம்மைவிட் டவன்பால்—படியா *
ஒன்றொன்றின் செய்ல்விரும்ப உள்ளதெல்லாம் தான்விரும்ப *
துன்னியதே மாறன்றன் சோல். (உஅ)

| | | | |
|---|---|---|---|
| முடியாத ஆசை மிக | ஆராத காதில் அதிசயிக்க | உள்ளது எல்லாம் தான் விரும்ப | காரணங்களின் விடாய் முழுவதையும் ஆழ்வார் தாமுடைய ராதலை விரும்ப |
| முற்று காரணங்கள் | எல்லா இந்திரியங்களும் | மாறன் தன் சொல் | ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தி |
| அடியார் தம்மை விட்டு | பாகவதர்களை விட்டு | துன்னியது | (வருத்தத்தினால்) நெருங்க முற்றது. |
| அவன் பால் | அவ்வெம்பெருமான் பக்கலிலே | | |
| படியா | படிந்து | | |
| ஒன்று ஒன்றின் செயல் விரும்ப | ஒரு காரணம் மற்றொரு காரணத்தின் வ்ருத்தியை ஆசைப்பட | | |

* * * செய்யதாமரைக்கண்ணனென்ற திருவாய்மொழியில் "என்று கொல் கண்கள் காண்பதுவே" என்று கிளர்ந்த ஆசை * பயிலுஞ்சுடரொளியில் தணியாதே அதிகரிக்க, பாஹ்யம் ஆப்யந்தரம் என்னும் வாசியின்றிக்கே ஸகல கரணங்களும் எம்மையாளும் பரமர் * எம்மையாளுடைநாதர் * எம்மையாளுடையார்கள் * எம்பெருமக்கள் * எம்மையளிக்கும் பிராக்கள் * எம்மைச் சன்மசன்மாந்தரம் காப்பர் * எம்மை நாளுய்க் கொள்கின்ற நம்பர் * எம் தொழுகுலந்தார்கள் * அடியா ரெம்மடிகள் * அடியார் தம்மடியாரடியோங்கள் * என்றிப்படி ஸகல ப்ரகாரத்தாலும் சேஷிகளாக அநுஸந்திக்கப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களைவிட்டு எம்பெருமான் பக்கலிலே பவகாஹித்து, [கரணங்களும் தாமும் தத்விஷயத்திலே ப்ரவணராய்] ஓர் இந்திரியத்தினுடைய வ்ருத்தியை மற்றை யிந்திரியங்களுமாசைப்பட்டும் அவை யெல்லாவற்றினுடைய வ்ருத்தியையும் தாமாசைப்பட்டும் ஆழ்வார் அவஸாதத்தோடே அருளிச்செய்யும்படியாயிற்று * முடியானே யென்கிற திருவாய்மொழி என்றபடி.

"முடியாதவாசைமிகு" என்றும் பாடமுண்டு; அப்பேது கரணங்களுக்கு அடைமொழியாக அந்வயிக்கும் படியா—செய்யாவென்னும் வாய்ப்பாட்டிறந்தகால வினை யெச்சம்; படிந்து என்றபடி. 'துன்னியது' 'துன்றியது' என இருவகையான பாடமும் காண்கிறது. பொருள் ஒன்றே; நிர்வேதம் மிக்கது என்றபடி.

சொன்னாவில் வாழ்புலவீர் சோறு கூறைக்காக
மன்னாத மானிடரை வாழ்த்துதல் ல் என்னாகும் *
என்னுடனே மாதவனை ஏத்துமெனுங்குருகூர் *
மன்னருளால் மாறுஞ்சன் மம். (உகூ)

| | | | |
|---|---|---|---|
| நாவில் | "நாக்கிலே | என் ஆகும் | என்ன பயனுண்டாகும்? (ஒன்றுமில்லையாம்:) |
| சொல் | இனிய கவி மொழிகள் | | |
| வாழ் | விளங்கப் பெற்ற | என்னுடனே | என்னுடன் கூடி |
| புலவீர் | பண்டிதர்களே ! | மாதவனை | திருமாலை |
| சோறு கூறைக்கு ஆக | சோற்றுக்கும் துணிக்கு மாக | ஏத்தும் | ஏத்துங்கள்'' |
| | | எனும் | என்று உபதேசித்த |
| மன்னுத மானிடரை | நிலைநின்று ஜீவித்திருக்க மாட்டாத மனிசர்களை | குருகூர் மன் | திருநகரிக்குத் தலைவரான ஆழ்வாருடைய |
| வாழ்த்துதலால் | கவிபாடிப் புகழ்வதனால் | அருளால் | கிருபையினாலே |
| | | சன்மம் | பிறவித்துயர் தொலையும். |

* * * வாக்கிலே கவனசாதுரிய முடையவர்களாய், அந்தக் கவித்திறமையை பகவத் விஷயத்திலே செலுத்தாமல் அல்பாயுஸ்ஸுக்களான நீச மனிசர்களிடத்திலே செலுத்தி * காசுங்கறையுடைக்கூறைக்குமங்கோர் கற்றைக்கு மாசையினால் அவர்களைத் துதித்துக் கொண்டு திரியும் புலவர்களை விளித்து, அந்தோ! நீங்கள் இங்ஙனம் பயனற்ற செயலைச் செய்து திரிவது தவிர்ந்து என்னைப்போல் எம்பெருமானைத் துதித்து வாழுங்கள் என்று * சொன்னால் விரோதப் பதிகத்தில் ஆழ்வார் உபதேசித்தபடியைக் கூறி அப்படிப்பட்ட ஆழ்வாருடைய திருவருளுக்கு நாம் இலக்காகப் பெற்றோமாகில் நம்முடைய பிறவித்துயர் நீங்குமென்று அருளிச்செய்தாராயிற்று. (உகூ)

சன்மம் பலசெய்து தானிவ் வுலகளிக்கும் *
நன்மையுடை மால்குணத்தை நாடோறும்*—இம்மையிலே
ஏத்துமின்பம் பெற்றே னெனுமாறனை யுலகீர் ! *
நாத்தழும்ப வேத்துமொரு நாள்.

| | | | |
|---|---|---|---|
| தான் பல சன்மம் செய்து | தானாகவே பல திருவவதாரங்களைப் பண்ணி | நாள் தோறும் | அநுதினமும் |
| இ உலகு | இந் நிலவுலகத்தை | ஏத்தும் இன்பம் | புகழ்ந்து பேசும்படியான இன்பத்தை |
| அளிக்கும் | காத்தருளுகையாகிற | பெற்றேன் எனும் | பெற்றேனென்று அருளிச் செய்த |
| நன்மை உடை | நன்மையை யுடை யவனான | மாறனை | ஆழ்வாரை |
| மால் | எம்பெருமானுடைய | உலகீர் | உலகர்களே! |
| குணத்தை | திருக்கல்யாண குணங்களை | ஒரு நாள் | ஒரு நாளாகிலும் |
| | | நா தழும்ப | நாக்குத் தடிக்கும்படி |
| இம்மையிலே | இப்பிறப்பிலே | ஏத்தும் | நீங்கள் துதிப்பீர்களாக |

* * * எம்பெருமான் பல திருவவதாரங்களைச்செய்து இவ்வுலகத்தைக் காத்தருள்கின்றானென்பது முதலான அவனுடைய திருக்கல்யாணகுண ஸம்ருத்தியை இம்மையிலேயே வாயாரப்புகழ்ந்து பேசும்பாக்கியத்தையான் பெற்றேனென்று பேரானந்தம் பொலிய சன்மம் பலபலயென்னும் திருவாய்மொழியி லருளிச்செய்த நம் ஆழ்வாரை, ஸம்ஸாரிகளே! நீங்கள் ஒரு நாளாகிலும் நன்கு துதிப்பது நன்று என்றருளிச்செய்தாராயிற்று. (நய)

ஒருநாயகமாய் உலகுக்கு, வானோர் *
இருநாட்டி லேறியுய்க்கு மின்பம்—திரமாகா *
மன்னுயிர்ப்போகம் தீது மாலடிமையேயினிதாம் *
பன்னியிவை மாறனுரைப் பால்.

| | | | |
|---|---|---|---|
| உலகுக்கு | இவ்வுலகுக்கெல்லாம் | வானோர் இரு நாட்டில் ஏறி உய்க்கும் இன்பம் | தேவர்களுடைய விசாலமான சுவர்க்கபோகத்திற் சென்று அநுபவிக்கும் ஆனந்தமும் |
| ஒரு நாயகம் ஆய் | ஏகாதிபதிகளாய்க் கொண்டு | | |
| உய்க்கும் | அநுபவிக்கின்ற | | |
| இன்பம் | ஆனந்தமும் | திரம் ஆகா | நிலை நிற்கமாட்டா. |

| | | | |
|---|---|---|---|
| மன் | நித்யமான | மாறன் | ஆழ்வார் |
| உயிர் போகம் | ஆத்மாநுவமாகிற கைவல்யமானது | பன்னி | விரிவாக |
| | | உரைப்பால் | அருளிச்செய்ததனால் |
| தீது | ஸ்வரூபத்திற்குச் சேராதது; | மால் அடிமையே | எம்பெருமானுக்கு அடிமை செய்வதே |
| இவை | என்கிற இவ்வர்த்தங்களை | இனிது ஆம் | போக்யமாயிருக்கும் |

* * * இவ்வுலகம் முழுவதையும் ஏகச்சக்ராதிபதிகளாய் ஆண்டு அநுபவிக்கும் இன்பமும், ஸ்வர்க்கலோகம் புக்கு அநுபவிக்கும் இன்பமும் ஸ்திரமாக நிற்கமாட்டாதவை; கைவல்ய மோக்ஷமாகிற ஆத்மாநுபவமானது ஸ்திரமாயிருக்கக்கூடியதாயினும் பரப்ரஹ்மாநுபவத்தைப் பற்றச் சிற்றின்பமாயிருக்கும்; ஆதலால், பகவத் விஷயத்தில் செய்யும் அடிமையொன்றே இனியதாகும்—என்று ஆழ்வார் * ஒரு நாயகத்தில் விரிவாக அருளிச் செய்தாரென்றதாயிற்று

திரம்—ஸ்திரம் என்ற வடசொல் விகாரம். (௫௧)

பாலரைப்போல் சீழ்கிப் பரனளவில் வேட்கையால் *
காலத்தால் தேசத்தால் கைகழிந்து*—சால
அரிதான போகத்தில் ஆசையுற்றுநைந்தான் *
குருகூரில் வந்துதித்த கோ. (௫௨.)

| | | | |
|---|---|---|---|
| குருகூரில் | திருநகரியில் | பரன் அளவில் வேட்கையால் | எம்பெருமான் பக்கலிலுள்ள ஆசையாலே, |
| வந்து உதித்த கோ | வந்து அவதரித்த ஸ்வாமியான ஆழ்வார் | காலத்தால் தேசத்தால் கைகழிந்து | கால தேசங்களினால் கை கழிந்து போனதால் |
| பாலரை போல் | (விரும்பின பொருள் உடனே கைப்பட வேணுமென்று அழுகிற) சிறு பிள்ளைகளைப் போல | சால அரிது ஆன | மிகவும் துர்லபமான |
| | | போகத்தில் | அநுபவத்தில் |
| | | ஆசை உற்று | ஆசை அதிகரிக்கப் பெற்று |
| சீழ்கி | சிணுங்கி | நைந்தான் | வருந்தினார். |

* * * ஆழ்வார் "பாலனாய்" என்கிற திருவாய்மொழியில், சிறுபிள்ளைகள் ஏதேனுமொரு வஸ்துவை ஆசைப்பட்டு அதுவே வேணுமென்று பிடிவாதம் பிடித்துக்கதறுமாபோலே எம்பெருமானுடைய புராதனங்களான அபதானங்களில் ஆசைவைத்து, காலத்தாலும் தேசத்தாலும் அதீதங்களாயும் துர்லபங்களாயுமிருக்கிற போகங்களை விரும்பி அவற்றைப் பெறுவதற்காக ஆற்றாமைப்பட்டாரென்றதாயிற்று. (௫௨)

கோவானவீசன் குறையெல்லாம்தீரவே *
ஓவாதகாலத் துவாதிதனை *—மேவிக்
கழித்தடையக்காட்டிக் கலந்தகுணமாறன் *
வழுத்துதலால் வாழ்ந்ததிந்த மண்.

| | | | |
|---|---|---|---|
| கோ ஆன ஈசன் | ஸர்வசேஷியான எம்பெருமான் | அடைய | (கீழ் அபேக்ஷித்த அபதானங்களை) யெல்லாம் |
| குறை எல்லாம் தீர | எல்லாக் குறைகளும் தீரும்படி | காட்டி | ஸேவை ஸாதிப்பித்து |
| ஓவாத காலத்து உவாதிதனை | விச்சேதமின்றி நடந்து செல்லுகிற காலத்தின் உபாதியை | கலந்த குணம் | தம்மோடு கலந்த குணத்தை |
| | | மாறன் | நம்மாழ்வார் |
| மேவி கழித்து | தம்மோடு சேர்ந்து கழித்து | வழுத்துதலால் | துதித்ததனால் |
| | | இந்த மண் | இவ்வுலகம் |
| | | வாழ்ந்தது | ஸத்தை பெற்றது. |

* * * கீழ்த்திருவாய்மொழியில் தேசகால விப்ரக்ருஷ்டங்களான தன்படிகளை அநுபவிக்க வேணுமென்று ஆசைப்பட்ட ஆழ்வார்க்கு, காலசக்கரத்தானுகையாலே காலோபாதியைக் கழித்து நிகழ்காலம் போலே ஆக்கிக்கொடுத்து, இவர் தம்முடைய ஸத்தையே தனக்கு எல்லா மாம்படி யிருக்கிற தன் ப்ரணயித்வ குணத்தையும் அநுபவிப்பிக்கவே எல்லாம் பெற்றாராய் இந்த ப்ரணயித்வ குணத்தை * கோவைவாயாள் பதிகத்தில் பாராட்டிக் கூறினவிதனால் இம் மண்ணுலகம் உய்வு பெற்றதென்றபடி.

காலோபாதியைக் கழிப்பதாவது—இறந்த காலத்தில் கழிந்துபோனவற்றையும் தத்காலத் திற்போலே ஸாக்ஷாத்கரிக்கும்படியாகச் செய்துவைக்கை.

"கலந்த குணமாறன்" என்றவிடத்து, குணம் என்பதை மாறனுக்கு விசேஷணமாக்கி, சிறந்த குணசாலியான நம்மாழ்வார் என்று பொருள் கொண்டு, கலந்த மாறனை வழுத்துதலால் இந்த மண் வாழ்ந்தது என்று உரைப்பாருமுளர். வாழ்ந்தது—வாழும் என்று எதிர்காலப் பொருள் கொள்ளவும் தகுதியுண்டு, விரைவுபற்றிய வழுவமைதி. (௩௩)

மண்ணுலகில் முன்கலந்து மால்பிரிகையால் * மாறன்
பெண்ணிலைமையாய்க் காதல்பித்தேறி *—எண்ணிடில்முன்
போலிமுத லான பொருளையவ னாய்நினைந்து *
மேல்விழுந்தான் மையல்தனின் வீறு. (௩௪)

| | | | |
|---|---|---|---|
| மால் | எம்பெருமான் | முன் போலி முதலான பொருளை | கண்ணெதிரே தென்படுகிற பகவத் ஸத்ருச வஸ்துக்கள் முதலானவற்றைக் (கண்டு) |
| மண் உலகில் | இவ்விபூதியிலே | அவன் ஆய் நினைந்து | அந்த பகவானாகவே அவற்றை நினைத்து |
| முன் கலந்து பிரிகையால் | முன்னே கலந்து பிரிந்ததனால் | மையல் தனின் வீறு | வியாமோஹ மிகுதியினால் |
| மாறன் | ஆழ்வார் | மேல் விழுந்தான் | அவற்றிலே அதிக ஆதரம் காட்டினார். |
| பெண் நிலைமை ஆய் | நாயகீ ஸமாதியை யுடையராய் | | |
| காதல் பித்து ஏறி | பக்தியாலே பித்து அதிகரித்து | | |
| எண்ணிடில் | எண்ணுமிடத்தில் | | |

* * * "புணர்தோறுமென்னக் கலந்து பிரிந்து ஜ்ஞாநபக்திகளை வளர்த்தது கனங்குழை யிடக்காது பெருக்குதலும் மாஸோபவாஸி போஜநப் புறப்பூச்சும் போலே ஆற்றநல்ல மாபோகச் சிரமமாக" என்று ஆசார்ய ஹ்ருதயத்திலருளிச் செய்தபடியே, ஸம்ச்லேஷத் தாலுண்டான ஆனந்தரஸம்ஸாத்மிப்பதற்காக எம்பெருமான் ஆழ்வாரைவிட்டுப் பிரிந்திருக்க, அந்தப் பிரிவாற்றாமையினால் ஆழ்வார் கண்ணால்கண்ட பொருள்களை யெல்லாம் அந்த எம் பெருமானாகவே நினைத்து வருந்தினர் * மண்ணையிருந்து துழாவியில் என்று சொல்லிற்றாயிற்று.

மூன்றாமடியில், முதலான என்றதனால் எம்பெருமானுடைய ஸம்பந்தம் பெற்ற பொருள் கள் கொள்ளத்தக்கன.

வீற்றிருக்கு மால்விண்ணில் மிக்க மயல்தன்னை *
ஆற்றுதற்காத் தன்பெருமை யானதெல்லாம் *—தோற்றவந்து
நன்று கலக்கப்போற்றி நன்குகந்து வீறுரைத்தான் *
சென்றதுயர் மாறன் தீர்ந்து. (௩௫)

| | | | |
|---|---|---|---|
| விண்ணில் | பரமபதத்தில் | நன்று கலக்க | தம்மோடு நன்றாகக் கலக்க (அவனை) |
| வீற்றிருக்கும் | எழுந்தருளி யிருக்கின்ற | மாறன் | ஆழ்வார் |
| மால் | எம்பெருமான் | போற்றி | வாயார வாழ்த்தி |
| மிக்க மயல் தன்னை | (கீழ்த்திருவாய் மொழியில் ஆழ்வார்க் குண்டான) மிகுந்த வியா மோஹத்தை. | நன்கு உகந்து | மிகவும் களிப்படைந்து |
| ஆற்றுதற்கு ஆ | தணிவிக்கைக்காக | சென்ற துயர் தீர்ந்து | நிகழ்ந்த துக்கங்கள் ஒழியப்பெற்று |
| தன் பெருமை ஆனது எல்லாம் தோற்றவந்து | தன் குண விக்ரஹாதி வைபவங்க ளெல்லாம் ப்ரகாசிக்குமாறு இங்கே வந்து | வீறு உரைத்தான் | உபய விபூதியிலும் தாம் வாசி பெற்றவரான பெருமையை அருளிச் செய்தார். |

* * * கீழே * மண்ணையிருந்து துழாவியில் அளவுகடந்த வியாமோஹத்தை யடைந்த ஆழ்வாருடைய அந்த வியாமோஹத்தைத் தணியச் செய்யும்பொருட்டுப் பரமபதநிலயனை எம்பெருமான் திருப்புளியாழ்வாரடியிலே யெழுந்தருளித் தன்னுடைய அஸாதாரணாகாரத்தைக் காட்டிக்கொடுத்து ஸம்ச்லேஷிக்க அதனால் ஆழ்வார் உள்ளங்குளிர்ந்து வாயாரவாழ்த்தித் துயர்தீரப் பெற்று, உபய விபூதியிலும் தனக்கு நிகரில்லாமையாகிற தமது பெருமேன்மையை * வீற்றிருந்தேழுலகு திருவாய்மொழியில் அருளிச்செய்தாரென்றதாயிற்று. (௬௫)

தீர்ப்பா ரிலாதமையல் தீரக் கலந்தமால் *
ஓர்ப்பாது மின்றி யுடன்பிரிய *— நேர்க்க
அறிவழிந் துற்றாரு மறக்கலங்க * பேர்கேட்டு
அறிவு பெற்றான் மாறன் சீலம். (௬௬)

| | | | |
|---|---|---|---|
| தீர்ப்பார் இலாத | தீர்ப்பவர்கள் இல்லாத [ஒருவராலும் தீர்க்க முடியாத | உற்றாரும் | தாய்மார் முதலிய உறவினரும் |
| மயல் தீர | பெரியகாதல் தீரும்படி | அற கலங்க | மிகவும் கலங்கி விபரீத ப்ரவ்ருத்திகள் பண்ண அவ்வளவிலே |
| கலந்த | (கீழ்த் திருவாய் மொழியில்) வந்து கூடின | மாறன் | ஆழ்வார் |
| மால் | எம்பெருமான் | பேர் கேட்டுப் | தோழிமார் சொன்ன திருநாமங்களை (யாத்ருச்சிகமாகக் கேட்டு) |
| ஓர்ப்பு ஆதும் இன்றி | (ஆழ்வாருடைய)ப்ரக்ருதியைச் சிறிதும் ஆராயாமல் | அறிவு பெற்றான் | மோஹம் தெளிந்து உணர்த்தி பெற்றார்! |
| உடன் பிரிய | உடனே பிரிந்தவளவில் | சீலம் | இது ஆழ்வாருடைய குணமாயிருந்தது |
| நேர்க்க | முன்னிலுங் காட்டில் விசேஷமாக | | |
| அறிவு அழிந்து | சைதந்யம் அழிந்ததனால் | | |

* * * மண்ணையிருந்து துளாவியில் ஆழ்வார்க்கு உண்டான மயலானது எங்ஙனே தீரப் போகிறது! யாராலே தீரப்போகிறது; என்னும்படியாயிருந்தது; அப்படிப்பட்ட மயல் தீரும்படியாக * வீற்றிருந்தேழுலகில் வந்து கலந்த ஸர்வேச்வரன் மீண்டும் பிரிந்தவளவிலே முன்னிலுங் காட்டில் அதிகமாக வ்யாமோஹம் தலையெடுத்தது; அப்போது தாய்மார் முதலான உறவினரும் யுக்தாயுக்த நிரூபணம் பண்ணமாட்டாதே கலங்கி ஏதோ தவறான வழிகளில் சில பரிஹார முறைமைகளைச் செய்துகொண்டிருந்தார்கள். அவ்வளவில், ஆழ்வாருடைய ப்ரக்ருதியையறிந்த தோழியர் வந்து அந்தோ! குடிகெட்டதே! மறந்தும் புறந்தொழாதாரில் தலைவரான ஆழ்வார்க்கு இப்படியும் சில அதிப்ரவ்ருத்திகள் செய்வது தகுதியோ? பகவத் பாகவத பஜநமன்றோ செய்ய அடுப்பது என்று சொல்லிவரும்போது மாயப்போர்த் தேர்ப்பாகனார்

என்றும் மதுவார் துழாய்முடி மாயப்பிரான் என்றும் உலகேழும் விழுங்கியுமிழ்ந்திட்ட பெருந்தேவன் என்றும் கவளக்கடாக்களிறட்டபிரான் என்றும் மணியிலணிநிறமாயன் என்றும் மாயப்பிரான் என்றும் விண்ணோர் பெருமான் என்றும் கண்ணபிரான் என்றும் வண்துவராபதிமன்னன் என்றும் சில திருநாமங்களைச் சொன்னபடியாலே அந்தத் திருநாமங்களைக் கேட்கப் பெற்றதனால் ஆழ்வார் மயக்கந்தெளிந்து அறிவுபெற்றார் என்றதாயிற்று. "நமனும் முற்கலனும் பேசநரகில் நின்றார்கள் கேட்க, நரகமே சுவர்க்கமாகும் நாமங்களுடைய நம்பி" என்ற திருமாலைப்பாசுரம் இங்கு ஒரு புடை ஸ்மரிக்கத்தக்கது.

இப்பாசுரத்தின் முடிவில் சீலம் என்றே பாடம் வழங்கிவருகின்றது. சீலன்என்றிருந்த பாடம் எப்போதோ இங்ஙனம் மாறிவிட்டதென்று அழகிய மணவாளச் சீயர் அருளிச்செய்யக் கேட்டிருக்கை. சீலன்—ஸதாசாரபரரான. மாறன்—ஆழ்வார் என்றபடி. "சீலன் மாறன் பேர்கேட்டு அறிவு பெற்றான்" என்று அந்வயம் காண்க. .... .... .... (௬௬)

சீலமிகு கண்ணன் திருநாமத் தாலுணர்ந்து *
மேலவன்றன் மேனிகண்டு மேவுதற்கு *—சால
வருந்தி யிரவும்பகலும் மாறாமல் கூப்பிட்
டிருந்தனனே * தென் குருகூ ரேறு. (௬௭)

| | | | |
|---|---|---|---|
| சீலம் மிகு கண்ணன் திருநாமத்தால் உணர்ந்து | ஸுசீலனான கண்ணபிரானுடைய திருநாமத்தினால் மோஹந் தெளிந்து | சால வருந்தி | மிகவும் ஆயாஸப்பட்டு |
| | | இரவும் பகலும் | அஹோராத்ரமும் |
| | | மாறாமல் | இடை விடாமல் |
| மேல் | அங்ஙனம் தெளிவுபெற்ற பிறகு | கூப்பிட்டு இருந்தனன் | கூப்பிட்டுக்கொண் டிருந்தார் |
| | | | (யாரெனில்) |
| அவன் தன் மேனி கண்டு மேவுதற்கு | அப்பெருமானுடைய திவ்ய மங்களவிக்ரஹத்தை நேரே கண்டு கிட்டியநுபவிப்பதற்கு | தென் குருகூர் ஏறு | நம்மாழ்வார்.! |

* * * கீழ்த்திருவாய்மொழியில் மோஹித்து அறிவழிந்து கிடந்த ஆழ்வார், தோழிமார்கள் தாய்மாரை நோக்கிச் சொல்லிக்கொண்டிருந்த வார்த்தையடைவில் எம்பெருமானுடைய திருநாமங்கள் பலவற்றையும் ப்ரஸ்தாவித்ததனால் ப்ராஸங்கிகமாக அந்தத் திருநாமங்கள் செவியிற்படவே மோஹம் நீங்கித் தெளிவுபெற்றார்; பிரிவாற்றாமை அதிகமாக வருத்தத் தொடங்கியது. அதனால் அப்பெருமானுடைய திருமேனியை மாநஸஸாக்ஷாத்காரமாகவன்றிக்கே ப்ரத்யக்ஷமாகவே ஸாக்ஷாத்கரிக்கவேணுமென்கிற தமது விருப்பத்தை வெளியிட்டு இடைவிடாது கூவிக்கொண்டிருந்தார் * சீலமில்லாச்சிறியனில் என்கிறது. .... .... (௬௭)

ஏறுதிருவுடைய ஈசனுகப்புக்கு *
வேறுபடிலென்னுடைமை மிக்கவுயிர்—தேருங்கால் *
என்றனக்கும்வேண்டா வெனுமாறன் தாளேநெஞ்சே *
நந்தமக்குப்பேறாக நண்ணு. (௬௮)

| | | | |
|---|---|---|---|
| ஏறு திரு உடைய | தன்னது திருமார்பில் ஏறி வீற்றிருக்கின்றபெரிய பிராட்டியாரையுடையனான | வேறுபடில் | விபரீதமானால் |
| | | என் உடைமை | மணிமாமை முதலிய ஆத்மீயங்களும் |
| | | மிக்க | இவற்றினும் உயர்ந்த |
| ஈசன் | எம்பெருமானுடைய | உயிர் | ஆத்மாவும் |
| உகப்புக்கு | வேண்டுதலுக்கு | தேறுங்கால் | ஆராயுமிடத்து |

| | | | |
|---|---|---|---|
| என் தனக்கும் வேண்டா எனும் | எனக்கும் வேண்டியதில்லையென்று வெறுத்துரைத்த | நெஞ்சே | மனமே! |
| | | நம் தமக்கு | நமக்கு |
| | | பேறு ஆக | ப்ராப்யமாக |
| மாறன் | ஆழ்வாருடைய | நண்ணு | விரும்புவாயாக. |
| தாளை | திருவடிகளை | | |

* * * கீழ்த்திருவாய்மொழியில் கூவிக்கூவி நெஞ்சுருகிக் கண்பனி சோரநின்று எப்பொழுதும் கண்ணநீர் கொண்டு ஆவிதுவர்ந்து துவர்ந்து நள்ளிராவும் நன்பகலும் ஓலமிட்டழைத்துக் கதறினவிடத்திலும் எம்பெருமான் வந்து முகங்காட்டாமையாலே "ப்ராப்தனுய் சீலவானுய் விரோதிகளைக் கிழங்கெடுக்கவல்லனு யிருக்கின்ற அவன் இந்த நிலைமையிலும் வந்து முகங் காட்டாதது இத்தலையை வேண்டாமையாலன்றே; அவனுக்கு வேண்டாத ஆத்மாத்மீயங்கள் எனக்குத்தான் ஏதுக்கு?" என்று வெறுத்து அவற்றில் நசையற்றபடியை * ஏருளுமிறையோனில் பேசின பராங்குசனுடைய பதவிணையே நமக்குப் பரம புருஷார்த்தமென்றதாயிற்று. (௩௮

நண்ணது மாலடியை நானிலத்தே வல்வினையால் *
எண்ணராத் துன்பமுறு மிவ்வுயிர்கள் *— தண்ணிமையைக்
கண்டிருக்க மாட்டாமற் கண்கலங்கு மாறனருள் *
உண்டுநமக் குற்றதுணை யொன்று. (௩௯)

| | | | |
|---|---|---|---|
| மால் அடியை | எம்பெருமானது திருவடியை | கண்டு | கடாக்ஷித்து |
| | | இருக்கமாட்டாமல் | ஆறியிருக்கமுடியாமல் |
| நண்ணது | கிட்டாமல் | கண் கலங்கும் | திருவுள்ளம் கலங்கப்பெற்ற |
| நால்நிலத்தே | இப்பூமியிலே | | |
| வல் வினையால் | கொடிய பாவங்களினுல் | மாறன் | ஆழ்வாருடைய |
| எண் ஆரா துன்பம் உறும் இ உயிர்கள் | அளவற்ற துக்கங்களை அநுபவிக்கிறஇவ்வாத்மாக்களுடைய | அருள் | கருணையானது |
| | | நமக்கு | நம்போல்வார்க்கு |
| | | உற்ற துணை ஒன்று உண்டு | அடுத்ததொரு துணையாக இராநின்றது. |
| தண்ணிமையை | நிஹீனத்தன்மையை | | |

* * * ஆழ்வார் இந்த லோகஸ்வபாவங்களிலே கண் செலுத்தி ஆராய்ந்து பார்த்தவாறே ஒவ்வொருவரும் எம்பெருமான் பக்கலிலே விமுகராய்ப் பாவமேசெய்து பாவிகளாய் அளவு கடந்த துக்கங்களை அநுபவித்துக்கொண்டிருக்கிற படியைக்கண்டு இவர்கள் நடுவே தாம் இருக்கமாட்டாமலும் அவர்கள் படும்பாட்டைக் கண்டு ஸகித்திருக்கமாட்டாமலும் * நண்ணுதார் பதிகத்தில் கதறினர்; அப்படிப்பட்ட ஆழ்வாருடைய அருளை நமக்குத் தஞ்சம் என்றதாயிற்று. [எண்ணரா] எண்ண + ஆரா என்றும் பிரிக்கலாம்; எண்ண முடியாத வென்கை. (௩௯)

ஒன்றுமிலைத் தேவு இவ்வுலகம் படைத்தமால் *
அன்றியென ஆரு மறியவே *— நன்றாக
மூதலித்துப் பேசியருள் மொய்மகிழோன் தாள்தொழவே *
காதலிக்கு மென்னுடைய கை. (௪0)

| | | | |
|---|---|---|---|
| இ உலகம் படைத்த | இந்த லோகங்களை யுண்டாக்கின | பேசி அருள் | அருளிச்செய்த |
| மால் அன்றி | ஸர்வேச்வரனைத் தவிர | மொய் மகிழோன் | பெருமைதங்கிய வகுளாபரணருடைய |
| தேவு | தெய்வம் | | |
| ஒன்றும் இலை என | வேறொன்றுமில்லையென்று | தாள் தொழவே | திருவடிகளை நோக்கி அஞ்சலி செய்வதன் பொருட்டே |
| ஆரும் அறிய | யாவருமறியும் வண்ணம் | என்னுடைய கை | எனது கைகள் |
| நன்றாக மூதலித்து | நன்கு நிரூபித்து | காதலிக்கும் | ஆசைப்படுகின்றன. |

* * * வேதாந்தங்களில் ஜகத்காரணவஸ்துவே உபாஸிக்கவுரியதென்று ஓதி, ஸ்ரீமந்நாராயணனே காரணவஸ்து வென்றும் நிஷ்கர்ஷித்திருக்கையாலே அதனை யடியொற்றி * ஒன்றுந்தேவு திருவாய்மொழியிலே, ஸகல ஜகத்காரணபூதனான ஸர்வேச்வரனைத் தவிர்த்துப் பரதைவம் பிறிதொன்றில்லையென்று கையிலங்கு நெல்லிக்கனியாகக் காட்டியருளின ஆழ்வாரது திருவடிகளைத்தொழுவதே ஸ்வரூபாநுரூபமென்றதாயிற்று. .... .... (௪0)

கையாருஞ் சக்கரத்தோன் காதலின்றிக்கே இருக்க *
பொய்யாகப் பேசும் புறனுரைக்கு —*மெய்யான
பேற்றை யுபகரித்த பேரருளின் தன்மைதனை *
போற்றினனே மாறன் பொலிந்து.

| | | | |
|---|---|---|---|
| காதல் இன்றிக்கே இருக்க | (பகவத் விஷயத்தில் அன்பு இல்லாமலிருக்க | மெய் ஆன பேற்றை | உண்மையான புருஷார்த்தத்தை |
| பொய் ஆக பேசும் | கபடமாகப் பேசுகின்ற | உபகரித்த | உதவிசெய்த |
| புறன் உரைக்கு | வஞ்சக வார்த்தைகளையே பற்றுதாகக் கொண்டு, | பேர் அருளின் தன்மை தனை | மகா கருணையின் நிலைமையை |
| | | மாறன் | ஆழ்வார் |
| கை ஆரும் சக்கரத் தோன் | திருக்கையிலமர்ந்த திருவாழியை யுடையனான எம்பெருமான் | பொலிந்து | திருவுள்ளவுகப்புடன் |
| | | போற்றினன் | சிறப்பித்துக்கூறினர் |

* * * எம்பெருமான் தன் பக்கலில் உள்ளுருகி பக்திசெய்பவர் திறத்தில் கருணை புரிவது போலவே, உள்ளூறின பக்தியின்றிக்கே கபடமான பக்தியைச்செய்பவர் திறத்திலும் கருணை புரிவதுண்டு; இதை ஆழ்வார் தம் பக்கலிலே அநுபவஸித்தமாகக் கண்டாராதலால், தாம் கண்டவதனை * கையார் சக்கரத்திருவாய்மொழியில் எடுத்துரைத்தாராயிற்று.

"கையாருஞ் சக்கரத்தோன்" என்பது 'உபகரித்த' என்பதிலே அந்வயிக்கும்.

புறனுரை=வெற்றுரை என்றபடி. உள்ளேயில்லாமல் வெளியிலே மாத்திரஞ் சொல்லுகிற வார்த்தை. முதல் திருவந்தாதியில் (41.) "புறனுரையேயாயினும்" என்றதுங் காண்க. 'புறனுரை' என்பதற்குப் பழிச்சொல் என்கிற பொருளும் உண்டு; பெரிய திருமொழியில் (6—4—7.) "இவன் பொல்லான் திரைந்தானென்னும் புறனுரை கேட்பதன் முன்" என்றது காண்க. .... .... .... .... ....

பொலிக பொலிகவென்று பூமகள்கோன் தொண்டர் *
மலிவுதனைக் கண்டுகந்து வாழ்த்தி *—உலகில்
திருந்தாதார் தம்மைத் திருத்திய மாறன்சொல் *
மருந்தாகப் போகுமன மாசு.

| | | | |
|---|---|---|---|
| உலகில் | இவ்வுலகத்தில் | திருந்தாதார் தம்மை | திருந்தாமலிருப்பவர்களை |
| பூமகள் கோன் தொண்டர் | திருமாலுக்குத் தொண்டர்களான ஸ்ரீவைஷ்ணவர்களுடைய | திருத்திய | (உபதேசமுகத்தாலே) திருத்தியருளின |
| மலிவு தனை கண்டு | ஸமிருத்தியைக்கண்டு | மாறன் | ஆழ்வாருடைய |
| உகந்து | உள்ளம் பூரித்து | சொல் | ஸ்ரீஸூக்திகளே |
| பொலிக பொலிக என்று வாழ்த்தி | வாழ்க வாழ்க வென்று மங்களாசாஸனம் பண்ணி | மருந்து ஆக | மருந்தாகப்பெற்று |
| | (அவ்வளவோடும் நில்லாமல்) | மனம் மாசு போகும் | மனக்களங்கம் தொலைந்திடும் |

* * * கீழே * நண்ணாதார் முறுவலிப்பவிலே * கெடுவுலகம் காட்டேலேஎன்ற ஆழ்வார்க்கு இந்நிலத்தில் இருப்பு ஒருவாறு போக்யமாகைக்காக எம்பெருமான் ஸ்ரீ வைஷ்ணவத் திரள் மலிந்திருக்கும்படியை இங்கேகாட்டிக்கொடுக்க, அதுகண்டு * பொலிகபொலிகவென்று போற்றியும், இன்னமும் திருந்தாத ஸம்ஸாரிகளை உபதேசங்களாலே திருத்தியும் அவர்பணித்த திவ்ய ஸூக்திகளே நம்முடைய மனனகமலங்கள் கழிய அருமருந்து என்றதாயிற்று. (௬௨.)

மாசறு சோதிக் கண்ணன் வந்து கலவாமையால் *
ஆசைமிகுந்து பழிக்கஞ்சாமல்—ஏசறவே *
மண்ணில் மடலூர மாற னொருமித்தான் *
உண்ணடுங்கத் தான்பிறந்தவூர். (௬௩.)

| | | | |
|---|---|---|---|
| மாசு அறு சோதி | நிர்மலமான சோதியை யுடைய | ஏசு அற | ஏசுமெல்லை கடந்து, |
| கண்ணன் | எம்பெருமான் | தாம் பிறந்த ஊர் உள் நடுங்க | தாம்பிறந்த திருநகரியிலுள்ளாரெல்லாரும் நடுங்கும்படியாக |
| வந்து | நெருங்கி வந்து | மண்ணில் | இவ்வுலகத்திலே |
| கலவாமையால் | ஸம்ச்லேஷம் தாராமையினாலே | மடல் ஊர ஒருமித்தான் | மடல் ஊருகையிலேஇரங்கினார். |
| மாறன் | ஆழ்வார் | | |
| ஆசை மிகுந்து | ஆசைமீதூரப்பெற்று | | |
| பழிக்கு அஞ்சாமல் | (ஊரார் தாயார் முதலானாருடைய) பழிக்குப் பின் வாங்காமல் | | |

* * * கீழ் * பொலிக பொலிகவிலே * மலியுஞ் சுடரொளி மூர்த்தி மாயப்பிரான் கண்ணன் தன்னை * என்று வடிவழகையும் குணங்களையும் ஸௌலப்பத்தையும் அநுஸந்தித்து இப்படிப்பட்ட எம்பெருமானோடே ஸம்ச்லேஷிக்கப் பெறவேணுமென்று கோலிக் கையை நீட்ட அப்பெருமான் அகப்படாதே கைகழிந்து நிற்க அத்தாலே கலங்கி மடலெடுக்கையிலே கைவைத்தாராழ்வார் என்கிறது.

ஏசறவே என்றவிடத்து 'ஏசவே' என்றும் பாடமுண்டென்றுவியாக்கியானத்திற்காண்கிறது.

ஊர நினைந்தமடல் ஊரவு மொண்ணாதபடி *
கூரிருள்சேர் கங்குலுடன் கூடிநின்று*—பேராமல்
தீதுசெய்ய, மாறன்திருவுள்ளத்துச் சென்றதுயர் *
ஓதுவதிங் கெங்ஙனேயோ. (௬௪)

| | | | |
|---|---|---|---|
| ஊர நினைந்த | தாம் ஊர்வதாக நினைத்துத் தொடங்கின | தீது செய்ய | உபத்திரவம் செய்ய, (அதனால்) |
| மடல் | மடலை | மாறன் | ஆழ்வாருடைய |
| ஊரவும் ஒண்ணாதபடி | ஊரமுடியாதபடியாக | திரு உள்ளத்து | திருவுள்ளத்தில் |
| கூர் இருள் சேர் கங்குல் | மிகுந்த இருள் செறிந்த இரவானது | சென்ற | சேர்ந்த |
| | | துயர் | துயரத்தை |
| உடன் கூடி நின்று | தன் பரிவாரத்தோடே சேர்ந்து நின்று | இங்கு ஓதுவது | இங்கு எடுத்துரைப்பதானது |
| பேராமல் | தொலையாமல் | எங்ஙனே ஓ | எப்படி முடியும்? |

* * * கீழ்த் திருவாய்மொழியிலே மடலூருவதாக ஒருப்பட்ட ஆழ்வார் அது செய்யமுடியாதபடிக்கு இருள் செறிந்த இராப்பொழுது வந்து இடையூறாக நின்றது ; அதுவுமல்லாமல் மிக்க

துன்பத்தையுமுண்டுபண்ணிற்று; அதனால் துன்பமுற்ற ஆழ்வாருடைய ஊரெல்லாந்துஞ்சியில் நிலைமை வாய்கொண்டு பேசவொண்ணாததாயிருந்த தென்கை. (சச)

எங்ஙனே நீர்முனிவ தென்னையினி நம்பியழகு *
இங்ஙனே தோன்றுகின்ற தென்முன்னே*— அங்ஙன்
உருவெளிப்பாடா வுரைத்த தமிழ்மாறன் *
கருதுமவர்க் கின்பக் கடல். (சரு)

| | | | |
|---|---|---|---|
| நீர் | தோழியரும் தாய்மாருமான நீங்கள் | உரு வெளிப்பாடு ஆ | உருவெளிப்பாடென்னும் பரிசிலே |
| இனி என்னை எங்ஙனே முனிவது | இனி என்னைச் சீறலாகுமோ? | உரைத்த | அருளிச் செய்த |
| நம்பி அழகு | திருக்குறுங்குடி நம்பியின் வடிவழகானது | தமிழ் மாறன் | த்ராவிட வேதப்ரவர்த்தகரான நம்மாழ்வார் |
| என் முன்னே | என் கண்ணெதிரில் | கருதுமவர்க்கு | தம்மைச் சிந்திப்பவர்களுக்கு |
| இங்ஙனே தோன்றுகின்றது அங்ஙன் | இதோ ப்ரத்யக்ஷமாய்த் தோற்றுகின்றதே!; என்று | இன்பம் கடல் | ஆனந்த ஸாகரமாயிருப்பர் |

* * * திருக்குறுங்குடி நம்பியின் திவ்யாவயவஸௌந்தர்யம், திவ்யாபரண ஸௌந்தர்யம் திவ்யாயுதஸௌந்தர்யம் ஆகிய அழகுகளிலே நெஞ்சுபறியுண்ட ஆழ்வார் அநவரதமும் அவற்றையே வாய்வெருவாநிற்க, அதுகண்ட தாய்மார் சீறி சிக்ஷிக்கப்புக, 'நான் நீங்கள் சிக்ஷிக்குமளவிலே நிற்கின்றேனில்லையே, உருவெளிப்பாட்டாலே நம்பியின் அழகு என் முன்னே வந்து தோன்றுகின்றதே! இனி என்னை நீங்கள் பகவத் விஷயத்தில் நின்றும் மீட்கப்பார்ப்பது பயனற்றதேயாகும்' என்று தெரிவித்தமை * எங்ஙனேயோ திருவாய்மொழியின் ப்ரமேயம்.

இத்திருவாய் மொழியில் ஆழ்வார்க்கு இன்பமும் துன்பமும் கலந்து உண்டாயிற்று. அப்படிப்பட்ட ஆழ்வாரைச் சிந்திப்பவர்களுக்கோ வென்னில், ஒருநாளும் துன்பமுண்டாக ப்ரஸக்தியில்லை, இன்பமேயாகும் என்றும் ஸூசிப்பித்தருளினாராயிற்று. (சரு)

கடன்ஞாலத் தீசனை முன்காணாமல் நொந்தே *
உடனா வனுகரிக்க லுற்று *—திடமாக
வாய்ந்தவனாய்த் தான் பேசும் மாற னுரையதனை *
ஆய்ந்துரைப்பா ராட்செயநோற் றார். (சசு)

| | | | |
|---|---|---|---|
| கடல் ஞாலத்து | கடல் சூழ்ந்த நிலவலயத்தில் | அவன் ஆய்தான் பேசும் | அவனாகவே தாம் அநுகரித்துப் பேசின |
| ஈசனை | எம்பெருமானை | மாறன் | ஆழ்வாருடைய |
| முன் காணாமல் | கண்முன்னே காணப்பெறாமல் | உரை அதனை | ஸ்ரீஸூக்திகளை |
| நொந்து | கிலேசப்பட்டு | ஆய்ந்து உரைப்பார் | வைபவமறிந்து அநுஸந்திப்பவர்கள் |
| உடன் ஆ அனுகரிக்கல் உற்று | அவனைத்தாம் அனுகரித்துத் தரிக்கப்பார்த்து | ஆள் செய | ஆழ்வார்க்கு அடிமை செய்ய |
| திடம் ஆக வாய்ந்து | திண்ணிய அத்யவஸாயம் கொண்டவராய் | நோற்றார் | நோன்புநோற்றவராவார்கள், |

* * * கீழ் * எங்ஙனேயோவென்னுந்திருவாய்மொழியில் உருவெளிப்பாடாய்ச் சென்றதித்தனைபோக்கி ஸாக்ஷாத்தாகக் காணப்பெற்றதில்லையே; அதனால் ஆழ்வார்க்கு க்லேசம்

மிக்கதாயிற்று அந்த க்லேசத்தை எவ்வழியாலே போக்கிக் கொள்ளலாமென்று பார்த்த ஆழ்வார் 'அனுகரித்துத்தரித்தல் என்று ஒன்றுண்டு' என்று திருவுள்ளம்பற்றி அப்படியே தத்பாவ பாவனைகொண்டு பேசினாராயிற்று* கடல் ஞாலத்தில். அப்படிப்பட்ட ஆழ்வாருடைய அருளிச்செயல்களைத் தரமறிந்து ஓதவல்லவர்கள் யாவரோ அவர்கள் ஆழ்வார்க்கு நித்யகைங்கரியம் பண்ண நோன்பு நோற்றவர்களெனக் கொள்ளத்தகுவர் என்றதாயிற்று. (சசு)

நோற்ற நோன்பாதியிலேன் உன்றனைவிட்டாற்றகில்லேன்
பேற்றுக்குபாய முன்றன் பேரருளே—சாற்றுகின்றேன்
இங்கென் னிலையென்னும் எழில்மாறன் சொல்வல்லார்
அங்கமரர்க் காரா வமுது. (சள)

| | | | |
|---|---|---|---|
| நோற்ற | ஸாதநாநுஷ்டானம் பண்ணிப் பெறப்பட்ட | சாற்றுகின்றேன் | துணிந்திருக்கின்றேன்; |
| நோன்பு ஆதி | கருமயோகம் முதலானவற்றை | இங்கு | இவ்விஷயத்தில் |
| இலேன் | உடையேனல்லேன்; | என் நிலை என்னும் | என்னுடைய உறுதி இதுவாயிருக்கும் என்றருளிச் செய்தவரான |
| உன் தன்னை விட்டு | தாரகனாய் போக்யனாயிருக்கிற வுன்னை விட்டு | எழில் மாறன் | அழகிய ஆழ்வாருடைய |
| | | சொல் | திருவாய் மொழியை |
| | | வல்லார் | ஓதவல்லவர்கள் |
| ஆற்ற கில்லேன் | தரித்திருக்க சக்தனல்லேன்; | அங்கு | திருநாட்டுக்குச் சென்ற பின்பு |
| பேற்றுக்கு | புருஷார்த்த ப்ராப்திக்கு | அமரர்க்கு | நித்யஸூரிகளுக்கு |
| உபாயம் | சாதனம் | ஆரா அமுது | ஆராத அமுதமாயிருக்கப் பெறுவர் |
| பேர் அருளே | பரமகிருபையே (என்று) | | |

*** எம்பெருமானே! உன்னுடைய நிர்ஹேதுக விஷயீகாரத்திற்கு இடையூறாக உபாயாந்தரங்களில் தலையீடு உடையேனல்லேன்; 'உன்னுடைய நிர்ஹேதுக க்ருபையே ஸாதனம் என்கிற மஹாவிச்வாஸமுடையேன்; இதுவாயிற்று என்னுடைய நிஷ்டை—என்று தம் உறுதியை* நோற்ற நோன்பிலேன் என்கிற திருவாய்மொழியில் விண்ணப்பஞ் செய்தவரான ஆழ்வாருடைய திவ்யஸூக்திகளை ஓதவல்லவர்கள் இவ்விபூதியில் ஸாம்ராஜ்யங்களையநுபவித்த பின்பு பரமபதத்திலும் நித்யமுக்தர்களாலே மிகவும் கொண்டாடப்பெறுவர் என்கை. (சள)

ஆரா வமுதாழ்வா ராதரித்த பேறுகளை *
தாராமையாலே தளர்ந்து மிக * —தீராத
ஆசையுடனாற்றாமை பேசி யலமந்தான்*
மாசறுசீர் மாறனெம்மான். (சஅ)

| | | | |
|---|---|---|---|
| எம்மான் | அஸ்மத்ஸ்வாமியும் | மிக தளர்ந்து | மிகவும் நெஞ்சுசிதலப்பட்டு |
| மாசு அறு சீர் | குற்றமற்ற திருக்குணங்களை யுடையவருமான | தீராத ஆசையுடன் | அநுபவத்தாலல்லது தீரமாட்டாத அபிநிவேசத்தாலே |
| மாறன் | ஆழ்வார் | ஆற்றாமை பேசி | தம்முடைய ஆற்றாமையை வெளியிட்டு |
| ஆதரித்த பேறுகளை | (திருக்குடந்தையிலே) தாம் ஆசைப்பட்ட பேறுகளை | அலமந்தான் | வருந்தினார், |
| ஆராவமுதாழ்வார் தாராமையாலே | ஆராவமுதப் பெருமான் அருள் செய்யாமையாலே | | |

*** திருக்குடந்தை யெம்பெருமான்பக்கலிலே ஆழ்வார் விரும்பின பேறுகளாவன—குளிரநோக்குதல்' குசலப்ரச்னம் பண்ணுதல், தழுவுதல் முதலியன. அவற்றை. ஆராவமுதன் தந்தருளாமையாலே ஆழ்வார் மிகவும் தளர்ந்து தம்முடைய ஆற்றாமையைப் பேசினாராயிற்று* ஆராவமுதே யென்னும் திருவாய்மொழியில், திருக்குடந்தை யெம்பெருமானுக்கு 'ஆராவமுதாழ்வார்' என்றே ஸம்பிரதாயத்திருநாமமாம். "ஆராவமுது, ஆழ்வாராதரித்த பேறுகளைத் தாராமையாலே" என்று சிலர்பிரித்துப் பொருள்கூறுவது சிறிதும் பொருந்தாது. (சஅ)

மாநலத்தால் மாறன் திருவல்லவாழ் புகப்போய் *
தானிளைத்து வீழ்ந்தவ்வூர் தன்னருகில் *—மேல்நலங்கித்
துன்பமுற்றுச் சொன்ன சொலவு கற்பார் தங்களுக்கு *
பின்பிறக்க வேண்டா பிற.

| | | | |
|---|---|---|---|
| மாறன் தான் | ஆழ்வார் | துன்பம் உற்று சொன்ன | வருந்தி யருளிச் செய்த |
| மா நலத்தால் | மிகுந்த ப்ரேமத்தோடே | | |
| திருவல்லவாழ் புக போய் | திருவல்லவாழிலே சென்று சேரப் புறப்பட்டு | சொலவு | ஸ்ரீஸூக்திகளை |
| | | கற்பார் தங்களுக்கு | கற்குமவர்களுக்கு |
| அவ் ஊர் தன் அருகில் | அத்தலத்தில் ஸமீபத்தில் | பின் | இனி மேலும் |
| இளைத்து வீழ்ந்து | தளர்ந்து விழுந்து | பிற | வேறு பிறப்புகள் |
| மேல் | இதற்கு மேலே | | |
| நலங்கி | (தோழிமாருடைய நிஷேதவசனங்களாலும்) நலிவுபட்டு | பிறக்க வேண்டா | பிறக்கவேண்டியிராது (முக்திஸாம்ராஜ்யமாகும்), |

*** திருக்குடந்தையிலே தம்முடைய மநோரத ஸித்திபெறாத ஆழ்வார் திருவல்ல வாழ் நகரிலாவது சென்று களிப்போமென்று அங்கேறச் செல்லப் புறப்பட்டு முட்ட முடியப் போகப் பெறாமே புறச்சோலையளவிலேயே தளர்ந்து விழுந்து ஆற்றாமை கரை புரண்டு அருளிச் செய்த *மானேய்நோக்குத் திருவாய்மொழியைக் கற்பவர்களுக்கு இனி யொருநாளும் பிறவித்துன்பம் நேராமே பேரின்பமெய்தலாகும் என்றதாயிற்று. (சகூ)

பிறந்துலகங் காத்தளிக்கும் பேரருட் கண்ணா* உன்
சிறந்தகுணத்தா லுருகுஞ் சீலத்—திறந்தவிர்ந்து*
சேர்ந்தனுபவிக்கும் நிலை செய்யென்ற சீர்மாறன்*
வாய்ந்தபதத்தே மனமே வைகு.

| | | | |
|---|---|---|---|
| பிறந்து | பல பிறப்பும் பிறந்து | சேர்ந்து அனுபவிக்கும் நிலை | பொருந்தி அனுபவிக்கும்படியான நிலைமையை |
| உலகம் காத்து அளிக்கும் | உலகங்களை ரக்ஷித்தருளா நின்ற | செய் என்ற | செய்தருள வேணுமென்று பிரார்த்தித்த |
| பேர் அருள் கண்ணா | பரமதயாளுவான கண்ணபிரானே! | சீர் மாறன் | ஆழ்வாருடைய |
| உன் சிறந்த குணத்தால் | உனது உயர்ந்த திருக்குணங்களால் | வாய்ந்த பதத்தே | ப்ராப்தமான திருவடிகளிலேயே |
| உருகும் சீலம் திறம் தவிர்ந்து | நெஞ்சு உருகும்படியான தன்மை நீங்கி | மனமே வைகு | நெஞ்சே நீ பொருந்தியிரு |

*** விபவாவதார குண சேஷ்டிதங்களைச் சிந்தை செய்யப்புகுந்த ஆழ்வார் அவற்றைச் சிந்தை செய்ய முடியாமல் நெஞ்சு உருகிப்போகவே, அந்த எம்பெருமானையே நோக்கி 'பிரானே! இப்படி உருகிப்போகாமல் தரித்து நின்று அனுபவிக்கும்படியாக நீயே க்ருபை

பண்ணி யருளவெணுமென்று * பிறந்தவாறுமென்கிற திருவாய் மொழியில் ப்ரார்த்தித்தார்; அவருடைய திருவடிகளே சிந்திக்கத்தக்கன—என்றாராயிற்று (ருo)

வைகல் திருவண்வண்டூர் வைகு மிராமனுக்கு* என்
செய்கைதனைப் புள்ளினங்காள்! செப்புமென *—கைகழிந்த
காதலுடன் தூதுவிடும் காரிமாறன் கழலே*
மேதினியீர் நீர்வணங்குமின். (ருக)

| | | | |
|---|---|---|---|
| புள் இனங்காள் | பறவைக்கூட்டங்களே! | கை கழித்த காதலுடன் | மிகப்பெரிய ப்ரேமத்துடனே |
| திருவண் வண்டூர் | திருவண்வண்டூரிலே | தூது விடும் | அந்தப் பறவைகளைத் தூதுவிட்ட |
| வைகல் வைகும் | எப்போதும் எழுந்தருளியிருக்கின்ற | காரி மாறன் கழலே | ஆழ்வாருடை திருவடிகளையே |
| இராமனுக்கு | ஸ்ரீ ராமபிரானிடத்திலே | மேதினியீர் | பூமியிலுள்ளவர்களே! |
| என் செய்கைகளை செப்பும் என | எனது செய்திலைச் சொல்லுங்கோளென்று | நீர் வணங்குமிர் | நீங்கள் வணங்குங்கோள் |

*** பக்ஷிகளை விளித்து 'நீங்கள் திருவண்வண்டூரிலே சென்று அங்கு எழுந்தருளியிருக்கின்ற விபவத்திருக்கோலமான ஸ்ரீராமபிரானுக்கு என்னுடைய விரஹவேதனையைத் தெரிவித்து அங்கிருந்து நல்ல சமாசாரம் கொண்டுவரவேணும்' என்று* வைகல்பூங்கழி வாயிலே சொல்லி அந்தப்பறவைகளைத் தூதுபோகவிட்ட ஆழ்வாருடைய திருவடிகளை வணங்குவதே மாநிலத்தவர்களுக்கு நலமென்றவாயிற்று (ருக)

மின்னிடையார் சேர்கண்ணன் மெத்தனவந்தா னென்று*
தன்னிலை போய்ப்பெண்ணிலையாய்த்! தான்தள்ளி *—உன்னுடனே
கூடேனென்றூடும் குருகையர்கோன் தாள்தொழவே*
நாடோறும் நெஞ்சமே! நல்கு. (ருஉ)

| | | | |
|---|---|---|---|
| மின் இடையார் சேர் கண்ணன் | மின்போன்ற நுண்ணிடையை யுடையவரான ஆய்ச்சியரோடு சேர்ந்து போது போக்கின கண்ணபிரான் | பெண் நிலை ஆய் | ஸ்த்ரீ பாவனை யடைந்து |
| மெத்தென வந்தான் என்று | (அதனால்) தாமதித்து வந்தானென்றெண்ணி (ஆழ்வார்) | தான் தள்ளி | (அப்பெருமானைத் தாம் திரஸ்கரித்து |
| தன் நிலை போம் | தாமான தன்மை தவிரப்பெற்று | உன்னுடனே கூடேன் என்று ஊடும் | உன்னோடு சேரமாட்டேனென்று ஊடின |
| | | குருகையர் கோன் | சடகோபருடைய |
| | | தாள் தொழவே | திருவடிகளையே தொழுமாறு |
| | | நெஞ்சமே! | மனமே! |
| | | நாள்தோறும் நல்கு | -எப்போதும் அருள்செய்வாயாக. |

*** கீழ்த் திருவாய்மொழியில் தூது விட்டவாறே எம்பெருமான் ஓடிவர, இப்படி நாம் தூது விட்டழைக்க வேண்டும்படி தாமதித்ததற்கு என்னகாரண மிருக்குமென்று ஆராய்ந்த ஆழ்வார், இவன் வேறு பெண்டிரோடே கலந்திருந்து போதுபோக்கி யிருந்தானத்தனை என்று கருதி ப்ரணய ரோஷத்தாலே நீ எங்கள் கோஷ்டியில் வரலாகாது, உன்னோடு நான் கூடமாட்டேன் என்று கதவடைத்துத் தள்ளினபடியைக் கூறும் *மின்னிடைமடவார் திருவாய்மொழி. இங்ஙனே லீலாரஸங்கொண்டாடின ஆழ்வாருடைய திருவடிகளே சரணமென்றதாயிற்று. (ருஉ)

நல்லவலத்தால் நம்மைச் சேர்த்தோன் முன் நண்ணுரை*
வெல்லும் விருத்தவிபூதியனென்று*—எல்லையறத்
தானிருந்துவாழ்த்தும் தமிழ்மாறன் சொல்வல்லார்*
வானவர்க்கு வாய்த்தகுரவர். (ருங)

| | | | |
|---|---|---|---|
| நல்லவலத்தால் | (பந்து பறித்தல் முதலிய) நல்ல வன்மையால் | எல்லை அற | முடிவில்லாமல் |
| நம்மை சேர்த்தோன் | (ஊடலை நீக்கி) நம்மைச் சேரவிட்டுக் கொண்டவன் | தான் இருந்து வாழ்த்தும் | தாமிருந்து ஸ்தோத்ரம் பண்ணின |
| முன் | முன்னம் | தமிழ் மாறன் சொல் வல்லார் | ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தியை அதிகரிக்க வல்லவர்கள் |
| நண்ணாரை வெல்லும் | பகைவர்களை வென்றவனைப் | வானவர்க்கு | நித்யஸூரிகளுக்கு |
| விருத்த விபூதியன் என்று | ஒன்றோடொன்று சேராத விருத்த விபூதிகளையுடையவனென்று பரக்கப் பேசி | வாய்த்த குரவர் | பொருத்தமான குருக்களாவர். |

*** வைகல்பூங்கழிவாயில் தூதுவிடவேண்டும்படி எம்பெருமான் தாமதித்திருந்ததினாலே ப்ரணயரோஷம் தலையெடுத்து 'உன்னோடே கூடமாட்டேன்' என்று உறுதிகொண்டிருந்த ஆழ்வாரை எம்பெருமான் நல்லவலத்தால் சேர்த்துக்கொண்டான்; நல்லவலமாவது—பந்து கழல் முதலிய லீலோபகரணங்களைப் பறித்துக்கொள்ளுதல், பலவகையாக வாக்குவாதங்கள் செய்தல் முதலியவையாம், அவை கீழ்த் திருவாய்மொழியில் விசதம். இங்ஙனே நல்லவலத்தால் கூடுவித்துக்கொண்ட பெருமான், முன்னே மஹாபலசாலிகளையும் வென்றவனாதலால் அபலைகளான நம்மை வெல்லுதல் அவனுக்குப் பணியோ என்றிருந்த ஆழ்வார்க்கு எம்பெருமான் தன்னுடைய விருத்த விபூதியோகத்தைக் காட்டிக்கொடுத்து இதையும் பாரீர் என்ன, அங்ஙனமே பார்த்து வாழ்த்தின * நல்குரவு மென்ற திருவாய்மொழியை ஓதவல்லவர்கள் வானவராலும் கொண்டாடப்பெறுவர்கள் என்றதாயிற்று. (௫௩)

குரவை முதலாம் கண்ணன் கோலச்செயல்கள் *
இரவுபக லென்னாமல் என்றும்* —பரவுமனம்
பெற்றேனென்றே களித்துப் பேசும்பராங்குசன் தன் *
சொல்தேனில் நெஞ்சே! துவள், (௫௪)

| | | | |
|---|---|---|---|
| கண்ணன் | கண்ணபிரானுடைய | பரவு மனம் பெற்றேன் என்றே களித்து பேசும் | அநுபவிக்கும்படியான நெஞ்சு படைத்தேனென்று களித்தருளிச் செய்த |
| குரவை முதல் ஆம் கோலம் செயல்கள் | ராஸக்ரீடை முதலான அழகிய சேஷ்டிதங்களை | பராங்குசன் தன் | நம்மாழ்வாருடைய |
| இரவு பகல் என்னாமல் என்றும் | இரவு பகல் என்கிற வாசியின்றிக்கே எக்காலத்திலும் | சொல் தேனில் | ஸ்ரீஸூக்தியாகிற மதுவிலே |
| | | நெஞ்சே | ஓ! மனமே! |
| | | துவள் | நீ ஈடுபட்டிரு. |

*** கண்ணபிரான் செய்தருளின ராஸக்ரீடை முதலான திவ்யசேஷ்டிதங்களிலே அஹோராத்ர விபாகமற எப்போதும் ஈடுபட்டு அவற்றையே அநுபவிக்கும்படியான நெஞ்சு பெற்றேனே! என்று மிக்க களிப்புடனே * குரவையாய்ச்சியர் பதிகம் பேசின ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தி யமுதமே நமக்குப் பரமபோக்யம் என்றதாயிற்று. (௫௪)

துவளறுசீர் மால்திறத்துத் தொன்னலத்தால் * நாளும்
துவளறுதன் சீலமெல்லாம் சொன்னான் * —துவளறவே
முன்னமனுபவத்தில் மூழ்கிநின்ற மாறன், அதில்
மன்னுமுவப்பால் வந்தமால். (ருரு)

| | | | |
|---|---|---|---|
| முன்னம் | கீழ்த்திருவாய் மொழியில் | துவள் அறு சீர் மால் திறத்து | குற்றமற்ற கல்யாண குணங்களையுடைய எம்பெருமான் விஷயத்தில் |
| அனுபவத்தில் | எம்பெருமானை யனுபவிக்குந்திறத்தில் | தொல் நலத்தால் | இயற்கையான பக்தியினால் |
| துவள் அற | ஒரு குறைவு மின்றிக்கே | நாளும் துவள் அறு | நித்ய நிர்துஷ்டமாயிருக்கின்ற |
| மூழ்கி நின்ற மாறன் | பரிபூரணமாக அவகாஹிக்கப் பெற்றிருந்த ஆழ்வார் | தன் சீலம் எல்லாம் சொன்னான் | தம் படிகளையெல்லாம் அருளிச்செய்தார். |
| அதில் மன்னும் உவப்பால் வந்த மால் | அவ்வனுபவத்தில் பொருந்தி நிற்கப்பெற்ற ஆனந்தத்தாலுண்டான வியாமோஹத்தினால் | | |

*** துவளில் மாமணி மாடத் திருவாய் மொழியானது ஆழ்வார் தம்முடைய படிகளைத் தாமே தெரிவிப்பது என்று ஈட்டிலருளிச்செய்தபடியே இங்குமருளிச்செய்கிறார். "மாறன் தன் சீலமெல்லாம் சொன்னான்" என்கிறார். ஹேயகுணம் சிறிது மின்றிக்கே ஸமஸ்த கல்யாண குணாத்மகனான எம்பெருமான் விஷயத்தில் பக்தியடியாகத் தமக்குண்டான படிகளையெல்லாம் இத்திருவாய் மொழியில் ஆழ்வார் அருளிச்செய்தார்; அதற்குக் காரணமென்னவென்னில், கீழ்த் திருவாய் மொழியில் விளைந்த அநுபவமே என்றதாயிற்று. (ருரு)

மாலுடனே தான் கலந்து வாழப்பெறாமையால் *
சாலநைந்து தன்னுடைமை தானடையக்—கோலியே *
தானிகழவேண்டாமல் தன்னைவிடல் சொல்மாறன் *
ஊனமறுசீர் நெஞ்சே யுண். (ருசு)

| | | | |
|---|---|---|---|
| மாலுடனே | பரம புருஷனோடு | தன்னை விடல் சொல் மாறன் | அவை தன்னடையே முற்கோலித் தம்மைக் கட்டடங்க விட்டு அகன்றபடியை அருளிச் செய்த ஆழ்வாருடைய |
| தான் கலந்து வாழ பெறாமையால் | தாம் கூட வாழப் பெறாமையாலே | | |
| சால நைந்து | மிகவும் தளர்ந்து | | |
| தன் உடைமை தான் அடைய | தம்முடைய ஆத்மாத்மீயங்களை யெல்லாம் | ஊனம் அறு சீர் | குற்றமற்ற திருக்கல்யாண குணங்களை |
| கோலி தான் இகழ வேண்டாமல் | ஸ்வப்ரயத்ந பூர்வமாக விடவேண்டாமல் | நெஞ்சே உண் | மனமே நீ அனுபவிப்பாயாக. |

*°* ஆழ்வார் தாம் எம்பெருமானோடு கூடி வாழப்பெறாமையால் மிகவும் தளர்ச்சியடைந்து ஆத்மீயங்களெல்லாம் தம்மை விட்டு அகன்ற படியை* மாலுக்குவையமளந்த திருவாய்மொழியில் அருளிச்செய்தார் என்றதாயிற்று. கீழே நாலாம்பத்தில் *ஏருளுமிறையோனும் என்கிற திருவாய் மொழியிற் காட்டிலும் இத்திருவாய் மொழிக்கு வாசியருளிச் செய்வதற்காக "கோலியே தானிகழவேண்டாமல்" என்றருளிச் செய்தது. அத்திருவாய் மொழியில் ஆத்மாத்மீயங்களை ஸ்வப்ரயத்நபூர்வமாக ஆழ்வார் கைவிட்டார்; இத்திருவாய் மொழியில் அங்ஙனமன்றிக்கே அவை தன்னடையே விட்டொழிந்தமை கூறல் வாசியென்க. (ருசு)

உண்ணுஞ்சோறுதி யொருமூன்று மெம்பெருமான் *
கண்ணனேனென்றே நீர்மல்கிக் கண்ணிணைகள் — * மண்ணுலகில்
மன்னுதிருக்கோளூரில் மாயன்பால் போம்மாறன் *
பொன்னடியே நந்தமக்குப் பொன்: (ருஎ)

| | | | |
|---|---|---|---|
| உண்ணும் சோறு ஆதி ஒரு மூன்றும் | உண்ணும் சோறு முதலான தாரக போஷக போக்யங்கள் மூன்றும் | மண் உலகில் மன்னு | இந்நிலவுலகில் நிலைபெற்றிருக்கிற |
| எம்பெருமான் கண்ணன் என்றே | எம்பெருமானாகிய ஸ்ரீ க்ருஷ்ணனே என்று அத்யவஸித்திருந்து | திருக்கோளூரில் | திருக்கோளூரிலுள்ள |
| கண் இணைகள் நீர் மல்கி | இரண்டு கண்களிலும் நீர் ததும்பப்பெற்று | மாயன் பால் போம் | வைத்தமா நிதிப்பெருமாளிடம் செல்லப் புறப்பட்ட |
| | | மாறன் | ஆழ்வாருடைய |
| | | பொன் அடியே | அழகிய திருவடிகளே |
| | | நம் தமக்கு பொன் | நமக்குத் தனமாகும். |

* * * "வாஸுதேவஸ் ஸர்வம்" என்ற படியே சோறு நீர் வெற்றிலைகளாகிய தாரக போஷக போக்யங்களெல்லாம் கண்ணனெம் பெருமானே யென்கிற அத்யவஸாயம் நிரம்பப் பெற்றிருந்து கண்ணீரைக் கொண்டே நிரூபணீயரான ஆழ்வார் *உண்ணுஞ்சோறு திருவாய்மொழியில் திருக்கோளூர்க்குச் செல்லப்புறப்பட்டார். அவருடைய திருவடிகளே நமக்குத் தஞ்சம். (ருஎ)

பொன்னுலகுபூமியெல்லாம் புள்ளினங்கட்கே வழங்கி *
என்னிடரை மாலுக்கியம்புமென் — * மன்னுதிரு
நாடுமுதல் தூது நல்கிவிடும்மாறனையே *
நீடுலகில் போய்வணங்கும் நீர். (ருஅ)

| | | | |
|---|---|---|---|
| பொன் உலகு பூமி எல்லாம் | நித்ய விபூதி லீலாவிபூதியாகிய எல்லாவற்றையும் | மன்னு திரு நாடு முதல் | நித்யவைகுண்டம் முதலான இடங்களில் |
| புள் இனங்கட்கே வழங்கி | பறவைக் கணங்களுக்கே கொடுப்பதாகச் சொல்லி | தூது நல்கி விடும் | (பக்ஷிகளைத்) தூதாக விரும்பிப் போகவிட்டருளின |
| என் இடரை மாலுக்கு இயம்பும் என | (நீங்கள்) எனது துயரை எம்பெருமானிடம் சென்று சொல்லுங்கோள் என்று | மாறனையே | ஆழ்வாரையே |
| | | நீடு உலகீர் | பெரிய உலகத்தீர்களே ! |
| | | நீர் போய் வணங்கும் | நீங்கள் சென்று வணங்குங்கள் |

* * * உபய விபூதியையும் வழங்குவதாக வாக்களித்துப் புள்ளினங்களை விளித்து "திருநாட்டிலோ அந்தர்யாமித்வத்திலோ எங்கேயாவது எம்பெருமானைக் கண்டுபிடித்து நீங்கள் எனது பிரிவாற்றாமையை அவனுக்கு அறிவிக்கவேணும் என்று சொல்லிப் *பொன்னுலகாளீரோபதிகத்தில தூது விட்ட ஆழ்வாரையே அனைவரும் வணங்க வேணுமென்றாராயிற்று. (ருஅ)

நீராகிக் கேட்டவர்கள் நெஞ்சழிய * மாலுக்கும்
ஏரார்விசும்பி லிருப்பரிதா — * ஆராத
காதலுடன் கூப்பிட்ட காரிமாறன் சொல்லை *
ஓதிடவே யுய்யு முலகு. (ருகூ)

| | | | |
|---|---|---|---|
| கேட்டவர்கள் | (தம்முடைய ஆர்த்த நாதத்தைக்) கேட்டவர்கள் | இருப்பு அரிதா | எழுந்தருளியிருத்தல் அஸாத்யமாம்படியாகவும் |
| நீர் ஆகி நெஞ்சு அழிய | நீராய்க் கரைந்து நெஞ்சு சிதில மாகும்படியும் | ஆராத காதலுடன் | பரிபூர்ண ஆசையோடு |
| | | கூப்பிட்ட | அவனைக் கூவியழைத்த |
| மாலுக்கும் | ஸர்வேச்வரனுக்கும் | காரி மாறன் | நம்மாழ்வாருடைய |
| ஏர் ஆர் விசும்பில் | செல்வம் மிகுந்த பரமபதத்திலே | சொல்லை | அருளிச் செயலை |
| | | ஓதிடவே | ஓதின வளவிலே |
| | | உலகு உய்யும் | உலகம் உஜ்ஜீவிக்கும் |

***கேட்டவர்கள் நெஞ்சுருகிக் கரையும்படியாகவும் எம்பெருமானுங்கூடத் திருநாட்டில் தரித்திருக்க முடியாதபடியாகவும் பெருமிடறுசெய்து *நீராய் நிலனாய்ப் பதிகத்தில் கூப்பிட்டழைத்த ஆழ்வாருடைய திவ்யஸூக்தியை அதிகரிக்கவே உலகம் உஜ்ஜீவித்ததாகும். (ருசு)

உலகுய்ய மால்நின்ற உயர்வேங்கடத்தே *
அலர்மகளை முன்னிட்டு அவன்தன்—மலரடியே *
வன்சரணச் சேர்ந்த மகிழ்மாறன் தாளிணையே *
உன்சரணய் நெஞ்சமே உள். (சூய)

| | | | |
|---|---|---|---|
| மால் | ஸர்வேச்வரன் | வன் சரண் ஆய் சேர்ந்த | திண்ணிய உபாயமாகப் பற்றின |
| உலகு உய்ய நின்ற | ஸகல லோகங்களும் உஜ்ஜீவிக்கும்படியாக நின்ற | மகிழ் மாறன் | வகுளாபரணரான நம்மாழ்வாருடைய |
| உயர் வேங்கடத்தே | உயர்ந்த திருமலையிலே | | |
| அலர் மகளை முன்னிட்டு | பெரிய பிராட்டியாரைப் புருஷகாரமாக முன்னிட்டுக் கொண்டு | தாள் இணையே நெஞ்சமே | உபாயபாதங்களையே, ஓ மனமே! |
| அவன் தன் மலர் அடியே | அப்பெருமானுடைய திருவடித்தாமரைகளையே | உன் சரண் ஆய் உள் | உனக்குப் புகலாக ப்ரதிபத்தி பண்ணு. |

***"கானமும் வானரமும் வேடுமுடை வேங்கடம்" என்கிறபடியே இன்னாரினையாரென்கிற வாசியின்றிக்கே ஸகலப் பிராணிகளும் உஜ்ஜீவிக்கும்படியாகத் திருமலையிலே யெழுந்தருளியிருக்கின்ற திருவேங்கடமுடையானுடைய திருவடிகளைப் பிராட்டி புருஷகாரமாகப் பற்றின படியை *உலகமுண்ட திருவாய் மொழியிலருளிச் செய்த நம்மாழ்வாருடைய திருவடிகளே நமக்குத் தஞ்சமென்றாராயிற்று. (சூய)

உண்ணிலாவைவருடனிருத்தி இவ்வுலகுல் *
எண்ணிலாமாயன் எனைநலிய—எண்ணுகின்றான் *
என்று நினைந்தோலமிட்ட இன்புகழ்சேர்மாறனென *
குன்றிவிடுமே பவக்கங்குல். (சூக)

| | | | |
|---|---|---|---|
| எண் இலா மாயன் | எண்ணிறந்த ஆச்சரிய குணசேஷ்டிதங்களையுடையனான எம்பெருமான் | எண்ணுகின்றான் என்று நினைந்து | திருவுள்ளம்பற்றிவிட்டானென்றெண்ணி |
| | | ஓலம் இட்ட | முறையிட்ட |
| இ உலகில் | இந்நிலவுலகத்திலே | இன் புகழ் சேர் | மஹாயசஸ்வியான |
| உள் நிலாவு ஐவருடன் இருத்தி | உள்ளே வர்த்திக்கிற பஞ்சேந்திரியங்களாகிற பகைவருடன் இருக்கச்செய்து | மாறன் என | ஆழ்வார் என்று அநுஸந்தித்தவாறே |
| எனை நலிய | என்னை ஹிம்ஸிக்க | பவம் கங்குல் குன்றி விடும் | ஸம்ஸாரமாகிற காளராத்திரி ஒழிந்துபோம். |

*** ஆழ்வாரை இங்நிலத்திலே வைத்தது அஸ்மதாதிகளுக்காக. இங்நிலத்திலிருக்குமள வும் இந்திரியங்களோடேயிருக்கவேண்டியது ஸஹஜம். ஆகவே எம்பெருமான் ஆழ்வாரையும் இந்திரியங்களோடே வைக்கவேண்டியதாயிற்று. அதுகண்டவாழ்வார் "இந்திரியங்களானவை எப்படிப்பட்டவர்களையும் படாதபாடு படுத்துமவவையல்லவோ. இப்படிப்பட்ட இந்திரியங்க ளோடே நம்மை வைத்திருப்பது நலிகைக்காகவே போலும்" என்றெண்ணி அப்பெருமானை நோக்கி ஓவென்று முறையிட்டார் *உண்ணிலாவிய வென்னுந் திருவாய்மொழியில். அப்படிப் பட்ட ஆழ்வார் திருநாமத்தை உச்சரிததவளவிலேயே நம்முடைய ஸம்ஸாரபந்தம் தொலையும்.

கங்குல்பகலரதி கைவிஞ்சி மோகமுற* (சூக)
அங்கதனைக் கண்டோ ரரங்கரைப் பார்த்து—* இங்கிவள்பால்
என்செய நீ ரெண்ணுகின்ற தென்னுநிலை சேர்மாறன்*
அஞ்சோலுற நெஞ்சுவெள்ளையாம். (சூஉ)

| | | | |
|---|---|---|---|
| கங்குல் பகல் | இரவிலும் பகலிலும் | இங்கு இவள் பால் என் செய நீர் எண்ணுகின்றது என்னும் நிலை சேர் மாறன் | 'இத்தகைய நிலைமையில் இவள் திறந்து நீர் செய்ய நினைத்திருப்பது என்ன?' என்று கேட்கவேண்டும்படியான அவஸ்தையையடைந்த ஆழ்வாருடைய |
| அரதி கைவிஞ்சி | ஆற்றாமை அதிகப்பட்டு | | |
| மோகம் உற | (ஆழ்வார்) மோஹமடைந்திட, | | |
| அங்கு அதனை கண்டோர | அந்தநிலைமையைப் பார்த்த திருத்தாயார் | அம் சொல் உற | ஸ்ரீஸூக்தியை யநுஸந்திக்க |
| அரங்கரை பார்த்து | ஸ்ரீரெங்கநாதனை நோக்கி | நெஞ்சு வெள்ளை ஆம் | ஹ்ருதயம் பரிசுத்தமாகும். |

*** கீழ்த்திருவாய் மொழியாகிய* உண்ணிலாவிய பதிகத்திலுண்டான தளர்ச்சியானது மிகவும் அதிகரித்து உணர்த்தியழிந்து மூர்ச்சிக்கும்படியான நிலமை நேர்ந்தவளவிலே, "கோயில் திருவாசலிலே முறைகெட்ட கேள்வியாக்கி" என்ற ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீஸூக்திப் படியே பராங்குச நாயகியைத் திருததாயார் கோயில் திருவாசலிலே யிட்டுவைத்து, பெரிய 'பெருமாளே! இப்பெண்பிள்ளை திறத்து நீர் செய்ய நினைத்திருப்பது யாது? இப்படி இவளைக் கைவிடுகை தருமமோ? என்று கேட்கிறபடியாய்ச் சென்றது *கங்குலும் பகலும்பதிகம்

அரதி—வட சொல். ஆற்றாமை. (சூஉ)

வெள்ளிய நாமங்கேட்டு விட்டகன்றபின்மோகம்*
தெள்ளியமால் தென்திருப்பேர் சென்றுபுக—உள்ளமங்கே
பற்றிநின்றதன்மை பகரும் சடகோபற்கு*
அற்றவர்கள் தாமாழியாா. (சூந)

| | | | |
|---|---|---|---|
| வெள்ளிய நாமம் கேட்டு | போக்யமான பகவந் நாமங்களைத் தாய் சொல்லக் கேட்டதனால் | உள்ளம் அங்கே பற்றி நின்ற தன்மை பகரும் | தமது திருவுள்ளம் அவ்விடத்திலேயே பிரவணயானபடியை அருளிச் செய்த |
| மோசம் விட்டு அகன்ற பின் | மூர்ச்சை தெளிந்த பின்பு | சட கோபற்கு | ஆழ்வார் பக்கலிலே |
| தெள்ளிய மால் | ஸர்வஜ்ஞன ஸர்வேச்வரனுடைய (திருப்பதிகளுள் ஒன்றான) | அற்றவர்கள் தாம் | அற்றுத் தீர்ந்தவர்கள் [அநந்யார்ஹசேஷபூதர்கள்] |
| தென் திருப்பேர் சென்று புக | தென் திருப்பேரெயில் போய்ப் பிரவேசிக்க | ஆழியார் | கம்பீர ஹ்ருதயர்களாவர். |

*** கீழ்த்திருவாய் மொழியாகிய *கங்குலும் பகலில் திருத்தாயார் வாக்கிலே தோன்றிய சில திருநாமங்களைக் கேட்கப்பெற்ற வளவிலே மூர்ச்சை தீர்ந்தொழிய, உணர்ச்சிபெற்ற ஆழ்வார் தென்திருப்பேரெயில் என்னும் திருப்பதியிலே சென்று சேரவேணுமென்கிற ஆசையை வெளியிட்டருளினர் *வெள்ளைச் சுரிசங்கு திருவாய்மொழியிலென்க.

இப்பாட்டின் இரண்டாமடியில் "தென்திருப்பேர்" என்றே உலகமெங்கும் பாடம் வழங்கிவருகின்றது. சோழ நாட்டுத் திருப்பதிகளுள் ஒன்ருன அப்பக்குடத்தான் ஸந்நிதிக்கே தென் திருப்பேரென்று வியவஹாரம். அந்தத் திருப்பதி இங்கு விஷயமன்று. பாண்டி நாட்டுத் திருப்பதிகளுள் ஒன்ருன தென் திருப்பேரையே இங்கு விவக்ஷிதம். ஆகவே 'தென் பேரை' என்று பாடமிருந்திருக்கலா மென்பர் பெரியோர். பேரை என்பது திருநாமமன்றென்றும், பேரெயில் என்பதே திருநாமமென்றும் வியாக்கியானங்களினுல் ஏகதேசக்ரஹணமாகத் தென்திருப்பேர் என்றிருக்கத்தகுதியுண்டு. (சூங)

ஆழிவண்ணன் தன் விசயமானவை முற்றுங்காட்டி*
வாழிதனுலென்று மகிழ்ந்து நிற்க —*ஊழிலவை
தன்னையின்று போல் கண்டு தானுரைத்த மாறன்சொல்*
பன்னுவரே நல்லது கற்பார். (சூச)

| | | | |
|---|---|---|---|
| ஆழி வண்ணன் | கடல் வண்ணனுன எம் பெருமான் | இன்று போல் கண்டு | இன்று நடந்தவை போல் ஸாக்ஷாத்கரித்து |
| தன் விசயம் ஆனவை முற்றும் காட்டி | தன்னுடைய விஜய பாம்பரைகள் முழுவதும் காட்டி | தான் உரைத்த மாறன் | தாம் அநுபவித்ததற்குப் போக்கு வீடாகப் பாசுர மருளிச் செய்த |
| இதனுல் வாழ் என்று | இவற்றை யநுபவிப்பதனுல் வாழ்ந்துபோமென்று (ஆழ்வாரை நோக்கிக்) கூறி | சொல் | ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்திகளை |
| | | பன்னுவரே | அநுஸந்திப்பவர்களே |
| மகிழ்ந்து நிற்க | உகந்திருக்க, | நல்லது கற்பார் | நல்ல நூல்களைக் கற்பவராவர். |
| ஊழிலவை தன்னை | பழையனவாய்க் கழிந்த அந்த விஜயாபதானங்களை | | |

*** எம்பெருமான் ஆழ்வாரை ஒருவாறு தரிப்பிக்க வேண்டித் தன்னுடைய அபதானங்களாகிய மூவுலகளத்தல், கடல் கடைதல், நிலமிடத்தல், பிரளயம் காத்தல், பாரதம் கைசெய்தல் முதலிய சரித்திரங்களைக் காட்டிக்கொடுத்து 'ஆழ்வீர்! இவற்றைப் பேசியநுபவித்து வாழக்கடவீர்' என்றருளிச் செய்ய, ஆழ்வாரும் அவற்றையெல்லாம் தற்காலத்திற்போலக் கண்டு களித்துப் பேசியனுபவித்தார் *ஆழியெழவென்னும் பதிகத்தில்.

'நல்லது கற்பார் மாறன்சொல் பன்னுவர்' என்று அந்வயித்து, நல்ல ஸ்ரீஸூக்திகளைக் கற்க விருப்பமுடையவர்கள் ஆழ்வார் ஸ்ரீஸூக்தியைக் கற்பர்கள் என்று முரைக்கலாம். (சூச)

கற்றோர் கருதும் விசயங்களுக்கெல்லாம்*
பற்றும் விபவக் குணப்பண்புகளை—*உற்றுணர்ந்து (சூச)

மண்ணிலுள்ளோர் தம்மிழவை வாய்ந்துரைத்த மாறன்சொல்*
பண்ணிலினிதான தமிழ்ப் பா. (௬௫)

| | | | |
|---|---|---|---|
| கற்றோர் கருதும் | கற்றவர்களால் தியானிக்கப்படுகிற | மண்ணில் உள்ளோர் தம் இழவை | இம்மண்ணுலகத்தவர்கள் பகவதநுபவத்தை இழக்கும்படியை |
| விசயங்களுக்கு எல்லாம் பற்று ஆம் | வெற்றிச் சரிதைகளுக்கெல்லாம் ஆலம்பனமாயிருக்கிற | வாய்ந்து உரைத்த | பொருத்தமாக எடுத்துரைத்த |
| விபவகுணம் பண்புகளை | விபவாவதார குணஸ்வபாவங்களை | மாறன் சொல் | ஆழ்வார் அருளிச்செயலானது |
| உற்று உணர்ந்து | ஆராய்ந்தறிந்து, | பண்ணில் இனிது ஆன தமிழ் பா | பண்ணிசையில்பரமபோக்யமான த்ராவிடவேதம் |

* * * கீழ்த்திருவாய்மொழியாகிய * ஆழியெழவென்னும் பதிகத்தில் அநுஸந்தித்த விஜய பரம்பரைக்கு அடியான விபவாவதார குண ஸ்வபாவங்களை அநுஸந்தித்து 'படுக்கைக்கீழே தனங் கிடக்கக் கால்வீங்கிச் சாவாரைப்போலே இப்படிப்பட்ட மஹாநிதியுண்டாயிருக்க இவ்வுலகத்தவர்கள் இத்தையிழந்து அனர்த்தப்படுவதே!' என்று ஸம்ஸாரிகளிழவுக்கு வெறுத்து உரைத்த பதிகம் * கற்பாரிராமபிரானை யென்பது.

கீழ்த்திருவாய்மொழியின் நிகமனப்பாசுரத்தில் *வென்றிதரும் பத்தும் மேவிக் கற்பார்க்கே * என்றதில் நோக்காக 'விசயங்களுக்கேல்லாம்'' என்றருளிச் செய்தபடி. விசயங்களென்றது விஜயாபதாநங்களென்றபடி. (௬௫)

பாமருவுவேதம் பகர்மால்குணங்களுடன்*
ஆமழகுவேண்டப்பாடாமவற்றை—*தூமனத்தால்
நண்ணியவனைக் காண நன்குருகிக் கூப்பிட்ட*
அண்ணலைநண்ணாரேழையர். (௬௬)

| | | | |
|---|---|---|---|
| பா மருவு வேதம் பகர் | சந்தங்கள் பொருந்திய வேதங்களால் பேசப்படுகிற | தூ மனத்தால் நண்ணி | மானஸ ஸாக்ஷாத்காரமாக அநுபவித்து |
| மால் | ஸர்வேச்வரனுடைய | அவனை காண | அப்பெருமானைக் கண்ணாரக் காணவேண்டி |
| குணங்களுடன் | திருக்குணங்களென்ன | நன்கு உருகி கூப்பிட்டு | நன்றாக உள்ள முருகி ஓவென்று ஓலமிட்ட |
| ஆம் அழகு | நல்ல அழகென்ன | அண்ணலை | ஆழ்வாரை |
| வேண்டப்பாடு ஆம் அவற்றை | பெருமேன்மை யென்ன ஆகியவைகளை | நண்ணார் | அடிபணியாதவர்கள் |
| | | ஏழையர் | அவிவேகிகளாவர். |

* * * கீழ்த்திருவாய்மொழியாகிய *கற்பாரில் அநுஸந்திக்கப்பட்ட குணங்களோடு கூட அப்பெருமானது வடிவழகும் பெருமேன்மையும் ஆழ்வாருடைய திருவுள்ளத்திற்கு விஷயமாக அவற்றோடுகூடின அப்பெருமானைக் கண்ணாலே காணவேணுமென்னுமாசை கிளர்ந்து கூப்பிட்ட திருவாய்மொழியாம் * பாமருவுமூவுலகென்பது. அங்ஙனம் கூப்பிட்ட ஆழ்வாரை ஆச்ரயியாதவர்கள் அறிவிலிகளான நீசரேயாவர் என்றதாயிற்று.

வேண்டப்பாடாவது ஸர்வாதிகத்வம். *பாமருவுமூவுலகும் படைத்த *பாமருவுமூவுலகுமளந்த *இத்யாதிகளால் ஸர்வாதிகத்வமும், *தாமரைக்கண்ணாவோ * தாமரைக் கையாவோ *இத்யாதிகளால் அழகும் அறிக. (௬௬)

ஏழையர்கள்நெஞ்சை யிளகுவிக்கும்மாலழகு*
சூழவந்துதோன்றித் துயர்விளைக்க *—ஆழுமனந்
தன்னுடனேயவ்வழகைத் தானுரைத்த மாறன்பால்*
மன்னுமவர் தீவினைபோம்மாய்ந்து. (௬எ)

| | | | |
|---|---|---|---|
| ஏழையர்கள் நெஞ்சை | அபலைகளினுடையமனத்தை | ஆழும் மனம் தன்னுடனே | ஈடுபட்ட மனத்துடனே |
| இளகுவிக்கும் | உருக்க வல்லதான | அவ் அழகை | அந்த வடிவழகை |
| மால் அழகு | எம்பெருமானது அழகானது | தான் உரைத்த மாறன் பால் | அருளிச்செய்த ஆழ்வார் விஷயத்திலே |
| சூழ வந்து தோன்றி | நாற்புறமும் வந்து காட்சி தந்து | மன்னுமவர் | பொருந்தியிருப்பவர்களினுடைய |
| துயர் விளைக்க | வருத்தத்தையுண்டாக்க | தீ வினை | பாவங்களெல்லாம் |
| | | மாய்ந்து போம் | உருவழிந்து போம். |

* * * கீழ்த்திருவாய்மொழியாகிய * பாமரு மூவுலகில் * வந்தெய்துமாறறியேன் மல்கு நீலச் சுடர் தழைப்ப *என்னும் பாசுரத்தில் ப்ரஸ்தாவிக்கப்பட்ட விலக்ஷணமான வடிவழகானது திருவுள்ளத்திலே ஊற்றிருந்து அத்தையே இடையறுமல் பாவித்த பாவநாப்ரகர்ஷத்தாலே அவ்வழகு ப்ரத்யக்ஷஸமமாய்த் தோற்றித் தனித்தனியும் திரளவும் ஒருமுகஞ் செய்து நலிய, தாம் நலிவு பட்டுச் சொல்லுகிறபடியை உருவெளிப்பாட்டாலே நோவுபடுகிறவொரு பிராட்டி பாசுரமாக அருளிச் செய்ததாம் * ஏழையராவிப் பதிகம். (௬எ)

மாயாமல்தன்னைவைத்த வைசித்திரியாலே*
தீயாவிசித்திரமாச் சேர்பொருளோ—டோயாமல்*
வாய்ந்துநிற்கும்மாயன் வளமுரைத்த மாறனைநாம்
ஏய்ந்துரைத்து வாழுநாளேன்று. (௬அ)

| | | | |
|---|---|---|---|
| தன்னை மாயாமல்வைத்த | ஆழ்வாராகிய தம்மை அழியாதபடி இந்நிலத்திலே வைத்த | ஓயாமல் | அநவரதமும் |
| வைசித்திரியாலே | விசித்திரத் தன்மையினால் | வாய்ந்து நிற்கும் மாயன் | பொருந்தி நிற்கிற எம்பெருமானுடைய |
| தீ ஆம் விசித்திரமா சேர் பொருளோடு | தீ முதலான பஞ்சபூதங்களும் (ஒன்றின் சாரியம் ஒன்றுக்கில்லாதபடிவெவ்வேறுருவாய்) சேர்ந்திருக்கும் பதார்த்தங்களோடே | வளம் | விபூதி விஸ்தாரத்தை |
| | | உரைத்த | அருளிச்செய்த |
| | | மாறனை | ஆழ்வாரை |
| | | நாம் ஏய்ந்து உரைத்து வாழும் நாள் என்று | நாம் அணுகித் துதித்து வாழ்வது என்றைக்கோ? |

* * * கீழ்த்திருவாய்மொழியாகிய *ஏழையராவியில் பட்ட நலிவுக்கு ஆழ்வார் முடிந்தே போயிருக்கவேண்டும்; ஆயினும் முடிந்து போகாதபடி தம்மை வைத்து நோக்கிக்கொண்டு போருகிற ஆச்சரியத்தைக் கண்டு தாம் விசித்திரப்பட, ஆழ்வீர் ! இஃதொன்று கொண்டோ நீர் இப்படி விஸ்மயப்படுகிறது ? மற்றும் நம்முடைய விசித்திரமானபடிகளை யெல்லாம் காணீர்' என்று எம்பெருமான் தன்னுடைய ஆச்சர்ய ஜகதாகாரத்வத்தைக் காட்டிக்கொடுக்க, அத்தையநுபவித்து விஸ்மிதராகிறுராழ்வார் *மாயாவாமனனே யென்னுந் திருவாய்மொழியில்.

இரண்டாமடியில் 'ஆயாமல்' என்றும் பாடமுண்டென்பர்; அது வழங்குமதன்று. (௬அ)

என்றனைநீயிங்குவைத்ததேதுக்கென* மாலும்
என்றனக்குமென்றமர்க்கு மின்டமதா—*நன்றுகவி

பாடவெனக் கைம்மாறிலாமை பகர்மாறன்*
பாடணைவார்க்குண்டாமின்பம். (சுசு)

| | | | |
|---|---|---|---|
| என் தனை நீ இங்கு வைத்தது எதுக்கு என | (எம்பெருமானே) என்னை நீ இந்நிலத்தில் வைத்திருப்பது எதற்காக?' என்று (ஆழவார்) கேட்க | கைம்மாறு இலாமைபகர் | இவ்வுபகாரத்திற்கு ஏற்ற பிரதியுபகாரம் தம்மிடத்தில் இல்லாமையை நிர்வேதத்துடன் அருளிச் செய்த |
| மாலும் | எம்பெருமானும் | மாறன் பாடு | ஆழ்வார் பக்கலிலே |
| என் தனக்கும் என் தமர்க்கும் இன்பம் அது ஆ நன்று கவி பாட என | "எனக்கும் என்னடியார்க்கும் போக்யமாக திவ்யப் பிரபந்த மருளிச் செய்வதற்காக (வைத்திருக்கிறேன்)" என்று விடையருள, | அணைவார்க்கு | சேருமவர்களுக்கு |
| | | இன்பம் உண்டாம் | ஆனந்த முண்டாகும் |

*** பிரானே ! எனக்கு ருசியில்லாமலிருக்க என்னை இந்த ஸம்ஸாரத்திலே நீ வைத்திருப்பது எதற்காக வென்று ஆழ்வார் கேட்க, 'உம்மைக்கொண்டு நமக்கும் நம்முடையார்க்கு மனுபவிக்கலாம்படி விலக்ஷணமான திருவாய்மொழியைப் பாடுவித்துக்கொள்ளவே உம்மை இங்கு வைத்தோங்காணும்' என்று எம்பெருமானருளிச்செய்ய, வியாஸபராசராதி மஹர்ஷிகளும் முதலாழ்வார்களுமுண்டாயிருக்க, நீசனேன் நிறையொன்றுமிலேனைக் கொண்டு இக்காரியம் கொள்ளத் திருவுள்ளம்பற்றின இம்மஹோபகாரத்திற்கு உபய விபூதியிலும் கைம்மாறு ஒன்றுமில்லையே யென்று தடுமாறிப் பேசினது *என்றைக்கு மென்னையென்கிற திருவாய்மொழி (சுசு)

இன்பக்கவி பாடுவித்தோனை* இந்திரையோடு
அன்புற்று வாழ்திருவாறன் விளையில்—*துன்பமறச்
கண்டடிமை செய்யக் கருதியமாறன் கழலே*
திண்டிறலோர் யாவர்க்கும் தேவு. (எய)

| | | | |
|---|---|---|---|
| இன்பம் கவி பாடுவித்தோனை | போக்யமான திருவாய்மொழியைத் தம்மைக் கொண்டு பாடுவித்த எம்பெருமானை | அடிமை செய்ய கருதிய | கைங்கரியம் பண்ண ஆசைப்பட்ட |
| இந்திரையோடு | பிராட்டியோடு கூட | மாறன் | ஆழ்வாருடைய |
| அன்புற்று வாழ் | மகிழ்ந்து வாழுமிடமான | கழலே | திருவடிகளே |
| திருவாறன் விளையில் | திருவாறன் விளையென்னும் மலைநாட்டுத் திருப்பதியில் | திண் திறலோர் யாவர்க்கும் | திடமான அத்யவஸாயமுடையாரெல்லார்க்கும் |
| துன்பம் அற கண்டு | தமது வருத்தம் தீரக் கண்டு | தேவு | தெய்வமாகும். |

*** ஆழ்வார் தாம் பாடின திருவாய்மொழியைக் கேட்கைக்காகப் பெரிய பிராட்டியாருடனே பேரோலக்கமாகத் திருவாறன் விளையிலே எம்பெருமான் வந்தெழுந்தருளியிருக்கிறபடியை அநுஸந்தித்து நாம் அங்கே சென்று அச்சேர்த்தியிலே திருவாய்மொழியைக் கேட்பித்து அடிமை செய்யப்பெறுவது எப்போதோவென்று மநோரதிக்கிறபடியைக் கூறும் * இன்பம் பயக்கவென்கிற திருவாய்மொழி யென்றதாயிற்று. (எய)

தேவனுறைபதியில் சேரப்பெறுமையால்*
மேவுமடியார்வசனும் மெய்ந்நிலையும்—*யாவையுந்தா

ஞம்நிலையும் சங்கித் தவைதெளிந்த மாறன்பால்
மாநிலத்தீர் நங்கள்மனம். (எக)

| | | | |
|---|---|---|---|
| மா நிலத்தீர் | இப்பெரிய வுலகத்திலுள்ள வர்களே ! | யாவையும் தாம் ஆம் நிலையும் | ஸகலசேதநாசேதநப்ரகாரத்வரூபமான நிலைமையிலும் |
| தேவன் உறை பதியில் | (கீழ்ச்சொன்ன) திவ்ய தேசமாகிய திருவாறன் விளையில் | சங்கித்து | அதிசங்கை பண்ணி |
| சேர பெருமையால் | சேர்ந்துபாடி அடிமை செய்யப் பெருமையாலே | அவை தெளிந்த | இரண்டுவகையான அந்த அதிசங்கைகள் தீர்ந்து கீழ்ச்சொன்ன இரண்டு குணங்களிலும் தெளிவு பெற்ற |
| மேஷம் அடியார் வசன் ஆம் மெய் நிலையும் | (அவனது) ஆச்ரித பாரதந்திரியமாகிற நிலைமையிலும் | மாறன் பால் | ஆழ்வார் பக்கலிலேயே |
| | | நங்கள் மனம் | எமது நெஞ்சு பொருந்தியிருக்கின்றது. |

* * * கீழ்த்திருவாய்மொழியான * இன்பம் பயக்கவெனும பதிகத்தில் மநோரதித்தபடியே திருவாறன் விளையிலே சென்று புக்குத் திருவாய்மொழி கேட்பித்து அடிமை செய்யப் பெருமையாலே மிகவும் தளர்ந்து 'எம்பெருமான் ஆச்ரித பரதந்திரன் ஸர்வநிர்வாஹகன் என்றிருந்தோம்; இவையும் நம்மைத் தோற்றிப் பொய்யாகிறதோ?'' என்று ஆழ்வார் அவன் குணத்திலும் ஸ்வரூபத்திலும் அதிசங்கைபண்ண, அந்த அதிசங்கையை எம்பெருமான் போக்கியருள ஸமாஹிதரானபடியைக்கூறுவதாம் *தேவிமாராவார் என்னுந்திருவாய்மொழி. இத்திருவாய் ஸமாஹிதரானபடியைக் கூறுவதாம் * தேவிமாராவார் என்னும் திருவாய்மொழி. இத்திருவாய் மொழியில் * உமருகந்துகந்தவுருவம் * இறந்ததும் நீயே * என்கிற இரண்டு பாட்டுகளில்* அறிவொன்றும் சங்கிப்பன் வினையேன்* என்றருளிச் செய்திருப்பது கொண்டு ஆழ்வாருக்கு சங்கையுண்டாயிற்றென்னுமிடம் அறிக.

* மலரடிப்போதுகளென்னெஞ்சத் தெப்பொழுதுமிருத்தி வணங்கப் பலரடியார் முன்பருளிய * என்று கீழ்த்திருவாய் மொழியில் அநுஸந்தித்த உபகாரத்தை ஸ்மிருதி விஷயமாம்படி பிரகாசிப்பிக்க, அத்தை * தாள்களை யெனக்கே தலைத்தலைச் சிறப்பதந்த பேருதவி * என்றநுஸந்தித்து ப்ரீதரானமையால் ஒருவாறு சங்கை தெளிந்தமையும் விளங்கிற்று. (எக)

நங்கருத்தை நன்ருக நாடிநிற்கும் மாலறிய *
இங்கிவற்றிலாசை யெமக்குளதேன்—சங்கையினல் *
தன்னுயிரில் மற்றில்நசை தானொழிந்த மாறன்தான் *
அந்நிலையை யாய்ந்துரைத்தா னங்கு. (எஉ)

| | | | |
|---|---|---|---|
| நம் கருத்தை | நமது ஹ்ருதயத்தை | தன் உயிரில் மற்றில் | ஆத்மாவிலும் ஆத்மீயங்களிலும் |
| நன்ருக நாடி நிற்கும் | உள்ளபடி ஆராய்ந்து போருகிற | | |
| மால் அறிய | எம்பெருமான் திருவுள்ளத்தாலே | நசை தான் ஒழிந்த மாறன் தான் | விருப்பம் தொலைந்த ஆழ்வார் |
| இங்கு இவற்றில் ஆசை | ப்ராக்ருத வஸ்துக்களில் விருப்பம் | அந்நிலையை | அந்தத்தன்மையை |
| எமக்கு உளது என் சங்கையினல் | எமக்கு இருக்குமோ என்னு மதிசங்கையாலே | அங்கு ஆய்ந்து உரைத்தான் | அவ்வண்ணம் ஆராய்ந்து அருளிச்செய்தார். |

* * * கீழ்த்திருவாய் மொழியான * தேவிமாராவாரில் அதிசங்கையுண்டாகித் தீர்ந்தவளவேயல்லது தமக்கு அபேக்ஷிதமான பாஹ்யஸம்ச்லேஷம் நேரவில்லையே; அதனல் ஆழ்வார்க்கு ஒரு சங்கையுண்டாயிற்று; '' ஸம்ஸாரத்திலே நமக்கு நசையில்லையென்று நாம் எண்ணியிருக்கி

ரேம்; ஆனாலும் * உள்ளுவாருள்ளிற்றெல்லாமுடனிருந்தறியும் ஸர்வேச்வரனுடைய திருவுள்ளமறிந்ததாக நமக்கு ஸம்ஸாரருசி இருக்கிறதுபோலும்; இல்லையாகில் எம்பெருமான் உபேக்ஷிக்க ப்ரஸக்தியிராதே; உபேக்ஷிக்கக் காண்கையாலே நமக்கு ஸம்ஸாரருசி இன்னமும் அறவில்லையென்று எம்பெருமான் திருவுள்ளம் பற்றிஇருக்கக்கூடும்; அவன் இங்ஙனே திருவுள்ளம்பற்றினால் அது பொய்யாக இருக்கமாட்டாதே; நம்மையுமறியாமல் நமக்கு ஸம்ஸாரருசி உள்ளத்தினுள்ளே உறைகின்றதோ என்னவோ" என்றொரு சங்கையுண்டாயிற்று. அதனால் ஆத்மாத்மீயங்களில் தாம் நசையற்றபடியை ஆழ்வார் அந்யாபதேசத்தாலே அருளிச்செய்த திருவாய்மொழியாம் * நங்கள் வரிவளை யென்பது. * காலம்பல சென்றும் காண்பதாணை உங்களோடெங்களிடையில்லையே * பாதமடைவதன் பாசத்தாலே மற்ற வன்பாசங்கள் முற்றவிட்டு * இத்யாதி பாசுரங்கள் காண்க. (எஉ)

என் சங்கையினால்—என்கிற சங்கையினாலென்றபடி.

அங்கமரர்பேண வவர்நடுவேவாழ் திருமாற்கு *
இங்கோர்பரிவரிலையென்றஞ்ச—* எங்கும்
பரிவருளரென்னப் பயந்தீர்ந்தமாறன் *
வரிகழல்தாழ்சேர்ந்தவர்வாழ்வார். (எங)

| | | | |
|---|---|---|---|
| அங்கு | அந்த நித்யவிபூதியிலே | எங்கும் பரிவர் உளர் என்ன | எவ்விடத்திலும் பரிவுள்ளவர்கள் இருக்கின்றார்களென்று எம்பெருமான்கூற (அதனால்) |
| அமரர் | நித்ய ஸூரிகளும் முக்தர்களும் | பயம் தீர்ந்த மாறன் | அச்சம் தீரப்பெற்ற ஆழ்வாருடைய |
| பேண | மங்களாசாஸனம் பண்ணிக் கொண்டிருக்க | வரி கழல் தாள் | வரியையுடைய வீரக்கழலோடே கூடின திருவடிகளை |
| அவர் நடுவே வாழ் திருமாற்கு | அந்த நித்ய முக்தர்களோடே வாழ்கின்ற ஸர்வேச்வரனுக்கு | சேர்ந்தவர் | அடைந்தவர்கள் |
| இங்கு | இந்நிலத்திலே | வாழ்வார் | உஜ்ஜீவிக்கப் பெறுவர்கள் |
| ஓர் பரிவர் இலை என்று | பரிந்து காப்பிடுவார் ஒருவருமில்லையேயென்று | | |
| அஞ்ச | தாம் பயப்பட, | | |

* * * கீழ்த்திருவாய்மொழியான * நங்கள் வரிவளையில் * ஓர் கோல நீல நன்னெடுங்குன்றம் வருவதொப்பான் * என்று அநுஸந்தித்த அவனுடைய திவ்ய மங்கள விக்ரஹ வைலக்ஷண்யத்திலே திருவுள்ளம் சென்று 'இப்படிப்பட்ட ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்களுக்குக் கொள்கலமான இவ்வடிவுடனே ப்ரயோஜநாந்தரபரரான தேவர்களின் காரியம் செய்கைக்காக பிரதிகூலர்வர்த்திக்கிற இந்த நிலத்திலே தனியே வந்தவதரித்து ஸஞ்சரிக்கிறானே. பரிவர் ஒருவருமில்லையே ! என்ன தீங்கு நேரிடுமோ !, என்று ஆழ்வார் வயிறெரிந்து பயப்பட, அதற்கு எம்பெருமான் "ஆழ்வீர் ! நமக்குப் பரிகைக்கு முமுக்ஷுக்களும் முக்தரும் நித்யரும் உண்டு; ஒருகுறையுமில்லை" என்றருளிச் செய்ய, ஆழ்வார் அச்சம் தீர்ந்தாராயிற்று * அங்குமிங்கும் பதிகத்தில். இத்திருவாய்மொழியில் * கலக்கமில்லா நல்தவமுனிவர் கரைகண்டோர் துளக்கமில்லாவானவரெல்லாம் தொழுவார்கள் *என்ற பாசுரத்தினால் ஆழ்வாருடைய அச்சம் தீர்ந்தமை அறியத்தக்கது. (எங)

வாராமலச்சமினி மால்தன் வலியிணையும் *
சீரார் பரிவருடன் சேர்த்தியையும்—*பாருமெனத்
தானுகந்த மாறன்தாள் சார்நெஞ்சே சாராயேல் *
மானிடவரைச் சார்ந்து மாய். (எச)

| | | | |
|---|---|---|---|
| இனி அச்சம் வாராமல் | இனி மேலும் (ஆழ்வார்க்கு) அச்சம் மறுவலிடாதபடியாக | பாரும் என | காட்டிகொடுக்க, |
| மால் | ஸர்வேச்வரன் | தான் உகந்த | (அது கண்டு) உகந்தருளின |
| தன் வலியினையும் | தன்னுடைய பராக்ரமங்களையும் | மாறன் தான் நெஞ்சே சார் | ஆழ்வாரது திருவடிகளை நெஞ்சமே! அடைந்திடு; |
| சீர் ஆர் பரிவுடன் சேர்த்தியையும் | மேன்மை பொருந்திய அன்போடு தான் சேர்ந்திருக்கிறபடியையும் | சாராய் ஏல் | அங்ஙனம் அடைய மாட்டாயாகில் |
| | | மானிடவரை சேர்ந்துமாய் | ஸம்ஸாரிகளோடே கூடி ஸ்வரூபமழிந்துபோ. |

* * * கீழே * அங்குமிங்கும் பதிகத்தில் ஆழ்வார்க்குண்டான அச்சத்தை எம்பெருமான் ஒருவாறு தீர்த்திருக்கச் செய்தேயும், இன்னமும் இவர்க்கு நம் பக்கல் பரிவின் கனத்தாலே அச்சம் மறுவலிடக்கூடுமென்றெண்ணி, பிரதிகூலர்க்குக் கணிசிக்க வொண்ணாதபடி அரணுடைத்தான திருச் செங்குன்றூரிலே மஹாசக்திமான்களான மூவாயிரம் வேதியர்கள் பரிந்து நோக்க, அவர்களுடன் தான் சேர்ந்து வாழ்கிறபடியையும் தனக்கு அஸாதாரணமாகவுள்ள வீர்ய பராக்ரமாதி குணஸமிருத்தியையும் காட்டிக்கொடுக்க, அதனால் அச்சம் கெட்டு அவன் வடிவழகிலே நெஞ்சை வைத்து அநுபவித்து உகந்தாரென்பதைத் தெரிவிப்பதாம் * வார்கடா வருவித் திருவாய்மொழி. (எச)

இங்ஙனே யநுபவித்த ஆழ்வாருடைய திருவடிகளைச் சேர்ந்தால்தான் உஜ்ஜீவனம் இல்லையேல் ஸம்ஸாரிகளோடே சேர்ந்து பாழாய்ப் போக வேண்டியது தான் என்றாராயிற்று.

மாயன்வடிவழகைக் காணாத வல்லிடா (எச)
யாய் * அதறவிஞ்சியமுதலற்றும்— * தூயபுகழ்
உற்றசடகோபனை நாமொன்றிநிற்கும் போதுபகல் *
அற்றபொழுதான தெல்லியாம். (எரு)

| | | | |
|---|---|---|---|
| மாயன் | ஸர்வேச்வரனுடைய | தூய புகழ் உற்ற | பரிசுத்த கீர்த்திவாய்ந்த |
| வடிவு அழகை | திவ்ய மங்கள விக்ரஹ ஸௌந்தர்யத்தை | சடகோபனை | ஆழ்வாரை |
| காணாத | ஸேவிக்கப் பெறாமையாலுண்டான | நாம் ஒன்றி நிற்கும் போது | நாம் கிட்டி நின்று அநுபவிக்கும் காலம் எதுவோ அதுதான் |
| வல் விடாயாயது | மிக்க வருத்தமானது | பகல் | பகலாகும்; |
| அற விஞ்சி | மிகவும் அதிகரிக்க (அதனால்) | அற்ற பொழுதானது எல்லி ஆம் | அவ்வநுபவம் விச்சேதித்த காலமானது காளராத்ரியாகும். |
| அழுது அலற்றும் | அலற்றியழுதவரான | | |

* * * கீழ்ப்ரஸ்துதமான அநுபவம் மாநஸாநுபவமாத்திரமாய் பாஹ்யஸம்ச்லேஷயோக்யமல்லாமையாலே மிகவும் நோவுபட்டு காட்டுத்தீகதுவினாற் போலே சாலவும் பரிதபித்து, அவனது வடிவழகைப் பலபடியாக வருணித்துக்கொண்டு பெருங்கூப்பீடாகக் கூப்பிடுகிற திருவாய்மொழி * மாயக்கூத்தாவாமனா வென்பது. (எரு)

எல்லி பகல்கடந்த விந்தவிடாய் தீருகைக்கு *
மெல்லவந்து தான்கலக்க வேணுமென—* நல்லவர்கள்
மன்னுகடித்தானத்தே மாலிருக்கமாறன் கண்டு *
இந்நிலையைச் சொன்னானிருந்து. (எசா)

| | | | |
|---|---|---|---|
| எல்லி பகல் கடந்த | இரவும் பகலும் ஓயாதே வளர்ந்த | நல்லவர்கள் மன்னு | நற்புகழ் வேதியர்கள் நிலைபெற்று வாழ்கிற |
| இந்த விடாய் தீருகைக்கு | கீழ்த்திருவாய் மொழியிலுண்டான வருத்தம தீர்வதற்காக | கடித்தானத்தே | திருக்கடித்தானத்திலே |
| | | மால் இருக்க | அந்த ஸர்வேச்வரன் எழுந்தருளியிருக்க |
| மெல்ல வந்து தான் கலக்கவேணும் | மைபயவந்து (எம்பெருமான்) தான் ஸம்ச்லேஷிக்க வேணுமென்றெண்ணி | மாறன் கண்டு | அவ்விருப்பை ஆழ்வார் ஸேவித்து |
| | | இருந்து | நிலைபெற்றிருந்து |
| | | இந்நிலையை சொன்னான். | இந்தச் செய்தியை அருளிச்செய்தார். |

* * * கீழே அநவரதமாக நிகழ்ந்த தம்முடைய பெருவிடாய் கெடும்படி தம்மோடே வந்து ஸம்ச்லேஷிக்க விரும்பி அடுத்தணித்தாகத் திருக்கடித்தான மென்னும் மலைநாட்டுத் திருப்பதியிலே வந்திருந்து தம்பக்கலிலே மிகவும் ஆவல் கொண்டிருக்கிறபடியே அவன் காட்டிக்கொடுக்க, அத்தை அநுஸந்தித்து ஆழ்வார்தாம் ஹ்ருஷ்டாராகிற படியைத் தெரிப்ப தாம் * எல்லியுங்காலையும் பதிகம். (எசு)

இருந்தவன் தான்வந்து இங்கிவரெண்ணமெல்லாம் *
திருந்த விவர்தந்திறத்தே செய்து— * பொருந்தக்
கலந்தினியனாயிருக்கக் கண்டசடகோபர் *
கலந்தநெறி கட்டுரைத்தார் கண்டு. (எஎ)

| | | | |
|---|---|---|---|
| இருந்தவன் தன் | திருக்கடித்தானத்திலிருந்த ஸர்வேச்வரனே | பொருந்த கலந்து | ஒரு நீராய்க் கலந்து |
| இங்கு வந்து | இவ்விடத்தேற வந்து | இனியன் ஆய் இருக்க கண்ட | இனிமையோடேயிருக்கும்படியை ஸேவித்த |
| இவர் எண்ணம் எல்லாம் திருந்த | இவ்வாழ்வாருடைய மனோரதம் முழுவதும் முற்றுப்பெற | சடகோபர் | ஆழ்வார் |
| | | கலந்த நெறி | அவன் தம்மோடு ஸம்ச்லேஷித்த படியை |
| | | கண்டு | திருவுள்ளத்தாலே கண்டு |
| இவர் தம் திறத்தே செய்து | இவரிடத்தே அருள் செய்து | கட்டுரைத்தார் | அருளிச்செய்தார் |

* * * திருக்கடித்தானத்திலிருப்பைக் கீழ்த்திருவாய் மொழியான * எல்லியுங் காலையில் காட்டிக் கொடுத்த எம்பெருமான் ஆழ்வாரிருப்பிடத்தளவும் மெள்ள வந்து தன்னை முற்றூட்டாக அனுபவிக்கும் படியாக்கி வைத்து ஒரு நீராகக் கலந்து அத்தாலே தான் இனிமை பெற்றுனாயிருக்கிறபடியைக் கண்ட ஆழ்வார் அவன் தம்முடனே வந்து கலந்தபடியைப் பேசினாராயிற்று * இருந்தும் வியந்து பதிகத்தில். (எஎ)

கண்ணிறைய வந்து கலந்த மாலிக்கலவி *
திண்ணிலையாவேணுமெனச் சிந்தித்து— * தண்ணிதெனும்
ஆருயிரினேற்றமது காட்ட ஆய்ந்துரைத்தான் *
காரிமாறன் தன்கருத்து. (எஅ)

| | | | |
|---|---|---|---|
| கண் நிறைய வந்து கலந்த மால் | கண்ணார வந்து கலந்த எம்பெருமான் | ஆர் உயிரின் | அருமையான ஆத்மாவினுடைய |
| இக்கலவி திண் நிலை ஆவேணும் என சிந்தித்து | இந்தக் கலவியானது சாச்வதமாயிருக்க வேணுமென்றெண்ணி | ஏற்றம் அது காட்ட | ஏற்றத்தைக் காட்டிக கொடுக்க |
| | | காரி மாறன் | ஆழ்வார் |
| தண்ணிது எனும் | கீழே சிறிய தென்பதாக ஆழ்வார் பேசின | ஆய்ந்து | ஆராய்ந்து |
| | | தன் கருத்து உரைத்தான் | தமது திருவுள்ளத்தை அருளிச் செய்தார். |

* * * * இருத்தும் வியந்தென்கிற கீழ்த்திருவாய் மொழியிலே பேருவகையோடே யநுபவிக்கிற வளவில் ஆழ்வார் * சிறியேனுடைச் சிந்தையுள் * என்று தம்முடைய சிறுமையை அநுஸந்தித்தார்; அதனால் இவர் நைச்சயாநுஸந்தானம்பண்ணி அகலக்கூடு மென்றெண்ணின எம்பெருமான் இந்த ஸம்ச்லேஷம் இடையறுது செய்ய வேணு மென்று கருதி, 'ஆழ்வீர் !மிக வுயர்ந்ததான ஆத்மவஸ்துவை நீர் தண்ணிதாக நினைப்பது தகுதியன்று; இதன் ஏற்றத்தைக் காணீர்' என்று ஆத்மஸ்வரூப வைலக்ஷண்யத்தைக் காட்டிக்கொடுக்க, இனி நைச்யாநுஸந்தானம் பண்ணி அகலமாட்டாமையாகிற தமது திருவுள்ளத்தை வெளியிட்டாராழ்வார் * கண்கள் சிவந்து பதிகத்தில். "தெருளும் மருளும் மாய்த்தோமே" என்ற பாசுரத்தில் நோக்காக "காரிமாறன் தன் கருத்து ஆய்ந்துரைத்தான்" என்றது. (எஅ)

கருமால் திறத்திலொரு கன்னிகையாம் மாறன் *
ஒருமாகலவியுரைப்பால் —* திரமாக
அந்நியருக்காகா தவன்றனக்கேயாகு முயிர்
அந்நிலையையோரு நெடிதா. (எகூ)

| | | | |
|---|---|---|---|
| கருமால் திறத்தில் | ஸ்ரீ கிருஷ்ண பகவான் விஷயத்தில் | திரம் ஆக | ஸ்திரமாக |
| ஒரு கன்னிகை ஆம் மாறன் | ஒரு கன்னிகையின் தன்மையை யடைந்த ஆழ்வார் | உயிர் அன்னியருக்கு ஆகாது | ஆத்மா அந்ய சேஷப் படாமல் |
| | | அவன் தனக்கே ஆகும் அந்நிலையை | அப்பெருமானுக்கே உரித்தாம் நிலைமையை |
| ஒரு மா கலவி உரைப்பால் | ஒரு விலக்ஷணஸம்ச்லேஷ லக்ஷணங்களை (த்தோழி பேச்சாலே) அருளிச் செய்ததனால் | நெடிது ஆ ஒரும் | தீர்க்கமாக ஆராய்மின் |

* * * ஆழ்வார் தம்முடைய அநந்யார்ஹத்வத்தைத் தோழி பாசுரத்தாலே வெகு சமத்காரமாக அருளிச் செய்த பதிகம் * கருமாணிக்கமலை யென்பது. பராங்குச நாயகி விவாஹ யோக்யமான பருவம் வாய்த்தவளாக இருந்ததனால் அவளுக்கு விவாஹம் நடத்த வேணுமென்று மாதா பிதாக்கள் எண்ணி ஸ்வயம்வரஸந்நாஹம் பண்ணின வளவிலே * அன்றிப்பின் மற்றொருவர்க்கு என்னைப் பேசலொட்டேன் மாலிருஞ் சோலை யெம்மாயற்கல்லால் * மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன் * என்னும்படியான தன்மை வாய்ந்திருக்கிற தலைவி அந்த விவாஹஸந்நாஹத்தைத் தவிர்க்க வேண்டி ஏற்கனவே தனக்கு எம்பெருமானோடே விவாஹமாய்விட்டதென்பதைத் தன் வாக்காலே சொல்லிக்கொள்ள இயலாதாகையாலே தோழி ஊஹமாகச் சொல்லுகிற பாசுரத்தாலே [ஏற்கனவே கலவி நடந்துவிட்டாப் போலிருக்கிறதே ! என்று தெரிவிக்கும் முகத்தாலே] அநந்யார்ஹத்வம் வெளியிட்டபடி.

இப்பாட்டினீற்றடியில் "இந்நிலையை" என்கிற பாடம் தவறு; "அந்நிலையை" என்பதே நன்கு பொருந்தும். ஆ என்பது ஈற்றுச் சீராதலால். (எகூ)

நெடுமாலழகுதனில் நீள்குணத்தில் * ஈடு
படுமாநிலையுடைய பத்தர்க்கு— * அடிமைதனில்
எல்லைநிலம்தானாக வேண்ணினன்மாறன் * அது
கொல்லைநிலமான நிலை கொண்டு. (அ0)

| | | | |
|---|---|---|---|
| நெடுமால் அழகு தனில் | ஸர்வேச்வரனுடைய வடிவழகிலும் | நீள் குணத்தில் ஈடு படும் | குண விசேஷத்திலும் ஈடுபடும்படியான |

| | | | |
|---|---|---|---|
| மா நிலை உடைய | சிறந்த தன்மையுடையரான | | |
| பத்தர்க்கு அடிமைதனில் | பாகவதர்களுக்கு அடிமைப்படும் திறத்தில் | அது கொல்லை நிலம் ஆன நிலைகொண்டு | அந்த பாகவத சேஷத்வமே இதற்குமேலில்லையென்னலாம்படியான உத்தமபுருஷார்த்தமென்று கொண்டு. |
| எல்லை நிலம் தான் ஆக மாறன் எண்ணினான் | சரமாவதி தாஸ்யம் தமக்கேயுள்ளதென்று ஆழ்வார் அத்யவஸாயங்கொண்டார்; (எதனாலேயென்னில்) | | |

* * * கீழ்த்திருவாய் மொழியாகிய * கருமாணிக்க மலையில் ஆத்மாவுக்குச் சொன்ன பகவதநந்யார்ஹத்வமானது நிலை நிற்பது பாகவத சேஷத்வபர்யந்தமானால் என்னுமிடத்தை யநுஸந்தித்து "அவனுடைய ஸௌந்தர்ய சீலாதிகளில் தோற்று அடிமைபுக்கிருக்கும் பாகவதர்களுக்கு சேஷமாயிருக்குமிருப்பே எனக்குப் புருஷார்த்தம்" என்றறுதியிட்டு அந்தப் பரமார்த்தத்தை * நெடுமாற்கடிமை யெனும் பதிகத்திலே ஆழ்வாரருளிச் செய்தாரென்கை.

**கொல்லை நிலம்**—இதற்கு மேலாக வொரு நிலமில்லையென்னலாம்படி சரமாவதியான நிலமென்க.

இரண்டாமடியில் "பத்தர்" என்றே பாடம் வழங்கிவருகின்றது. 'பத்தர்க்கு' என்று ஸ்ரீகோசங்களிற் பெரும்பாலும் காண்கிற பாடம் மிக அழகியது. அதுவே கொள்ளத்தக்கது (அ0)

கொண்டபெண்டிர் தாம்முதலாக் கூறுமுற்றார் கன்மத்தால் *
அண்டினவரென்றே யவரைவிட்டு—* தொண்டருடன்
சேர்க்கும் திருமாலைச் சேருமென்றான் * ஆர்க்குமிதம்
பார்க்கும் புகழ்மாறன் பண்டு. (அக)

| | | | |
|---|---|---|---|
| ஆர்க்கும் இதம் பார்க்கும் புகழ் மாறன் | அனைவர்க்கும் ஹிதமே சிந்திக்கிற யசஸ்வியான நம்மாழ்வார் | அவரை விட்டு | அந்த ஆபாஸபந்துக்களை விட்டு |
| பண்டு | முன்பு | | |
| கொண்ட பெண்டிர் தாம் முதலா கூறும் உற்றார் | மனைவி முதலாகச் சொல்லப்படுகிற பந்துவர்க்கமெல்லாம் | தொண்டருடன் சேர்க்கும் திருமாலை | நம்மை பாகவத கோஷ்டியிலே சேர்க்க வல்லவனான ஸர்வேச்வரனை |
| கன்மத்தால் அண்டினவர் என்றே | கர்மோபாதியாலே நெருங்குமவர்களத்தனை யென்று கொண்டு | சேரும் என்றான் | சேருங்கோளென்று உபதேசித்தார் |

* * * தன்னைப் பற்றினாரை பாகவதர்கள் திருவடிகளிலே சேர்த்து ரக்ஷித்தருளவல்ல ஸர்வேச்வரனே ஸகலவிதபந்துவுமாவான்; அல்லாதாரடங்கலும் ஔபாதிகபந்துக்கள்; ஆனபின்பு ஔபாதிக பந்துக்களை விட்டு நிருபாதிக ஸகலவித பந்துவுமான ஸர்வேச்வரனுக்கு அடிமை செய்து உஜ்ஜீவியுங்கோளென்று' அனைவர்க்கும் ஹிதைஷியான ஆழ்வார் உபதேசித்தருளின பதிகம் * கொண்ட பெண்டிரென்பதாம். (அக)

பண்டையுறவான பரனைப் புளிங்குடிக்கே
கண்டு * எனக்கெல்லாவுறவின் காரியமும்—* தண்டறநீ
செய்தருளென்றே யிரந்த சீர்மாறன் தாளிணையே *
உய்துணையென் றுள்ளமேயோர். (அஉ.)

| | | | |
|---|---|---|---|
| பண்டை உறவு ஆன பரனை | அநாதிஸித்தமா ஸம்பந்தத்தையுடையனான பரமபுருஷனை | தண்டு அற நீ செய்தருள் | தட்டில்லாமல் நீ செய்தருள வேணும்' என்று |
| புளிங்குடிக்கே கண்டு | திருப்புளிங்குடியிலே ஸேவித்து | இரந்த | பிரார்த்தித்த |
| எனக்கு | அடியேனுக்கு | சீர் மாறன் | ஆழ்வாருடைய |
| எல்லா உறவின் காரியமும் | ஸகலவிதமான உறவினுடையவும் காரியங்களை | தாள் இணையே | உபய பாதங்களே |
| | | உய் துணை என்று | நமக்கு உஜ்ஜீவநோபாயமென்று |
| | | உள்ளமே ஓர் | நெஞ்சே! நினை. |

* * * நிருபாதிக பந்துவான ஸர்வேச்வரனைத் திருப் புளிங்குடியிலே ஸேவித்து 'எனக்கு ஸகலவித பந்துக்ருத்யமும் நீ செய்தருளவேணும்' என்று ஆழ்வார் பிரார்த்தித்த படியைக்கூறுவதாம்* பண்டை நாளாலே பதிகம். *சோதிவாய் திறந்துன் தாமரைக் கண்களால் நோக்காய்* நின்பாதபங்கயமே தலைக்கணியாய்* என்றிப்படி பாசுரந்தோறும் ஒவ்வொரு வகையான பிரார்த்தனை யிருப்பது காண்க. தண்டு அற—தடையின்றிக்கே; அல்லது, காலதாமதமின்றி.

(அஉ)

ஓரா நீர் வேண்டினவை யுள்ளதெல்லாம் செய்கின்றேன்*
நாராயணனன்றோ நானென்று—*பேருறவைக்
காட்டவவன் சீலத்தில் கால்தாழ்ந்த மாறனருள்*
மாட்டிவிடும் நம்மனத்து மை (அங)

| | | | |
|---|---|---|---|
| நீர் ஓரா வேண்டினவை உள்ளது எல்லாம் | ('ஆழ்வீர்!) நீர் ஆராய்ந்து அபேக்ஷித்தவை யெல்லாவற்றையும் | பேர் உறவை காட்ட | தனது சிறந்த உறவையும் நினைப்பூட்டின வளவிலே |
| செய்கின்றேன் | நான் சலைக்கட்டித் தருகின்றேன்; | அவன் சீலத்தில் | அப்பெருமானது சீல குணத்திலே |
| நான் நாராயணன் அன்றோ என்று | நான் ஸர்வ சக்தனான நாராயணனன்றோ?' என்று (எம்பெருமான்) | கால் தாழ்ந்த | ஆழங்காற்பட்ட |
| | | மாறன் அருள் | ஆழ்வாருடைய திருவருளானது |
| | | நம் மனத்து | நமது நெஞ்சிலுள்ள |
| | | மை | அஜ்ஞான விருளை |
| | | மாட்டி விடும் | மாளச் செய்துவிடும் |

* * * கீழ்த்திருவாய் மொழியாகிய *பண்டை நாளில் எனக்கெல்லாவுறவின் காரியமும் செய்தருளவேணுமென்று இரந்த ஆழ்வாரை நோக்கி 'ஆழ்வீர்! நீர் பிரார்த்திக்க வேணுமோ? நானே 'பிரார்த்தித்துச் செய்ய வேண்டும்படியன்றோ எனக்குண்டான நாராயணத்வப்ரயுக்தமான உதிரத் தெறிப்பு இருப்பது. ஆன பின்பு நானே உம்முடைய ஸர்வாபேக்ஷிதங்களையும்' நிறைவேற்றிக் கொடுக்கின்றேன்' என்று எம்பெருமானருளிச் செய்ய, தன் பெருமை பாராதே என் சிறுமை பாராதே இப்படியருளிச் செய்வதே! இதொரு சீலகுணமிருக்கும்படியென்! என்று அவனுடைய சீல குணத்திலே யீடுபட்டுப் பேசினது* ஓராயிரமாய் பதிகம்.

ஓரா—செய்யாவென்னும் வாய்பாட்டிறந்தகாலவினையெச்சம் (அங)

மையார்கண் மாமார்பில் மன்னும் திருமாலை *
கையாழிசங்குடனே காணவெண்ணி—* மெய்யான
காதலுடன் கூப்பிட்டுக் கண்டுகந்த மாறன்பேர்*
ஓதவுய்யுமே யின்னுயிர். (அச)

| | | | |
|---|---|---|---|
| மை ஆர் கண் மா | மையணிந்த கண்களை யுடையளான பெரிய பிராட்டியானவள் | மெய் ஆன காதலுடன் கூப்பிட்டு | உண்மையான அபிநிவேசத்தோடே கூவியழைத்து |
| மார்பில் மன்னும் | திருமார்பிலே நித்ய வாஸம் பண்ணப் பெற்ற | கண்டு உகந்த மாறன் பேர் ஓத | அவ்வாறே ஸேவித்து உள்ளம் பூரித்த ஆழ்வாருடைய திருநாமங்களை அநுஸந்திக்கவே |
| திருமாலை | எம்பெருமானை | இன் உயிர் உய்யும் | விலக்ஷணமான ஆத்ம வஸ்து உஜ்ஜீவிக்கும் |
| கை ஆழி சங்குடனே காண எண்ணி | திருக்கை நிறைந்த திருவாழி திருச் சங்குகளுடனே ஸேவிக்க விரும்பி | | |

* * * திருமார்பிலே பிராட்டி திகழ நின்ற திருமாலைத் திருவாழி திருச்சங்குகளுடனே ஸேவிக்க ஆசைப்பட்டு ஆழ்வார் கூப்பிட, தூணிலே தோன்றிச் சிறுக்கனுக்கு உதவினாப் போலே எம்பெருமான் மானஸகமாகத் தோற்றித் தன் குணங்களையனுபவிக்க, அத்தை யநுபவித்து உகந்தபடியைக் கூறுவதாம் * மையார் கருங்கண்ணிப் பதிகம்.

மா—ஸ்ரீமஹா லக்ஷ்மி ; வடசொல். (அச)

இன்னுயிர்மால் தோன்றினதிங்கென்னெஞ்சிலென்று * கண்ணால்
அன்றவனைக் காணவெண்ணியாண்பெண்ணாய் —* பின்னையவன்
றன்னை நினைவிப்பவற்றால் தான்தளர்ந்த மாறனருள் *
உன்னுமவர்க்குள்ள முருகும். (அரு)

| | | | |
|---|---|---|---|
| இன் உயிர் மால் | 'எனக்குத் தாரகனான எம்பெருமான் | ஆண் பெண் ஆய் | ஆண் தன்மை குலைந்து பெண் தன்மை யடைந்து |
| இங்கு தோன்றினது | இப்போது ஸேவை ஸாக்ஷாத்தானது | | |
| என் நெஞ்சில் என்று | எனது நெஞ்சிலே என்று ப்ரத்யக்ஷமாக வில்லையே' என்று (வருந்தி) | பின்னை அவன் தன்னை நினைவிப்பவற்றால் | மேலும் அப்பெருமானை நினைப்பூட்டுகின்ற மேகம் முதலியவற்றால் |
| | | தான் தளர்ந்த | தளர்ச்சியடைந்த |
| அன்று அவனை கண்ணால் காண எண்ணி | அப்போது அப்பெருமானைக் கண்ணாரக் கண்டநுபவிக்க விரும்பி | மாறன் அருள் | ஆழ்வாருடைய க்ருபையை |
| | | உன்னுமவர்க்கு உள்ளம் உருகும். | அநுஸந்திப்பவர்களுக்கு நெஞ்சு குழையும். |

* * * கீழ்த்திருவாய்மொழியாகிய * மையார் கருங்கண்ணியில் உண்டான அநுபவம் மானஸாநுபவமாகையாலே அவனை பாஹ்ய கரணங்களாலே அநுபவிக்க விரும்பி அப்போதே அந்த விருப்பம் நிறைவேறப் பெறாமையாலே ஒரு பிராட்டி தசையை யெய்தி ஸ்மாரக பதார்த்தங்களாலே [பக்ஷிஸமூஹங்களாலும் மேகஸமூஹங்களாலும்] ஆழ்வார் தளர்ந்த படியைக் கூறுவதாம் * இன்னுயிர்ச் சேவலும் பதிகம். (அரு)

உருகுமாலென்னெஞ்ச முன்செயல்களெண்ணி *
பெருகுமால் வேட்கையெனப்பேசி—* மருவுகின்ற
இன்னாப்புடனவன்சீ ரேய்ந்துரைத்தமாறன் சொல் *
என்னாச்சொல்லாதிருப்ப தெங்கு. (அசா)

| | | | |
|---|---|---|---|
| உன் செயல்கள் எண்ணி | '(எம்பெருமானே!) உனது சரிதைகளை நினைத்து | அவன் சீர் எய்ந்து உரைத்த | அப்பெருமானது ப்ராணயித்வ குணத்தைப் பொருத்தமாக எடுத்துரைத்த |
| என் நெஞ்சம் உருகும் | எனது உள்ளம் உருகா நின்றது | | |
| வேட்கை பெருகும் என பேசி | (அதற்கு மேலே) ஆசையும் அதிகரித்து வாரா நின்றது' என்று கூறி | மாறன் சொல் | ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தியை |
| மருவுகின்ற இன்னுப்புடன் | (கீழே ஸ்மாரக பதார்த்தங்களாலே நோவுபட்டு) அநுவர்த்திக்கின்ற அந்த அவஸாதத்துடனே | என் நா | எனது நாவானது |
| | | சொல்லாது இருப்பது எங்கு | அநுஸந்தியாம லிருப்பது எவ்விடத்தில்? |

*** கீழ்த்திருவாய் மொழியாகிய * இன்னுயிர்ச் சேவலில், ஸ்மாரகபதார்த்தங்களாலே நோவுபட்டுச் செல்லா நிற்கச் செய்தே, * இருத்தும் வியந்தென்கிற திருவாய் மொழியிலே தலை தடுமாருகக் கலந்த கலவி நினைவுக்கு வந்து தரிக்க, அதனையருளிச் செய்த திருவாய்மொழியாம் * உருகுமால்நெஞ்சப்பதிகம்.

திருவாய் மொழியில் "உருகுமால் நெஞ்சம்" என்று பாசுரமிருந்தாலும், இங்கு, வெண்பா வாகையாலே வெண்டளைக்குச்சேர "உருகுமால் என்னெஞ்சம்" என்றே சுத்தபாடமாகும். (அசு)

எங்காதலுக்கடி மாலேய்ந்த வடிவழகென்று*
அங்காது பற்றுசா வாங்கவன்பால்—* எங்குமுள்ள
புள்ளினத்தைத் தூதாகப்போகவிடும் மாறன்றாள்*
உள்ளினர்க்குத் தீங்கையறுக்கும். (அஎ)

| | | | |
|---|---|---|---|
| எம் காதலுக்கு அடி | எமது அன்புக்குக் காரணம் | எங்கும் உள்ள புள் இனத்தை | எவ்விடத்துமுள்ள பறவைக் கூட்டத்தை |
| மால் எய்ந்த வடிவு அழகு என்று | எம்பெருமானிடத்துள்ள விக்ரஹ ஸௌந்தரியமே என்று அறுதியிட்டு | தூது ஆக போக விடும் | தூதனுப்பின |
| அங்கு ஆது பற்றுசு ஆ | அந்த வடிவழகே ஆலம்பனமாக | மாறன் தாள் | ஆழ்வாருடைய திருவடிகளானவை |
| ஆங்கு அவன் பால் | அப்பெருமானை நோக்கி அவனுறையுமொரு திருப்பதியிலே | உள்ளினர்க்கு தீங்கை அறுக்கும் | தம்மை அநுஸந்தித்தவர்களுடைய தீமைகளைப் போக்கிவிடும். |

*** கண்ணுற் கண்ட பக்ஷிகளை யெல்லாம் தூது விடுகிற பதிகமாம் * எங்கான லகங் கழிவாயென்பது ஆசார்ய ஹ்ருதயத்தில் "தம்பிழையும் சிறந்த செல்வமும்" இத்யாதி சூர்ணையில் "........ஸௌந்தர்யங்களையுணர்த்தும் வ்யூஹவிபவ பரத்வத்வயார்ச்சைகள் தூது நாலுக்கும் விஷயம்" என்று, ஸௌந்தர்யமே பற்றாசாக இத்திருவாய் மொழியில் தூதுவிட்டதாக அருளிச்செய்ததற்கேற்ப முன்னடிகள் அருளிச் செய்யப்பட்டன. (அஎ)

அறுக்குமிடரேன்றவன்பா லாங்குவிட்டதூதர்*
மறித்துவரப் பற்றுமனத்தால் *அறப்பதறி
செய்யதிருநாவாயில் செல்லநினைந்தான் மாறன்*
மையவினுற் செய்வறியாமல். (அஅ)

| | | | |
|---|---|---|---|
| இடர் அறுக்கும் என்று | நமது துயரங்களைப் போக்கியருள்வனென்று கொண்டு | மையலினால் | அறிவுகலக்கத்தினால் |
| | | செய்வு அறியாமல் | செய்ய வேண்டியது இன்னதென்றறியாமல் |
| அவன் பால் ஆங்கு விட்ட தூதர் | அப்பெருமானைக் குறித்து அனுப்ப பட்ட தூதர் | மாறன் | ஆழ்வார் |
| மறித்து வர பற்றா மனத்தால் | மீண்டு வருமளவும் ஆறியிருக்கமாட்டாத திருவுள்ளத்தாலே | செய்ய திரு நாவாயில் | விலக்ஷணமான திருநாவாய்ப் பதியை நோக்கி |
| அற பதறி | மிகவும் விரைந்து | செல்ல நினைந்தான் | எழுந்தருள முயன்றார். |

*** கீழ்த்திருவாய் மொழியாகிய * எங்கனவில் விடப்பட்ட தூதர் அத்தலைப்பட்டு எம்பெருமானுக்கு ஸ்வதசையை யறிவித்து மீண்டு வருவதற்கு முன்னே ஆழ்வார் மிகவும் பதறித் திருநாவாயிலே செல்ல நினைத்த படியைக் கூறுவதாம்* அறுக்கும் வினையாயின பதிகம். ஈற்றடியில் 'செய்வதறியாமல்' என்கிற பாடம் மறுக்கத் தக்கது; தளைதட்டுதலால், செய்வு என்றாலும் செய்வதென்றே பொருள்படும்; "வியாக்கியைகள் செய்வால்" என்ற உபதேச ரத்தினமாலைப் பிரயோகமும் காண்க. (அஅ)

மல்லடிமை செய்யும் நாள் மால்தன்னைக்கேட்க* அவன்
சொல்லுமளவும் பற்றாத்தோன்னலத்தால்—* செல்கின்ற
ஆற்றாமைபேசி அலமந்த மாறனருள்*
மாற்றாகப் போகுமென்றனமால். (அகூ)

| | | | |
|---|---|---|---|
| மல் அடிமை செய்யும் நாள் | பரிபூரணமான கைங்கரியம் செய்யப் பெறுங் காலம் எப்போதோ வென்று | தொல் நலத்தால் | இயற்கையான பக்தியினால் |
| மால் தன்னை கேட்க | எம்பெருமானை நோக்கிக் கேட்க | செல்கின்ற ஆற்றாமை பேசி அமைந்த மாறன் | தமக்கு நிகழ்கின்ற ஆற்றாமையை எடுத்துக் கூறி அலமாப்பையடைந்த ஆழ்வாருடைய |
| அவன் சொல்லும் | அப்பெருமான் அறுதியிட்டுச் சொல்லுமளவும் ஆறியிருக்கமாட்டாத | அருள் மாற்று ஆக | கருணையே மருந்தாக |
| | | என்றன் மால போகும் | எனது அஜ்ஞானம் தொலையும் |

*** கீழ்த்திருவாய் மொழியாகிய * அறுக்கும் வினையில்* அடியேனணுகப் பெறு நாள் எவை கொலோ* ஓர் நாளறியேனே* நாளே லறியேன் *கண்ணாரக்களிக்கின்ற திங்கென்று கொல்கண்டே* என்றிப்படி பலகால் பேசின ஆழ்வார் நித்ய கைங்கரியம் செய்யப்பெறும் நாள் என்றைக் கென்று எம்பெருமானைக் கேட்க, அவன் அறுதியிட்டுச் சொல்லுமளவும் பொறுத்திருக்கமாட்டாமையினாலே தமக்கு நிகழ்கின்ற ஆற்றாமையைப் பேசின பதிகம் * மல்லிகை கமழ் என்பதாம். (அகூ)

மாலுமதுவாஞ்சை முற்றும் மன்னுமுடம்பின்முடிவில்*
சாலநண்ணிச் செய்வனெனத் தானுகந்து—* மேலவனைச்
சிறார் கணபுரத்தே சேருமெனும் சீர்மாறன்*
தாராளே நந்தமக்குத் தாள். (௯0)

| | | | |
|---|---|---|---|
| மால் | எம்பெருமான் | | |
| உமது வாஞ்சை | '(ஆழ்வீர்) உம்முடைய அபேக்ஷிதங்களெல்லாவற்றையும் | சால நண்ணி செய்வன் என | மிகவும் பொருத்தமாகத் தலைக்கட்டித் தருகிறேன்' என்றருளிச் செய்ய, |
| மன்னும் உடம்பின் முடிவில் | இந்த சரீரத்தின் முடிவிலே | தான் உகந்து | தாம் மனமகிழ்ந்து |
| | | மேல் அவனை | 'அப் பரம புருஷனை |

| | | | |
|---|---|---|---|
| சீர் ஆர் கணபுரத்தே சேரும் எனும | திருக்கண்ணபுரத்திற் சென்று ஆச்ரயியுங் கோள்’ என்றருளிச் செய்த | நந்தமக்கு | நமக்கு |
| சீர்மாறன் | நம்மாழ்வார் | தான் தாராஞே | தமது திருவடிகளை ப்ரஸாதித்தருளமாட் டாரோ? |

* * * ‘நாளே லறியேன்’ என்ற ஆழ்வாரை நோக்கி எம்பெருமான் ‘ஆழ்வீர்! உமக்கு இந்த தேஹாவஸானத்திலே உம்மைப் பரமபதத்திலே கொண்டுபோய் அடிமை கொள்ளக் கடவோம்’ என்று நாளிட்டுக்கொடுக்க, அத்தாலே திருவுள்ளமுவந்து அப்பெருமானைத் திருக் கண்ணபுரத்திலே சென்று சேருங்கோளேன்று பரோபதேசம் பண்ணின பதிகம் * மாலை நண்ணி யென்பதாம். * மரணமானல் வைகுந்தங் கொடுக்கும்பிரான் * என்றதில்நோக்கு (கூ0)

தாளடைந்தோர் தங்கட்குத் தானே வழித்துணையாம்.*
காளமேகத்தைக் கதியாக்கி—*மீளுதலாம்
ஏதமிலாவிண்ணுலகிலேக வெண்ணும் மாறனேன *
கேதமுள்ளதெல்லாம் கெடும். (கூக)

| | | | |
|---|---|---|---|
| தாள் அடைந்தோர் தங்கட்கு | தன் திருவடிகளைப் பற்றினவர்களுக்கு | விண் உலகில் | பரமபதத்தில் |
| தானே வழித்துணை ஆம் காளமேகத்தை | தானே மார்க்கபந்துவா கின்ற காளமேகப் பெருமாளை | ஏக எண்ணும் | எழுந்தருள எண்ணின |
| கதி ஆக்கி | வழிக்கு ரக்ஷகனுகக் கொண்டு | மாறன் என | ஆழ்வார் என்று சொன்ன மாத்திரத் திலே |
| மீளுதல் ஆம் ஏதம் இலா | மீட்சியாகிற குற்ற மில்லாத | கேதம் உள்ளது எல் லாம் கெடுதல் | துக்கமென்று பேர்பெற் றவை யெல்லாம் ஒழிந்துபோம் |

* * * “மார்க்கபந்து சைத்ய்ம் மோஹநத்தே மடுவிடும்” என்பது ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீஸூக்தி. கீழே * மரணமானல் வைகுந்தங் கொடுக்கும் பிரான் * என்றபடியே ‘தேஹாவ ஸாநத்திலே பேறு’ என்று எம்பெருமான் நாளிட்டுக் கொடுக்கையாலே போக வொருப்பட் டார் ஆழ்வார்; அவர்க்குத் திருமோகூர்க் காள மேகப்பெருமாள் வழித்துணையாக அமைந் தார்; இவ்விஷயம் * தாளதாமரைத் திருவாய் மொழியிலே அருளிச் செய்யப்பட்டது. (கூக)

கெடுமிடர் வைகுந்தத்தைக் கிட்டினுப்போல *
தடமுடையனந்தபுரந்தன்னில்—* படவரவில்
கண்டுயில் மாற்காட்செய்யக் காதலித்தான் மாறன் * உயர்
விண்டனிலுள்ளோர் வியப்பவே. (கூஉ.)

| | | | |
|---|---|---|---|
| மாறன் | நம்மாழ்வார் | தடம் உடை அனந்த புரம் தன்னில் | தடாகங்களையுடைய திருவனந்தபுரத்திலே |
| உயர் விண் தனில் உள்ளோர் வியப்ப | உயர்ந்த பரமபதத்தி லுள்ள நித்தியஸூரி கள் ஆச்சரியப்படும் படி | படம் அரவில் கண் துயில் மாற்கு | படமுடைய சேஷன் மீது பள்ளி கொண்ட ருளும் திருமாலுக்கு |
| கெடும் இடர் வைகுந் தத்தை கிட்டினுற் போல | துக்கமற்றதான ஸ்ரீவை குண்டத்தை யடைந்து அடிமை செய்யப்பெற்றுப் போல | ஆள் செய்ய காதலித்தான் | அடிமை செய்ய விரும்பினுர். |

* * * பரமபதத்தில் போனால் அங்குச் செய்யக்கூடிய கைங்கரியங்களைத் திருவனந்தபுரத்திலே சேஷசாயியான ஸ்ரீ பத்மநாபப் பெருமாள் திருவடிகளிலே தாமும் தமருமாகச் சென்று செய்ய விரும்பினபடியைக் * கெடுமிடாராய வெல்லா மென்கிற திருவாய் மொழியிலருளிச் செய்தாரென்க. (௯௨)

**வேய்மருதோளிந்திரைகோன் மேவுகின்றதேசத்தை *
தான்மருவாத்தன்மையினால் * தன்னையின்னம்—பூமியிலே
வைக்குமெனச் சங்கித்து மால்தெளிவிக்கத்தெளிந்த *
தக்கபுகழ்மாற னெங்கள்சார்வு.** (௯௩)

| | | | |
|---|---|---|---|
| வேய் மரு தோள் இந்திரை கோன் | மூங்கில் போன்ற தோள்களையுடையளான பிராட்டிக்கு வல்லபனான எம்பெருமான் | தன்னை இன்னம் பூமியிலே வைக்கும் என சங்கித்து | தம்மை இன்னமும் இந்த ஸம்ஸாரத்திலேயே இட்டுவைக்குமோவென்று அதிசங்கித்து |
| மேவுகின்ற தேசத்தை | எழுந்தருளியிருக்குமிடத்தை | மால் தெளிவிக்க தெளிந்த | எம்பெருமான் தேற்றத் தேறின |
| தான் மருவா தன்மையினால் | தாம் புகப்பெறாமையினாலே | தக்க புகழ் மாறன் | தகுதியான புகழையுடைய ஆழ்வார் |
| | | எங்கள் சார்வு | எமக்குப் புகல் |

* * * தாம் மநோரதித்தபடியே அப்போதே அத்தேசத்திலே போய் அடிமை செய்யப் பெறாமையாலே கலங்கி 'பழையபடியே நமக்கு ஸம்ஸாரத்திலிருப்பே சேஷித்துவிடுகிறதோ' என்று, ப்ரக்ருதி ஸம்பந்தத்தின் கொடுமையாலும் ஈச்வரஸ்வாதந்திரியத்தைப் பற்றவும் தமக்குண்டான அதிசங்கையை * வேய்மரு தோளிணைப் பதிகத்திலருளிச் செய்தாரென்க. மேலே சொன்ன அதிசங்கை முகபேதத்தாலே அருளிச் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது—ஒரு படுக்கையிலேகூட விருக்கச்செய்தே பசுமேய்க்கப் போகிற விடியற்காலம் வந்து, அக்காலத்துக்கேற்ற குயில் மயில் முதலானவற்றினுடைய பாடலாடல் முதலான அடையாளங்களையும் காண்கையாலே அவற்றையே கொண்டு 'கண்ணபிரான் பசுமேய்க்கப் போனான்' என்று அதிசங்கை பண்ணி நோவுபடுகிற இடைப் பெண்கள் பேச்சாலே அருளிச்செய்ததான * வேய் மரு தோளிணைப் பதிகத்திற்கு ஆழ்வார்தமக்குண்டான அதிசங்கையே உள்ளுறை பொருளாம்.

இதில் பத்தாவது பாட்டில் * செங்கனிவாயெங்களாயர் தேவே * என்றதின் சுவடறிந்து பூருவர்கள் நிர்வஹித்தபடியைத் தழுவி "மால் தெளிவிக்கத் தெளிந்த" என்றருளிச் செய்யப்பட்டது. (௯௩)

**சார்வாகவேயடியில் தானுரைத்த பத்திதான் *
சீரார் பலத்துடனே சேர்ந்ததனை—* சோராமல்
சண்டுரைத்தமாறன் கழலிணையே நாடோறும் *
கண்டுகக்குமென்னுடையகண்.** (௯௪)

| | | | |
|---|---|---|---|
| அடியில் | ஆரம்பத்தில் * வீடுமின் முற்றத்திலே | சீர் ஆர் பலத்துடனே சேர்ந்ததனை கண்டு | சிறந்த பலனோடே சேர்ந்த படியை யறிந்து |
| சார்வு ஆகவே | எல்லார்க்கும் உபாதேயமாகவே | சோராமல் உரைத்த | ஒன்றும் குறையாமல் அருளிச் செய்த |
| தான் உரைத்த பத்திதான் | தாமருளிச் செய்த பக்தியானது | மாறன் | ஆழ்வாருடைய |

| | | | |
|---|---|---|---|
| கழல் இணையே | உபயபாதங்களையே | என்னுடைய கண் | எனது கண்கள் |
| நாள்தோறும் | எப்போதும் | கண்டு உகக்கும் | ஸேவித்துக்களிக்கும் |

* * திருவாய்மொழி யென்பது ஒரு சிறந்த சாஸ்த்ரம். உபக்ரமித்த அர்த்தத்தை உபஸம்ஹாரம் பண்ணுவதென்பது சாஸ்த்ரார்த்தமாகையாலே முதலில் உபக்ரமித்த பத்தியோகத்தை * சார்வே தவநெறிக் கென்கிற திருவாய்மொழியிலே உபஸம்ஹரித்தருளினரென்கிறது. 'பிணக்கறவைச் சார்வாக நிகமித்து'' என்ற ஆசார்யஹ்ருதய ஸ்ரீஸூக்தியும் காண்க (கூச)

கண்ணடியிணையில் காதலுறுவார்செயலை *
திண்ணமுறவே சுருங்கச்செப்பியே—* மண்ணவர்க்குத்
தானுபதேசிக்கை தலைக்கட்டினன்மாறன் *
ஆனபுகழ்சேர் தன்னருள். (கூரு)

| | | | |
|---|---|---|---|
| கண்ணன் அடி இணையில் | எம்பெருமானது பதவிணையில் | | |
| காதல் உறுவார் செயலை | பக்தியுடையவர்களின் செய்கையை | சுருங்க செப்பி | சுருக்கமாக அருளிச் செய்து |
| திண்ணம் உற | திடமாக | மண்ணவர்க்கு | இவ்வுலகத்தவர்களுக்கு |
| மாறன் | ஆழ்வார் | | |
| ஆன புகழ் சேர் தன் அருள் | சிறந்த கீர்த்தியோடே சேர்ந்த தமது க்ருபையினாலே | தான் உபதேசிக்கை தலைக்கட்டினன் | தாம் உபதேசிக்குந் தொழிலைமுடித்துக் கொண்டார் |

* * * எம்பெருமான் தம்மைப் பரம பதத்திலே கொண்டு போகப் பதறுகிறபடியைக் கண்டு, சரம தசையிலே புதைத்துக் கிடக்கும் மஹாநிதிகளைப் புத்திரன் முதலானார்க்குக் காட்டுமாபோலே ஆழ்வாரும் ஒருவருமிழவாதபடி எல்லார்க்கும் ஹிதங்களைச் சுருங்கமாக உபதேசிக்கவேண்டி * கண்ணன் கழலிணைப் பதிகத்திலே * தாள்வாய்மலரிட்டு நாள்வாய் நாடீரே* * பாடீரவன் நாமம் * சுனைநன்மலரிட்டு நினைமின் நெடியானே * என்றிப்படி மநோவாக் காயங்களாகிற கரணத்ரயத்தாலும் ஆகும் வ்ருத்தியை யுபதேசித்துத் தலைக்கட்டினாராயிற்று.

"செயலைக் சுருங்கச் செப்பி" என்றது 'செய்யவேண்டிய காரியத்தை ஸம்க்ஷேபமாக அருளிச்செய்து' என்றபடி. (கூரு)

அருளாலடியிலெடுத்த மாலன்பால் *
இருளார்ந்த தம்முடம்பையிச்சித்து—* இருவிசும்பில்
இத்துடன்கொண்டேக இசைவுபார்த்தேயிருந்த *
சுத்திசொல்லும் மாறன்செஞ்சொல். (கூசா)

| | | | |
|---|---|---|---|
| அருளால் | க்ருபையினால் | | |
| அடியில் எடுத்த மால் | (ஸம்ஸாரத்தில் நின்றும்) அடியிலே யெடுத்தருளின எம்பெருமான் | இத்துடன் கொண்டு ஏக | (தம்மை) இந்த சரீரத்தோடே கொண்டு போக |
| அன்பால் | ப்ரேம விசேஷத்தாலே | இசைவு பார்த்தே இருந்த | (தமது) அனுமதியை எதிர்பார்த்திருந்த |
| இருள் ஆர்ந்த தம் உடம்பை இச்சித்து | ஹேயமான தமது திருமேனியை ஆசைப்பட்டு | சுத்தி | அவனது சுத்தியை |
| | | மாறன் செஞ்சொல் | ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தியானது |
| இருவிசும்பில் | பரமபதத்தில் | சொல்லும் | தெரிவிக்கும். |

*** திருவாய்மொழி தொடங்கும் போதே * மயர்வற மதிநலமருளினன் * என்னும்படியாக அடியிலே தம்மை விஷயீகரித்தருளின ஸர்வேச்வரன் தம்மைப் பரமபதத்தேறக்கொண்டு போகத் திருவுள்ளம்பற்றி, இந்த சரமதிருமேனியோடே கொண்டுபோகப் பாரித்து அதற்குத் தம்முடைய இசைவை யெதிர்பார்த்திருந்தமையை ஆழ்வார் * அருள்பெறுவாரடியார் பதிகத்திலே அருளிச் செய்தா ரென்க. இப்பதிகத்திலே* இகழ்வின்றி யென்னெஞ்சத் தெப்பொழுதும் பிரியானே* என்ற பாசுரத்தில் நோக்காகவும், மேல்பதிகத்தில்* மங்கவொட்டுன் மாமாயை* என்றதை நோக்கியும் அருளிச் செய்தபடி.

இதில் மூன்றாமடியில் "இவரிசைவு பார்த்திருந்த" என்று சிலர் ஓதும் பாடம் மறுக்கவும் மறக்கவும் தக்கது. அதில் 'இவர்' என்பது அந்வயிக்க வுரியதன்று. இரண்டாமடியில் 'தம்முடம்பை யிச்சித்து' என்றதுபோல இங்கும் 'தம்மிசைவு' என்னப் பொருந்துமேயல்லது இவரிசைவு என்னப் பொருந்தாது. இவ்விஷயம் ஆழ்ந்த வ்யுத்பத்தியுடையார்க்கே அவகாஹிக்கும். (சூசு)

செஞ்சொற்பரன்றனது சீராரும்மேனிதனில்*
வஞ்சித்துச்செய்கின்ற வாஞ்சைதனின்*—விஞ்சுதலைக்
கண்டவனைக்காற்கட்டிக் கைவிடுவித்துக்கொண்ட*
திண்டிறல்மாறன் னந்திரு. (சூஎ)

| | | | |
|---|---|---|---|
| செஞ்சொல் பரன் | செஞ் சொற்களாலே பிரதிபாதிக்கப்படுகின்ற பரமபுருஷன் | கை விடுவித்துக் கொண்ட | (அவனது மாயவலையினுள் தாம் அகப்படாதபடி) தம்மை விடுவித்துக்கொண்ட |
| சீர் தனது ஆரும் மேனி தனில் | தம்முடைய சிறந்த திருமேனியிலே | | |
| வஞ்சித்து செய்கின்ற வாஞ்சை தனின் விஞ்சுதலை கண்டு | வஞ்சனையாகச் செய்கிற விருப்ப மிகுதியைக் கண்டு | திண் திறல் மாறன் | திடமான சக்தியையுடையரான ஆழ்வார் |
| அவனை கால் கட்டி | அவன் திருவடிகளைக் கட்டிக் கொண்டு | நம் திரு | நமக்குச் செல்வம். |

*** தம்மோடே வந்து கலந்து தமக்கு விதேயனாய்த் தம் திருமேனியிலே மிகுந்த அபிநிவேசமுடையனாய்த் திருமேனியோடே தம்மைத் திருநாட்டிலே கொண்டு போகவேணுமென்று எம்பெருமான் காட்டுகிற குதூஹலத்தைக் கண்ட ஆழ்வார் 'ஐயோ! இவ்வழுக்குடம்பின் தோஷ மிகுதியை யறியாமல் ராகாந்தனாயிருக்கிற இவனுக்கு இதின் தோஷத்தையுணர்த்தினோமாகில் இத்தைத் தவிர்வன்' என்று நினைத்து இதின் தோஷங்களை அவனுக்கறிவிக்க, அபிமதவிஷயத்தில் அழுக்கு உகப்பாரைப்போல அது தானே அவனுக்கு மேல்விழுகைக்கு உடலாக 'பிரானே! அந்த வினைசையை நீ கழித்துக்கொள்ளவே வேண்டும்" என்று அவனைக் கால்கட்டி அந்த வாஞ்சையை விடுவித்துக் கொண்டாராழ்வார்* செஞ்சொற்கவிகாளென்கிற திருவாய்மொழியிலே.

ஸர்வசக்தனான அவனுடைய பிடிவாதத்தையும் ஆழ்வார் ஸ்வசக்தியாலே மாற்றினாராதலால் 'திண் திறல் மாறன்' என்று மாமுனிகளிடம் விருது பெற்றாரென்க.

* மங்கவொட்டுன் மாமாயை* என்கிற பாசுரம் இத்திருவாய் மொழிக்கு உயிரானது. "வேர் சூடுமவர்கள் மண்பற்றுக் கழற்றாதாப்போலே ஜ்ஞாநியை விக்ரஹத்தோடே ஆதரிக்கும்"

என்கிற ஸ்ரீவசநபூஷண ஸ்ரீஸூக்தியும் வேர் சூடுவார் மண்பற்றுப்போலே'' என்கிற ஆசார்ய ஹ்ருதய ஸ்ரீஸூக்தியும் இங்கே அநுஸந்தேயம். (கூஎ)

தீருமால் தன்பால் விருப்பம் செய்கின்ற நேர்கண்டு*
அருமாயத்தன் றகல்விபபானேன்—*பெருமால் நீ
இன்றேன்பால்செய்வா னேன்னேன்ன இடருற்று நின்றான்*
துன்னுபுகழ்மாறனைத்தான் சூழ்ந்து (கூஅ)

| | | | |
|---|---|---|---|
| திருமால் | ஸர்வேச்வரன் | நீ பெருமால் செய்வான் என் | நீ மிக்க வியாமோஹத்தைச் செய்வானேன்?’ |
| தன் பால் | தம்மிடத்து | என்ன | என்று (ஆழ்வார்) கேட்க, |
| விருப்பம் செய்கின்ற நேர் கண்டு | அதிகமான ஆதரம் செய்யும்படியைக் கண்டு | தான் | (அப்போது) எம்பெருமான் தான் |
| அன்று அரு மாயத்து அகல்விப்பான் என் | ‘(எம்பெருமானே!) இதற்கு முன்பெல்லாம் (என்னை) ப்ரக்ருதியிலே யிட்டு வைத்து அகற்றி விடுவானேன்? | துன்னு புகழ் | மிக்க புகழையுடையரான |
| | | மாறனை | அவ்வாழ்வாரை |
| | | சூழ்ந்து | வளைந்து கொண்டு |
| இன்று | இப்பொழுது | இடர் உற்று நின்றான். | (அவர் கேட்ட கேள்விக்கு விடை சொல்லமாட்டாமல்) தடுமாறி நின்றான். |
| என் பால் | என்னிடத்தில் | | |

*** எம்பெருமான் ஆழ்வார் பக்கலிலே அளவுகடந்த அபிநிவேசத்தைக் காட்டத் தொடங்கினான்; அது கண்ட ஆழ்வார் ‘பிரானே! இன்றளவும் என்னைப் படுகுழியிலே தள்ளி வைத்து இன்று இங்ஙனே ஆதரிப்பதற்கு என்ன ஹேது?’ என்று மடிபிடித்துக்கேட்க, அதற்கு ஒரு மறுமாற்றமும் சொல்லப் போகாமையாலே எம்பெருமான் தடுமாறி நின்றான்; என்பது* திருமாலிருஞ் சோலைமலை யென்றே னென்கிற திருவாய் மொழியிலருளிச் செய்யப் பட்டதாம். ஆசார்ய ஹ்ருதயத்தின் முடிவில் “இன்று அஹேதுகமாக ஆதரிக்கிற நீ அநாத்ய நாதரஹேது சொல்லென்று மடியைப் பிடிக்க'' என்று தொடங்கி விரிவாக அருளிச் செய்துள்ள விஷயங்கள் இங்கே அநுஸந்தேயம். (கூஅ)

சூழ்ந்துநின்ற மால்விசும்பில் தொல்லைவழிகாட்ட*
ஆழ்ந்ததனை முற்றுமநுபவித்து—*வாழ்ந்தங்
கடியருடனே யிருந்தவாற்றையுரை செய்தான்*
முடிமகிழ்சேர் ஞானமுனி. (கூகூ)

| | | | |
|---|---|---|---|
| முடி மகிழ் சேர் ஞானம் முனி | திரு முடியிலே வகுள மாலையணிந்த ஞான முனிவராகிய ஆழ்வார் | அதனை முற்றும் ஆழ்ந்து அநுபவித்து | அங்குள்ள அநுபவங்களையெல்லாம் ஆழ்ந்து அநுபவித்து |
| சூழ்ந்து நின்ற மால் | தம்மைச் சூழ்ந்து நின்ற எம்பெருமான் | அங்கு வாழ்ந்து | அவ்விடத்தே வாஸம் பண்ணி |
| விசும்பில் | பரமபதத்தில் | | |
| தொல்லை வழி காட்ட | அநாதி மார்க்கமான அர்ச்சிராதி மார்க்கத்தைக் காட்டிக் கொடுக்க | அடியருடனே இருந்த ஆற்றை | நித்யமுக்தர்களுடனே கூடியிருந்தபடியை |
| | | உரை செய்தான் | அருளிச் செய்தார். |

* ** எம்பெருமான் ஆழ்வாரைத் திருநாட்டிலே கொண்டுபோய் வைத்து இவரும் தானுமாக அநுபவிப்பதாய் மநோரதித்து இவர்க்கு அர்ச்சிராதி மார்க்கத்தையும் அங்குள்ளார் பண்ணும் ஸத்கார/ விசேஷங்களையும் பரமபதப்ராப்தியையும் அங்கு நடைபெறும் விசேஷங்களையும் தன்னுடைய ஸ்வரூபரூப குணவிபூதிகளையும் விசதமாக இவர் கண்டநுபவிக்கலாம்படி பரஜ்ஞாந தசையைப் பிறப்பித்துக் காட்டிக்கொடுக்க இவரும் அவற்றை அழகிதாகத் திருப்புளியாழ்வாரடியிலிருந்து கொண்டே கண்டநுபவித்து *அந்தமில் பேரின்பத்தடியரோடிருந்து தாம் பெற்ற அப்பேற்றை* சூழ்விசும்பு பதிகத்திலருளிச் செய்தா ரென்றதாயிற்று, (௯௯)

முனிமாறன் முன்புரைசெய் முற்றின்பம் நீங்கி*
தனியாகிநின்று தளர்ந்து *நனியாம்
பரமபத்தியால் நைந்து பங்கயத்தாள் கோனை*
ஒருமையுற்றுச் சேர்ந்தா னுயர்ந்து (க00)

| | | | |
|---|---|---|---|
| முனி மாறன் முன்பு உரை செய் | சடகோப மாமுனிவர் கீழ் அருளிச் செய்த | பங்கயத்தாள் கோனை | திருமாலை |
| முற்றின்பம் நீங்கி | இன்பம் முழுதும் நீங்கினவராகி | ஒருமை உற்று உயர்ந்து சேர்ந்தான் | திருவுள்ளத்தாலே ஒருமைப்பட்டு அத்தாலே நித்யஸூரிகளின் உயர்வை யுடையராகி எம்பெருமானோடே சேர்ந்தாராயிற்று. |
| தனி ஆகி நின்று தளர்ந்து | தனிமையாய் நின்று வருந்தி | | |
| நனி ஆம் பரமபத்தியால் நைந்து | அதிகமாக விளைந்த பரம பக்தியினால் பரிபக்வராய் | | |

* * * சூழ்விசும்பணி முகிலென்கிற கீழ்த்திருவாய் மொழியிலே பரம பதத்திலேபுக்குப் பரிபூர்ணாநந்த சாலியாய் நித்யஸூரிகள் திரளிலே யிருக்கிறபடியாகத் தம்மை யநுஸந்தித்த விது ஜ்ஞாநாநுஸந்தானமாத்திரமாய் உள்ளபடியே யன்றிக்கே யொழிகையாலே, மேருமலையுச்சியிலே இன்பம் தலைச்சிறப்ப விருந்தவன் பேராழமான பாதாளத்திலே தலைகீழாகத் தள்ளுண்டு விழுந்து நோவுபடுமா போலே இப்பிறவிப் பெருங்குழியிலேயே தனியே தாமிருக்கிறபடியைக்கண்டு ஆற்றாமை தலையெடுத்துப் பெருமிடறு செய்து கூப்பிட்டுப் பெரிய ஆர்த்தியோடே திருவடிகளிலே சரணம்புக, பெரிய திருவடி திருத்தோளிலே பெரிய பிராட்டியாரோடேகூட இவரபேக்ஷித்தபடியே எம்பெருமான் வந்து தோற்றி, காற்கட்டான ப்ரக்ருதிஸம்பந்தத்தையு மறுத்துத் திருநாட்டிலே கொண்டுபோய் நித்யஸூரிகளோடே ஒரு கோவையாக்கி நித்ய கைங்கரியம் கொண்டருள, இங்ஙனம் தாம் *அவாவற்று வீடுபெற்றபடியை * முனியே நான்முகனே யென்கிற திருவாய் மொழியில் அருளிச் செய்து தலைக்காட்டினாராழ்வார் — என்றதாயிற்று (க00)

ஜீயர் திருவடிகளே சரணம்

பெருமாள்கோயில் ப்ரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர்
இயற்றிய
திருவாய்மொழி நூற்றந்தாதி உரை
முற்றுப் பெற்றது.

ராஜாஜி பிரஸ் லிமிடெட், தேவகோட்டை R. No. 41—500.
Publisher's No. Q. H. C. T. 26.

ஸ்ரீ:
ஆழ்வாரெம்பெருமானர் ஜீயர் திருவடிகளே சரணம்.



ஸ்ரீ மணவாளமாமுனிகள் அருளிச்செய்த

## யதிராஜ விம்சதியின்

# உரை அவதாரிகை.

(ஸ்ரீகாஞ்சீ. ப்ர. அண்ணங்கராசாரியர்.)

ஸ்வாமி பூர்வாச்ரமத்தில் அழகிய மணவாள நாயனர் என்கிற திருநாமத்தோடே விளங்கித் திருவாய்மொழிப்பிள்ளை திருவடிகளிலே வாழ்கிற நாளிலே ஒருநாள் அவ்வாசிரியர் எம்பெருமானருடைய குணநுபவம் பண்ணிக்கொண்டிருக்கையில் * மாறனடிபணிந்துய்ந்த விராமானுசன் * என்றும் * உறுபெருஞ் செல்வமும் தந்தையுந்தாயும் உயர்குருவும் வெறிதரு பூமகள் நாதனும் மாறன் விளங்கியசீர் நெறிதருஞ் செந்தமிழாரணமே யென்றிந்நீணிலத்தோர் அறிதரநின்ற விராமாநுசன் * என்றும் * பண்டருமாறன் பசுந்தமிழானந்தம் பாய் மதமாய் விண்டிடவெங்க ளிராமானுச முனிவேழம் * என்றுமுள்ள பாசுரங்களைச் சிந்தை செய்து, ஆழ்வார் திருவடிகளிலும் அருளிச்செயல் திறத்திலும் எம்பெருமானர்க்கு ப்ரஸித்தமாயிருந்த அதிமாத்ர ப்ராவண்யத்திற்குத் தகுதியாக இத்திருநகரியிலே அவர்க்கு ஒரு தனிக்கோயில் அமைக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி சிஷ்யர்களுக்கு நியமித்து உடையவர் ஸன்னிதியையும் அதைச்சுற்றி ‘ஸ்ரீராமாநுஜ சதுர்வேதிமங்கலம்’ என்கிற திருவீதியையும் ப்ரதிஷ்டிப்பித்து * இராமானுசனைத் தொழும் பெரியோரையும் அங்கே நித்யவாஸம் செய்ய நியமித்தருளி அந்த நற்செல்வமனைத்தையும் நாயனர்க்கு [மணவாளமாமுனிகளுக்கு] அதீனமாக்கியருளினர்.

நாயனரும் அந்த எம்பெருமானர் திருவடிகளிலே மிகவும் பரிவாயிருந்து அங்குத்தைக்கு உரிய கைங்கரியங்களையெல்லாம் குறையற நடத்திக்கொண்டு போருமதுகண்டு திருவுள்ளமுவந்த திருவாய்மொழிப்பிள்ளை ‘யதீந்த்ரப்ரவணர்’ என்று நாயனரை அழைக்கத் தொடங்கினர். இந்தத் திருநாமமே அப்போது எங்கும் ப்ரஸித்தமாயிற்று.

அப்போது அவ்வெம்பெருமானர் திருவடிகளிலே ஒரு ஸ்தோத்ரம் விஜ்ஞாபிக்க வேணுமென்று ஆசார்ய நியமனமாக யதிராஜவிம்சதி யென்னும் ஸ்தோத்ரத்தை யதீந்த்ரப்ரவணர் விஜ்ஞாபித்து அதில் “ ஸ்ரீமந் யதீந்த்ர ! தவ திவ்யபதாப்ஜஸேவாம் ஸ்ரீசைலநாத கருணா பரிணாம தத்தாம் ” என்கிற ச்லோகத்தினுல் ஸ்வாசார்ய விஷயத்தில் உபகாரஸ்ம்ருதியையும் ப்ரகாசிப்பித்தருளினர். அப்போது அங்கேயிருந்த முதலிகள்

“ வல்லார்கள் வாழ்த்துந் தருகேசர்தம்மை மனத்துவைத்துச்
சொல்லாரவாழ்த்தும் மணவாளநாயனர் தொண்டர்தழாம்
எல்லாந்தழைக்க எதிராசவிம்சதி யீன்றளித்தோன்
புல்லாரவிந்தத் திருத்தாளிரண்டையும் போற்று நெஞ்சே ”

என்கிற பாசுரத்தை விஜ்ஞாபித்தனர்.

இந்த யதிராஜ விம்சதியின் மாதுர்யம் முதலிய குணவிசேஷங்களைப்பற்றி வரவரமுநி சதகத்திலே “ यदुदिता यतिभूपतिविंशतिः समवधीरितशीधुसुधारसा ” என்றும் “ द्राक्षामधिक्षिपति निन्दति माकरन्द-धारां सुधारसझरीमधरीकरोति ” என்றுமருளிச் செய்துள்ள ச்லோகங்கள் இங்கே அநுஸந்தேயம்.

' எம்பெருமானுருடைய அபராவதாரபூதரான மாமுனிகள் தம்மைத்தாமே துதிப்பது போலே இந்த ஸ்தோத்ரம் அருளிச் செய்யலாமோ ? அதிலும் அளவு கடந்தவாறுகத் தம்முடைய நைச்சியத்தைப் பேசியிருப்பது தகுமோ ? என்று ஒரு சங்கை தோன்றும். இங்குப் பெரியோர்கள் பரிஹாரமுணர்த்தும் வழி கேண்மின் ;—* வேதவேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே * என்கிறபடியே ஸ்ரீராமபிரான் ஸாக்ஷாத் நாராயணவதாரமாயிருக்கச் செய்தேயும் * ஸஹ பத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயணமுபாகமத் * இத்யாதிப்படியே நாராயணனைத் தொழுதது ஸ்ரீரங்கநாதனை அநுதினமும் திருவாராதனம் செய்துகொண்டிருந்தது முதலியனபோல் இவையும் அவதாரங்களுக்குப் பொருந்தியவைகளே யென்று.

அவதாரிகை முற்றிற்று.

ஸ்ரீ:

# யதிராஜவிம்சதியின் தனியன்.

यः स्तुतिं यतिपतिप्रसादनीं व्याजहार यतिराजविंशतिम् ।
तं प्रपन्नजनचातकाम्बुदं नौमि सौम्यवरयोगिपुङ्गवम् ॥

ய: ஸ்துதிம் யதிபதிப்ரஸாதநீம் வ்யாஜஹார யதிராஜவிம்சதிம்,
தம் ப்ரபந்நஜநசாதகாம்புதம் நௌமி ஸௌம்யவரயோகிபுங்கவம்.

பதவுரை.

| | | | |
|---|---|---|---|
| ய: | யாவனொரு மணவாளமாமுனிகள் | வ்யாஜஹார | அருளிச்செய்தாரோ, |
| யதிபதிப்ரஸாதநீம் | எம்பெருமானாருடைய திருவுள்ளத்தை உகப்பிக்குமதான | ப்ரபந்நஜநசாதக அம்புதம் | ப்ரபந்நர்களாகிற சாதகபக்ஷிகளுக்குக் கார்முகில் போன்றவரான |
| யதிராஜவிம்சதிம் | யதிராஜவிம்சதியென்கிற | தம் ஸௌம்யவர யோகிபுங்கவம் | அந்த மணவாளமாமுனிகளை |
| ஸ்துதிம் | தோத்திரத்தை | நௌமி | துதிக்கின்றேன். |

எம்பெருமானார் திருவுள்ளத்தையுகப்பிக்கப் பாங்கான யதிராஜவிம்சதி யென்னும் ஸ்துதியை யருளிச் செய்தவரும் ப்ரபந்நர்களுக்கு வேறோரிடம் தேடிப்போக வேண்டாதபடி ஸகலார்த்தங்களையும் வர்ஷித்தருள்பவருமான மணவாளமாமுனிகளை வாழ்த்துவேனென்கை.

ஸ்வாமி இந்த ஸ்துதியை யருளிச் செய்தது க்ருஹஸ்தாச்ரமத்திலேயாதலால் இங்கு 'ஸௌம்யவரயோகிபுங்கவம்' என்று கூறத் தகுதியுண்டோ? அப்போது யோகிபுங்கவத்வாவஸ்தையில்லையே என்று சங்கிக்கவேண்டா. பிந்திய கோலத்தை முன்னே உபலக்ஷித்துக் கூறுவது முண்டு. இத்தனியன் அவதரித்தது உத்தமாச்ரமத்திலே யாதலால் குறையொன்றுமில்லை யென்க.

தனியன் உரை முற்றிற்று.

ஸ்ரீ:

ஜீயர் திருவடிகளே சரணம்.

## மணவாளமாமுனிகள் அருளிச்செய்த

# யதிராஜவிம்சதி.

(ஸ்ரீகாஞ்சீ. பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய உரையோடு கூடியது.)

**श्रीमाधवाङ्घ्रिजलजद्वयनित्यसेवाप्रेमाविलाशयपराङ्कुशपादभक्तम् ।**
**कामादिदोषहरमात्मपदाश्रितानां रामानुजं यतिपतिं प्रणमामि मूर्ध्ना ॥**

ஸ்ரீமாதவாங்க்ரிஜலஜத்வயநித்யஸேவா ப்ரேமாவிலாசயபராங்குசபாதபக்தம்,
காமாதிதோஷஹரமாத்மபதாச்ரிதாநாம் ராமாநுஜம் யதிபதிம் ப்ரணமாமி மூர்த்நா.

| | |
|---|---|
| ஸ்ரீமாதவ அங்க்ரி ஜலஜத்வய நித்ய ஸேவாப்ரேம ஆவிலஆசய பராங்குசபாதபக்தம் | அழகுபொலிந்த எம்பெருமானது திருவடித்தாமரையிணைகளை நிச்சலும் தொழுகையிலுண்டான ப்ரேமத்தினால் கலங்கின திருவுள்ளமுடையரான நம்மாழ்வாருடைய திருவடிகளிலே அன்பு பூண்டவரும், |

| | |
|---|---|
| ஆத்ம பத ஆச்ரிதாநாம் | தமது திருவடிகளைப் பணிந்தவர்களுக்கு |
| காமாதி தோஷஹரம் | காமம் முதலிய குற்றங்களைக் களைந்தொழிப்பவரும் |
| யதிபதிம் | யதிகளுக்குத் தலைவருமான |
| ராமாநுஜம் | எம்பெருமானாரை |
| மூர்த்நா ப்ரணமாமி | தலையால் வணங்குகின்றேன். |

* * * நம்மாழ்வார் திருவடிகளில் அன்பு பூண்டவரும், தமது திருவடிகளைப் பணிந்தவர்களது குற்றங்களை நீக்கி நற்றங்களை வளர்ப்பவருமான எம்பெருமானாரைத் தொழுகின்றேனென்றவாறு.

எம்பெருமானார்க்கு அதிசயாவஹமான வைபவங்கள் பல்லாயிரமிருந்தாலும் ஆழ்வார் திருவடிகளில் ப்ராவண்யத்தையே அவர் தமக்குப் பெரிய வைபவமாக அத்யவஸித்திருந்தாராதலால் அவருடைய அத்யவஸாயத்திற்குப் பொருந்த "பராங்குச பாதபக்தம்" என்றார். அமுதனாரும் "மாறனடி பணிந்துய்ந்தவன்" என்றே தொடங்கினர். "தமிழ் மறைகளாயிரமும் ஈன்ற முதல் தாய் சடகோபன், மொய்ம்பால் வளர்த்தவிதத்தாய் இராமாநுசன்" என்ற திருவாய்மொழித் தனியனுலும் "பாஷ்யகாரர் இது கொண்டு ஸூத்ர வாக்யங்களொருங்க விடுவர்" என்ற ஆசார்ய ஹ்ருதய சூர்ணையாலும் ஸ்வாமிக்கு ஆழ்வார் பக்கலிலிருந்த ப்ராவண்யாதிசயம் அறியற்பாலது.

ஸ்வாமியின் ப்ராவண்யத்திற்குப் பாத்ரபூதரான நம்மாழ்வார் எப்படிப்பட்டவரென்னில், ஸ்ரீமாதவாங்க்ரிஜலஜத்வய நித்யஸேவாப்ரேமாவிலாசயர். எம்பெருமானுடைய திருவடிகளிலே காதலடியாகக் கலங்கின திருவுள்ளமுடையவர் என்கை. 'தெளிந்த சிந்தையர்' என்று சொல்

லிப் புகழ்வது ப்ராப்தமாயிருக்க, [ஆவிலாசய என்று] கலங்கின திருவுள்ளமுடையவர் என்று விசேஷணமிடுவது பெருமைக்கு ஒக்குமோவென்னில்; கர்மநிபந்தனமான கலக்கம் ஹேயமே யல்லது ப்ரேம நிபந்தனமான கலக்கம் ஹேயமன்று, மிகவும் உபாதேயம், உத்தேச்யம் என்கிற சாஸ்த்ரார்த்தம் இங்கு அறியத்தக்கது. ப்ரேம நிபந்தனமான கலக்கத்தினுல் செய்யும் காரியம் ஏதென்னில்; மடலெடுக்கவொருப்படுகை, மங்களாசாஸனத்திலேயூன்றுகை, நோன்பு நோற்கை முதலியனவாம். இவை ப்ரேம பரவசர்க்கு அவத்யமன்று. "ஜ்ஞாந விபாக கார்யமான அஜ்ஞாநத்தாலே வருமவையெல்லாம் அடிக்கழஞ்சு பெறும்" என்கிற ஸ்ரீவசநபூஷண திவ்யஸூக்தியும் அதன் வியாக்கியான ஸ்ரீஸூக்திகளும் இங்கே அநுஸந்தேயம். ஸித்தோபாயமான அவன் பண்ணின க்ருஷி பலமாய் விளைவது இக்கலக்கமென்று கொள்ளவேணும்.

பராங்குசரென்கிற திருநாமத்திற்கு இரண்டு வகையான வ்யுத்பத்தி யுண்டு. பரர்களுக்கு அங்குசமாயிருப்பவரென்றும், பரனுக்கு அங்குசமாயிருப்பவரென்றும். (அதாவது—) பரர்களாகிறுர்— எம்பெருமானுக்கு குணமில்லை விக்ரஹமில்லை விபூதியில்லையென்னும் புறச்சமயிகள்; அவர்களுக்குத் தம்முடைய திவ்யஸூக்திகளாலே அங்குசமாயிருப்பவர்—அவர்களது செருக்கு மொழிகளை யடக்குபவர் என்கை முதல் வ்யுத்பத்தியின் கருத்து. இனி, பராத்பரனுன எம்பெருமானுக்கு அங்குசம் போன்றவரென்கிற இரண்டாவது வ்யுத்பத்தியின் கருத்தாவது— "வலக்கை யாழி யிடக்கைச் சங்க மிவையுடை மால் வண்ணனை, மலக்கு நாவுடையேற்கு" [திருவாய்மொழி 6-4-9] என்று ஆழ்வார் தாமே யருளிச்செய்தபடி எம்பெருமானைத் தம் வசப் படுத்தி நடத்திக்கொள்ளவல்லவரென்கை.

[காமாதிதோஷஹரம்] இங்கு ஆதி சப்தத்தாலே க்ரோதம் லோபம் மோஹம் மதம் மாத்ஸர்யம் அஜ்ஞாநம் அஸூயை இவை கொள்ளத்தக்கன. "காமாதிஹரம்" என்னுமல் 'காமாதி தோஷஹரம்' என்கையாலே காமம் முதலானவை நியமேந தோஷமல்லவென்றும் குணகோடியிலே கொள்ளத்தக்க காமாதிகளுமுண்டென்றும் தெரிவிக்கப்பட்டதாம். பகவத்விஷயத்திலே யுண்டாகிற காமமோஹாதிகளும் பகவத்பாகவத விரோதிகள் திறத்திலே யுண்டாகிற க்ரோத மாத்ஸர்யாதிகளும் குணமேயல்லது தோஷமன்றே. அவை விலக்கத்தக்கவையல்லவே. தோஷமான காமாதிகளே விலக்கத்தக்கவையாதலால் தோஷஹரம் என்றது.

வணங்குவது தலையாலே யென்பது தெரிந்திருக்கச் செய்தேயும் 'மூர்த்நா ப்ரணமாமி' என்னவேணுமோவென்னில்; தலை படைத்த ப்ரயோஜனம் பெறுவோமென்று காட்டினபடி. ❀ வாயினல் பாடி மனத்தினல் சிந்திக்க ❀ என்றுப் போலே. .... ... (1)

श्रीरङ्गराजचरणाम्बुजराजहंसं श्रीमत्पराङ्कुशपदाम्बुजभृङ्गराजम् ।
श्रीभट्टनाथपरकालमुखाब्जमित्रं श्रीवत्सचिह्नचरणं यतिराजमीडे ॥ २ ॥

ஸ்ரீரங்கராஜசரணம்புஜராஜஹம்ஸம் ஸ்ரீமத்பராங்குசபதாம்புஜப்ருங்கராஜம்,
ஸ்ரீபட்டநாதபரகாலமுகாப்ஜமித்ரம் ஸ்ரீவத்ஸசிஹ்நசரணம் யதிராஜமீடே. (2)

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீரங்கராஜ சரண அம்புஜ ராஜஹம்ஸம் | ஸ்ரீரங்கநாதனுடைய திருவடியாகிற தாமரையிலே ராஜ ஹம்ஸம் போன்று ஊன்றியிருப்பவரும் | ஸ்ரீமத் பராங்குச பதாம்புஜ ப்ருங்க ராஜம் | நம்மாழ்வாருடைய அழகிய திருவடித் தாமரைகளிலே வண்டுபோல அமர்ந்திருப்பவரும் |

ஸ்ரீபட்டநாத பர கால முக அப்ஜ மித்ரம் — பெரியாழ்வார் திருமங்கையாழ்வார் முதலான ஆழ்வார்களாகிற தாமரைப் பூக்களை விகாஸப்படுத்துவதில் ஸூர்யன் போன்றவரும்

ஸ்ரீவத்ஸ சிஹ்ந சரணம் — கூரத்தாழ்வானுக்குத் தஞ்சமாயிருப்பவரும் (அல்லது) கூரத்தாழ்வானைத் திருவடிகளாக வுடையவருமான

யதிராஜம் — எம்பெருமானுரை

ஈடே — துதிக்கின்றேன்.

கீழ் ச்லோகத்தில், தலைபடைத்த ப்ரயோஜநம் பெறுமாறு எம்பெருமானுரைத் தலையால் வணங்குவதாக அருளிச் செய்தார். இந்த ச்லோகத்தில் வாக்கு ஸபலமாம்படி அவரைத் துதிப்பதாக வருளிச் செய்கிறுர். அன்னமாகவும் வண்டாகவும் ஸூர்யனுகவும் ஸ்வாமியை நிரூபித்துப் பேசுகிறுரிதில்.

ஆழ்வார்கள் தமது திவ்யப்ரபந்தங்களில் அன்னங்களையும் வண்டுகளையும் தூதுவிடுவதாக அருளிச் செய்திருப்பதுண்டே; அங்கு எம்பெருமானுர் போல்வாரான மஹாசார்யர்களையே தூதுவிடுவதாக உள்ளுறை பொருளாகையாலே அதைத் திருவுள்ளம்பற்றி இங்கு ஸ்வாமியை அன்னமாகவும் வண்டாகவுமருளிச் செய்வது மிக்க பொருத்தமுடைத்து.

[ஸ்ரீரங்கராஜசரணம்புஜராஜஹம்ஸம்] எம்பெருமானுர் தாம் * தென்னத்தியூரர் கழலிணைக் கீழ்ப் பூண்டவன்பாளன் * என்கிறபடியே தேவப்பெருமாள் திருவடிவாரத்திலே பேரன்பு பூண்டவராயினும், நம்பெருமாள் விசேஷ கடாக்ஷம் செய்தருளி * யாவச்சரீரபாதமத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ * என்று நியமித்துத் தம் திருவடிவாரத்தின் கீழேயே பொருந்தவைத்துக் கொண்டருளினபடியாலே இங்ஙனே யருளிச் செய்கிறுர். ராஜஹம்ஸமானது தாமரைப் பூவைத் தனக்கு வாஸஸ்தானமாகக் கொள்வதுபோல ஸ்வாமி தாம் நம்பெருமாள் திருவடித் தாமரையையே நித்யவாஸஸ்தானமாகக் கொண்டிருந்தாரென்று காட்டினபடி.

ஹம்ஸத்திற்குள்ள தன்மைகளெல்லாம் ஸ்வாமி பக்கலிலேயும் காணத்தகும். எங்ஙனேயென்னில்; நீரையும் பாலையும் கலந்து வைத்தால் அவற்றைப் பிரிக்க வல்லமையுடையது ஹம்ஸம்; * ஹம்ஸோ யதா க்ஷீரமிவாம்பு மிச்ரம் * என்பர்களே. அதுபோல, ஸாரங்களும் அஸாரங்களும் கலந்தகட்டியாயிருக்கிற சாஸ்த்ரங்களிலே ஸாராஸாரங்களைப் பகுத்தறிய வல்லவரென்று கொள்க.

* அன்னமதாயிருந்து அங்கு அறநூலுரைத்த * என்றும் * அன்னமாய் நூல்பயந்தான் * என்றுஞ் சொல்லுகிறபடியே வேதசாஸ்திரங்களை வெளியிட்டது பகவதவதாரமான ஹம்ஸம். அதுபோலே சிஷ்யர்களைக் குறித்து சாஸ்த்ரங்களையுபதேசித்தருளவல்லவரென்று கொள்க.

* ந வ்யாதி ரதிம் ஹம்ஸ: கதாசித் கர்தமே ரமதே * [ஹம்ஸமானது சேற்று நிலத்தில் ஒரு போதும் மனம் பொருந்தியிருக்கமாட்டாது] என்கிறபடியே ஹம்ஸம் சேற்றில் பொருந்தாது. அதுபோல, * மாறன் விண்ணப்பஞ் செய்த சொல்லார் தொடையலிந்நூறும் வல்லார்—பிறப்பாம் பொல்லாவருவினை மாயவன் சேற்றள்ளல் பொய்ந்நிலத்தே அழுந்தார் * (திருவிருத்தம் 100) என்கிறபடியே ஸம்ஸாரமாகிற சேற்றுநிலத்திலே பொருந்தமாட்டாமல் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யரானமை விவக்ஷிதம்.

* பெடையோடன்னம் பெய்வளையார் தம்பின்சென்று நடையோடியலி * (பெரிய திருமொழி 6-5-5) என்று ஹம்ஸமானது ஸ்த்ரீகளின் நடையழகைக்கண்டு தானும் அப்படி நடக்

கைக்காகப் பின் செல்லுமென்று சொல்லப்படுகிறது ; அதுபோல ஸ்வாமியும் * அன்னநடைய வணங்கான பிராட்டியினுடைய நடையைப் பின்செல்லுவர். அதாவதென்னென்னில், பிராட்டியின் நடையாவது அவளுடைய நடத்தை ; சேதனர்களைக் குறித்து எம்பெருமான் திறத்தில் புருஷகாரம் செய்வதே பிராட்டியின் ப்ரதாநக்ருத்யமாகும். அதை ஸ்வாமி அநுஸரிக்கையாவது தாமும் அப்படி புருஷகாரக்ருத்யத்திலே ஊன்றியிருக்கையாம். பிராட்டி புருஷகாரம் செய்யாவிடில் எம்பெருமான் முக்திஸாம்ராஜ்யமளிக்க மாட்டாதது போலவே ஸ்வாமி புருஷகாரம் செய்யாவிடினும் அதனையளிக்கமாட்டானென்பதை * உத்தே ரங்கீ நிஜஸஹவஸதிம் தேசிகாந் தேசிகாம்ஸ்ச * என்கிற ஸ்ரீஸூக்தியினல் வேதாந்தவாசிரியர் வெளியிட்டருளினர். இங்ஙனே மற்றும் பல பொருத்தங்களுங் காண்க.

[ஸ்ரீமத் பராங்குச பதாம்புஜப்ருங்கராஜம்] கீழ் ச்லோகத்தில் "பராங்குச பாதபக்தம்" என்றது ஸ்வரூப ப்ரயுக்தமான தாஸ்யத்தைச் சொன்னபடி ; இங்கு குணப்ரயுக்தமாகவுமுண்டான தாஸ்யத்தைச் சொல்லுகிறது. * மாணாஉ பவமாணாஹ்வாவி வீ திஸுபயோஹ்யவயத * ஸவிசமாணவஸாத்தசிகஸெஷீ * இத்யாதிகள் இங்கே அநுஸந்தேயம். தாமரைப்பூவிலே மதுவிருப்பதுகண்டு வண்டு மொய்க்குமாபோலே, ஸ்வாமி தாமும் ஆழ்வார் திருவடிகளிலே அம்ருதப்ராபகத்வமாகிற குணவிசேஷங்கண்டு ஈடுபட்டிருப்பரென்கிறது.

* வரிவண்டு தேதெனவென்றிசை பாடும் * என்றும், * யாழினிசை வண்டினங்கள் ஆளம்வைக்கும் * என்றும், * வண்டினங்கள் காமரங்களிசை பாடும் * என்றும் சொல்லுகிற படியே எப்போதும் முரல்வதே வண்டுகளுக்குப் பணி. அதுபோல * ஸதத கீர்த்தயந்தோ மாம் யதந்தஸ்ச த்ருடவ்ரதா: । நமஸ்யந்தஸ்ச மாம் பக்த்யா நித்யயுக்தா உபாஸதே * என்று கீதாசாரியன் பணித்தபடியே அநவரதமும் எம்மானைச் சொல்லிப் பாடுவதையே போதுபோக்காகக் கொண்டு * யாழினிசை வேதத்தியலான திருவாய்மொழியைப் பாடிக் களிப்பவரென்கிறதன்மையும் இங்கு விவக்ஷிதம். வண்டு சஞ்சரீகமென்று பேர் பெற்றிருக்கும். ஓரிடத்தில் தங்கியிராது; மதுவுள்ளவிடமெங்கும் பறந்து திரியும். அதுபோல * கண்டியூரரங்கம் மெய்யம் கச்சி பேர் மல்லையென்ற திருப்பதிகள் தோறும் மண்டி, பதியே பரவித் தொழுந்தொண்டராய்த் திரியுந் தன்மையும் விவக்ஷிதம்.

"பராங்குச பதாம்புஜ" என்றவிதில் மற்றொரு பொருளும் தொனிக்கும். பதமென்று சொற்களுக்கும் வாசகமாகையாலே நம்மாழ்வாருடைய ஸ்ரீஸூக்திகளாகிற தாமரைப் பூவிலே படிந்து அங்குப் பெருகுகின்ற பகவத் குணமதுவைப் பருகுவதிலே வண்டு போன்றவரென்கை. * தொண்டர்க்கு அமுதுண்ணச் சொல்மாலைகள் சொன்னேன் * என்றதையும் இங்குச் சேர்த்து அநுஸந்திப்பது.

[ஸ்ரீபட்டநாத பரகாலமுகாப்ஜமித்ரம்] பெரியாழ்வாரையும் திருமங்கையாழ்வாரையுமெடுத்து, இவர்களாகிற தாமரைப்பூவுக்கு ஸூர்யன்போல விகாஸகர் என்றதற்குக் கருத்தென்னென்னில் ; பரதத்வஸ்தாபனம் பண்ணியும், மங்களாசாஸனம் பண்ணியும் போந்த பெரியாழ்வாரைப் போலே ஸ்வாமி தாமும் செய்தருள்பவராதலால் இதனல் பெரியாழ்வார்க்கு முகவிகாஸ முண்டாகும். "ஸ்ரீஸத்மவப்ரமணாநு விதயே வாககாமகவி:" என்று பட்டர் அருளிச் செய்த படியே ப்ராகார கோபுர மண்டபாதி நிர்மாணங்கள் செய்தும் திவ்யதேசங்களை யுகந்தும் போந்த திருமங்கையாழ்வாரைப்போலே தாமும் செய்தருள்பவராதலால் இதனல் அவர்க்கு முக

விகாஸமுண்டாகும். அவ்வாழ்வார்கள் சிறிது காட்டின வழியைப் பின்பற்றி அவர்களுடைய அனுஷ்டானங்களைப் பெருக்க நடத்தியருள்பவரென்றதாயிற்று.

முகாப்ஜமித்ரம் என்றவிடத்தில் (முக) என்பதற்கு இரண்டுவகையாக நிர்வாஹமுண்டு.

பெரியாழ்வாரென்ன, கலியனென்ன இவர்களுடைய திருமுகமண்டலமாகிற கமலத்திற்குக் கதிரவன் போன்றவர் என்றும், அவ்விருவரை ப்ரமுகர்களாகவுடைய ஆழ்வார்களாகிற தாமரைக்கு ஸூர்யன் போன்றவர் என்றும். பிந்தின நிர்வாஹத்தால் ஆழ்வார்களெல்லாருடையவும் அனுஷ்டானங்களைப் பின்பற்றி நடந்து அவர்களனைவரையும் உகப்பிக்குமவர் என்பது தேறும்.

[ஸ்ரீவத்ஸசிஹ்நசரணம்] ஆழ்வானொருவர்க்கு மாத்திரமேயோ ஸ்வாமி தஞ்சம்; எம்பார் ஆண்டான் முதலான சிஷ்யவர்க்கங்களுக்கெல்லாம் தஞ்சமன்றோ? என்று ஆக்ஷேபித்தல் வேண்டா; * மொழியைக் கடக்கும் பெரும்புகழான் வஞ்சமுக்குறும்பாங்குழியைக் கடக்கும் நங்கூரத்தாழ்வான் * என்னப் பெற்ற சிறப்பு ஆழ்வானுக்கு அஸாதாரணமாதலால் அவரைச் சிறப்பித்துக் கூறியது ஏற்கும். "ஸ்ரீவத்ஸசிஹ்ந வரணம்" என்கிற பாடம் பெரியார்கள் ஆதரிக்குமது என்றும் கேட்டிருப்பதுண்டு. ஆழ்வானைத் திருவடிநிலையாகவுடையவ ரென்றபடி. இந்த வ்யபதேசம் முதலியாண்டானுக்குப் போலவே ஆழ்வானுக்கும் ஸம்ப்ரதிபந்நம். ஆக இப்படிப்பட்ட எம்பெருமானாரை வாயார வாழ்த்துகிறேனென்றாராயிற்று. (2)

वाचा यतीन्द्र ! मनसा वपुषा च युष्मत्पादारविन्दयुगलं भजतां गुरूणाम् ।
कूराधिनाथकुरुकेशमुखाद्यपुंसां पादानुचिन्तनपरस्सततं भवेयम् ॥ ३ ॥

வாசா யதீந்த்ர! மநஸா வபுஷா ச யுஷ்மத்பாதாரவிந்தயுகளம் பஜதாம் குரூணம்,
கூராதிநாத குருகேசமுகாத்யபும்ஸாம் பாதாநுசிந்தநபரஸ் ஸததம் பவேயம். (2)

| | |
|---|---|
| ஹே யதீந்த்ர! | எம்பெருமானாரே! |
| வாசா மநஸா வபுஷா ச | மனோவாக்காயங்களாகிற த்ரிகரணங்களாலும் |
| யுஷ்மத் பாதாரவிந்த யுகளம் | தேவரீருடைய திருவடித்தாமரையிணையை |
| பஜதாம் | ஸேவிப்பவர்களும் |
| குரூணம் | ஆசார்யபீடத்தை யலங்கரிப்பவர்களுமான |
| கூராதிநாத குருகேச முக ஆத்ய பும்ஸாம் | கூரத்தாழ்வான் திருக்குருகைப்பிரான் பிள்ளான் முதலான தலைவர்களினுடைய |
| பாத அநுசிந்தந பர: | திருவடிகளையே சிந்திப்பவனாக. |
| ஸததம் பவேயம் | எப்போதும் இருக்கக்கடவேன். |

* * *—இராமாநுச நூற்றந்தாதியில் * தன்னையுற்றாட் செய்யுந்தன்மையினோர் * என்கிற பாசுரத்தைத் திருவுள்ளம்பற்றி இந்த ச்லோகமருளிச் செய்கிறபடி. எம்பெருமானாருடைய திருவடிகளையே ஸாக்ஷாத்தாகப் பணிவதற்காட்டிலும் அத்திருவடிகளைப் பணித்தாருடைய திருவடிகளைப் பணிவதானது மிகச்சிறந்ததென்கிற பரமார்த்தம் அப்பாசுரத்தில் தேர்ந்த பொருள். அதுவே இங்கு ப்ரார்த்திக்கப்படுகிறது. எம்பெருமானை நேராகப்பணிவதிற் காட்டிலும் * எந்தை பிரான் தனக்கு அடியாரடியார் தம்மடியாரடியார் தமக்கு அடியாரடியார்தம் அடியாரடியோங்களே * என்றும், * त्वद्भृत्यभृत्यपरिचारकभृत्यभृत्यभृत्यस्य भृत्य इति मां स्मर लोकनाथ * என்றும் சொல்லுகிறபடியே தத்தாஸதாஸர்களைப் பணிவதே சிறக்குமாபோலே ஆசார்யவிஷயத்திலும் அதுவே சாஸ்த்ரார்த்தமாகக் குறையில்லை.

[மநஸா வாசா வபுஷா ச பஜதாம்] * சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் தேவ பிரானையே தந்தைதாயென்றடைந்த * என்னுமாபோலே மனமொழி மெய்களாகிற முக்கரணங்களாலும் ஆசார்யரான எம்பெருமானாரையே பணிபவர்களாயிற்று கூரத்தாழ்வான் திருக்குருகைப் பிரான் பிள்ளான் முதலானார். மனத்தினால் பஜிப்பதாவது திருக்கல்யாண குணங்களைச் சிந்தை செய்வது, திவ்யமங்கள விக்ரஹத்தை த்யானிப்பது முதலியன. வாக்கினால் பஜிப்பதாவது ஸ்துதிகளைச் சொல்லி யேத்துவது. காயத்தினால் பஜிப்பதாவது தேஹபரிச்ரமத்தினால் செய்யக்கூடிய பணிவிடைகளைச் செய்வது. ஆக இவ்வகைகளாலே யீடுபட்டிருக்கின்ற ஆழ்வான் போல்வாருடைய திருவடிகளையே அடியேன் இடைவிடாது சிந்திப்பேனும்படி அருள் செய்யவேணுமென்றாராயிற்று. அவர்களைச் சிந்திப்பதனால் அவர்கள் அக்காலத்தில் செய்த கரணத்ரய கைங்கரியங்களும் தாம் செய்தபடியாகுமென்று திருவுள்ளம்.

இந்த ச்லோகத்தில் "யுஷ்மத் பாதாரவிந்த" என்றவிடத்தில் வியாகரணப் பொருத்தம் பற்றிச் சிலர் சங்கிப்பதுண்டு; யதீந்த்ர! என்று ஏகவசநாந்தமான ஸம்போதநமிருப்பதற்குச் சேர "த்வத் பாதாரவிந்த" என்றன்றோ அருளிச் செய்திருக்கவேண்டும்; யுஷ்மத் பாதாரவிந்த" என்றதற்குச் சேர பஹுவசநாந்தமான ஸம்போதநமில்லையே யென்று சங்கிப்பர்கள். இதற்குப் பெரியார் பணிக்கும் ஸமாதானமாவது—பட்டர் ஸ்ரீகுணரத்நகோசத்தின் முடிவான ச்லோகத்தில் "युष्मत्पादसरोरुहान्तररजः स्याम त्वमम्बा पिता—யுஷ்மத்பாதஸரோருஹாந்தரரஜஸ் ஸ்யாம த்வமம்பா பிதா" என்றருளிச் செய்திருக்கையாலே அந்த ப்ரயோகத்தை யடியொற்றின ப்ரயோகமிது—என்று. அவர் தாமே "भवतीसंबन्धदृष्ट्या हरिं पश्येम" என்றருளிச் செய்ததை யடியொற்றி தேசிகன் "भवतीपादलाक्षारसाङ्कम्" என்று ப்ரயோகித்ததுபோல. மஹாசார்யர்களின் திருவாக்காகிற இலக்கியமே இலக்கணமா மென்க. (3)

नित्यं यतीन्द्र ! तव दिव्यवपुस्स्मृतौ मे सक्तं मनो भवतु वाग्गुणकीर्तनेऽसौ ।
कृत्यं च दास्यकरणं तु करद्वयस्य वृत्त्यन्तरेऽस्तु विमुखं करणत्रयं च ॥ ४ ॥

நித்யம் யதீந்த்ர! தவ திவ்யவபுஸ்ஸ்ம்ருதௌ மே ஸக்தம் மநோ பவது வாக் குணகீர்த்தநேஸௌ,
க்ருத்யம் ச தாஸ்யகரணம் து கரத்வயஸ்ய வ்ருத்த்யந்தரேஸ்து விமுகம் கரணத்ரயம் ச. 4.

| | | | |
|---|---|---|---|
| யதீந்த்ர! | எம்பெருமானாரே! | கரத்வயஸ்ய | இரண்டு கைகளினுடைய |
| மே மந: | அடியேனுடைய நெஞ்சானது | க்ருத்யம் | செயலானது |
| நித்யம் | எப்போதும் | தவ தாஸ்ய கரணம் பவது | தேவரீருக்கு அடிமை செய்வது தானேயாகக் கடவது; |
| தவ திவ்யவபுஸ்ஸ்ம்ருதௌ | தேவரீருடைய திவ்யமங்கள விக்ரஹ தயானத்திலேயே | | (இவ்வாறாக,) |
| ஸக்தம் பவது | ஆஸக்தமாகக் கடவது; | கரணத்ரயம் ச | மனோவாக்காயங்களாகிற மூன்று கரணங்களும் |
| அஸௌ மே வாக் | எனது இந்த வாக்கானது | வ்ருத்த்யந்தரே விமுகம் அஸ்து | இதர வியாபாரங்களை அடியோடு நோக்காதிருக்கக் கடவன. |
| தவ குண கீர்த்தநே ஸக்தா பவது | தேவரீருடைய திருக்குணங்களைப் பேசுவதிலேயே ஊன்றியிருக்கக் கடவது; | | |

* * *—தம்முடைய மனமொழிமெய்களாகிற மூன்று கரணங்களும் எம்பெருமானார் திறத்திலேயே ஊன்றியிருக்கவேணுமென்று ஆசம்ஸிக்கிறார். எம்பெருமானாருடைய திவ்யமங்கள விக்ரஹ ஸௌந்தர்ய சிந்தனத்திலேயே நெஞ்சு ஈடுபட்டிருக்கவேணும். அவருடைய திருக்குணங்

களை வாழ்த்துவதிலேயே வாக்கு ஈடுபட்டிருக்கவேணும்; அவர்க்கு அடிமை செய்வதிலேயே கைகள் ஊற்றமுற்றிருக்கவேணுமென்று தனித்தனியே யருளிச்செய்து, இவை தவிர வேறொன்றிலும் ஒருகாரணமும் ஒருப்பட்டிருக்கலாகாதென்கிற ஆஶம்ஸையை நான்காவது பாதத்தாலே யருளிச் செய்கிறார்.

"பற்பமெனத்திகழ் பைங்கழலுன்றன் பல்லவமே விரலும்
பாவனமாகிய பைந்துவராடை பதிந்த மருங்கழகும்
முப்புரிநூலொடு முன்கையிலேந்திய முக்கோல் தன்னழகும்
முன்னவர்தந்திடு மொழிகள்நிறைந்திடு முறுவல் நிலாவழகும்
கற்பகமேவிழி கருணைபொழிந்திடு கமலக் கண்ணழகும்
காரிசுதன்கழல் சூடியமுடியும் கனநற்சிகை முடியும்
எப்பொழுதும் மெதிராசன்வடிவழகென்னிதயத்துளதால்
இல்லை யெனக் கெதிரில்லை யெனக்கெதிரில்லை யெனக் கெதிரே."

என்று எம்பார் அருளிச்செய்த பாசுரம் இங்கு முதல் பாதத்திற்குச் சேர அநுஸந்திக்கத் தகும். ஸ்வாமி தாமும் ஆர்த்திப் பிரபந்தத்திலே "சீராரு மெதிராசர் திருவடிகள் வாழி திருவரையிற் சாத்திய செந்துவராடை வாழி" என்று தொடங்கியருளிச் செய்துள்ள பாசுரமும் நோக்குக. இப்படிப்பட்ட பலபல பாசுரங்களின் சிந்தனையே சிந்தைக்கு ஆக வேணுமென்றாராயிற்று. பீதகவாடைப்பிரானார் தோளிணைமேலும் நன்மார்பின் மேலும் சுடர்முடிமேலும் தாளிணை மேலும் புனைந்த தண்ணந்துழாயுடையராய் ஸேவை தந்தருளினாலும் அந்தத் திருவுருவத்தி லீடுபடுகையின்றிக்கே "काषायेण गृहीतपीतवसना दण्डैस्त्रिभिर्मण्डिता सा मूर्तिर्मुरमर्दनस्य जयति" என்னும்படியான இந்தத் திருமேனியே என்னுடைய மாநஸ ஸாக்ஷாத்காரத்திற்கு இலக்காக வேணுமென்று அருளிச் செய்கிறபடி.

[அஸௌ மே வாக் தவ குணகீர்த்தநே ஸக்தா பவது] கண்ட விஷயங்களிலும் பரந்து செல்லாநின்ற இந்த என்னுடைய வாக்கானது தேவரீருடைய திருக்குணங்களைப் பேசுவதிலேயே ஊன்றியிருக்கக்கடவது. குணசப்தமானது ஸாமாந்யமாக தேஹகுணம் ஆத்மகுணம் என்ற இரண்டு வகுப்பிலுள்ள குணங்களைச் சொல்லக் கடவதாகிலும் தேஹகுணம் முதல் பாதத்திலே உக்தப்ராயமாகையாலே இங்கு ஆத்மகுணமே விவக்ஷிதமாக வடுக்கும். "दयाक्षान्त्यौदार्यत्रदिमसमता............" (வரதராஜஸ்தவம்) இத்யாதிகளிலே சொல்லப்பட்ட ஆத்மகுணங்களில் தயையே முற்பட்டிராநின்றது. மற்ற குணங்களெல்லாம் ஒரு தட்டாயும் தயாகுணமொன்றுமே ஒரு தட்டாயுமன்றோ எம்பெருமானார் பக்கலிலே விளங்குவது. "हर्तुं तमस्सदसती च विवेक्तुमीशो मानं प्रदीपमिव कारुणिको ददाति" என்று காருணிகனாகப் புகழப்பட்ட எம்பெருமானுடைய தயையிற்காட்டிலும் ஆழ்வாருடைய திருவருள் சிறந்து தோற்றினபடியாலே "அருள் கண்டீரிவ்வுலகினில் மிக்கதே" என்று அவருடைய தயையைக் கனக்கப் பேசினார் மதுரகவிகள். அவர்க்குப் பிறகு எம்பெருமானார் திருவவதரித்து "ஓராண்வழியாயுபதேசித்தார் முன்னோர், ஏராரெதிராசரின்னருளால்—பாருலகில் ஆசையுடையோர்க் கெல்லாமாரியர்காள் கூறுமென்று பேசி வரம்பறுத்தார் பின்" (உபதேசரத்தினமாலை.) என்று கொண்டாடவேண்டும்படியான ஒப்புயர்வற்ற கருணையை உலகமெங்கும் போற்றக் காட்டியருளினபடியாலே இவருடைய அருளே அருள் என்று யாவரும் ஒருமிடறாகப் பேச வேண்டிற்று. அப்படிப்பட்ட திருவருளையே என் வாக்கு இடைவிடாது பேசிக்கொண்டிருக்க வேணுமென்றாராயிற்று. இங்கு குண

சப்தத்தாலே மற்ற குணங்களையும் விவக்ஷிக்கக் குறையில்லையாகிலும் இந்த தயாகுணமானது மற்றொரு குணத்திலும் செல்ல வொட்டாததாகையாலே தயாகுணமொன்றிலேயே சப்தத்தை ஸங்கோசிப்பிக்க ப்ராப்தம். வாத்ஸல்ய ஸௌசீல்யாதிகுண கீர்த்தநமும் விவக்ஷிதமாகக் குறையில்லை.

மூன்றாவது பாதத்தில் "தாஸ்யகரணே து" என்று சிலருடைய பாடம் வழங்கிவந்தாலும் பெரியார் பரிக்ரஹித்த பாடம் அதுவன்று; 'தாஸ்யகரணம்' என்பதே சுத்த பாடம். பூருவர்களின் வியாக்கியானங்களிலும் இப்பாடமேயுள்ளது. இங்கு ஸப்தமி பொருந்துவதற்கு ஔசித்யமுமில்லை. கரத்வயத்தினுடைய க்ருத்யமானது தாஸ்யகரணத்திற் காட்டில் வேறுபட்டதல்லாமையாலே ஸமாநாதிகரணமாகவே நிர்தேசிக்கவேணும். வ்யதிகரண நிர்தேசம் உசிதமன்று என்று தெரிந்துகொள்வது. முன்னடியிலுள்ள (ஹவது) என்கிற க்ரியையையோ, பின்னடியிலுள்ள (அஸ்து) என்கிற க்ரியையையோ மூன்றாமடியில் அநுஷங்கித்துக் கொள்வது. [கரத்வயஸ்ய க்ருத்யம் தவ தாஸ்யகரணம் பவது] அடியேனுடைய இரண்டுகைகளுக்கும் பணி தேவரீருக்குக் குற்றேவல் செய்யுமதுவேயாகக் கடவது என்கை.

இங்கே ஒரு சிறிய சங்கை. முன்னிரண்டு பாதங்களில் ப்ரார்த்திக்கப்பட்ட திவ்ய மங்கள விக்ரஹ சிந்தனமும் குணகீர்த்தநமும் ஸ்வாமிக்கு இப்போது ப்ராப்தமாகலாம்; மூன்றாவதாக ப்ரார்த்திக்கப்படுகிற காயிககைங்கர்யம் எங்ஙனே ப்ராப்தமாகும்? மிகவும் கால வ்யவதான முண்டேயென்று. விபவாவதாரம் இப்போதில்லையாயினும் அர்ச்சையுள்ளதாகையாலே அங்கே காயிககைங்கர்யம் செய்யக்குறையில்லாமையாலே இந்த ஆசங்கையும் குறையற்றதென்று கொள்க.

அந்வயமுகேந சொல்லுமது தன்னையே வ்யதிரேகமுகேநவும் சொல்லுகை த்ருடீகரணார்த்த மாகையாலே [கரணத்ரயஞ்ச வ்ருத்த்யந்தரே விமுகமஸ்து] என்று பின்னையும் அருளிச் செய்தாராயிற்று. (௪)

अष्टाक्षराख्यमनुराजपदत्रयार्थनिष्ठां ममात्र वितराद्य यतीन्द्र नाथ ।
शिष्टाग्रगण्यजनसेव्यभवत्पदाब्जे हृष्टाऽस्तु नित्यमनुभूय ममास्य बुद्धिः ॥ ५ ॥

அஷ்டாக்ஷராக்யமநுராஜபதத்ரயார்த்தநிஷ்டாம் மமாத்ர விதராத்ய யதீந்த்ர நாத!
சிஷ்டாக்ரகண்யஜநஸேவ்யபவத்பதாப்ஜே ஹ்ருஷ்டாஸ்து நித்யமநுபூய மமாஸ்ய புத்தி: 5.

| | |
|---|---|
| நாத யதீந்த்ர! | எமது குலத்தலைவரான எம்பெருமானாரே! |
| அஷ்டாக்ஷராக்ய- | திருவஷ்டாக்ஷரமென்கிற |
| மநுராஜ- | பெரிய திருமந்திரத்திலுள்ள |
| பதத்ரய- | ப்ரணவ, நம: பத, நாராயணாய பதங்களில் தேறின |
| அர்த்த- | அநந்யார்ஹ சேஷத்வம் அநந்ய சரணத்வம் அநந்ய போக்யத்வமென்கிற அர்த்தங்களில் |
| நிஷ்டாம் | திடமானவுறுதியை |
| மம | அடியேனுக்கு |
| அத்ர | இவ்விருள்தருமா ஞாலத்திலேயே |
| அத்ய | ருசி பிறந்தவிப்போதே |
| விதர | ப்ரஸாதித்தருளவேணும். |
| அஸ்ய மம புத்தி: | நீசனேன் நிறையொன்றுமிலேனான வென்னுடைய புத்தியானது |
| சிஷ்டாக்ரகண்ய ஜநஸேவ்ய பவத்பதாப்ஜே | சிஷ்டர்களில் தலைவரான ஆழ்வான் ஆண்டான் போல்வார் தொழத் தகுந்த தேவரீருடைய திருவடித் தாமரைகளை |
| நித்யம் அநுபூய | இடை வீடின்றி யநுபவித்து |
| ஹ்ருஷ்டா அஸ்து | (அவ்வநுபவத்தின் பலனான கைங்கர்யத்தையும் பெற்று) மகிழ்ந்திருக்கக் கடவது. |

கீழ் ச்லோகத்தில் முடிவாகச் செய்தருளினது கைங்கர்ய ப்ரார்த்தனையாகையாலே, அதுதான் திருமந்த்ரத்திலே தேறுமதாகையாலே அத்திருமந்த்ரம் ஸ்ம்ருதிவிஷயமாகி அதுதன்னிற் சொன்ன அர்த்தங்களில் நிஷ்டையுண்டாவதும் ஆசார்யன் திருவருளாலன்றி வாய்க்கமாட்டாதாகையாலே அதனையும் தேவரீரே அருள்புரிய வேணுமென்று ப்ரார்த்திக்கிறார் இந்த ச்லோகத்தாலே.

மநு என்றும் மந்த்ரமென்றும் பர்யாயம். மநுராஜமென்றது மந்த்ரராஜமென்றபடி. சாஸ்த்ரங்களில் பெரிய திருமந்த்ரத்தை மந்த்ரராஜமென்றும் த்வயத்தை மந்த்ரரத்நமென்றும் வழங்குவது காண்க.

திருமந்த்ரமானது ப்ரணவம், நமஸ்ஸு, நாராயணாய என்று மூன்று பதங்களின் கூட்டமாக இராநின்றது. ப்ரணவமானது மூன்று அக்ஷரமாக இருப்பது மாத்திரமன்றிக்கே மூன்று பதமாயுமிருக்கையாலே திருமந்த்ரத்தில் மூன்று பதங்களே யுள்ளதாகச் சொல்லலாமோ? நமஸ்ஸும் இரண்டு பதமாகப் பிரிக்கப்படுகையாலே ஆறுபதங்களன்றோ திருமந்த்ரத்திலுள்ளது —என்னில்; ப்ரணவத்தை ஸம்ஹிதாகாரத்தாலே ஏகபதமாகக் கொள்வது. அப்படியே நமஸ்ஸை அகண்டமாகக் கொண்டு ஏகபதமாகக் கொள்வது. ஆகவே அஷ்டாக்ஷரத்தைப் பதத்ரயாத்மகமென்னக் குறையில்லை. இம்மூன்று பதங்களாலும்—அநந்யார்ஹ சேஷத்வம் அநந்ய சரணத்வம், அநந்ய போக்யத்வம் என்கிற மூன்று அர்த்தங்கள் சொல்லப்படுவனவாக முமுக்ஷுப்படி முதலான திவ்யக்ரந்தங்களில் நிஷ்கர்ஷிக்கப்பட்டிரா நின்றது. அவ்வர்த்தங்களில் நிஷ்டையைப் பிறப்பிக்கவேணுமென்று எம்பெருமானார் திருவடிகளிலே ப்ரார்த்திக்கிறாராயிற்று. அந்ய சேஷத்வ ப்ரஸக்தியும் உபாயாந்தர ப்ரவ்ருத்தி கந்தமும் போகாந்தர ப்ராவண்ய லேசமும் உண்டாகாதபடி நோக்கியருளவேணுமென்கை.

இந்த நிஷ்டையை தேசாந்தரத்தில் தருகிறோம், காலாந்தரத்தில் தருகிறோமென்று சொல்லித் தாழ்க்க வொண்ணாமைக்காக அத்ர, அத்ய என்று விசேஷிக்கிறது இந்நிலத்திலே, ருசியுண்டான விந்த க்ஷணத்திலேயே தந்தருளவேணுமென்கை.

திருமங்கையாழ்வார் "மற்றெல்லாம் பேசிலும் நின் திருவெட்டெழுத்துங் கற்று உற்றதும் உன்னடியார்க் கடிமை" என்று பாகவத சேஷத்வமே திருமந்த்ரத்திற்கு ப்ரதானமான ப்ரமேயமென்று நிஷ்கர்ஷித்தருளினபடியாலே அதையடியொற்றி ஸ்வாமி தாமும் இங்குச்சொன்ன பதத்ரயார்த்த நிஷ்டையை பாகவத பர்யந்தமாக்கிக் கொண்டபடியை உத்தரார்த்தத்திலே அருளிச் செய்கிறார். பூர்வார்த்தத்தில் தாம் ப்ரார்த்தித்த அநந்யார்ஹ சேஷத்வாதி நிஷ்டை பகவத் விஷயத்திலன்று, பாகவதோத்தமராய் ஆசார்யஸார்வபௌமரான தேவரீர் விஷயத்திலே— என்னுமிடத்தை முக்தகண்டமாக அருளிச் செய்கிறார்.—[சிஷ்டாக்ரகண்ய—இத்யாதி.]

"பவத்பதாப்ஜே" என்றது ஸப்தமியன்று, த்விதீயா த்விவசநம்.

சிட்டர்களில் தலைவரான ஆழ்வான் ஆண்டான் அருளாளப்பெருமாளெம்பெருமானார் போல்வாரான மஹநீயர்கள் பணியத்தக்க பெருமைவாய்ந்த தேவரீருடைய திருவடித்தாமரைகளையே என்னுடைய புத்தி நித்யாநுபவம் பண்ணி மகிழ்ந்திருக்கக் கடவது என்கிறார். இந்த உத்தரார்த்தத்துக்குச் சேர பூர்வார்த்தத்தில் அத்ர என்றதற்கு "தேவரீராகிற இத்தலையிலே" என்று பொருள் கொள்வதும் பாங்காகும். திருமந்த்ரத்திலுள்ள பதத்ரயத்தின் அர்த்தநிஷ்டை ஸ்ரீமந்நாராயணன் திறத்திலன்றிக்கே தேவரீர் திறத்திலேயாம்படி அநுக்ரஹித்தருளவேணுமென்றபடி. (௫)

अल्पाऽपि मे न भवदीयपदाब्जभक्तिः शब्दादिभोगरुचिरन्वहमेधते हा ।
मत्पापमेव हि निदानममुष्य नान्यत् तद्वारयार्य यतिराज दयैकसिन्धो ॥ ६ ॥

அல்பாபி மே ந பவதீயபதாப்ஜபக்தி: சப்தாதிபோகருசிரந்வஹமேதத்தே ஹா,
மத்பாபமேவ ஹி நிதாநமமுஷ்ய நாந்யத் தத்வாரயார்ய யதிராஜ தயைகஸிந்தோ. 6.

| | |
|---|---|
| தயா ஏக ஸிந்தோ | அருட்கடலான |
| யதிராஜ ஆர்ய! | ஆசார்யசிகாமணியே! |
| மே | அடியேனுக்கு |
| பவதீய பதாப்ஜ பக்தி: | தேவரீருடைய திருவடித் தாமரைகளிற் பதிந்த பக்தியானது |
| அல்பா அபி ந | சிறிதளவுமில்லை; |
| | (அஃது இல்லாததும் தவிர) |
| சப்தாதி போக ருசி: | சப்தாதி விஷயாந்தர போகங்களில் ஊற்றமானது |
| அந்வஹம் எததே | நாடோறும் வளர்ந்து செல்லா நின்றது; |
| ஹா | அந்தோ! (இதற்கென் செய்வேன்!) |
| அமுஷ்ய நிதாநம் | இதற்கு அடி |
| மத்பாபம் ஏவ ஹி | என்னுடைய பாபமேயன்றோ; |
| அந்யத் ந | வேறொரு காரணமுமில்லை; |
| தத் வாரய | அந்த எனது பாபத்தைப்போக்கியருளவேணும். |

கீழ் ச்லோகத்தில் ப்ரார்த்தித்தவம்ஸம் உமக்கு ஸ்வதஸ்ஸித்தமன்றோ; அதை நீர் ப்ரார்த்தித்துப் பெறவேணுமோ? என்ன; ஐயோ, என்னுடையபடியைக் கேட்டருளலாகாதோ வென்று ஸ்வநிகர்ஷங்களைப் பரக்க விண்ணப்பஞ் செய்கிறார் இந்த ச்லோகம் முதலாக. [மே பவதீயபதாப்ஜபக்தி: அல்பாபி ந] 'பவதீயபதாப்ஜ' என்றவிடத்திலே ஸமாநாதிகரண ஸமாஸமும் கொள்ளலாம், வ்யதிகரணஸமாஸமும் கொள்ளலாம். பவதீயமான பதாப்ஜங்களிலே என்பது ஸமாநாதிகரணஸமாஸத்தால் கிடைக்கும் பொருள். ஸவதீயர்களான ஆழ்வானுண்டான் முதலானருடைய பதாப்ஜங்களிலே என்பது வ்யதிகரண ஸமாஸத்தால் கிடைக்கும் பொருள், இரண்டு படியும் விவக்ஷிதமென்னலாம். தேவரீருடைய அடியார்களின் திருவடிகளிலும் எனக்குப் பற்றில்லை, தேவரீர் திருவடிகளிலும் எனக்குப் பற்றில்லை என்றபடி. பின்னை எவ்விஷயத்திலே பற்றுள்ளதென்ன; [சப்தாதிபோகருசிரந்வஹமேதத்தே ஹா] என்கிறார். * கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலு மைங்கருவிகண்ட வின்பம்—ஒழிந்தேன் * என்ன வேண்டியிருக்க அந்த நிலை நேராதே அதற்கு மாறான நிலையே நேர்ந்திருக்கின்றதென்கிறார்.

ஆசார்யவிஷயீகாரம் பெற்றிருக்கிற வுமக்கு இப்படி விஷயருசி விளைய ப்ரஸக்தியுண்டோவென்ன; பாவியேன் என்செய்வேன்? "त्वत्सर्वशक्तेरधिकाऽस्मदादेः किं दस्य शक्तिर्बत रङ्गबन्धो । यत् त्वत्कृपामप्यति कोशकारन्यायादसौ नश्यति जीवनाशम्" [ஸ்ரீரங்கராஜஸ்தவம்—2] என்ற கணக்கிலே ஆசார்யக்ருபையையும் அஸத்கல்பமாக்கி ஓங்கிநிற்குமதன்றோ என்னுடைய ப்ரபலபாபம். நான் சூழ்த்துக்கொள்ளும் அநர்த்தங்களுக்கெல்லாம் மூலகாரணம் அந்த பாபமேயன்றோ. அதைத் தொலைத்தருளவேணும் என்கிறார்.

(கூ)

वृत्त्या पशुर्नरवपुस्त्वहमीदृशोऽपि श्रुत्यादिसिद्धनिखिलात्मगुणाश्रयोऽयम् ।
इत्यादरेण कृतिनोऽपि मिथः प्रवक्तुम् अद्यापि वञ्चनपरोऽत्र यतीन्द्र वर्ते ॥ ७ ॥

வ்ருத்த்யா பசு: நரவபுஸ்த்வஹமீத்ருசோபி ச்ருத்யாதிஸித்தநிகிலாத்மகுணாச்ரயோயம்,
இத்யாதரேண க்ருதிநோபி மித: ப்ரவக்தும் அத்யாபி வஞ்சகபரோத்ர யதீந்த்ர வர்த்தே. 7.

| | |
|---|---|
| யதீந்த்ர | எம்பெருமானாரே! |
| அஹம் து | அடியேனேவென்றால் |
| நரவபு: | மநுஷ்யசரீரனாயிருந்தேனாகிலும் |
| வ்ருத்த்யா பசு: | செய்கையினால பசுவோடொத்திராநின்றேன் ; |
| ஈத்ருச: அபி | இப்படிப்பட்டவனாயிருக்கச் செய்தேயும் |
| அயம் ச்ருதி ஆதிஷித்த நிகில ஆத்ம குண ஆச்ரய: இதி | "இவன் வேதம் முதலியவற்றில் தேறின ஸகல ஆத்மகுணங்களுக்கும் கொள்கலமானவன்" என்று |
| க்ருதிந: அபி ஆதரேண மித: ப்ரவக்தும் | அபிஜ்ஞர்களையும் ஆதரவோடு பரஸ்பரம் பேசுவிக்கும்படி |
| அத்ர அத்யாபி | இவ்வுலகில் இன்னமும் |
| வஞ்சநபர: வர்த்தே | வஞ்சிக்குமவனாயிராநின்றேன். |

கீழ் ச்லோகத்திலே தொடங்கின ஸ்வநிகர்ஷாநுஸந்தானம் நெடுகிச் செல்லாநின்றது அடியேன் மநுஷ்யயோநியிலே பிறந்து மநுஷ்யசரீரயுக்தனாய்க் காணப்பட்டேனாயினும் வ்ருத்தியினாலே பசுக்களிற் காட்டில் ஒரு வாசி பெற்றவனல்லேன். * ज्ञानेन हीनः पशुभिस्समानः—ஜ்ஞாநேந ஹீந: பசுபிஸ் ஸமாந: * என்கிறபடியே ஜ்ஞாநஹீநதையாலும் அநுஷ்டாந வைகல்யத்தாலும் பசுக்களையொத்திருப்பேன். உண்மையில் இப்படியிருந்தேனாகிலும் வேதவேதாந்த வேதாங்கங்களில் ப்ரதிபாதிக்கப்பட்ட ஆத்மகுணங்களெல்லாவற்றாலும் இவன் நிரம்பியவன் என்று பிறர் பேசும்படியாக அவர்களை வஞ்சித்துக் கள்ளத்தொண்டனாகத் திரியாநின்றேன். இது வாயிற்று என்னுடைய நிலையென்று நைச்யாநுஸந்தானம் பண்ணினாராயிற்று.

[வ்ருத்த்யா பசு:]—ஆஹாரநித்ராதிகளில் நியமமற்றிராநின்றேனென்றபடி. இரண்டாமடியில் அயம் என்றது—தம்மைச் சுட்டிக்காட்டிப் பிறர் சொல்லுவதை அநுவதிக்கிறபடி. * कृतिनोऽपि मिथः प्रवक्तुम्—க்ருதிநோபி மித: ப்ரவக்தும் * என்றவிடத்தில் க்ருதிந: என்பதை ப்ரதமா பஹுவசநமாகச் சிலர் மயங்குவர். அது பொருத்தமன்று. அப்படியாகில், மேலுள்ள ப்ரவக்தும் என்கிற அவ்யயமும் வர்த்தே என்கிற க்ரியையும் அந்வயிக்க ஔசித்யமில்லை. "कर्तुं वा कश्चिदन्तर्वसति वसुमतीदक्षिणस्सप्ततन्तुः" என்கிற முராரி ப்ரயோகத்தை யெடுத்துக்காட்டி அதுபோலே இதுவும் பொருந்தலாமென்று சிலர் ஸமந்வயப்படுத்தப் பார்ப்பதும் பாங்கன்று. அங்கே ஸப்ததந்து: என்கிற கர்த்ருபதமானது வஸதி யென்கிற க்ரியையிலே அந்வயமுடைத்தாயிருப்பது போலே இங்கு க்ருதிந: என்கிற கர்த்ரு பதமும் வர்த்தே என்னும் க்ரியையிலே அந்வயமுடைத்தாயிருக்குமாகில் அது இங்கு த்ருஷ்டாந்தமாகப் பொருந்தும். அந்த ப்ரயோகமும் இந்த ப்ரயோகமும் துல்யசீலமாகாது. எங்கும் ப்ரதமாந்தமாக ஒரு கர்த்ருபதமிருந்தால் அது க்ரியா பதத்தில் அந்வயம் பெற்றே தீரவேணும். இது அபவாதமற்ற நியமம். இவ்விடத்தில் க்ருதிந: என்பதை ப்ரதமாந்தமாகக்கொண்டால் இது அந்வயிக்கும்படியான க்ரியாபதம் இங்கில்லாமையாலே இதை வேறொரு விபக்தியாகவே கொள்ளவேணும். த்விதீயா பஹுவசநாந்தமாகக் கொள்ளலாம். அப்போது ப்ரவக்தும் என்பதை ஐஹுஷாவிதணிக்வுமென்று கொண்டு [அதாவது, ப்ரவாவயிதாரௌ என்றபடியாகக்கொண்டு] நிர்வஹிப்பது. ப்ரவக்தாரௌ என்கிற ஸ்தானத்திலே ப்ரவக்தார: என்று பாடமாகச் சில பெரியார் பணிக்கக்கேட்டதுண்டு. அப்போது க்ருதிந: என்பது ஷஷ்டியாகும். யை: ப்ரவக்தார: க்ருதிநோபி வஞ்சநபரா: வர்த்தே ॥ அத்யாபி என்கிற ஸ்தானத்தில் (ஈத்ருசாபி) என்றும் சிலர் ஓதுகிறார்கள். (எ)

दुःखावहोऽहमनिशं तव दुष्टचेष्टश्शब्दादिभोगनिरतश्शरणागताख्यः ।
त्वत्पादभक्त इव शिष्टजनौघमध्ये मिथ्या चरामि यतिराज ततोऽस्मि मूर्खः ॥ ८ ॥

துக்காவஹோஹமநிசம் தவ துஷ்டசேஷ்ட: சப்தாதிபோகநிரத: சரணுகதாக்க்ய:,
த்வத்பாதபக்த இவ சிஷ்டஜநௌகமத்யே மித்யா சராமி யதிராஜ ததோஸ்மி மூர்க்க:. 8.

| | |
|---|---|
| யதிராஜ | எம்பெருமானுரே! |
| துஷ்ட சேஷ்ட: அஹம் | கெட்ட நடத்தைகளேயுடையேனுன நான் |
| சப்தாதி போக நிரத: | சப்தாதி விஷய ப்ரவணனுய் |
| சரணுகத ஆக்க்ய: | ப்ரபந்நனென்று பேர் சுமப்பவனுயிருந்துகொண்டு |
| தவ அநிசம் து:காவஹ: | எப்போதும் தேவரீருடைய திருவுள்ளத்தைப் புண்படுத்துமவனுய் |

| | |
|---|---|
| சிஷ்டஜந ஓக மத்யே | சிஷ்டர்களின் திரளினிடையே |
| த்வத்பாதபக்த: இவ | தேவரீருடைய திருவடிகளுக்கு அன்பன் போல |
| மித்யா சராமி | க்ருத்ரிமமாகத் திரியா நின்றேன்; |
| தத: மூர்க்க: அஸ்மி | ஆகையினுல் மூர்க்கனுயிரா நின்றேன். |

ஸ்வாமிந்! தேவரீருக்கு ஶேஷபூதனுன அடியேன் துர்வ்ருத்திகளேச் செய்து போருமவனுய் சப்தாதிவிஷயாநுபவத்தில் ஊற்றமுற்றவனுய், ஶரணுகதனென்று பேர்மாத்திரமேயுள்ளவனுய் இங்ஙனேயிருக்கையாலே எப்போதும் தேவரீருடைய திருவுள்ளத்தைப் புண்படுத்துமவனுயிராநின்றேன். இப்படிப்பட்ட நான் தேவரீரைப் போற்றும் அடியார்களின் திரளிலே எட்டிப்பார்க்கவும் அநர்ஹனுயிருக்கச் செய்தேயும் தேவரீர் திருவடிகளில் பாரமார்த்திக ப்ரேமயுக்தன்போல நடித்து விலக்ஷணர்களான மஹாபுருஷர்களின் கோஷ்டியிலே போட்கனுகத் திரியா நின்றேன். இது காணீர் அடியேனுடைய மூர்க்கத்தனம் என்கிருர்.

[து:காவஹோஹம்] தேவரீருக்கு அடியேன் தயநீயன் என்றபடி. ஹ்ருத்து:க து:கவித்வ ரூபமான தயையை தேவரீர் கொள்ளவேணுமென்று ஸூசிப்பித்தபடி. (அ)

नित्यं त्वहं परिभवामि गुरुं च मन्त्रं तद्देवतामपि न किञ्चिदहो बिभेमि ।
इत्थं शठोऽप्यशठवद्भवदीयसङ्गे धृष्टश्चरामि यतिराज ततोऽस्मि मूर्खः ॥ ९ ॥

நித்யம் த்வஹம் பரிபவாமி குருஞ்ச மந்த்ரம் தத்தேவதாமபி ந கிஞ்சிதஹோ பிபேமி,
இத்தம் ஶடோப்யஶடவத் பவதீயஸங்கே த்ருஷ்டஶ்சராமி யதிராஜ ததோஸ்மிமூர்க்க: 9.

| | |
|---|---|
| யதிராஜ | எம்பெருமானுரே! |
| அஹம் து | அடியேனுேவென்ருல் |
| குரும் மந்த்ரம் தத் தேவதாம் ச | ஆசார்யனேயும் மந்த்ரத்தையும் அதற்குள்ளீடான தேவதையையும் |
| நித்யம் பரிபவாமி | நித்யமும் பரிபவிக்கின்றேன்; |
| கிஞ்சித் அபி ந பிபேமி | ஈஷத்தும் அஞ்சுகிறேனில்லே; |
| அஹோ | அந்தோ!; |

| | |
|---|---|
| இத்தம் சட: அபி | இங்ஙனம் போட்கனுயிருந்தேனுகிலும் |
| அசடவத் | குருமந்த்ர தேவதா விச்வாஸ யுக்தன் போல |
| பவதீயஸங்கே | தேவரீரடியார் திரளிலே |
| த்ருஷ்ட: சராமி | துணிவுடையேனுய்த் திரிகின்றேன்; |
| தத: மூர்க்க: அஸ்மி | ஆதலால் மூர்க்கனுயிரா நின்றேன். |

ஆசார்யனேயும் ஆசார்யனுபதேசித்த மந்த்ரத்தையும் மந்த்ரத்துக்கு உள்ளீடான தேவதையையும் கூசாதே நித்யமும் பரிபவியா நின்றேனே யென்கிருர் பூர்வார்த்தத்தில். ஆசார்யனேப் பரிபவிக்கையாவது—அவன் பக்கலில் கேட்ட அர்த்தத்தின்படி அநுஷ்டியாதிருப்பதும் அநதிகாரிகளுக்கு உபதேசிப்பதும். மந்த்ரத்தைப் பரிபவிக்கையாவது—உபதேசித்த பொருளே மறந்து

போவதும் விபரீதமான பொருளைக் கொள்ளுதலும். தத்தேவதாபரிபவமாவது மநோவாக் காயங்களை இதர விஷயங்களிலே ப்ரவணமாக்குகையும் பகவத்விஷயத்தில் ப்ரவணமாக்காதொழிகையும். ஆக இப்படிப்பட்ட மூன்று (பரிபவ) பாதகங்களையும் செய்து போந்தேன்; இவற்றால் என்ன அநர்த்தம் விளையுமோ வென்கிற அச்சந்தானு மில்லையாயிற்றெனக்கு.

ஆக இப்படிகளாலே சாஸ்த்ர ப்ராமாண்ய புத்தியற்ற நாஸ்திகனாயிருந்தேனாகிலும் பரமாஸ்திகன் போல தேவரீரடியார்களின் கோஷ்டியிலே துணிவுடன் திரியாநின்றேன்; இது வாயிற்று அடியேனுடைய மூர்க்கத்தனமிருக்கிறபடி என்கிறார்.

நான்காவது பாதத்தில் ஹ்ருஷ்ட: என்கிற பாடமே பெரும்பாலும் காண்கிறது. த்ருஷ்ட: என்கிற பாடமே ப்ராசீநமென்று பெரியார் பணிக்கக் கேட்டிருக்கை. பொருத்தமும் இந்தப் பாடத்திலேதானுள்ளது. வியாக்கியான கர்த்தாக்களும் ஆதரித்துள்ள ஹ்ருஷ்ட: என்கிற பாடத்தில் எமக்கு வைமத்யமில்லை. இப்படி இவர்களை வஞ்சித்துவிட்டோமிறேயென்று இதுவே ஸந்தோஷமாகத் திரிகிறேனென்றபடி. (௯)

हा हन्त हन्त मनसा क्रियया च वाचा योऽहं चरामि सततं त्रिविधापचारान् ।
सोऽहं तवाप्रियकरः प्रियकृद्वदेवं कालं नयामि यतिराज! ततोऽस्मि मूर्खः ॥ १० ॥

ஹா ஹந்த ஹந்த மநஸா க்ரியயா ச வாசா யோஹம் சராமி ஸததம் த்ரிவிதாபசாராந்,
ஸோஹம் தவாப்ரியகர: ப்ரியக்ருத்வதேவம் காலம் நயாமி யதிராஜ ததோஸ்மி மூர்க்க: 10.

| | |
|---|---|
| யதிராஜ | எம்பெருமானாரே! |
| ய: அஹம் | யாவனொரு அடியேன் |
| ஸததம் | எப்போதும் |
| மநஸா வாசா க்ரியயா ச | மனமொழி மெய்களாகிற முக்கரணங்களாலும் |
| த்ரிவித அபசாராந் | மூவகைப்பட்ட அபசாரங்களையும் |
| சராமி | செய்கின்றேனே |
| ஸ: அஹம் | அப்படிப்பட்ட நான் |
| தவ அப்ரியகர: | தேவரீருக்கு அப்ரியங்களையே செய்து போருமவனாய்க் கொண்டு |
| ப்ரியக்ருத்வத் | ப்ரியத்தையே செய்பவன் போல நின்று |
| ஏவம் காலம் நயாமி | இப்படியே காலத்தைக் கழிக்கின்றேன்; |
| தத: மூர்க்க: அஸ்மி | ஆதலால் மூர்க்கனாயிரா நின்றேன். |

ஹா ஹந்த ஹந்த—என்ன கொடுமை!.

ஸ்வாமிந்! எம்பெருமானாரே! மநோ வாக் காயங்களாகிற மூன்று உறுப்புக்களும் தேவரீர் திறத்திலே ஈடுபடுதற்காக அமைந்திருக்கச் செய்தேயும் பாவியேன் அவற்றைக்கொண்டு பகவதபசார பாகவதாபசார அஸஹ்யாபசாரங்களென்கிற மூவகையான அபசாரங்களையும் செய்து போராநின்றேன்; இப்படிப்பட்ட நான் தேவரீருடைய திருவுள்ளம் புண்படும்படியாக நடந்து கொள்பவனாயிருக்கச் செய்தேயும் திருவுள்ளமுகக்கப் பணிசெய்பவன் போல நடித்து இப்படியே காலம் கழியா நின்றேன். இதுவாயிற்று என்னுடைய மூர்க்கத்தனமிருக்கிறபடி என்றாயிற்று.

[ திவ்யார்த்தவிவரணம்.] மூவகையபசாரங்களுள் பகவதபசாரமாவது—தேவதாந்தரங்களோடொக்க எம்பெருமானை நினைக்கையும், ராமக்ருஷ்ணாத்யவதாரங்களில் மநுஷ்ய ஸஜாதீயதா புத்தி பண்ணுகையும், அர்ச்சாவதாரத்தில் உபாதாந நிரூபணம் பண்ணுகையும் முதலானவை.

பாகவதாபசாரமாவது—அஹங்காரத்தாலும் அர்த்தகாமங்களடியாகவும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்குப் பண்ணும் விரோதம். அஸஹ்யாபசாரமாவது—கீழ்ச் சொன்னபடியே ஸ்வப்ரயோஜநாதி நிபந்தநமாகவல்லாமல் ஹிரண்யகசிபுவைப் போலே பகவத் விஷயமும் பாகவத விஷயமுமென்றால் காணவும் கேட்கவும் பொறுதபடியிருக்கை. ஆசார்யாபசாரமும் அஸஹ்யாபசாரமெனப்படும். (௧0)

पापे कृते यदि भवन्ति भयानुतापलज्जाः पुनः करणमस्य कथं घटेत ।
मोहेन मे न भवतीह भयादिलेशस्तस्मात्पुनःपुनरघं यतिराज ! कुर्वे ॥ ११ ॥

பாபே க்ருதே யதி பவந்தி பயாநுதாபலஜ்ஜா: புந: கரணமஸ்ய கதம் கடேத,
மோஹேந மே ந பவதீஹ பயாதிலேசஸ்தஸ்மாத் புந:புநரகம் யதிராஜ ! குர்வே. **11.**

| | |
|---|---|
| யதிராஜ | எம்பெருமானுரே ! |
| பாபே க்ருதே ஸதி | பாவம் செய்தால் |
| பய அநுதாப லஜ்ஜா: | அச்சமும் அநுதாபமும் வெட்கமும் |
| பவந்தி யதி | உண்டாகுமேயானுல் |
| அஸ்ய புந: கரணம் கதம் கடேத | மறுபடியும் பாவம் செய்கை எப்படி நேரிடும் ? |
| மே | எனக்கோவென்றுல் |
| இஹ | இந்த பாப கரணத்தில் |
| மோஹேந | அஜ்ஞானத்தினுல் |
| பயாதிலேச: ந பவதி | அச்சமும் அநுதாபமும் வெட்கமுமாகிற விவை சிறிதுமுண்டாவதற்கில்லை ; |
| தஸ்மாத் | ஆதலால் |
| அகம் புந: புந: குர்வே | பாபத்தை அடுத்தடுத்துச் செய்து போராநின்றேன். |

பாபம் செய்வதென்பது இவ்விருள்தருமா ஞாலத்திற்கு அவர்ஜநீயமாதலால் பாபம் நேர்ந்துவிடுவதுபற்றி விசாரமில்லை. ஐயோ ! இப்படி பாபம் நேர்ந்துவிட்டதே ! இதனுல் இஹலோக பரலோகங்களில் என்னுகுமோ என்கிற பயமும், அநுதாபமும், வெட்கமும் விளையுமாகில் செய்த பாபத்திற்கும் சிறித ப்ராயச்சித்தமாகும் ; பின்பு புத்திபூர்வகமாகப் பாபம் விளையாமலுமிருக்கும். ஆனுல் அடியேனுக்கு, செய்த பாபத்தைப்பற்றி அச்சமோ அநுதாபமோ லஜ்ஜையோ இவற்றுள் ஏகதேசமும் தோன்றுவதில்லை; இதற்கடி விவேகமில்லாமை. ஆகவே மேன்மேலும் பாபங்களைச் செய்வதற்கு ப்ரதிபந்தகங்களான பயாநுதாபாதிகளில்லாமையாலே அடுத்தடுத்துப் பாபங்களையே செய்து போராநின்றேன்—என்று தம்முடைய பாப ப்ராசுர்யத்தை எம்பெருமானுர் திருமுன்பே விண்ணப்பஞ் செய்தாராயிற்று. இப்படிப்பட்ட வடியேனுக்கு தேவரீருடைய திருவருளல்லது தஞ்சமில்லையென்று சேஷபூரணமாகக் கடவது.

இதில் முன்னடிகளுக்குச் சேர பிள்ளைப்பிள்ளையாழ்வானுக்கு ஆழ்வானருளிச் செய்த வார்த்தையை ஸ்மரிப்பது. அது ஸ்ரீவசனபூஷண வியாக்கியானத்திலே விசதம். அதாவது, கூரத்தாழ்வானுடைய சிஷ்யர்களில் பிள்ளைப்பிள்ளையாழ்வானென்பவர் ஒருவர். அவர் ஆபிஜாத்யம் முதலியவற்ருல் மேம்பட்டவராகையாலே பாகவத விஷயங்களில் விநயமில்லாமல் அபசாரப்பட்டுக்கொண்டே யிருப்பர். ஆழ்வான் இதைக்கண்டு ஐயோ ! இவர்க்கு இந்த பாகவதாபசாரம் இவருடைய ஜ்ஞாநாநுஷ்டானங்களெல்லாவற்றையும் கீழ்ப்படுத்தித் தானே மேலாகி விநாசத்தை விளைத்திடுமே, அதுக்கு வேலியிட்டு வைக்கவேணும் என்று திருவுள்ளம்பற்றி ஒரு புண்யகாலத்திலே நீராட்டமான பின் இவரை நோக்கி 'எல்லாரும் தானம் பண்ணுகிற இக்

காலத்திலே நீரும் நமக்கொரு தானம் பண்ணமாட்டீரோ?' என்ன, அடியேன் எத்தை தானம் பண்ணுவது? எல்லாம் ஸ்வாமியினுடையதேயன்றோ என்று அவர் சொல்ல, 'அஃது இருக்கட்டும்; மநோவாக்காயங்கள் மூன்றுலும் பாகவதாபசாரப்படாமல் வர்த்திக்கக்கடவே னென்று நம் கையிலே உதகதானம் பண்ணவேணும்' என்று ஆழ்வான் அருளிச்செய்ய, அப்படியே இவர் உதகதானம் பண்ணித்தந்த பின்பு ஒருநாள் பூர்வ வாஸநையாலே பாகவதாபசாரப் பட நேர்ந்துவிட, 'நாம் இனி முடிந்தோம்' என்று பயப்பட்டு அன்று ஆழ்வான் ஸந்நிதிக்கு விடைகொள்ள வெள்கித் தம் திருமாளிகையிலேயே யிருந்துவிட, இவர் முறைப்படி வருகிற காலத்தில் வரக்காணுமையாலே ஆழ்வான் இவருடைய க்ருஹத்துக் கெழுந்தருளி வினவியருள, அவர் தமக்கு மாநஸிகமாக பாகவதாபசாரம் நேர்ந்தமையை விண்ணப்பஞ் செய்து 'காணத்ரயத்தாலும் அபசாரம் விளையாதபடி இந்த தேஹத்தோடு வர்த்திக்கை அரிதாயிருக்கின்றது, என் செய்வேன்'! என்று திருவடிகளைக் கட்டிக்கொண்டு கிடந்து வருந்த, இத்தனையநுதாபம் இவர்க்கு உண்டாயிற்றேயென்று உகந்தருளி 'மாநஸிகமான அபசாரத்திற்கு அநுதாபமுண்டாகவே ஈச்வரன் பொறுத்தருள்வன்; ப்ரத்யக்ஷத்தில் ராஜதண்டனை கிடைக்குமென்கிற பயத்தாலே காயிகமாக ஒருவரையும் நலியமாட்டீர்; இனி வாக்கொன்றையும் நன்றாகக் குறிக்கொண்டு இரும்' என்றருளிச் செய்தார்—என்பதாம். (கக)

अन्तर्बहिस्सकलवस्तुषु सन्तमीशमन्धः पुरस्स्थितमिवाहमवीक्षमाणः ।
कन्दर्पवश्यहृदयस्सततं भवामि हन्त त्वदग्रगमनस्य यतीन्द्र ! नार्हः ॥ १२ ॥

அந்தர்பஹிஸ்ஸகலவஸ்துஷு ஸந்தமீசமந்த: புரஸ்திதமிவாஹமவீக்ஷமாண:,
கந்தர்ப்பவஶ்யஹ்ருதயஸ்ஸததம் பவாமி ஹந்த த்வதக்ரகமநஸ்ய யதீந்த்ர ! நார்ஹ:. 12.

| | | | |
|---|---|---|---|
| யதீந்த்ர | எம்பெருமானாரே! | அவீக்ஷமாண: அஹம் | காணகில்லாதவனான அடியேன் |
| ஸகல வஸ்துஷு | எல்லாப் பொருள்களிலும் | ஸததம் கந்தர்ப்ப வச்ய ஹ்ருதய: பவாமி | எப்போதும் காமபரவச மநஸ்கனுயிரா நின்றேன்; |
| அந்த: பஹி: | உள்ளோடு புறம்போடு வாசியற எங்கும் | | |
| ஸந்தம் ஈசம் | வியாபித்து நிற்கிற எம்பெருமானை | ஹந்த | அந்தோ! (ஆதலால்) |
| அந்த: புர:ஸ்திதம் இவ | பிறவிக்குருடன் முன்னேயிரா நின்ற பொருளைக்காண மாட்டாதவாறு போல | த்வத் அக்ர கமநஸ்ய ந அர்ஹ: | தேவரீர் திருமுன்பே வருகைக்கும் அர்ஹதையுடையேனல்லேன். |

கீழ்ச்லோகத்தில் "புந: புநரகம் யதிராஜ குர்வே" என்றார். எம்பெருமான் எங்கும் கரந்து உறையுமவனுயிருக்க ஸர்வகர்மஸாக்ஷியான அவனை வஞ்சித்து நீர் பாபங்களைச் செய்யும்படி எங்ஙனேயென்று சிலர் கேட்பதாகக்கொண்டு அதற்கு உத்தரமாக இது அருளிச் செய்கிறார். "அந்தர்பஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:" "கருதரிய வுயிர்க்குயிராய்க் கரந்தெங்கும் பரந்துறையுமொரு தனி நாயகம்" இத்யாதிப்படியே ஸ்தூல ஸூக்ஷ்ம விபாகமற ஸகல வஸ்துக்களிலும் உள்ளும் புறமுமொக்க வியாபித்து நியமித்துக் கொண்டு போருகின்ற ஸர்வேச்வரனை நான் கண்டிலேன். பிறவிக்குருடன் எதிரேயுள்ளவொரு பொருளைக் காணகில்லானென்னில் இதில் வியப்பில்லையே. அவனைப் போலவே நானுமொருவனுயிற்று.

[ஸம்ஸேவீக்ஷணே: க்ருதவத்வஸ்ய ஹ்ருதயஸ்யதம் ஸ்வாதி] எம்பெருமானைக் கண்ணாலே கண்டேனாகில் "என்னமுதினைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்றிருக்கமாட்டேனோ? வகுத்த விஷயத்தைக் காணப் பெறுமையாலே கண்ட விஷயங்களிலும் அலைந்துழலாநின்றேன். இதுதான் காதாசித்கமன்று காணீர்; [ஸததம்] * இரவு பகலென்னுமையெப்போதும்.

இப்படிப்பட்ட பாவியேன் [த்வத்ஸந்நிதேரஸ்ய நார்ஹ:] தேவரீருடைய கண்வட்டத்திலே நிற்கவும் தகுதியுடையேனல்லேன். திருமுன்பே நிற்கவும் யோக்யதையற்ற நான் தேவரீரை எப்படி கிட்டப் போகிறேனென்றவாறு. (கஉ)

तापत्रयीजनितदुःखनिपातिनोऽपि देहस्थितौ मम रुचिस्तु न तन्निवृत्तौ ।
एतस्य कारणमहो मम पापमेव नाथ ! त्वमेव हर तद्यतिराज ! शीघ्रम् ॥ १३ ॥

தாபத்ரயீஜநிததுக்கநிபாதிநோபி தேஹஸ்திதௌ மம ருசிஸ்து ந தந்நிவ்ருத்தௌ,
ஏதஸ்ய காரணமஹோ மம பாபமேவ நாத! த்வமேவ ஹர தத்யதிராஜ! சீக்ரம். 13.

| | | | |
|---|---|---|---|
| யதிராஜ | எம்பெருமானாரே! | தத் நிவ்ருத்தௌ ந | அந்த தேஹத்தைத் தவிர்த்துக் கொள்வதில் ருசியுண்டாவதில்லை; |
| தாபத்ரயீ ஜநித து:க்க நிபாதிந: அபி | தாபத்ரயத்தாலு முண்டுபண்ணப்பட்ட துக்கங்களிலே வீழ்ந்து கிடக்கச் செய்தேயும | ஏதஸ்ய காரணம் மம பாபம் ஏவ | இப்படிப்பட்ட நிலைமைக்குக் காரணம் எனது பாவமேயாம்; |
| மம | எனக்கு | அஹோ | அந்தோ!; |
| ருசிஸ் து | அபிலாஷமோவென்றால் | நாத | ஸ்வாமிந்!, |
| தேஹஸ்திதௌ | து:காஸ்பதமான சரீரத்தைப் பேணுகையிலேயாம்; | தத் த்வமேவ சீக்ரம் ஹர | அந்த பாபத்தை தேவரீரே கடுகப் போக்கியருளவேணும். |

உள்ளும் புறமும் ஸகல பதார்த்தங்களிலுமுறைகின்ற எம்பெருமானைக் காண்கிலீராகிலும் ஹேய விஷயங்களின் தோஷங்களை ப்ரத்யக்ஷமாகக் காண்கிறீரன்றோ; காணவே அவற்றில் ஜிஹாஸை பிறந்ததில்லையோ? என்ன; துன்பங்களையும் இன்பமாக நினைக்கும்படியன்றோ என்னுடைய நிலைமையுள்ளது? இதுக்கடி என்னுடைய ப்ரபல பாபமேயாயிற்று அதை தேவரீர் தாமே களைந்தருள வேணுமென்று ப்ரார்த்திக்கிறார்.

[தாபத்ரயீ] ஆத்யாத்மிகம் ஆதி பௌதிகம் ஆதிதைவிக மெனப்படும் மூன்று தாபங்கள் தாபத்ரய மெனப்படும். "आत्माश्रिताचित्समुदायप्रधानहेतुकं दुःखम् आध्यात्मिकम्" என்பர்கள். கைகால் முதலிய உறுப்புகளாலே விளைவிக்கப்படும் தாபம் ஆத்யாத்மிக தாபமென்றபடி. அது தான் சாரீரமென்றும் மாநஸமென்றும் இரண்டுபடிப்பட்டிருக்கும். சாரீரமானது வ்யாதியென்றும், மாநஸமானது ஆதியென்றும் சொல்லப்படும். "शिरोरोगप्रतिश्यायज्वरशूलभगन्धरैः । गुल्माशीश्वयथुश्वासच्छर्द्यादिभिरनेकधा ॥ तथाऽक्षिरोगातिसार कुष्ठाङ्गामयसंज्ञितैः । भिद्यते देहजस्तापः" (ஸ்ரீவிஷ்ணு புராணம் 6-5-3) இத்யாதிகளாலே சொல்லப்பட்ட சரீரத்துன்பங்கள் வியாதியாம். "कामक्रोध भयद्वेष लोभमोह विषादजः । शोकासूयावमानेर्ष्यामात्सर्यादिमयस्तथा ॥" இத்யாதிகளாலே சொல்லப்பட்ட மனத்துன்பம் ஆதியாம். ஆக இந்த ஆதிவ்யாதிகள் ஆத்யாத்மிக தாபம்.

“ पशुपक्षिमनुष्याद्यैः पिशाचोरगराक्षसैः । सरीसृपाद्यैश्च नृणां जायते चाधिभौतिकः ॥ ” என்னப்பட்டது ஆதி பௌதிகம். “ शीतवातोष्णवर्षाम्बुवैद्युतादि समुद्भवः । तापो द्विजवर श्रेष्ठैः कथ्यते चाधिदैविकः ॥ ” என்னப் பட்டது ஆதிதைவிகம். ஆக இம்மூன்றுமே ஸ்வயம் துக்கரூபம். “ தாவத்ரயீ ஜநிதது:க்ஷவ ” என்கையாலே இவற்றில் நின்றுமுண்டான துக்கம் பொறுக்கவொண்ணாதென்று காட்டினபடி. “ दुःखानुबन्धमपि दुःखविमिश्रमल्पं क्षुद्रं जुगुप्सितसुखं सुखमित्युपासे ” என்கிற ஸ்ரீவைகுண்டஸ்தவ ஸ்ரீ ஸூக்தி இங்கு ஸ்மரிக்கத்தக்கது.

இப்படி துக்கைகதாநமான இவ்வுடல் என்றைக்குத்தொலையப்போகிறது! என்று உடல் தொலையும் நாளை எதிர்பார்த்திருக்கவேண்டியிருந்தும் பாவியேனுக்கு இந்த தேஹம் நிலைத்திருக்க வேணுமென்கிற ருசியே விஞ்சியிராநின்றதீ! என்கிறார். இதில் அருசியை விளைவிப்பதும் இதைத் தவிர்த்தருள்வதும் தேவரீருக்கே பரம் என்றாராயிற்று. (கங)

**वाचामगोचरमहागुणदेशिकाग्र्यकूराधिनाथकथिताखिलनैच्यपात्रम् ।**
**एषोऽहमेव न पुनर्जगतीदृशस्तद्रामानुजार्य करुणैव तु मद्गतिस्ते ॥ १४ ॥**

வாசாமகோசரமஹாகுணதேசிகாக்ர்யகூராதிநாதகதிதாகிலநைச்யபாத்ரம்,
ஏஷோஹமேவ ந புநர்ஜகதீத்ருசஸ்தத் ராமாநுஜார்ய! கருணைவ து மத்கதிஸ்தே. 14.

| | | | |
|---|---|---|---|
| ஆர்ய ராமாநுஜ | எம்பெருமானாரே! | ஏஷ: அஹம் ஏவ | இந்த அடியேன் ஒருவனே யாவேன்; |
| வாசாம் அகோசர மஹா குண தேசிக அக்ர்ய கூராதிநாத கதித அகில நைச்ய பாத்ரம் | வாய்க்கு நிலமல்லாத நற்குணங்களையுடைய ஆசார்யச்ரேஷ்டரான கூரத்தாழ்வான் அநுஸந்தித்த ஸமஸ்த நைச்யங்களுக்கும் பாத்ரமாயிருப்பவன் | ஈத்ருச: புந: ந | இப்படிப்பட்ட தோஷத்தையுடையான் வேறொருவனில்லை; (ஆதலால்) |
| | | தே கருணா து | தேவரீருடைய திருவருளோவென்றால் |
| ஜகதி | இவ்வுலகில் | மத்கதி: ஏவ | என்னையே கதியாகவுடையது. |

*மொழியைக் கடக்கும் பெரும்புகழ்பெற்ற கூரத்தாழ்வான் தம்முடைய ஸ்தவங்களிலே தமக்குள்ளதாக அநுஸந்தித்துக்கொண்ட நைச்யமானது உண்மையில் அடியேனிடத்தில் தானுள்ளது; என்னைப்போன்ற நீசன் இவ்வுலகில் வேறொருவனுமிலன்; ஆன பின்பு எனக்கு தேவரீருடைய திருவருளல்லது புகலில்லை யென்கிறார்.

கூரத்தாழ்வானுக்கு “ வாசாமகோசரமஹாகுண தேசிகாக்ர்ய ” என்று விசேஷணமிட்டது மிகவும் பொருந்தும். எம்பெருமானுடைய குணங்களைப் பேசித் தலைக்கட்டிவிடலாம், எம்பெருமானாருடைய குணங்களையும் பேசித் தலைக்கட்டிவிடலாம்; ஆழ்வானுடைய குணங்களைப்பேசித் தலைக்கட்டுவது ஆதிசேஷனுக்குமரிது என்றிறே அக்காலத்திலேயே ப்ரஸித்தி விளைந்தது. ஆகவேதான் அமுதனார் நூற்றந்தாதியில் “மொழியைக்கடக்கும் பெரும்புகழான் வஞ்சமுக்குறும்பாங்குழியைக் கடக்கும் நங்கூரத்தாழ்வான்” என்று பணித்தது. அப்படிப்பட்ட ஆழ்வான் எம்பெருமானை ஸ்துதிக்கவென்றிழிந்து அந்த ஸ்துதி சிறிதுபாகமும் தம்முடைய நைச்யாநுஸந்தானம் மிகப்பெரிய பாகமுமாகவன்றே பணித்துப் போந்தது. ஸ்ரீவைகுண்ட

ஸ்தவத்தின் பிற் கூற்றிலும் வரதராஜஸ்தவத்தின் பிற் கூற்றிலும் இது பரக்கக் காணலாம். அப்படி அவர் அநுஸந்தித்த நைச்யத்திற்கு உண்மையில் அவர் பாத்ர பூதரல்லர்; அஸ்மதாதிகளின் அநுஸந்தானத்திற்காகத் தாம் ஏறிட்டுக் கொண்டு பேசினதத்தனை. அவற்றுக்கெல்லாம் கொள்கலமாகத் தகுவது அடியேனொருவனே யாயிற்று. ஆன பின்பு தேவரீருடைய திருவருளாலன்றி அடியேன் உய்ய விரகில்லை யென்கிறார். (கச)

**சுத்தாத்மயாமுந குருத்தம கூரநாதபட்டாக்ஹ்ய தேசிகவரோக்த ஸமஸ்தநைச்யம்,**
**அத்யாஸ்த்யஸங்குசிதமேவ மயீஹ லோகே தஸ்மாத் யதீந்த்ர! கருணைவ து மத்கதிஸ் தே 15.**

| | | | |
|---|---|---|---|
| யதீந்த்ர! | எம்பெருமானாரே ! | மயி ஏவ | என்னிடத்திலேயே |
| சுத்த ஆத்ம யாமுந குருத்தம கூர நாத பட்டாக்ய தேசிக வர உக்த ஸமஸ்த நைச்யம் | பரம பவித்திரரான ஆளவந்தார் ஆழ்வான் பட்டர் என்னுமிந்த ஆசார்ய சிகாமணிகள் அநுஸந்தித்துக் கொண்ட ஸகலவிதமான தாழ்வும். | அஸங்குசிதம் அஸ்தி | குறை யுறாது நிரம்பியிருக்கின்றது. |
| | | தஸ்மாத் | ஆதலால், |
| | | தே கருணா ஏவது மத்கதிஃ | தேவரீருடைய திருவருளே எனக்குப் புகல் (அல்லது) தேவரீருடைய திருவருள் என்னையே புகலாகவுடையது. |
| இஹ லோகே | இவ்வுலகின்கண் | | |
| அத்ய | இக்காலத்தில் | | |

கீழ்ச்லோகத்தில், ஆழ்வான் அநுஸந்தித்த நைச்யத்திற்கு நானே கொள்கலமாயிருப்பனென்றார்; ஆழ்வானொருவரேயோ? ஆளவந்தார் ஆழ்வான் பட்டர் என்னுமிவ்வாசிரியர்களனைவரும் தாம்தாம் அநுஸந்தித்துக் கொண்ட நைச்சியம் அவர்கள் பக்கலில் சிறிதுமில்லை, என்னிடத்திலேயே நிரம்பவுமுள்ளது. இக்காலத்தில் இவ்வுலகில் எங்குத் தேடிப்பார்த்தாலும் என்னைப்போன்ற நீசன் வேறுவ்யக்தி கிடைப்பதரிதாதலால், "ஸ்வாமிந்! தேவரீருடைய திருவருளை அடியேன்பக்கலிலே பாயவிட்டுக் கைக்கொண்டருளவேணும் என்றாராயிற்று.

சுத்தாத்ம என்கிற விசேஷணம் மூவர்பக்கலிலும் அந்வயிக்கக்கடவது. அவர்கள் அநுஸந்தித்துக்கொண்ட நைச்யத்திற்கு அவர்கள் பக்கலிலே அவகாசமில்லையென்று காட்டினபடி. (கரு)

**சப்தாதிபோகவிஷயா ருசிரஸ்மதீயா நஷ்டா பவத்விஹ பவத்தயயா யதீந்த்ர !**
**த்வத்தாஸதாஸகணநாசரமாவதௌ யஸ் தத்தாஸதைகரஸதா அவிரதா மமாஸ்து. 16.**

| | | | |
|---|---|---|---|
| யதீந்த்ர! | எம்பெருமானாரே ! | த்வத் தாஸ தாஸ கணநா சரம அவதௌ | தேவரீருடைய பக்த பக்தர்களை எண்ணிக்கொண்டு போமளவில் சரம பர்வத்தில் நிற்கிறாரோ, |
| அஸ்மதீயா | எம்முடையதான | | |
| சப்தாதி போக விஷயா ருசிஃ | சப்தாதி விஷயங்களை யனுபவிக்க வேணுமென்பது பற்றியுண்டான அபிநிவேசமானது | தத்தாஸதைக ரஸதா | அவர்க்கு அடிமைப்பட்டிருப்ப தொன்றிலேயே ப்ராவண்யமானது |
| பவத் தயயா | தேவரீருடைய திருவருளாலே | | |
| நஷ்டா பவது | தொலைந்ததாகக் கடவது ; | மம அவிரதா அஸ்து | எனக்கு அவிச்சிந்நமாக நடைபெற வேணும். |
| யஃ | யாவரொருவர் | | |

எம்பெருமானாரே! * கண்டு கேட்டுற்று மோந்துண்டுழலுமைங்கருவி கண்ட வின்பங்களிலே ஊற்றம் மிகுந்து செல்லாநின்றது; தேவரீரிடத்தில் ப்ரவணனான வெனக்கு இது தகுமோ? இந்த ஆற்றம் குலையும்படி செய்தருளவேணும். இங்ஙனே செய்வதற்கு அடியேன் பக்கலில் ஒரு கைம் முதலுமில்லை; தேவரீருடைய நிர்ஹேதுக கருணையினாலேயே இது ஆகக்கடவது—என்கிறார் பூர்வார்த்தத்தில்.

தமக்கு யதீந்த்ர ப்ரவணர் என்கிற திருநாமம் வேண்டாவென்றும், யதீந்த்ர ப்ரவண ப்ரவண ப்ரவண ப்ரவணர் என்கிற திருநாமம் வேணு மென்றும் வெளியிடுகிறார் உத்தரார்த்தத்தில். தேவரீருக்கு தாஸாநுதாஸ சரமாவதி தாஸனாகக் கடவேனென்கை. (கசு)

**ச்ருத்யக்ரவேத்யநிஜதிவ்யகுணஸ்வரூப: ப்ரத்யக்ஷதாமுபகதஸ் த்விஹ ரங்கராஜ:**
**வச்யஸ் ஸதா பவதி தே யதிராஜ தஸ்மாத் சக்தஸ் ஸ்வகீயஜநபாபவிமோசநே த்வம். 17.**

| | | | |
|---|---|---|---|
| யதிராஜ | எம்பெருமானாரே ! | ரங்கராஜ: | ஸ்ரீரங்கநாதன் |
| ச்ருத்யக்ர வேத்ய நிஜ திவ்யகுண ஸ்வரூப: | வேதாந்தங்களில் கேட்டறிய வேண்டும்படியான தன்னுடைய குணஸ்வரூபாதிகளையுடையனாய் | தே | தேவரீருக்கு |
| | | ஸதா | எப்போதும் |
| | | வச்ய: பவதி | விதேயனாயிரா நின்றான் ; |
| | | தஸ்மாத் | ஆதலால் |
| இஹ | தன்வாசியறிந்து ஈடுபடுவாரில்லாத இந்த ஸம்ஸார மண்டலத்திலே | ஸ்வகீய ஜந பாப விமோசநே | தம்மடியார்களின் பாவங்களைத் தொலைத்தருள்வதில் |
| ப்ரத்யக்ஷதாம் உபகத: | எல்லார்க்கும் கண்ணெதிரே காட்சி தந்தருள்கின்ற | த்வம் சக்த: | தேவரீர்சக்தியுடையராயிரா நின்றீர். |

கீழ்ச்லோகங்களில் ப்ரார்த்தித்தபடிகளையெல்லாம் குறிக்கொண்டருளின எம்பெருமானார், ‘நீர் நம்மை இங்ஙனே நிர்ப்பந்திக்கிறதென்? அநிஷ்டநிவாரணத்திற்கும் இஷ்டப்ராமாபணத்திற்கும் ஸர்வேச்வரனன்றோ கடவன்; அவை நம்மாலாகக் கூடியவையல்லவே; அவன் திறத்திலே செய்யவேண்டிய ப்ரார்த்தனைகளை என் பக்கலிலே செய்து பயனென்ன?’ என்று திருவுள்ளம் பற்றினதாகக் கொண்டு, அந்த எம்பெருமான் தானும் ஸ்ரீரங்கநாதனாகத் திருக்கோலங்கொண்ட நிலைமையிலே ஸர்வாத்மநா தேவரீருக்கு விதேயனென்று ப்ரஸித்தமாகையாலே தேவரீர் சொல்லிற்றுச் செய்வானான பின்பு இந்த ப்ரார்த்தனைகளெல்லாம் தேவரீர் பக்கலிலேயே செய்ய ப்ராப்தமென்று காட்டுகிறார்போலும்.

புருஷஸூக்த நாராயணாநுவாகாதிகளிலே என்றும் குருமுகமாகக் கேட்டேயறிய வேண்டிய ஸ்வரூபரூப குணவிபூதிகளையுடையனாயிருந்த எம்பெருமான் “அகிலநேத்ர பாத்ரமிஹ ஸந் ஸஹ்யோத்பவாயாஸ்தடே ஸ்ரீரங்கே நிஜதாம்நி சேஷசயநே சேஷே வநாத்ரீச்வர:” என்று ஆழ்வானருளிச் செய்தபடியே திருவரங்கம் பெரிய கோயிலிலே ஸ்ரீரங்கநாதனாய் “இன்று கண்டமையால் என் கண்ணிணைகள் களிப்பக் களித்தேனே” என்று அனைவரும் கண்டுகளிக்கலாம்படி* மண்ணுய்ய மண்ணுலகில் மனிசருய்யத் துன்பமிகு துயரகல அயர்வொன்றில்லாச் சுகம்வளர அகமகிழுந் தொண்டர்வாழ அன்பொடு தென் திசை நோக்கிப் பள்ளிகொண்டருளா நின்றான்; அப்பெருமான் தேவரீருக்கு விபவதசையோடு அர்ச்சா தசையோடு வாசியற எப்போதும் விதேயனாகையாலே அவனை யதேஷ்டமாக நியமித்துக் காரியங் கொள்ளக் குறையுண்டோ வென்றாயிற்று.

“வச்யஸ் ஸதா பவதி தே யதிராஜ!” என்று இவர் எது கொண்டு அருளிச் செய்கிறாரென்னில்; சரணாகதி கத்யத்தில் ஸ்வாமி தாம் ப்ரார்த்தித்தபடியெல்லாம் ஆகுகவாகுகவென்று ப்ரதிவசநமிட்டருளினபடி கொண்டும் மற்றும் பலபல இதிஹாஸங்கள் கொண்டும் அருளிச் செய்கிறாரென்க. அவ்விதிஹாஸங்களுள் ஒன்று காண்மின்;—*திருவாய் மொழி (4—3—5.)*ஏலுமாடையும்:. தே* என்ற விடத்து ஈடுமுப்பத்தாறாயிரத்திலுள்ளது;-“ஒரு நாள் ஸ்ரீவைஷ்ணவ வண்ணாத்தான் திருப்பரிவட்டங்களை அழகியதாக வாட்டிக் கொண்டு வந்து (ஸலவை செய்து கொண்டுவந்து என்றபடி.) எம்பெருமானார்க்குக் காட்ட, அவரும் பரமத்ருப்தராய் அவனைப் பெருமாள் திருவடிகளிலே கொண்டு புக்கு ‘இவன் வெகு மநோஹரமாகத் திருப்பரி வட்டம் திருத்திக் கொண்டு வந்திருக்கிறபடியைத் திருக்கண் சாத்தி யருளவேணும்’ என்று சொல்லித் திருப்பரிவட்டங்களைக் காட்டியருள, பெருமாளும் கண்டு உகந்தருளி உடையவரை நோக்கி ‘வாரீர்! இவனுக்காக முன்பு ரஜகன் நம் திறத்தில் செய்த குற்றம் பொறுத்தோம்’ என்று திருவாய்மலர்ந்தருளினார்” என்று. (வண்ணான் முன்பு செய்த குற்றமாவது—கண்ணபிரானும் பலராமனும் அக்ரூரரால் அழைக்கப்பட்டு மதுரைக்கு எழுந்தருளினபோது அவ்வூரிலுள்ள ராஜவீதியில் கம்ஸனுடைய வண்ணான் துணி மூட்டைகளைச் சுமந்து கொண்டு வர, இவ்விருவரும் அவனிடத்தில் வஸ்த்ரம் விரும்ப, அவன் கொடாதொழிந்தது.)

ஸ்ரீரங்கநாதன் “மாமுனி வேள்வியைக் காத்து அவபிரதமாட்டிய வடுதிறலயோத்தியெம்மரசே அரங்கத்தம்மா!” என்னும்படி சக்ரவர்த்தி திருமகனாயவதரித்து விச்வாமித்ர முநியின் பின்னே போனபோது “இமௌ ஸ்ம முநிசார்தூல! கிங்கரௌ ஸமுபஸ்திதௌ ஆஜ்ஞாபய யதேஷ்டம் வை சாஸநம் கரவாவ கிம்?” என்று ஸர்வாத்மநா விதேயனாயிருந்தானென்றால், எம்பெருமானார் பக்கலிலே யிருந்தமை கேட்கவேணுமோ? (கஎ)

**காலத்ரயேபி கரணத்ரய நிர்மிதாதி பாபக்ரியஸ்ய சரணம் பகவத்க்ஷமைவ,**
**ஸா ச த்வயைவ கமலாரமணேர்த்திதா யத் க்ஷேமஸ் ஸ ஏவ ஹி யதீந்த்ர! பவத்ச்ரிதாநாம். 18.**

| | |
|---|---|
| யதீந்த்ர ! | எம்பெருமானாரே ! |
| காலத்ரயே அபி | வருங்காலம் நிகழ்காலம் கழிகாலமென்கிற மூன்று காலங்களிலும் |
| கரணத்ரய நிர்மித அதி பாபக்ரியஸ்ய | மன மொழி மெய்களாகிற மூன்று கரணங்களினாலும் கோர பாபங்களைச் செய்தவனுக்கு |
| பகவத் க்ஷமா ஏவ | எம்பெருமானது பொறுமை யொன்றே |
| சரணம் | புகல்; |
| ஸா ச | அந்த க்ஷமைதானும் |
| த்வயா ஏவ | தேவரீராலேயே |
| கமலாரமணே | நம்பெருமாள் பக்கலிலே |
| அர்த்திதா இதியத் | ப்ரார்த்திக்கப்பட்டதென்பது யாதொன்று, |
| ஸஃ ஏவ ஹி | அந்த ப்ரார்த்தனை தானே |
| பவத் ச்ரிதாநாம் | தேவரீரை யடிபணிந்தவர்களுக்கு |
| க்ஷேமஃ | சேமமாவது. |

கீழ் ச்லோகத்தில் "இஹ ரங்கராஜ: வச்யஸ் ஸதா பவதி தே யதிராஜ!" என்றருளிச் செய்தாரே; அதை நன்கு நிலைநாட்டி யருளிச் செய்வது இந்த ச்லோகம். அபராதிகளான சேதநர்களுக்கு எம்பெருமானுடைய க்ஷமையே புகலென்று சாஸ்த்ரங்களெல்லாம் ஒருமிடறாகச் சொல்லியிருந்தாலும் அடியேன் போல்வார் அந்த எம்பெருமான் பக்கலிலே சென்று அவனுடைய க்ஷமையைவேண்டி வருந்த வேண்டியதில்லையே; தேவரீர் ஒரு பங்குனியுத்தரத் திருநாளிலே திவ்ய தம்பதிகளின் திரு முன்பே கத்யமநுஸந்தித்து ப்ரார்த்திக்கையில் அப்போது தேவரீருக்குக்கிடைத்த வரமொன்று ப்ரஸித்தமாயிரா நின்றது. அதாவது, உமக்கும் உம்முடைய ஸம்பந்த ஸம்பந்தம் பெற்றவர்களுக்கும் ஒரு குறையில்லை காணும் என்ற திருமுகப்பாசுரம். அது உண்டான பின்பு எம்போல்வார் எம்பெருமான் பக்கலிலே சென்று துவள வேண்டிற்றுண்டோ? என்கிறாராயிற்று.

ஸ்ரீமந் நிகமாந்ததேசிகனருளிய ந்யாஸ திலகத்தில் *உக்த்யா தநஞ்ஜயே த்யாதி ச்லோகத்தில் * ச்ருத்வா வசம் தததநுபந்த மதாவலிப்தே நித்யம் ப்ரஸீத பகவந் மயி ரங்கநாத! * என்றருளிச் செய்ததும் அதற்கு விவரணமாக நாம் இட்ட அத்ருஷ்டார்த்த ஸர்வஸ்வமும் இங்கே நோக்கத்தக்கவை.

[காலத்ரயேபி இத்யாதி] ஒரு காலமல்லா வொருகாலத்திலேயாகிலும் நன்னடத்தைக்கு அவகாசமில்லாமே எக்காலத்திலும் மனமொழி மெய்களாலே பாபங்களையே கூடுபூரித்துக் கிடக்குமவனுக்கு அவை எம்பெருமானுடைய பொறுமைக்கே இலக்காகித் தொலையவேண்டுமத்தனை. ப்ராயச்சித்தங்களாலாதல் அநுபவத்தாலாதல் தொலைய மாட்டாத பாபங்களுக்கு பகவானுடைய க்ஷமையல்லது வேறொரு புகலில்லையிறே. அந்த க்ஷமைதான் இன்று நாம் புதிதாக ப்ரார்த்தித்துப் பெற வேண்டாமே பண்டே தேவரீர் ப்ரார்த்தித்துப் பெற்று வைத்த சேமநிதி யாகையாலே எம் போல்வார் தேவரீருடைய அபிமாநத்திலே அந்தர்ப்பவித்து நிற்கைக்கு மேற்பட வேறொன்று செய்ய வடுப்பதறியோம்—என்றருளிச் செய்தாராயிற்று. (கஅ)

**ஸ்ரீமந் யதீந்த்ர! தவதிவ்யபதாப்ஜஸேவாம் ஸ்ரீசைலநாதகருணாபரிணாமதத்தாம்,**
**தாமந்வஹம் மம விவர்த்தய நாத! தஸ்யா: காமம் விருத்தமகிலஞ்ச நிவர்த்தய த்வம். 19.**

| | |
|---|---|
| நாத ! | எமக்குத் தலைவரான |
| ஸ்ரீமந் யதீந்த்ர | ஸ்ரீராமாநுஜரே ! |
| ஸ்ரீசைலநாத கருணா பரிணாம தத்தாம் | (அஸ்மதாசார்யரான) திருமலையாழ்வாருடைய திருவருள் மிகுதியினால் அளிக்கப்பட்ட |
| தாம் | அப்படிப்பட்ட |
| தவ திவ்ய பதாப்ஜ ஸேவாம் | தேவரீருடைய பாதாரவிந்த ஸேவையை |
| அந்வஹம் | நாடோறும் |
| மம விவர்த்தய | அடியேனுக்கு வளரச் செய்தருளவேணும்; |
| தஸ்யாஃ விருத்தம் | அந்த பவதீய பாதாரவிந்த ஸேவைக்கு எதிரிடையான |
| அகிலம் ச காமம் | எல்லா விருப்பங்களையும் |
| த்வம் நிவர்த்தய | தேவரீர் தவிர்த்தருளவேணும். |

திருவாய்மொழிப் பிள்ளையாகிற ஸ்வாசார்யர் எம்பெருமானாருடைய திருக்கோலத்தைக் காட்டிக் கொடுத்து இவ்விஷயமாக ஒரு ஸ்துதியை விண்ணப்பம் செய்யுமென்று நியமித்தருள, அந்த நியமனமடியாக அவதரித்த ஸ்துதியிறே இது. இவ்விஷயத்தை வெளியிட்டுக்

கொண்டே ஒரு ப்ரார்த்தனை பண்ணுகிறார் இந்த ச்லோகத்தில். வாரீர் எம்பெருமானாரே! தேவரீருடைய திருவடித் தாமரைகளின் சுவடுதன்னை அடியேன் ஸ்வதந்த்ரனாகக் கண்டவனல்லேன்; அஸ்மதாசார்யர் பரம க்ருபையாலே காட்டியருளக் கண்டேனித்தனை. ஆகவே பரமப்ராப்யமான விஷயம் அடியேனுக்கு இன்று புதிதாகப் பெறவேண்டாதபடி, பண்டே பெற்றதொன்றாயிற்று. பெற்றீராகில் இனி நாம் செய்யவேண்டிய தென்னென்னில்; பெற்றவதனை வளர்த்தருளுகையே வேண்டுவது. "மொய்ம்பால் வளர்த்த இதத் தாய் இராமானுசன்" என்றும் "இந்தத் தரிசனத்தை யெம்பெருமானார் வளர்த்த" என்றும் சொல்லும்படி வளர்ப்பதில் தேவரீர் வல்லீராதலால் இதனையும் வளர்த்துக்கொண்டு போரவேணுமென்று வேண்டுகிறேனென்கிறார் போலும். இதனை வளர்த்தருளும்போதைக்கு மற்றை நங் காமங்கள் மாற்ற வேண்டுவதும் ஆவச்யகமாதலால் அதையும் செய்தருள வேணுமென்கிறார் ஈற்றடியால்.

"தஸ்யா: விருத்தம் அகிலம் ச காமம் நிவர்த்தய" என்றது விஷயாந்தர காமத்தோடு பகவத் காமத்தோடு வாசியற எல்லாக் காமங்களையும் மாற்றியருளவேணு மென்றபடி. பகவத் விஷயத்திலே ஊன்றினவர்களுக்கு விஷயாந்தரம் ஹேயமாமாப்போலே ஆசார்ய விஷயத்தில் * தேவுமற்றறியே னென்னும்படி ஊன்றினவர்களுக்குஅந்த பகவத் விஷயந் தானும் ஹேயமாகையாலே இங்கு பகவத் காமமுட்பட நிவர்த்தநீய கோடியிலே சேரத்தகுமென்றுணர்க. (௧௯)

**விஜ்ஞாபநம் யதிதமத்ய து மாமகீநம் அங்கீகுருஷ்வ யதிராஜ தயாம்புராசே,**
**அஜ்ஞோயமாத்மகுணலேசவிவர்ஜிதச் ச தஸ்மாதநந்யசரணோ பவதீதி மத்வா. 20.**

| | |
|---|---|
| தயா அம்புராசே! | கருணைக்கடலான |
| யதிராஜ! | எம்பெருமானாரே! |
| அயம் | (அடியேனாகிற) இவன் |
| அஜ்ஞ: | (தத்வஹித புருஷார்த்தங்களில்) அறிவில்லாதவன், |
| ஆத்ம குணலேச விவர்ஜிதச் ச | ஆத்ம குணங்கள் சிறிதுமில்லாதவன்; |
| தஸ்மாத் | ஆகையினாலே |
| அநந்யசரண: பவதி | நம்மைத்தவிர்த்து வேறு புகலற்றவன்' |
| இதி மத்வா | என்று திருவுள்ளம்பற்றி, |
| அத்ய மாமகீநம் யத் து விஜ்ஞாபநம் தத் அங்கீகுருஷ்வ | இப்பொது அடியேனுடைய தான விண்ணப்பம் யாதொன்றுண்டோ அதனைத் தலைக்கட்டியருள்வதாக ஏற்றுக்கொள்ள வேணும். |

இந்த ச்லோகத்தோடு தம்முடையதான இந்த ஸ்துதியைத் தலைக்கட்டியருளுகிறார். இதுதன்னில் மூன்றாவது ச்லோகமான 'வாசா யதீந்த்ர! மநஸா' என்பது தொடங்கிக் கீழ் ச்லோகத்தளவும் பத்தெட்டு ச்லோகங்களில் சில ப்ரார்த்தனைகளைச் செய்தருளியுள்ளார். அந்தப் ப்ரார்த்தனைகளைத் திருவுள்ளத்திற் கொண்டு உபேக்ஷியாமல் நிறைவேற்றியருளவேணுமென்று ப்ரார்த்திக்கிறாராயிற்று இந்த ச்லோகத்தில். "இதம் விஜ்ஞாபநம்" என்று கீழ்ச்லோகத்திற் பண்ணின விஜ்ஞாபனத்தை மாத்திரம் பராமர்சிக்கிறதன்று; ஆக இவ்வளவாலுஞ் செய்த விஜ்ஞாபன மெல்லாவற்றையும் நினைக்கிறது. இதை அங்கீகரித்தருளவேணுமென்றது 'நீ வேண்டின படியே செய்து தலைக்கட்டுகிறேன் என்று சோதிவாய் திறந்து அருளிச் செய்யாதொழியினும் அப்படியே செய்வதாகத் திருவுள்ளம் பற்றியருளவேணும்' என்றபடி. இங்ஙனே நிர்ப்பந்திப்பதற்கு அடியேனென்ன; [ தயாம்புராசே! ] அடியேன் நிர்ப்பந்திக்கிறேனல்லேன்; தேவரீருடைய இயற்கையான இன்னருளையே பற்றாசாகக்கொண்டு ப்ரார்த்திக்கிறேனென்கை. ஆசார்ய ஹ்ருதயத்தில் "தாய்க்கும் மகனுக்கும் தம்பிக்கும் இவர்க்கும் இவரடி பணிந்தவர்க்குமே இவையுள்ளது" என்ற சூர்ணிகை இங்கே அநுஸந்தேயம்.

தேவரீருடைய தயைக்கு இங்கே விஷயமுண்டென்று முதலிக்கிறார் உத்தரார்த்தத்தில். 'நம்மை யொழிய வேறு புகலுண்டென்று அறியாதவனிவன்; ஆத்ம குணங்களில் லவலேசமுமில்லாதவன்; ஆகவே நம்முடைய கருணைக்கே கொள்கலமாகத் தகுந்தவ' னென்று திருவுள்ளம் பற்றவேணு மென்றாராயிற்று. (௨0)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ காஞ்சீ ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய
யதிராஜவிம்சதி யுரை முற்றிற்று.

श्रीमतेरामानुजायनमः।

श्रीमद्वरवरमुनये नमः॥

## ॥ श्रीवरवरमुनिदण्डकस्तुतिः ॥

(श्रीकाञ्ची. प्र. अण्णङ्गराचार्यकृतिः।)

प्रभवतु नम एतदाश्चर्यचर्याय पर्यायरामानुजार्याय शेषावताराय सौमित्रिवेषाञ्चितार्याय निर्यातुधानां धरित्रीं पुरा चक्रुषे निष्प्रतिद्वंद्वशक्तिप्रगल्भाय कान्तोपयन्त्रे मुनीन्द्राय योगीन्द्रमान्याय मानातिगप्रौढकीर्त्युज्ज्वलायाप्रमेयप्रभावाय सत्ताम्रपर्णीतटाञ्चच्छठारातियोगीन्द्रसद्दिव्यदेशावतीर्णाय काले यथावत्कृताशेषसंस्कारसंपत्तये सर्वशास्त्राब्धिगाढावगाढाय गूढार्थतत्त्वौघविज्ञाय विज्ञाग्रगण्याढ्यकुन्तीपुरोत्पन्नसच्छैलनाथार्यदिव्यानुकम्पैकसंपत्समृद्धाय सत्संप्रदायार्थसंरक्षणैकप्रक्लृप्तावधानाय धीभक्तिवैराग्यवाराशये पापराशिप्रणाशार्हदिव्यावलोकाय लोकातिगश्रेष्ठमेधाविलासाय सुज्ञानिसद्बृन्दपादारविन्दैकभृङ्गाय रङ्गाधिनाथाज्ञया तत्पदाम्भोरुहोपान्तसंवासधन्याय संन्यासिवर्याय तीर्थीकृताशेषतीर्थाय कीर्त्याय पूर्तादिकैङ्कर्यचर्याकृतार्थाय ते ॥१॥

## ஸ்ரீ வரவரமுநி தண்டகத்தின் தமிழுரை.

(ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர்.)

व्युत्पित्सूनां प्रबोधाय द्राविड्या दिव्यभाषया ।
मूलकारः स्वयं व्याख्यामाख्याति ललिताध्वना ॥

(முதல் தண்டகத்தின் கருத்துரை.)

[एतन्नमः कान्तोपयन्त्रे मुनीन्द्राय प्रभवतु-ஏதந்நம: காந்தோபயந்த்ரே முநீந்த்ராய ப்ரபவது] இந்நமஸ்காரம் மணவாளமாமுனிகளுக்கு ஆகுக. அவர் தாம் எப்படிப்பட்டவரெனில்; [आश्चार्यचर्याय—ஆச்சர்யசர்யாய] அத்புதமான சரித்திரமுடையவர். [पर्यायरामानुजार्याय—பர்யாய ராமாநுஜார்யாய] எம்பெருமானாருடைய அபராவதாரபூதர் शेषावताराय—சேஷாவதாராய] திருவனந்தாழ்வானுடையவும் அவதாரபூதர். [सौमित्रिवेषाञ्चितार्याय-ஸௌமித்ரிவேஷாஞ்சிதார்யாய] ஸ்ரீராமாவதார காலத்திலே இளைய பெருமாளாக வடிவெடுத்திருந்த ஆசார்யர். [निर्यातुधानां धरित्रींपुराचक्रुषे-நிர்யாதுதாநாம் தரித்ரீம் புரா சக்ருஷே] அப்போது பூமண்டலத்தை ராக்ஷஸப்பூண்டில்லாதபடி செய்தருளினவர். [निष्प्रतिद्वंद्वशक्तिप्रगल्भाय—நிஷ்ப்ரதித்வந்த்வ சக்திப்ரகல்பாய] ஒப்பற்ற ஆற்றல்பெற்றவர். [योगीन्द्रमान्याय-யோகீந்த்ரமாந்யாய] யோகிச்ரேஷ்டர்களுக்குள்ளே தலைவராக மானிக்கத்தகுந்தவர். [मानातिगप्रौढ की

र्युज्ज्वलाय-மாநாதிகப்ரௌட கீர்த்தி உஜ்ஜ்வலாய] அளவுகடந்த விசேஷ கீர்த்தியோடு விளங்குபவர். [अप्रमेयप्रभावाय-அப்ரமேயப்ரபாவாய] அளவிடவொண்ணாத வைபவம் பொருந்தியவர். [सत्ताम्रपर्णीतटाञ्चच्छठाराति योगीन्द्रसद्दिव्यदेशावतीर्णाय-ஸத்தாம்ரபர்ணீ தடாஞ்சத் சடாராதி யோகீந்த்ரஸத்திவ்ய தேசாவதீர்ணாய] விலக்ஷணமான தாம்ரபர்ணியின் கரையிலே விளங்குகின்ற நம்மாழ்வாருடைய திருவவதாரஸ்தலமான திருக்குருகூரிலே திருவவதரித்தவர் [काले यथावत्कृताशेषसंस्कारसंपत्तये-காலே யதாவத்க்ருதா சேஷ ஸம்ஸ்காரஸம்பத்தயே] காலகாலங்களில் சௌளம் உபநயனம் முதலிய ஸகல ஸம்ஸ்காரங்களும் அடைவுபட நடத்தப்பெற்றவர். [सर्वशास्त्राब्धिगाढावगाढाय-ஸர்வசாஸ்த்ராப்தி காடாவகாடாய] ஸகல சாஸ்திரக்கடல்களிலும் நன்ருக ஆழ்ந்தவர். [गूढार्थतत्त्वौघविज्ञाय-கூடார்த்த தத்வௌகவிஜ்ஞாய] ஸகல ரஹஸ்யார்த்த தத்துவங்களையு முணர்ந்தவர். [विज्ञाग्रगण्याढ्यकुन्तीपुरोत्पन्न सच्छैलनाथार्यदिव्यानुकम्पैक संपत्समृद्धाय—விஜ்ஞாக்ரகண்யாட்ய குந்தீபுரோத்பந்நஸச்சைலநாதார்ய திவ்யாநுகம்பைக ஸம்பத்ஸம்ருத்தாய] மாஞானிகள் மலிந்த குந்தீநகரத்தில் திருவவதரித்த திருவாய்மொழிப்பிள்ளையின் திருவருளாகிற செல்வம் பொலிந்தவர். [सत्संप्रदायार्थसंरक्षणैक प्रक्लुप्तावधानाय-ஸத்ஸம்ப்ரதாயார்த்த ஸம்ரக்ஷணைக ப்ரக்ல்ப்தாவதாநாய] ஸத்ஸம்ப்ரதாயப்பொருள்களைக் காத்தருள்வதிலேயே ஊக்கமுடையவர். [धीभक्तिवैराग्यवाराशये—தீபக்திவைராக்யவாராசயே] ஜ்ஞானபக்தி விரக்திகளுக்குக் கடல்போன்றவர். [पापराशिप्रणाशार्ह दिव्यावलोकाय-பாபராசிப்ரணாசார்ஹ திவ்யாவலோகாய] தமது கடாக்ஷலக்ஷ்யபூதர்களின் பாபராசிகளைப்போக்கி அவர்களைப் பாவநராக்கவல்ல திவ்ய கடாக்ஷமுடையவர். [लोकातिगश्रेष्ठमेधाविलासाय-லோகாதிகச்ரேஷ்ட மேதாவிலாஸாய] லோகாதீதமாயும் சிறந்ததாயுமுள்ள மேதாவிலாஸமுடையவர். [सुज्ञानिसद्बृन्दपादारविन्दैकभृङ्गाय-ஸுஜ்ஞாநிஸத்ப்ருந்த பாதாரவிந்தைகப்ருங்காய] மாஞானிகளான ஸத்துக்கள் பலருடைய திருவடித்தாமரைகளிலே படிந்தவர். [रङ्गाधिनाथाज्ञया तत्पदाम्भोरुहोपान्तसंवासधन्याय-ரங்காதிநாதாஜ்ஞயா தத்பதாம்போருஹோபாந்த ஸம்வாஸதந்யாய] ஸ்ரீரங்கநாதனுடைய நியமனப்படி திருக்குருகூர்வாஸத்தை விட்டுக் கோயில் வாஸத்தை ஏற்றுக்கொண்டவர். [संन्यासिवर्याय-ஸம்ந்யாஸிவர்யாய] உத்தமாச்ரமிகளுள் உத்தமர். [तीर्थीकृताशेषतीर्थाय-தீர்த்தீக்ருதாசேஷதீர்த்தாய] * தீர்த்தீ குர்வந்தி தீர்த்தாநி* என்கிறபடியே ஸகல தீர்த்தங்களையும் தீர்த்தமாக்கினவர். புண்ய தீர்த்த க்ஷேத்ர யாத்திரை செய்தருளினவரென்றபடி. [पूर्तादिकैङ्कर्यचर्याकृतार्थाय -பூர்த்தாதி கைங்கர்ய சர்யாக்ருதார்த்தாய] பூர்த்தமாவது தேவாலய ஜீர்ணோத்தாரணம் மடப்பிரதிஷ்டாபனம் முதலிய புண்ய கார்யங்கள்; இவற்றைச் செய்தருளினவரென்கை. இப்படிப்பட்ட தேவரீரைத்தொழுகின்றேனென்றதாயிற்று. (க)

---

पुनरपि नतिरस्तु तोताद्रियोगीन्द्रसेवाप्रहृष्टाय शिष्टाग्रगण्याय निष्ठागरिष्ठात्मभट्टार्ययोगीन्द्रसेव्याय नव्याब्जनेत्राय सत्त्रायकाग्र्याय भोग्याय सद्वेङ्कटार्याख्यसंन्यासिवर्येण संसेविताङ्घ्रयब्जयुग्माय वाधूलसद्देशिकोज्जीवनोत्कण्ठितायास्मदाचार्यवादीन्द्रभीकृद्गुरूत्तंससेवाप्रहृष्टाय देवाधिराजार्यनानास्तुतिग्रन्थसंदर्शितात्मीयदिव्यप्रभावाय भव्याष्टदिग्दन्तिसत्सार्वभौमप्रतिष्ठापनोद्यत्प्रथायाप्रतिद्वन्द्ववाग्वैखरीकाय वेदान्तसारार्थवैशद्यसंपादिदिव्याद्भुतग्रन्थरत्नप्रदायास्मदाचार्यवर्याय ते ॥ २ ॥

[अस्मदाचार्यवर्याय ते पुनरपि नतिरस्तु—அஸ்மதாசார்ய வர்யாய தே புநரபி நதிரஸ்து] எம்முடைய ஆசார்ய ஸார்வபௌமரான தேவரீருக்கு மீண்டும் நமஸ்காரமாகுக. தேவரீர் எப்படிப்பட்டவரென்னில்; [तोताद्रि योगीन्द्रसेवाप्रहृष्टाय—தோதாத்ரி யோகீந்த்ர ஸேவாப்ரஹ்ருஷ்டாய] ஸ்ரீ வானமாமலை ஜீயர் செய்த பணிவிடைகளுக்குத் திருவுள்ள முகந்தவர். [शिष्टाग्रगण्याय—சிஷ்டாக்ரகண்யாய] சிஷ்டர்களில் தலைவர்.] [निष्ठागरिष्ठात्मभट्टार्ययोगीन्द्रसेव्याय—நிஷ்டாகரிஷ்டாத்ம பட்டார்ய யோகீந்த்ர ஸேவ்யாய] த்ருடாத்யவஸாயசாலியான பட்டர்பிரான் ஜீயர் அடிபணியப்பெற்றவர். [नव्याब्जनेत्राय—நவ்யாப்ஜநேத்ராய] அப்போதலர்ந்த செந்தாமரைபோன்ற திருக்கண்களையுடையவர். [सत्त्रायकाग्र्याय— ஸத்த்ராயக அக்ர்யாய] ஸத்துக்களை ரக்ஷிப்பவர்களுள் தலைவரானவர். [भोग्याय-போக்யாய] சிந்தனைக்கினியர். [सद्वेङ्कटार्याख्य संन्यासिवर्येण संसेविताङ्घ्रयब्जयुग्माय—ஸத்வேங்கடார்யாக்ய ஸம்ந்யாஸிவர்யேண ஸம்ஸேவிதாங்க்ர்யப்ஜயுக்மாய] திருவேங்கடராமாநுஜஜீயர் வந்து திருவடித்தொழப்பெற்றவர். [वाधूलसद्देशिकोज्जीवनोत्कण्ठिताय -வாதூலஸத்தேசிகோஜ்ஜீவநோத்கண்டிதாய] கோயிலண்ணனை வாழ்விப்பதில் திருவுள்ளமூன்றினவர். [अस्मदाचार्यवादीन्द्र भीकृद्गुरूत्तंससेवाप्रहृष्टाय-அஸ்மதாசார்யவாதீந்த்ர பீக்ருத்குரூத்தம்ஸ ஸேவாப்ரஹ்ருஷ்டாய] அஸ்மத்குல கூடஸ்தரான ப்ரதிவாதிபயங்கர மண்ணன் வந்து பணிய அவரைத் திருவுள்ளமுகந்து கைக்கொண்டவர். [देवाधिराजार्यनानास्तुतिग्रन्थ संदर्शितात्मीय दिव्यप्रभावाय—தேவாதிராஜார்ய நாநாஸ்துதிக்ரந்த ஸந்தர்சிதாத்மீய திவ்யப்ரபாவாய] எறும்பியப்பா பணித்த பலவகை ஸ்தோத்ரங்களாலே வெளியிடப்பட்ட தம்முடைய திவ்யப்ரபாவங்களையுடையவர். [भव्याष्टदिग्दन्ति सत्सार्वभौम प्रतिष्ठापनोद्यत्प्रथाय—பவ்யாஷ்டதிக்தந்தி ஸத்ஸார்வபௌம ப்ரதிஷ்டாபநோத்யத்ப்ரதாய] அஷ்டதிக்கஜங்களென்று ப்ரஸித்தர்களான மஹான்களை ஆசார்ய பீடமாக ஸ்தாபித்துப் புகழ்பெற்றவர். [अप्रतिद्वंद्ववाग्वैखरीकाय—அப்ரதித்வந்த்வ வாக்வைகரீகாய] ஈடில்லாத ஸ்ரீஸூக்திசைலியையுடையவர். [वेदान्तसारार्थवैशद्यसंपादिदिव्याद्भुतग्रन्थरत्नप्रदाय—வேதாந்தஸாரார்த்த வைசத்யஸம்பாதி திவ்யாத்புதக்ரந்தரத்நப்ரதாய] வேதாந்த சாஸ்த்ரத்தின் ஸகல ஸாரார்த்தங்களையும் விசதமாக்கவல்ல திவ்யாச்சர்ய க்ரந்த ரத்னங்களையருளிச்செய்தவர். (௨)

अहमिह न हि वेद्मि कंचिद्वरिष्ठं गुरुं दैवतं वा मुनीन्द्राद्यतीन्द्रावतारादसारार्थपूर्णान्यदीयप्रबन्धाभिमुख्यापहारप्रवीण प्रकृष्टातिगम्भीरशास्त्रार्थपौष्कल्य दीव्यद्वचोराशिविश्राणनख्यातवैदुष्यसारादुदारादपाराघसंसारिसंजीवनेदम्परस्वीयदिव्यावतारात्सदा रामकृष्णादिदिव्येतिहासप्रणिध्यानसंफुल्लचित्ताम्बुजाताद्विजातीयशान्तिक्षमाशीलसौलभ्यचातुर्यगाम्भीर्यमाधुर्यधुर्यात्स्वपादाब्जपाथः प्रदानप्रक्लप्त प्रकृष्टातुलज्ञानशिष्यप्रशिष्यप्रकाण्डप्रसिद्धीकृतस्वप्रभावा द्रमाकान्त कारुण्य निर्हेतुकत्वप्रतिष्ठापनव्यग्रसूक्तिप्रदाना द्रमोपायभावोपपत्तिप्रहाणिस्थिरीकारदक्षाद्भुतोक्तिप्रसादा दुपायान्तराणां स्वरूपानुरूप्यंनहीति प्रतिष्ठापकानर्घ सूक्तिप्रदाद्वत्सलत्वस्वरूपावधारिप्रकृष्टोक्तिदातुर्दयातत्त्वनिष्कर्षकोक्तिप्रकाण्डप्रदातुः प्रपत्तिस्वरूपप्रकाशप्रदानन्त सूक्त्याकरा द्दिव्यसूरिप्रभावप्रकर्षप्रतिष्ठापनोदञ्चदुक्तिप्रकाण्डाद्गुरोरुत्तमात् ॥ ३ ॥

[यतीन्द्रावतारान्मुनीन्द्रात् अन्यं कंचिद्वरिष्ठं गुरुं दैवतं वा अहमिह न हि वेद्मि— யதீந்த்ராவதாராத் முநீந்த்ராத் அந்யம் கஞ்சித் வரிஷ்டம் குரும் தைவதம் வா அஹம் இஹ நஹி வேத்மி] எம்பெருமானுருடைய அபராவதாரபூதரான மணவாளமாமுனிகளிற் காட்டிலும் வேறொரு சிறந்த ஆசார்யனையோ தைவத்தையோ நான் இவ்வுலகில் அறிகின்றிலேன். அவர் தாம் எப்படிப்பட்டவரென்னில், [असारार्थपूर्णान्यदीय प्रबन्धाभिमुख्यापहार प्रवीण प्रकृष्टातिगम्भीर शास्त्रार्थपौष्कल्य दीव्यद्वचोराशि विश्राणनख्यातवैदुष्य सारात्—அஸாரார்த்த பூர்ண அந்யதீயப்ரபந்த ஆபிமுக்யாபஹாரப்ரவீண ப்ரக்ருஷ்ட அதி கம்பீர சாஸ்த்ரார்த்த பௌஷ்கல்ய தீவ்யத்வசோராசி விச்ராணநக்யாத வைதுஷ்ய ஸாராத்] அஸாரமான அர்த்தங்கள் நிறைந்த இதரர்களுடைய க்ரந்தங்களைக் கண்ணெடுத்துப் பார்க்கவேண்டாதபடி செய்ய வல்லவையாய் அதிகம்பீர சாஸ்த்ரார்த்தங்கள் நிறைந்தவையான ஸ்ரீ ஸூக்திகளை யருளிச்செய்து அதனால் தம்முடைய சிறந்த ஞான வைபவத்தை வெளியிட்டுக்கொண்டவர். [उदारात्—உதாராத்] இப்படிப்பட்ட ஔதார்யமுடையவர். [अपाराघसंसारिसंजीवनेदम्परस्वीय दिव्यावतारात्—அபாராகஸம்ஸாரி ஸஞ்ஜீவந இதம்பர ஸ்வீய திவ்யாவதாராத்] மஹாபாபிகளான ஸம்ஸாரிகளை உஜ்ஜீவிக்கச்செய்வதற்காகவே திருவவதரித்தவர். [सदा रामकृष्णादि दिव्येतिहास प्रणिध्यान संफुल्ल चित्ताम्बुजातात्—ஸதா ராமக்ருஷ்ணாதி திவ்யேதிஹாஸ ப்ரணித்யாந ஸம்புல்ல சித்தாம்புஜாதாத்] அநவரதமும் ஸ்ரீராமாயண ஸ்ரீபாகவத ஸ்ரீவிஷ்ணுபுராணாதிகளான இதிஹாஸ புராணங்களைச் சிந்தனைசெய்து திருவுள்ளம் மலரப்பெற்றவர். [विजातीय शान्तिक्षमाशील सौलभ्य चातुर्य गाम्भीर्यमाधुर्य धुर्यात्—விஜாதீய சாந்திக்ஷமாசீல ஸௌலப்ய சாதுர்ய காம்பீர்ய மாதுர்ய துர்யாத்] விலக்ஷணமான சமதமாதி ஸத்குணங்கள் அமைந்தவர். [स्वपादाब्जपाथः प्रदानप्रक्लृप्त प्रकृष्टातुलज्ञान शिष्यप्रशिष्य प्रकाण्ड प्रसिद्धीकृतस्वप्रभावात्–

ஸ்வபாதாப்ஜபாத: ப்ரதாநப்ரக்ல்ப்தப்ரக்ருஷ்டாதுலஜ்ஞாந சிஷ்யப்ரசிஷ்ய ப்ரஸித்தீக்ருத ஸ்வப்ரபாவாத்] தம்முடைய ஸ்ரீபாத தீர்த்தத்தையளித்து அதனால் சிறந்த ஜ்ஞானமடைவிக்கப்பெற்ற சிஷ்யப்ரசிஷ்ய ச்ரேஷ்டர்களாலே ப்ரஸித்தப்படுத்தப்பட்ட பெருமை பொலிந்தவர். [रमाकान्त कारुण्यनिर्हेतुकत्व प्रतिष्ठापनव्यग्रसूक्तिप्रदानात्—ரமாகாந்த காருண்ய நிர்ஹேதுகத்வப்ரதிஷ்டாபநவ்யக்ரஸூக்திப்ரதாநாத்] திருமாலின் க்ருபை நிர்ஹேதுகமென்று நிலைநாட்டவல்ல ஸ்ரீஸூக்திகளை யருளிச்செய்தவர். [रमोपायभावोपपत्तिप्रहाणि स्थिरीकारदक्षाद्भुतोक्ति प्रसादात्—ரமோபாயபாவோபபத்திப்ரஹாணி ஸ்திரீகாரதக்ஷாத்புதோக்திப்ரஸாதாத்] பிராட்டிக்கு ஸாக்ஷாந் மோக்ஷோபாயத்வவாதம் உபபந்நமாகாதென்று நிலைநாட்டவல்ல ஸ்ரீ ஸூக்திகளையநுக்ரஹித்தவர். [उपायान्तराणां स्वरूपानुरूप्यं नहीति प्रतिष्ठापकानर्घ सूक्तिप्रदात्—உபாயாந்தராணும் ஸ்வரூபாநுரூப்யம் நஹீதிப்ரதிஷ்டாபகாநர்க்க ஸூக்திப்ரதாத்] கர்மம் ஜ்ஞாநம் முதலிய உபாயாந்தரங்கள் ஸ்வரூப விருத்தங்களென்று ஸ்தாபிக்கின்ற சிறந்த ஸ்ரீஸூக்திகளை யருளியவர். [वत्सलत्वस्वरूपावधारि प्रकृष्टोक्तिदातुः—வத்ஸலத்வஸ்வரூபாவதாரி ப்ரக்ருஷ்டோக்திதாது:] வாத்ஸல்யமாவது குற்றங்களையும் நற்றமாகக் கொள்ளுகை யென்று நிஷ்கர்ஷிக்கின்ற ஸ்ரீ ஸூக்திகளையருளியவர். [दयातत्त्व निष्कर्षकोक्ति प्रकाण्डप्रदातुः—தயாதத்த்வ நிஷ்கர்ஷக உக்திப்ரகாண்டப்ரதாது:] தயையாவது பரது:க்க து:க்கித்வரூபமென்று நிர்ணயிக்கவல்ல திவ்ய ஸூக்திகளை யளித்தவர். [प्रपत्तिस्वरूप प्रकाशप्रदानन्त सूक्त्याकरात्—ப்ரபத்திஸ்வரூபப்ரகாசப்ரதாநந்த ஸூக்த்யாகராத்] பகவத் ப்ரவ்ருத்தி விரோதிஸ்வப்ரவ்ருத்தி நிவ்ருத்தியே ப்ரபத்தியென்று வெளியிடுகின்ற பல ஸ்ரீஸூக்திகளைத் தோன்றுவித்தவர். [दिव्यसूरिप्रभावप्रकर्ष प्रतिष्ठापनोदञ्च दुक्तिप्रकाण्डात् उत्तमाद्गुरोः திவ்யஸூரிப்ரபாவப்ரகர்ஷ ப்ரதிஷ்டாபநோதஞ்சதுக்திப்ரகாண்டாத் உத்தமாத் குரோ:] ஆழ்வார்களின் மேன்மைகளை ஸ்தாபிக்கின்ற சிறந்த ஸ்ரீ ஸூக்திகளையளித்த ஆசார்ய ஸார்வபௌமர், ஆக இப்படிப்பட்ட மாமுனிகளே எமக்குப் பரமகுருவும் பரமதைவமும் என்றபடி. (௩)

नम इदमविराममाविर्भवत्वार्यवर्याय सर्वार्यसूक्त्युज्ज्वलास्याय दुर्वादिदुर्वारगर्वादिनिर्वापणैकान्तिकाश्चर्यसूक्तिप्रदायाप्रमेयानघानर्घटीकाकृते कीर्तिवाराशये घोरसंसारदावानलावेशसंतप्तजीवौघजीवातवे वेदवेदान्तवेदाङ्गगूढार्थवैशद्यसंदायिनेऽनेकसच्छिष्यसंजीवनोदञ्चदत्यद्भुतानन्तदिव्योपदेशावलीभास्वदास्याय हास्यादिदुर्भाषितग्राम वैदेशिकानर्घसद्ग्रन्थसंदानदक्षाय शीक्षादिवेदाङ्गतत्त्वार्थनिष्कर्षपाण्डित्यपूर्णाय विद्यासु हृद्यासु सर्वासु संदेहवैदेशिकान्यादृशज्ञानधन्याय धन्यात्मचेतस्सु विन्यासयोग्याय योग्यात्मसन्तानगेहेषु पूज्याय पूज्योक्तिपूर्वार्यदिव्योक्तिनित्यानुसन्धानसंपन्नसौरभ्यवक्त्रारविन्दाय निन्दापरीहासगर्भान्यदीयोक्ति-

वीक्षादवीयोदृशे देशिकाग्र्याय निग्राह्यवर्गेष्वपि प्रेमसंपत्समृद्धाय कान्तोपयन्त्रे मुनीन्द्राय ते ॥ ॥ ४ ॥

[आर्यवर्याय इदं नमः अविराममाविर्भवतु—ஆர்யவர்யாய இதம் நம: அவிராமம் ஆவிர்ப்பவது] ஆசார்யர்களில் தலைவரான மணவாளமாமுனிகளுக்கு அனவரதமும் நமஸ்காரமாகுக. அவர் தாம் எப்படிப்பட்டவரெனில்:; [सर्वार्यसूक्त्युज्ज्वलास्याय—ஸர்வார்ய ஸூக்த்யுஜ்வலாஸ்யாய] ஸகல பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளும் திருவாக்கில் விளங்கநிற்பவர். [दुर्वादिदुर्वारगर्वादि निर्वापणै कान्तिकाश्चर्य सूक्तिप्रदाय—துர்வாதி துர்வார கர்வாதி நிர்வாபணைகாந்திகாச்சர்ய ஸூக்திப்ரதாய] துர்வாதிகளினுடைய அடக்கவொண்ணாத செருக்கு பொறாமை முதலான தீய குணங்களை யடக்கவல்ல ஸ்ரீ ஸூக்திகளை யருளிச்செய்தவர். [अप्रमेयानघानर्घ टीकाकृते-அப்ரமேய அநக அநர்க்க டீகாக்ருதே] அசிந்த்ய வைபவ விசேஷசாலிகளான நிரவத்ய ஹ்ருத்யவ்யாக்யானங்களை யருளிச்செய்தவர். [कीर्तिवाराशये—கீர்த்திவாராசயே] கீர்த்திக்கடல். [घोरसंसार दावानलावेश संतप्तजीवौघ जीवातवे-கோரஸம்ஸார தாவாநலாவேச ஸந்தப்த ஜீவௌக ஜீவாதவே] கொடிய ஸம்ஸாரமாகிற காட்டுத்தீ கதுவித் துடிக்கின்ற ப்ராணிகளைப் பிழைப்பிக்குமவர். [वेदवेदान्त वेदाङ्गगूढार्थ वैशद्यसंदायिने-வேதவேதாந்த வேதாங்க கூடார்த்த வைசத்ய ஸந்தாயிநே] வேதங்களிலும் வேதாந்தங்களிலும் வேதாங்கங்களிலும் மறைந்துள்ள பொருள்களை விசதமாக்கியருளினவர். [अनेकसच्छिष्यसंजीवनोदञ्चदत्यद्भुतानन्त दिव्योपदेशावली भास्वदास्याय-அநேகஸச்சிஷ்ய ஸஞ்ஜீவநோதஞ்சதத்யத்புதாநந்ததிவ்யோபதேசாவளீ பாஸ்வதாஸ்யாய] பல ஸச்சிஷ்யர்களை உஜ்ஜீவிப்பிக்கவல்ல அநேக ஸதுபதேசங்கள் விளங்கும் திருப்பவளத்தையுடையவர். [हास्यादि दुर्भाषितग्राम वैदेशिकानर्घसद्ग्रन्थसंदान दक्षाय—ஹாஸ்யாதிதுர்ப்பாஷிதக்ராம வைதேசிக அநர்க்கஸத்க்ரந்த ஸந்தாநதக்ஷாய] பரிஹாஸங்கள் உபாலம்பங்கள் முதலான அவத்யங்கள் சிறிதுமில்லாத சிறந்த திவ்யக்ரந்தங்களை யருளிச்செய்யவல்லவர். [शीक्षादिवेदाङ्ग तत्वार्थनिष्कर्षपाण्डित्यपूर्णाय-சிக்ஷாதி வேதாங்க தத்வார்த்த நிஷ்கர்ஷ பாண்டித்ய பூர்ணாய] சிக்ஷாவ்யாகரணாதி வேதாங்கங்களினுடைய உண்மைப்பொருள்களை நிர்ணயிக்கத்தக்க வைதுஷ்யம் நிரம்பியவர். [हृद्यासु सर्वासु विद्यासु संदेहवैदेशिकान्यादृश ज्ञानधन्याय-ஹ்ருத்யாஸு ஸர்வாஸு வித்யாஸு ஸந்தேஹவைதேசிக அந்யாத்ருச ஜ்ஞாநதந்யாய] ஹ்ருதயங்கமங்களான ஸகலவித்யைகளிலும் ஸந்தேஹ கந்தமுமில்லாத நிஷ்க்ருஷ்டஜ்ஞானம் நிரம்பியவர். [धन्यात्मचेतस्सु विन्यासयोग्याय—தந்யாத்ம சேதஸ்ஸு விந்யாஸ யோக்யாய] பரமபாக்யசாலிகளுடைய ஹ்ருதயங்களிலே கொள்ளத்தகுந்தவர். [योग्यात्मसंतान गेहेषु पूज्याय-யோக்யாத்ம ஸந்தாந கேஹேஷு பூஜ்யாய] யோக்ய ஸந்ததிஜாதர்களுடைய திருமாளிகைகளிலே நித்யாராத்யர் [पूज्योक्ति

पूर्वार्यदिव्योक्ति नित्यानुसन्धान संपन्न सौरभ्यवक्त्रारविन्दाय—பூஜ்யோக்தி பூர்வார்ய திவ்யோக்தி நித்யாநுஸந்தாந ஸம்பந்ந ஸௌரப்ய வக்த்ராரவிந்தாய] கொண்டாடத்தக்க ஸ்ரீஸூக்திகளை யருளிய பூர்வாசார்யர்களின் திருவாக்குக்களை ஸதா அநுஸந்திப்பதனால் பரிமளங்கமழும் திருப்பவளமுடையவர். [निन्दापरीहासगर्भान्यदीयोक्ति वीक्षादवीयोदृशे-நிந்தாபரீஹாஸகர்ப்ப அந்யதீயோக்தி வீக்ஷாதவீயோத்ருசே] நிந்தைகளையும் பரிஹாஸங்களையும் நிரப்பி இதரர்கள் எழுதியுள்ள திட்டுச்சுவடிகளான நூல்களைக் கண்ணெடுத்தும் பாராதவர். [देशिकाग्र्याय—தேசிகாக்ர்யாய] ஆசார்யர்களில் தலைவர். [निग्राह्यवर्गेष्वपि प्रेमसंपत्समृद्धाय—நிக்ராஹ்யவர்க்கேஷ்வபி ப்ரேமஸம்பத்ஸம்ருத்தாய] த்ரோஹிகளிடத்திலும் அன்பு நிறைந்தவர். ஆக இப்படிப்பட்ட மணவாளமாமுனிகளைத் தொழுகின்றேனென்றவாறு. (௪)

स जयतु वरयोगिवर्यो मुनीन्द्रो यतीन्द्रोक्तितत्त्वार्थनिध्याननिष्ठागरिष्ठो वरिष्ठो यतीनां शुचीनां शठद्विट्कलिद्विण्मुखानन्त सद्दिव्यसूरिप्रक्लृप्तामलस्वादुसूक्त्यर्थ निर्धारणोदञ्च दन्यादृशख्याति राचान्तपाथोधियोगीश्वरोपज्ञभाषापरिष्कार भास्वत्स्वसूक्ति स्सुगीर्वाणवाणीमयानन्त सद्ग्रन्थ तत्त्वार्थवेदी सदाचारबोधी हतावद्यगम्भीरवाग्गुम्भदायी रहस्यत्रयानर्घ दिव्यार्थसार्थ प्रदायी वचोभूषणार्थोपदेशी सदाचार्यचित्तार्थवैशद्यकारी कृपादत्ततत्त्वत्रयार्थावबोधः प्रबोधामृताम्भोधिरार्तिप्रबन्धप्रदाता यतीशानविंशत्यनुग्राह्यकम्पानुकम्पामयोऽमेयशीलो दयापालयोगीन्द्रसूक्त्यर्थवर्षी शतान्तादिसद्ग्रन्थनिर्माणचातुर्यविख्यातकीर्तिस्सुगीतार्थदीपाभिधग्रन्थदाताऽवदातात्मसच्छिष्यमूर्धाभिषिक्तस्वपादारविन्दो मुकुन्दैकसेवी प्रमाणौघसंग्राहकस्सर्ववेदी विरिञ्चप्रपञ्चे विजातीयभूमा सदाराध्यदिव्यामलात्मीयगात्रः पवित्रोपदेशौघरत्नस्रगाख्यातदिव्यप्रबन्धप्रदानोपकारी महाविष्णुचित्ताख्ययोगीन्द्रसूक्त्यर्थविख्यापनोद्यद्यशा दिव्यदेशेषु नानाविधोद्धारकारी करीन्द्राद्रिकल्पद्रुमाभिख्य देवाधिराण्मङ्गलाशास्त्रि दिव्यस्तुतिस्थूललक्षोऽथ रङ्गामृतार्योक्त रामानुजान्तादिसंज्ञप्रपन्नौघगायत्र्यनर्घार्थविश्राणनोदञ्चितख्यातिराख्यातशारीरकान्तर्निगूढार्थतत्त्वो हतावद्यहृद्यार्थपौष्कल्यभास्वत्स्वसूक्तिप्रवाहप्रसन्नान्तरङ्गाढ्यरङ्गाधिराजोपगीतातुलस्तोत्रपद्यानुसन्धानधन्यात्मसद्वैष्णवाग्र्यप्रसिद्धीकृतस्वप्रभावो विभावर्यधीशोपमेयाननोऽनन्यभक्ताग्र्यचित्तैकदिव्यालयस्थः ॥५॥

[स वरयोगिवर्यो मुनीन्द्रो जयतु—ஸ வரயோகி வர்யோ முநீந்த்ரோ ஜயது] மணவாளமாமுனிகள் ஸர்வோத்கர்ஷசாலியாக விளங்கவேணும். அவர்தாமெப்படிப்பட்டவரெனில், [यतीन्द्रोक्तितत्त्वार्थनिध्याननिष्ठागरिष्ठः—யதீந்த்ரோக்தி தத்வார்த்த நித்யாந நிஷ்டாகரிஷ்ட:] எம்பெருமானாருடைய திவ்யஸூக்திகளின் தத்வார்த்தங்களைச் சிந்தனை

செய்வதில் கருத்தூன்றியவர். [शुचीनां यतीनां वरिष्ठः—சுசீநாம் யதீநாம் வரிஷ்ட:] பரம பவித்ரர்களான யதிகளுள் சிறந்தவர். [शठद्विट्कलिद्विण्मुखानन्त सद्दिव्यसूरिप्रक्लृप्ता मलस्वादुसूक्त्यर्थ निर्धारणोदञ्च दन्यादृशख्याति:—சடத்விட் கலித்விண்முக அநந்த ஸத் திவ்யஸூரிப்ரக்ல்ப்த அமலஸ்வாது ஸூக்தி அர்த்தநிர்த்தாரண உதஞ்சத் அந்யாத்ருசக்யாதி:] நம்மாழ்வார் கலியன் முதலான ஆழ்வார்களனைவருமருளிய திவ்ய ஸூக்திகளின் பொருள்களை அறுதியிட்டதனால் புகழ்மிக்கவர். [आचान्तपाथोधि योगीश्वरोपज्ञ भाषापरिष्कार भास्वत्स्वसूक्ति:—ஆசாந்த பாதோதி யோகீச்வரோபஜ்ஞ பாஷாபரிஷ்கார பாஸ்வத்ஸ்வஸூக்தி:] கடலைக் குடித்த குறுமுனிவனை ப்ரவர்த்தகனாகக்கொண்ட தமிழ்ப் பாஷைக்கு அலங்காரமாக விளங்குகின்ற ஸ்ரீஸூக்திகளையருளியவர். [सुगीर्वाणवाणीमयानन्त सद्ग्रन्थतत्त्वार्थवेदी—ஸுகீர்வாண வாணீமய அநந்த ஸத்க்ரந்த தத்வார்த்த வேதீ] ஸம்ஸ்க்ருதபாஷாமயங்களான ஸகலக்ரந்தங்களினுடையவும் தத்வார்த்தங்களையுணர்ந்தவர் [सदाचारबोधी—ஸதாசாரபோதீ] நல்லொழுக்கங்களை யுணர்த்துமவர். [हतावद्यगम्भीर वाग्गुम्भदायी—ஹதாவத்யகம்பீர வாக்கும்பதாயீ] ஒருவகைக் குற்றமுமில்லாத கம்பீரங்களான ஸ்ரீஸூக்திகளையளித்தவர். [रहस्यत्रयानर्घ दिव्यार्थसार्थप्रदायी—ரஹஸ்யத்ரய அநர்க்க திவ்யார்த்த ஸார்த்தப்ரதாயீ] முமுக்ஷுப்படியின் சிறந்த பொருள்களையெல்லாம் வியாக்யானித்தருளியவர். [वचोभूषणार्थोपदेशी—வசோ பூஷணார்த்த உபதேசீ] ஸ்ரீவசன பூஷணார்த்தங்களை யளித்தவர். [सदाचार्यचित्तार्थवैशद्यकारी—ஸதாசார்ய சித்தார்த்த வைசத்யகாரீ] ஆசார்ய ஹ்ருதயத்தின் அர்த்தங்களை விளக்கியருளினவர். [कृपादत्ततत्त्वत्रयार्थावबोध:-க்ருபாதத்த தத்வத்ரயார்த்த அவபோத:] தத்வத்ரயத்தின் பொருள்களைப் பரமக்ருபையோடு உணர்த்தியவர். [प्रबोधामृदाम्भोधि:—ப்ரபோத அம்ருதாம்போதி:] ஞானமாகிற அமுதத்திற்குக் கடல்போன்றவர். [आर्तिप्रबन्धप्रदाता—ஆர்த்திப்ரபந்தப்ரதாதா] ஆர்த்திப்ரபந்தமிட்டருளினவர். [यतीशानविंशत्यनुग्राही-யதீசாநவிம்சதி அநுக்ராஹீ] யதிராஜவிம்சதி யருளிச்செய்தவர். [अकम्पानुकम्पामय:—அகம்பாநுகம்பாமய:] த்ருடமான க்ருபையே வடிவெடுத்தவர். [अमेयशील:—அமேயசீல:] அளவிடவொண்ணாத ஸௌசீல்யமுடையவர். [दयापालयोगीन्द्रसूक्त्यर्थवर्षी தயாபாலயோகீந்த்ர ஸூக்தி அர்த்தவர்ஷீ] அருளாளப்பெருமாளெம்பெருமானாருளிய ஞானஸாரப்ரமேய ஸாரங்களை வியாக்கியானித்தருளியவர். [शतान्तादि सद्ग्रन्थनिर्माण चातुर्यविख्यातकीर्ति:—சதாந்தாதி ஸத்க்ரந்த நிர்மாண சாதுர்ய விக்யாதகீர்த்தி:] திருவாய்மொழி நூற்றந்தாதி யென்கிற ஆச்சரியமான திவ்யப்ரபந்தத்தை யருளிச்செய்த சாதுர்யத்தாலே கீர்த்திவிளங்கப்பெற்றவர். [सुगीतार्थ दीपाभिध ग्रन्थदाता—ஸுகீதார்த்த தீபாபிதக்ரந்த தாதா] கீதார்த்த தீபமென்கிற க்ரந்தமருளியவர். [अवदातात्म सच्छिष्य मूर्धाभिषिक्तस्वपादारविन्द:- அவதாதாத்ம ஸச்சிஷ்ய மூர்த்தாபிஷிக்தஸ்வபாதாரவிந்த:] சுத்தாத்மாக்களான ஸச்சிஷ்யர்களின்

முடிமீது தம் திருவடித்தாமரைகளை யளித்தவர். [मुकुन्दैकसेवी-முகுந்தைக ஸேவீ] எம்பெருமான் திறத்தில் அநந்ய பக்தர். [प्रमाणौघसंग्राहक:-ப்ரமாணௌக ஸங்க்ராஹக:] அநேகப்ரமாணத் திரட்டு நூல்களை யருளிச்செய்தவர். [सर्ववेदी-ஸர்வவேதீ] ஸர்வஜ்ஞர். [विरिञ्चप्रपञ्चे विजातीयभूमा—விரிஞ்சப்ரபஞ்சே விஜாதீயபூமா] இந்த பூமண்டலத்திற்குள் விலக்ஷணமான பெருமைவாய்ந்தவர். [सदाराध्यदिव्यामलात्मीय गात्र:—ஸதாராத்ய திவ்யாமல ஆத்மீயகாத்ர:] ஸத்புருஷர்கள் திருவாராதனம் செய்யத்தக்க திவ்ய மங்கள விக்ரஹமுடையவர். [पवित्रोपदेशौघ रत्नस्रगाख्यात दिव्यप्रबन्ध प्रदानोपकारी—பவித்ரோபதேசௌக ரத்நஸ்ரகாக்யாத திவ்யப்ரபந்தப்ரதாநோபகாரீ] பாவனமான உபதேச ரத்தினமாலை யென்னும் திவ்யப்ரபந்தத்தை உதவியருளினவர். [महाविष्णु चित्ताख्य योगीन्द्र सूक्त्यर्थ विख्यापनोद्यद्यशा:—மஹாவிஷ்ணு சித்தாக்ய யோகீந்த்ர ஸூக்த்யர்த்த விக்யாபந உத்யத்யசா:] பெரியாழ்வார் திருமொழிக்கு வியாக்கியானமருளிச்செய்து புகழ்பெற்றவர். [दिव्यदेशेषु नानाविधोद्धारकारी-திவ்யதேசேஷு நாநாவித உத்தாரகாரீ] உகந்தருளின நிலங்களிலே பலவகையான சீர்திருத்தங்களைச் செய்தருளினவர். [करीन्द्राद्रिकल्पद्रुमाभिख्य देवाधिराण्मङ्गलाशास्ति दिव्यस्तुतिस्थूललक्ष:—கரீந்த்ராத்ரி கல்பத்ருமாபிக்ய தேவாதிராண்மங்களாசாஸ்தி திவ்யஸ்துதி ஸ்தூலலக்ஷ:] ஸ்ரீஹஸ்தி சைல சிகரோஜ்ஜ்வல பாரிஜாதமென்று ப்ரஸித்தரான தேவப்பெருமாள் விஷயமான மங்களாசாஸனஸ்துதியை யருளி ஔதார்யம் படைத்தவர். [ஸ்தூலலக்ஷ]:-உதாரர் என்றபடி. [अथ रङ्गामृतार्योक्त रामानुजान्तादिसंज्ञप्रपन्नौघगायत्र्यनर्घार्थ विश्राणनोदञ्चितख्याति:—அத ரங்காம்ருதார்யோக்த ராமாநுஜாந்தாதி ஸம்ஜ்ஞ ப்ரபந்நௌக காயத்ர்யநர்க்கார்த்த விச்ராணநோதஞ்சிதக்யாதி:] திருவரங்கத்தமுதனாருளிய இராமாநுச நூற்றந்தாதி யென்கிற ப்ரபந்ந காயத்ரியின் சிறந்த பொருள்களை வெளியிட்டதனால் புகழ்படைத்தவர். [आख्यात शारीरकान्तर्निगूढार्थतत्त्व:— ஆக்க்யாத சாரீரகாந்தர் நிகூடார்த்த தத்வ:] சாரீரகமீமாம்ஸையின் உள்ளுறை பொருள்களை ஸ்ரீபாஷ்யப்ரவசந முகத்தாலும் தத்வத்ரய வ்யாக்யாநாதி முகத்தாலும் வெளியிட்டருளினவர். [हतावद्यहृद्यार्थपौष्कल्य भास्वत्स्वसूक्तिप्रवाहप्रसन्नान्तरङ्गाढ्य रङ्गाधिराजोपगीतातुल स्तोत्रपद्यानुसन्धान धन्यात्म सद्वैष्णवाग्र्य प्रसिद्धीकृतस्वप्रभाव:—ஹதாவத்ய ஹ்ருத்யார்த்த பௌஷ்கல்ய பாஸ்வத் ஸ்வஸூக்திப்ரவாஹ ப்ரஸந்நாந்தரங்காட்ய ரங்காதி ராஜோபகீத அதுலஸ்தோத்ரபத்யாநு ஸந்தாந தந்யாத்ம ஸத்வைஷ்ணவாக்ர்ய ப்ரஸித்தீக்ருதஸ்வப்ரபாவ:] நிரவத்யங்களாய் ஹ்ருத்யங்களான அர்த்தங்கள் நிறைந்த தம்முடைய ஸ்ரீஸூக்திப்ரவாஹங்களுக்கு உகந்த ஸ்ரீ ரங்கநாதன்பணித்த ஸ்ரீசைலேசபத்யத்தை நித்யாநுஸந்தானம்செய்துவரும் ஸுக்ருதிகளான ஸ்ரீ வைஷ்ணவ ச்ரேஷ்டர்களாலே ப்ரஸித்தப்படுத்தப்பட்ட பெருமையுடையவர்.

[विभावर्यधीशोपमेयानन :—விபாவர்யதீசோபமேய ஆநந:] சந்திரனேடு ஒப்பிடத்தக்க திருமுகமண்டலமுடையவர். [अनन्य भक्ताग्रय चित्तैक दिव्यालय :—அநந்யபக்தாக்ர்ய சித்தைக திவ்யாலய:] ஐகாந்திக பக்தச்ரேஷ்டர்களின் உள்ளத்திலே உறைபவர். (5)

जगदिदमवतात्स कान्तोपयन्ता मुनीन्द्र स्सुकाषायवासा शिखायज्ञसूत्रोल्लसद्दिव्य गात्रः पवित्रोऽपवित्रान् जनान्मादृशोऽप्यात्मदृष्ट्या पवित्रान् वितन्वन् धरित्र्यांसदा दीव्यदाश्चर्य कीर्तिस्त्रिदण्डी लसद्दिव्यभव्योर्ध्वपुण्ड्रः प्रभातोदितार्कप्रभोत्फुल्लपाथोजजैत्रांघ्रिहस्ताननो दिव्य सूरीन्द्रदिव्यप्रबन्धानुसंधायिवक्त्रो जगद्देशिकोक्तिप्रचारी सुचारित्रभूषाभिरामो विरामावकाशं विना स्तुत्यभूमा रमाकान्तचिन्ताभिमुख्यप्रदोक्ति श्शठारातिसूक्तयर्थतत्त्वाभिवेदी कलिध्वंसि दिव्योक्तिकल्पद्रुमास्यः कलिध्वंसनैकान्तिकस्त्वावतारो मदीयान्ववाये दृशं दिव्यदिव्यां दिशन् देशिकाग्रयस्सतां संप्रदायं स्वसूक्त्याऽभिरक्षन् अरक्षोसुरं लोकमेतं विधातुं पुनश्चावतीर्णस्सुमित्रा त्मजन्मेत्यमित्रैरपि स्तुत्यजन्मप्रभावः प्रभापुञ्जमञ्जुस्वपादाब्जसंबन्धिसच्छिष्यसंजीवनैकान्त चित्तस्सुवृत्तो निवृत्तः परद्रोहकृत्यादकृत्यानभिज्ञ स्स्वकृत्यैकनिष्ठ स्सुकृत्यन्तरङ्गोल्लसद्दिव्य मूर्तिः कृपामूर्तिरन्यादृशोऽयं महान् ॥ ६ ॥

[स कान्तोपयन्ता मुनीन्द्र इदं जगत् अवतात्— ஸ காந்தோபயந்தா முநீந்த்ர: இதம் ஜகத் அவதாத்] அந்த மணவாள மாமுனிகள் இவ்வுலகை ரக்ஷித்தருளவேணும். அவர் தாம் எப்படிப்பட்டவரெனில், [सु काषायवासा :— ஸு காஷாய வாஸா:] அழகிய காஷாயத் திருப்பரிவட்டமணிந்தவர். [शिखायज्ञसूत्रोल्लसद्दिव्यगात्र :— சிகாயஜ்ஞ ஸூத்ர உல்லஸத் திவ்ய காத்ர:] சிகையும், யஜ்ஞஸூத்திரமும் விளங்கும் திருமேனியுடையவர். [पवित्र :- பவித்ர:] தூயவர். [अपवित्रान् मादृशोपि जनान् आत्मदृष्ट्या पवित्रान् वितन्वन्—அபவித்ராந் மாத்ருசோபி ஜநாந் ஆத்மத்ருஷ்ட்யா பவித்ராந் விதந்வந்] அழுக்குடம்பினரான எம்போன்றவர்களையும் தமது திருக்கண்ணேக்கத்தினல் பாவனர்களாக்குமவர். [धरित्र्यां सदा दीव्यदाश्चर्य कीर्ति :- தரித்ர்யாம் ஸதா தீவ்யத்ஆச்சர்ய கீர்த்தி:] இந்நிலத்தில் எப்போதும் ஆச்சர்ய கீர்த்தி விளங்கநின்றவர். [त्रिदण्डी-த்ரிதண்டீ] முக்கோல் பிடித்தவர். [लसद्दिव्य भव्योर्ध्वपुण्ड्र :- லஸத்திவ்ய பவ்ய ஊர்த்வபுண்ட்ர:] திவ்யமான திருமண்காப்புகள் திகழநின்றவர். [प्रभातोदितार्क प्रभोत्फुल्लपाथोजजैत्रांघ्रिहस्तानन :—ப்ரபாதோதிதார்க்க ப்ரபோத்புல்ல பாதோஜ ஜைத்ர அங்க்ரிஹஸ்த ஆநந:] காலையெழுந்த கதிரவனது ஒளியினலலர்ந்த தாமரை மலரை வென்று விளங்கும் திருவடி

திருக்கை திருமுகங்களை யுடையவர். [दिव्यसूरीन्द्र दिव्यप्रबन्धानुसन्धायिवक्त्र :— திவ்யஸூரீந்த்ர திவ்யப்ரபந்தாநு ஸந்தாயி வக்த்ர:] அருளிச்செயல்களை அநவரதம் அநுஸந்தானம் செய்யும் திருவாய் படைத்தவர் [जगद्देशिकोक्तिप्रचारी—ஜகத்தேசிகோக்திப்ரசாரீ] பிள்ளையுலகாசிரியருடைய திவ்யஸூக்திகளை ப்ரசாரம் செய்தருளினவர். [सुचारित्रभूषाभिराम :- ஸுசாரித்ர பூஷாபிராம:] நல்லொழுக்கங்களாகிற பூஷணங்களினால் அழகுபெற்றவர். [विरामावकाशं विना स्तुत्य भूमा—விராமாவகாசம் விநா ஸ்துத்ய பூமா] ஓயாது புகழத்தக்க பெருமையுடையவர். [रमाकान्त चिन्तामिमुख्यप्रदोक्ति :— ரமாகாந்த சிந்தாபி முக்ய ப்ரதஉக்தி:] எம்பெருமானைச் சிந்திப்பதொன்றிலேயே ஊன்றச்செய்யவல்ல ஸ்ரீஸூக்திகளைத் தந்தருளினவர். [शठाराति सूक्तचर्थ तत्त्वाभिवेदी— சடாராதி ஸூக்த்யர்த்த தத்வாபிவேதீ] நம்மாழ்வாருடைய ஸ்ரீஸூக்திகளின் பொருளுண்மையை நன்குணர்ந்தவர். [कलिध्वंसि दिव्योक्ति कल्पद्रुमास्य :—கலித்வம்ஸி திவ்யோக்தி கல்பத்ரும ஆஸ்ய:] கலியனுடைய ஸ்ரீஸூக்திகளைக் கறக்கவல்ல திருப்பவளமுடையவர். [कलिध्वंसनैकान्तिक स्वावतार :- கலித்வம்ஸந ஐகாந்திக ஸ்வாவதார:] கலிகலுஷங்களைத் தொலைப்பதற்கென்றே திருவவதரித்தவர். [मदीयान्ववाये दिव्यदिव्यां दृशं दिशन् देशिकाग्र्य :- மதீய அந்வவாயே திவ்யதிவ்யாம் த்ருசம்திசந் தேசிகாக்ர்ய:] அடியேனுடைய வம்சத்திலே திவ்ய கடாக்ஷம் செய்தருளும் பரமாசார்யர். [सतां संप्रदायं स्वसूक्तया अभिरक्षन्- ஸதாம் ஸம்ப்ரதாயம் ஸ்வஸூக்த்யா அபிரக்ஷந்] ஸத்ஸம்ப்ரதாயத்தைத் தமது ஸ்ரீஸூக்திகளினால் காத்தருள்பவர். [अरक्षोसुरं लोकमेतं विधातुं पुनश्चावतीर्ण स्सुमित्रात्मजन्मेति अमित्रैरपि स्तुत्यजन्मप्रभाव :- ஏதம் லோகம் அரக்ஷோஸுரம் விதாதும் புநச்ச அவதீர்ண: ஸுமித்ராத்மஜந்மேதி அமித்ரைரபி ஸ்துத்ய ஜந்மப்ரபாவ:] இவ்வுலகை அஸுர ராக்ஷஸ சூந்யமாகச் செய்வதற்கு இளையபெருமாளே மீண்டும் திருவவதரித்தபடியென்று பிரதிபக்ஷிகளும் புகழும்படியான திருவவதார வைபவமுடையவர். [प्रभापुञ्जमञ्जु स्वपादाब्जसंबन्धि सच्छिष्य संजीवनैकान्तचित्त :- ப்ரபாபுஞ்ஜமஞ்ஜு ஸ்வபாதாப்ஜ ஸம்பந்தி ஸச்சிஷ்ய ஸஞ்ஜீவனைகாந்த சித்த:] தம்முடைய அழகிய திருவடிகளிலே ஸம்பந்தம் பெற்றவர்களை உஜ்ஜீவிக்கச் செய்வதிலேயே ஊற்றமுடையவர். [सुवृत्त :- ஸுவ்ருத்த:] நல்லொழுக்கமுடையவர். [परद्रोह कृत्यान्निवृत्त :- பரத்ரோஹக்ருத்யாத் நிவ்ருத்த:] பிறர்களுக்கு த்ரோஹமொன்றும் செய்யாதவர். [अकृत्यानभिज्ञ :- அக்ருத்ய அநபிஜ்ஞ:] அக்ருத்யமொன்றுமறியாதவர். [स्वकृत्यैकनिष्ठ:- ஸ்வக்ருத்யைகநிஷ்ட:] தம்முடைய கார்யத்திலேயே கண்ணுயிருப்பவர். [सुकृत्यन्तरङ्गोल्लसद्दिव्य मूर्ति :— ஸுக்ருத்யந்தரங்க உல்லஸத் திவ்யமூர்த்தி:] ஸுக்ருதிகளின் ஹ்ருதயத்திலெழுந்தருளியிருப்பவர் [कृपामूर्ति :—க்ருபாமூர்த்தி:] கருணையே வடிவெடுத்தவர். [अन्यादृशोयं महान्—அயம் மஹாந் அந்யாத்ருச:] ஒத்தாரும் மிக்காருமற்ற மஹாநுபாவர். இப்படிப்பட்டவர் இவ்வுலகை ரக்ஷிக்கவேணுமென்கை. (6)

जयजय शरदश्शतं सौम्यजामातृयोगीन्द्र विद्यानिषद्यात्मक प्रेममय्या दृशा मां निशाम्यानुकम्पामकम्पां विधेया विशेषादशेषाश्च कैङ्कर्यवृत्तीः क्रियासं तवैवांघ्रिपद्मद्वयीसंनिकर्षे निकृष्टाग्रगण्येन दासेन विज्ञापितैस्स्तोत्रबृन्दैः प्रसन्नान्तरङ्ग! क्षणादस्मदीयान्यशेषाणि चागांस्यवेलानुकम्पाभरेण क्षमस्व स्वसूक्त्यर्णवान्तर्निमग्नान्तरङ्गं सदा मां कुरुष्व प्रसिद्धप्रभावाढ्य कूरेशभट्टार्य वेदान्तवेद्यार्य लोकार्यकृष्णार्य दिव्योक्ति रत्नौघ भास्वन्मनस्कं च मामेव कुर्या असूयाविलस्वान्तमर्त्येष्वपि प्रेमसंपद्भरं मे समुत्पादयेथा वचोभूषणार्थौघनिष्ठागरिष्ठं मनो मे विधेया दयादुग्धसिन्धो सुबन्धो निबन्धैस्सहस्राधिकैरप्रमेयप्रभाव स्वभावाद्वितैषिन् यतीशासनसद्दर्शनोद्धारदक्षाद्वितीयार्य भो ॥ ७ ॥

[सौम्यजामातृ योगीन्द्र! शरदश्शतं जयजय—ஸௌம்யஜாமாத்ரு யோகீந்த்ர! சரதச்சதம் ஜயஜய] மணவாளமாமுனிகளே! பல்லாண்டு பல்லாண்டு. [विद्यानिषद्यात्मक-வித்யாநிஷத்யாத்மக] ஸகலமான கல்விகளுக்கும் ஆபணம்போன்றவரே! [मां प्रेममय्या दृशा निशाम्य अकम्पामनुकम्पां विशेषाद्विधेयाः—மாம் ப்ரேமமய்யா த்ருசா நிசாம்ய அகம்பாம் அநுகம்பாம் விசேஷாத் விதேயா:] அடியேனைக் குளிர நோக்கியருளி ஒருநாளும் குறையாதக்ருபையை விசேஷித்துச் செய்தருளவேணும். [तवैव अंघ्रिपद्मद्वयीसंनिकर्षे अशेषाश्च कैङ्कर्यवृत्तीः क्रियासम्—தவைவ அங்க்ரிபத்மத்வயீஸந்நிகர்ஷே அசேஷாச்ச கைங்கர்யவ்ருத்தீ: க்ரியாஸம்] தேவரீருடைய திருவடித்தாமரையிணையின் அருகிலேயே யிருந்துகொண்டு எல்லாவடிமைகளும் செய்யக்கடவேன். [निकृष्टाग्रगण्येन दासेन विज्ञापितैः स्तोत्रबृन्दैः प्रसन्नान्तरङ्ग! क्षणात् अस्मदीयानि अशेषाणिच आगांसि अवेलानुकम्पाभरेण क्षमस्व—நிக்ருஷ்டாக்ரகண்யேந தாஸேந விஜ்ஞாபிதை: ஸ்தோத்ரப்ருந்தை: ப்ரஸந்நாந்தரங்க! க்ஷணாத் அஸ்மதீயாநி அசேஷாணிச ஆகாம்ஸி அவேலாநுகம்பாபரேண க்ஷமஸ்வ] நீசர்களில் தலைவனான அடியேன் விண்ணப்பஞ்செய்த பல துதிகளாலே திருவுள்ளமுகந்தவரே! எம்முடைய ஸர்வாபசாரங்களையும் அபரிமிதக்ருபையோடு உடனே க்ஷமித்தருளவேணும். [मां सदा स्वसूक्त्यर्णवान्तर्निमग्नान्तरङ्गं कुरुष्व—மாம் ஸதா ஸ்வஸூக்தி அர்ணவாந்தர் நிமக்ந அந்தரங்கம் குருஷ்வ] அடியேனை எப்போதும் தேவரீர் தம்முடைய ஸ்ரீஸூக்திகளாகிற அமுதக்கடலிலேயே ஆழ்ந்த நெஞ்சினனாகச் செய்தருளவேணும். [मामेव प्रसिद्धप्रभावाढ्य कूरेश भट्टार्य वेदान्तवेद्यार्य लोकार्य कृष्णार्य दिव्योक्ति

रलौघभास्वन्मनस्कं च कुर्याः—மாமேவ ப்ரஸித்த ப்ரபாவாட்ய கூரேச பட்டார்ய வேதாந்த வேத்யார்ய லோகார்ய க்ருஷ்ணார்ய திவ்யோக்தி ரத்நௌக பாஸ்வந்மநஸ்கம் ச குர்யா:] மிக்க புகழ்படைத்த ஆழ்வான் பட்டர் நஞ்சீயர் நம்பிள்ளை பிள்ளை லோகாசார்யர் பெரிய வாச்சான்பிள்ளை ஆகிய இவ்வாசிரியர்களின் திவ்ய ஸ்ரீஸூக்திகளாகிற ரத்நாவளிகளாலே அடியேனுடைய ஹ்ருதயமே ப்ரகாசித்துக்கொண்டிருக்கும்படி செய்தருளவேணும். [असूयाविलस्वान्तमर्त्येष्वपि प्रेमसंपद्भरं मे समुत्पादयेथाः—அஸூயாவிலஸ்வாந்தமர்த்யேஷ்வபி ப்ரேமஸம்பத்பரம் மே ஸமுத்பாதயேதா:] பொறாமைகொண்ட மனிசர்களிடத்திலும் அடியேனுக்கு ப்ரேமமே விளையும்படி செய்தருளவேணும். [दयादुग्धसिन्धो सुबन्धो सहस्राधिकैरपि निबन्धै रमेयप्रभाव स्वभावात् हितैषिन् यतीशानसद्दर्शनोद्धारदक्ष अद्वितीयार्य भो! मे मनः वचोभूषणार्थौघनिष्ठागरिष्ठं विधेयाः—தயாதுக்தஸிந்தோ! ஸுபந்தோ! ஸஹஸ்ராதிகைரபி நிபந்தை: அப்ரமேயப்ரபாவ! ஸ்வபாவாத் ஹிதைஷிந்! யதீசாநஸத்தர்சந உத்தாரதக்ஷ! போஅத்விதீய ஆர்ய! மேமந: வசோபூஷணார்த்தௌக நிஷ்டாகரிஷ்டம் விதேயா:] அருளமுதக்கடலே! ஆப்த பந்துவே! ஆயிரக்கணக்கான க்ரந்தங்கள் இயற்றினாலும் பேசித் தலைக்கட்டவொண்ணாத பெருமை பொலிந்தவரே! இயற்கையாகவே ஹிதபரரே! எம்பெருமானார் தரிசனத்தை உத்தரிக்க வல்லவரே! நிகரற்ற ஆசார்யரே! அடியேனுடைய உள்ளத்தை ஸ்ரீவசநபூஷண அர்த்தராசிகளிலேயே ஊற்றமுற்றதாகச் செய்தருளவேணும். (7)

मम नतिरियमस्तु तस्यैव कान्तोपयन्तुर्मुनीन्द्रस्य दिव्यांघ्रिपद्मद्वयीसंनिकर्षे निकर्षैक पात्रास्मदादिप्रकर्षप्रदानार्थं दिव्यावतारस्य रङ्गाधिराजोपगीताद्वितीयस्तुतिश्लोकनित्यानुसंधान धन्याखिलक्षेत्रविद्योतमानप्रभावस्य भास्वत्सहस्रोपमेयाननस्य प्रशस्यस्वसूक्तिप्रवाह प्रगाढाव गाढास्मदीयान्ववायप्रधानार्य वादीन्द्रभीकृद्गुरुस्तोत्रबृन्दप्रहृष्टान्तरङ्गस्य नीचातिनीचाग्रथमद्व क्त्रनिर्यद्बहुस्तोत्रराशिश्रुतिप्रीतचित्तस्य नित्यं स्वकीयप्रभावैक विख्यापनव्यग्रवाग्गुम्भनाय प्रसादं प्रकामं मयीह प्रणेतुः स्वनेत्राम्बुजन्मद्वयीलक्ष्य जीवात्म सर्वाघसंहार दक्षस्य चक्षुष्मत स्सर्वपूर्वार्यसूक्त्यैव धीभक्तिवैराग्यवाराम्निधेः ॥

इत्थं वादिभयङ्करवंशीयाण्णङ्गरार्यसंकलिता ।
श्रीमद्वरवरसंयमिदण्डक कृतिरस्तु भक्तजिह्वाग्रे ॥
इति श्रीकाञ्ची प्रतिवादिभयङ्कर-अण्णङ्गराचार्य कृतिषु
श्री वरवरमुनिदण्डकस्तुति स्समाप्ता ॥

तस्यैव कान्तोपयन्तुर्मुनीन्द्रस्य दिव्यांघ्रि पद्मद्वयीसंनिकर्षे मम नतिरियमस्तु—தஸ்யைவ காந்தோபயந்துர் முநீந்த்ரஸ்ய திவ்யாங்க்ரி பத்மத்வயீஸந்நிகர்ஷே மம நதிரியமஸ்து] அடியேனுடைய இந்த நமஸ்காரமானது மணவாளமாமுனிகளின் திருவடிவாரத்திலேயே யாகவேணும். அவர் தாம் எப்படிப்பட்டவரெனில், [निकर्षैकपात्रास्मदादि प्रकर्ष प्रदानार्थ दिव्यावतारस्य—நிகர்ஷைகபாத்ர அஸ்மதாதிப்ரகர்ஷ ப்ரதாநார்த்த திவ்யாவதாரஸ்ய] பரம நீசர்களான எம்போலியர்க்கும் ஒரு பெருமையை விளைப்பதற்காகவே திருவவதரித்தவர். (அந்தப் பெருமை ஏதென்னில், நாமே ஸதாசார்யஸம்பந்தமுடையோமென்று மேனாணித்திருக்கையாகிற பெருமையென்றுணர்க.) [रङ्गाधिराजोपगीताद्वितीयस्तुतिश्लोक नित्यानुसन्धान धन्याखिलक्षेत्र विद्योतमानप्रभावस्य—ரங்காதிராஜோபகீத அத்விதீய ஸ்துதிச்லோக நித்யாநுஸந்தாநதந்ய அகிலக்ஷேத்ர வித்யோதமாநப்ரபாவஸ்ய] ஸ்ரீரங்கநாதர் பணித்த அத்விதீயமான ஸ்ரீசைலேசத்தனியனை நிச்சலும் அநுஸந்திக்கப் பெறுவதனாலே பெருமைபெற்ற ஸகல திவ்யதேசங்களிலும் தம்முடைய பிரபாவம் விளங்க நிற்பவர். [भास्वत्सहस्रोपमेयाननस्य—பாஸ்வத்ஸஹஸ்ர உபமேய ஆநநஸ்ய] ஆயிரம் சூரியர்கள் கலந்தெரித்தாலொத்த திருமுக மண்டலமுடையவர். [प्रशस्यस्व सूक्तिप्रवाह प्रगाढावगाढास्मदीयान्ववाय प्रधानार्य वादीन्द्र भीकृद्गुरुस्तोत्र बृन्दप्रहृष्टान्तरङ्गस्य-ப்ரசஸ்யஸ்வஸூக்திப்ரவாஹப்ரகாடாவகாட அஸ்மதீயாந்வவாய ப்ரதாநார்ய வாதீந்த்ர பீக்ருத் குருஸ்தோத்ரப்ருந்தப்ரஹ்ருஷ்ட அந்தரங்கஸ்ய] சிறந்த தம்முடைய திவ்ய ஸூக்திப்ரவாஹங்களிலே ஆழ மூழ்கின அஸ்மத்குல கூடஸ்தர் பணித்த பலஸ்தோத்ரங்களாலே திருவுள்ளமுகந்தவர். [नीचातिनीचाग्र्य मद्वक्त्रनिर्यद्बहुस्तोत्र राशिश्रुति प्रीत चित्तस्य—நீசாதி நீசாக்ர்ய மத்வக்த்ர நிர்யத் பஹூஸ்தோத்ர ராசிச்ருதி ப்ரீதசித்தஸ்ய] பரம நீசனான அடியேனுடைய வாக்கில் நின்றும் வெளிவந்த பல ஸ்தோத்ரராசிகளைத் திருச்செவிசாத்தி யுகந்தருளினவர். [नित्यं स्वकीयप्रभावैक विख्यापनव्यग्रवाग्गुम्भनाय प्रसादं प्रकामं मयीह प्रणेतुः—நித்யம் ஸ்வகீய ப்ரபாவைக விக்யாபநவ்யக்ரவாக்கும்பநாய ப்ரஸாதம் ப்ரகாமம் மயி இஹப்ரணேது:] நாடோறும் தம்முடைய பிரபாவங்களையே வெளியிடவல்ல கவிதைப் பனுவல்களை இயற்றும்படி அடியேனிடம் மிகுந்தவருள் செய்தவர். [स्वनेत्राम्बुजन्मद्वयीलक्ष्यजीवात्म सर्वाघ संहार दक्षस्य—ஸ்வநேத்ராம்புஜந்மத்வயீ லக்ஷ்ய ஜீவாத்ம ஸர்வாக ஸம்ஹார தக்ஷஸ்ய] தம்முடைய திருக்கண்ணோக்கத்திற்கு இலக்கான சேதநர்களின் ஸர்வபாபங்களையும் போக்கவல்லவர். [सर्वपूर्वार्य सूक्त्यैव चक्षुष्मतः—ஸர்வபூர்வார்ய ஸூக்த்யைவ சக்ஷுஷ்மத: [ஸகல பூர்வாசார்ய ஸ்ரீஸூக்திகளையே

கண்ணாகவுடையவர். [धीभक्तिवैराग्य वारांनिधे :— தீபக்தி வைராக்ய வாராம் நிதே:] ஞான பக்தி விரக்திகளுக்குக் கடல்போன்றவர். ஆக இப்படிப்பட்ட மணவாளமாமுனிகளை ஒருபடி துதித்துத் தலைக்கட்டிற்றாயிற்று. (8)

इत्थं वादिभयङ्कर वंशीयाण्णङ्गरार्य संकलिता ।
श्रीमद्वरवरसंयमिदण्डककृतिरस्तु भक्तजिह्वाग्रे ॥

ஸ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய
ஸ்ரீமத் வரவரமுனிதண்டகம் உரையுடன்
முற்றுப்பெற்றது.

ஜீயர் திருவடிகளே சரணம்.